459
3

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

தொகுதி-23 எண். 1.2.3.

ஜூலை [redacted] ஆகஸ்டு [redacted]

செப்டம்பர். 1934

JL
R6ஊ211, N12
N34·22·8-12
158953

ஸம்புடம் 23] JULY 1934 [ஸஞ்சிகை 1

459

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

பவ ௵

ஆனி ௴

PUBLISHED BY

SRI VAISHNAVA SIDDHANTA SABHA,

MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 355

2. ஸ்ரீ வைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள்:—[ஓரகடம் ஸ்ரீ. உ.வே. கொ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப்பண்டிதர்.] 364

3. ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம்:—[மஹாமஹோபாத்யாய சாஸ்வத ஸாவஜ்ஞ தட்டை ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 368

4. கடிதங்கள்:— ... 374

5. ஸம்பாதகீயம்:— ... 379

6 ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 25

7. திவ்ய ஸூரி சரிதம்:—[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 40

8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[வங்கீபுரம் ஸ்ரீ. உ.வே. வாஸுதேவாசார்யர்] ... 393

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உ.வே. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற
ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடனும் புத்தன்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யானத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1,க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23.] பவ௵ ஆனி௴ [ஸஞ்சிகை. 1

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(தொடர்ச்சி ஸஞ்சிகை 12 பக்கம் 346)

7. மேலே சொன்னதால் ஒரு ஸந்தேஹம் உண்டாகிறது. அதாவது-ஸோமயாகத்திற்கு அங்கமாக அக்நீஷோமீய யாகம் செய்கிறார்களே; அதற்காக ஒரு ஆட்டைக் கொல்லுகிறார்களே; அது வதமன்றோ? அதனால் நரகம் வருமே; ஆகையால் ஸோம யாகமும் அதர்மமன்றோ? — என்று இதற்குப் பதில்-அக்நீஷோமீய யாகத்திற்குத் தனியாகப் பலன் கிடையாது. அது ஸோம யாகத்திற்கு அங்கம். ஸோம யாகத்திற்குப் பலன் ஸ்வர்க்கம். ஆகையால் நரகம் வரும் என்னும் ப்ரஸக்தியே யில்லை.

8. இப்படி இரண்டு அதிகரணங்களால், மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஆரம்பிக்க வேண்டு மென்றும் அந்த விசாரத்தைச் செய்ய முடியும் என்றும் சொல்லி, நான்காவது அதிகரணத்தால், 'தர்மத்தை ப்ரத்யக்ஷத்தால் அறிவதானால் வேதத்தின் அர்த்தத்தைப் பற்றி விசாரம் செய்வானேன்?' என்று விசாரிக்கப்படுகிறது.

158953

பூர்வபக்ஷம்:—ப்ரத்யக்ஷத்தாலே தர்மத்தை யறியலாம். 'ப்ரத்யக்ஷம் ப்ரமாணம்' என்றும் 'ப்ரமேயத்தை அது காட்டும்' என்றும் எல்லாரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் விவாதமில்லை. தர்மம் ப்ரமேயம். ஏனென்றால், அது அறியப்படுகிறது. அது விஷயத்தில் ஸந்தேஹமில்லை. அது ஒன்றாய் இருக்க, வேறு ஒன்றாக எண்ணப் படவில்லை. ஆகையால் அது ப்ரமேயம். ஒரு குடம் போலே. குடமானது கண்ணுக்குத் தெரிகிறது, அது குடமா? அன்றா? என்று ஸந்தேஹம் உண்டாகிறதில்லை. அதைப் பானையாக எண்ணுகிறதுமில்லை. இப்படி யிருந்து ப்ரமேயமாயுமிருக்கிறது. ஆகையாலே ப்ரத்யக்ஷத்தாலே தர்மத்தை யறியலாம். ஆகையால் வேதத்தின் அர்த்தத்தின் விசாரமாகிய மீமாம்ஸையை ஆரம்பிக்க வேண்டாம்.

ஸித்தாந்தம்:—தர்மம் ப்ரமேயந்தான். ஆனால் அதை ப்ரத்யக்ஷத்தால் அறிய முடியாது. ப்ரத்யக்ஷத்தை அறியும் காலத்தில் வஸ்து இருக்க வேண்டியது. அது இனிமேல் வரப் போகிறதாக இருக்கக் கூடாது. தர்மமோ இனிமேல் தான் வரப்போகிறது. எது ப்ரத்யக்ஷத்திற்கு ஒருக்காலும் விஷயமன்றோ; அதை அநுமானத்தினாலே எப்படிப் பார்க்கலாம்? அநுமானம் ப்ரத்யக்ஷத்தில் பொருந்தியிருக்கிறதென்று 6—வது பாராவில் பூர்வ பக்ஷத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், விதியாலேயே தர்மத்தை அறிய வேண்டும்.

9. இங்ஙனே தர்மத்தை விதியாலேயே அறியவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை விசாரிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்று ஸந்தேஹம். ப்ரமாணத்தைச் சொன்னதாலேயே, அதனாலே அறிய வேண்டிய தர்மம் ஏற்படுகிறதே, அதை எதற்காக விசாரிக்க வேண்டும்? என்று பூர்வ பக்ஷம்.

ஸித்தாந்தம்:—இந்த சாஸ்த்ரம் விசாரத்திற்காகவே ஏற்பட்டது. அந்த விசாரத்தைச் செய்யாமைக்கு என்ன காரணம்? [அதி—3.] (1)

---

(1) குறிப்பு:—இந்த அதிகரணத்திற்கு ப்ராபாகர மதத்தின்படி பூர்வபக்ஷமும், ஸித்தாந்தமும். இப்படி சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கலாமென்று முடிவு செய்து, மேலே ப்ரமாணங்கள் எவை யென்று விசாரிக்கப் போகிறது. அதற்காக எதை முதலில் விசாரிக்க வேண்டும்? சாஸ்த்ரத்திற்கு முக்ய விஷயமான தர்மமென்கிற கர்மத்தையா? அல்லது அதைக் காட்டுகிற ப்ரமாணத்தையா? என்று மூன்றாவது அதிகரணத்தில் விசாரிக்கப்படுகிறது.

பூர்வபக்ஷம்:—வேதத்தில் சொல்லிய கர்மங்கள் முக்ய மானவை. அவைகளைத் தானே ஒருவன் வேண்டும் பலனுக்காகச் செய்யவேண்டியது. அவைகளைக் காட்டுவதற்காகத்தானே ப்ரமாணம். அது கர்மங்களுக்காக இருக்கிறது; முக்யமானதன்று. முக்யத்தை முதலில் விசாரிக்க வேண்டியது.

10. இனி இந்தப் பாதத்தின் பாக்கி நான்கு அதிகரணங்களால் விதியானது ப்ரமாணம் என்று காட்டப்படுகிறது. இரண்டு காரணத்தால் விதியானது ப்ரமாணமாகாமல் இருக்கலாம். (1) விதிவாக்யம் ஒன்றைத் தெரியப்படுத்தாமை (2) அது சொல்லும் விஷயத்தை சரியானது தான் என்று அறிவதற்கு வேறொன்றைத் தேடுவது. இவைகளில் முதலாவதைக் கொண்டு பூர்வ பக்ஷத்தை விசாரிக்கலாம்.

பூர்வபக்ஷம்:—உலகத்தில், வேண்டியவன் ஒன்றைச் சொன்னால், அவனுடைய சொற்கள் இன்னதைச் சொல்லுகின்றன என்று தெரிந்தால் தானே ஒருவன் அதை நம்பி ஒரு வேலையைச் செய்வன். உலகத்தில் எல்லாருக்குந் தெரிந்தவைகளான மாடு முதலான விஷயத்தில், அவைகளைச் சொல்லும் சொற்களின் பொருள்களை அறிகிறோம். தர்மமோ எல்லாருக்குந் தெரிந்ததன்று. ஆகையால் அதைச் சொல்லுஞ் சொல்லாலே பொருளைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் விதிகள் ப்ரமாணம் அல்ல.

ஸித்தாந்தம்:—(I) ஒருவன் "மலர்ந்த தாமரைப் பூவின் நடுவில் வண்டு தேனைக் குடிக்கிறது" என்று பொருளுள்ள வாக்யத்தைக் கேட்டான். அவனுக்கு 'வண்டு' என்கிற சொல்லின் அர்த்தம் தெரியாது. மற்றச் சொற்களுக்கு அர்த்தம் தெரியும். ஒரு பூச்சி மலர்ந்த தாமரைப் பூவில் தேனைக் குடிப்பதைப் பார்த்தான். உடனே 'வண்டு' என்கிற சொல்லுக்கு அந்தப் பூச்சி பொருள் என்று அறிந்து கொண்டு வாக்யத்தின் அர்த்தத்தை அறிகிறான். அப்படியே மழை வரவேண்டுமென்று ஆசைப்படுகிறவன் "காரீரி" என்கிற யாகத்தைச் செய்ய வேண்டியது, என்ற இடத்திலும் எல்லாருக்குந் தெரிந்த மழை முதலான சொற்களின் சேர்க்கையால் இந்த விதியானது மழையை யுண்டாக்கும் (2) 'பாவனை' என்பதைச் சொல்லுகிறதென்று தெரிந்து, வாக்யத்தின் அர்த்தத்தை அறிகிறான். ஆகையால் ப்ரமாணமில்லாமல் இருப்பதற்குச் சொன்ன முதற் காரணமில்லை.

ஸித்தாந்தம்:—கர்மங்கள் முக்யமென்றும், ப்ரமாணம் அவைகளுக்காக வேண்டியதென்றும் சொன்னது சரியானது தான். ஆனாலும் ப்ரமாணம் இல்லாவிட்டால், ப்ரமேயமான கர்மங்களே இல்லை. ஆகையால் கர்மங்கள் வேறொன்றைத் தேடுகின்றன. ப்ரமாணத்திற்கோ இவ்விதமான தேட்டம் இல்லை. அது தானே ப்ரமாணம். இந்த விஷயத்தில் ப்ரமாணம் முக்யம். ஆகையால் ஸூத்ரகாரர் அதை முதலில் விசாரிக்கிறார். [அதி-3]

(2) குறிப்பு:—விதி வாக்யங்களில் ப்ரத்யயமானது (விகுதி) 'பாவனை' என்பதைச் சொல்லுகிறதென்று 2வது அத்யாயம் ஆரம்பத்தில் சொல்லப்படுகிறது. யாகம், பாவனை, அபூர்வம் இவைகளுக்கு பேதமும் காட்டப் படுகிறது.

(II) இரண்டாவது காரணமு மில்லை. இந்தக் "காரீரி" என்கிற யாகத்தைச் செய்தவுடன் மழை வருவதைப் பார்த்து விதி சொன்னது சரியென்று தெரிந்து கொள்ளலாம்.

(III) ஆனால் சில வேளைகளில் இடஞ்சல்களால் பலன்கள் வருவது தடைப்படலாம். சில பலன்கள் வேறு பிறப்பில்தான் வரும். அந்த இடங்களில் 'விதிவாக்யம் சொல்லுங் கர்மங்கள் பலன்களைக் கொடுக்கும்' என்று எப்படி அறிகிறது என்றால் சிலர் சொல்லுகிறார்கள்—விதியானது தானே ப்ரமாணம். அதற்கு வேறு ப்ரமாணந் தேவையில்லை—என்று. [அதி-5]

11, விதிக்கு ப்ராமாண்யம் சொன்னது கூடுமோ? விதி சப்தமாச்சுதே! அதை யொருவன் சொல்ல வேண்டுமே! அவன் சொல்வதை நம்பலாமா? என்கிற ஸந்தேஹம் உண்டாக, விசாரிக்கப் படுகிறது.

பூர்வபக்ஷம்:—எழுத்துக்கள்தானே சப்தமென்பது. எழுத்துக்கள், ஒவ்வொருவனும், அவனும் ஒவ்வொரு தடவைச் சொல்லும்போது, உண்டாகிப் போய்விடுகின்றன. இது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. ஆகையால் சப்தம் அழிவுள்ளது. அதைச் சொல்லுகிறவனுடைய குற்றங்களால், விதியானது ப்ரமாணம் அன்று.

ஸித்தாந்தம்:—(I) "கோ" என்கிற சப்தத்தை வெகு பேர்கள், ஒவ்வொருவனும் அநேகந் தடவைச் சொல்லும்போது இந்த ககாரமும் ஓகாரமும் அவைகள்தாம். அதாவது முன்னாலே கேட்கப் பட்டவைகள் என்று அறிகிறோம். இந்த அறிவு தப்பு என்று பிறகு ஏற்படவில்லை. ஆகையால் எழுத்துக்கள் அழிவில்லாதவைகள். ஆகவே, அவைகளைச் சொல்லுகிறவனிடத்தில் குற்றங்களுண்டு என்று சொல்லி, விதியானது ப்ரமாணம் அன்று என்று சொல்லக்கூடாது.

(II) எழுத்துக்கள் அழிவில்லாதவைகளானால், அநேகம் பேர்கள் அநேகம் தடவை அவைகளை உச்சரிக்கும் ப்ரயத்நம் வீண் என்றால்; பதில்:—எப்போதுமுள்ள எழுத்துக்களை உச்சாரணம் வெளியிடுகிறது. உதாத்தம் அநுதாத்தம் என்கிற ஸ்வரங்களுடனும், தாழ்ந்த த்வனி, உயர்ந்த த்வனி என்கிற வ்யத்யாஸத்துடனும் காட்டுகிறது. [அதி—6]

12. இந்த இடத்தில் வ்யாகரண மதக்காரர்களின் மதம் தூஷிக்கப் படுகிறது. அந்த மதமாவது— 'எழுத்துக்களின் கூட்டத்தைக் கேட்டவுடன் 'இது ஒரு பதம்' என்ற அறிவு மாநஸ ப்ரத்யக்ஷத்தால் உண்டாகிறது. இந்த அறிவுக்கு விஷயம் "ஸ்போடம்" என்ற பெயருள்ள ஒரு வஸ்து. அது எழுத்தின் கூட்டத்தைக் காட்டிலும் வேறு. அது அழிவில்லாதது. அதைத்தான் சப்தமென்று சொல்லுகிறது' என்று.

இதைத் தர்க்க சாஸ்த்ர காரர்கள் தப்பு என்று சொல்லுகிறார்கள். பதம் ஒன்று என்கிற எண்ணமானது எழுத்துக்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறது என்ற காரணத்தால் உண்டாகிறது. இப்படிச் சொல்லும் படி யிருக்கையில், எழுத்துக்களைக் காட்டிலும், வேறாக "ஸ்போடம்" என்று ஒப்புக் கொள்வது ந்யாய மில்லை.

13. கீழ் அதிகரணத்தில், 'எழுத்துக்கள் அழிவில்லாத வைகள்; ஒரே அர்த்தத்தைச் சொல்லும் எழுத்துக்களின் கூட்டமான பதமும், எப் போதும் இருக்கிறது. வேதத்திற்கு அதைச் சொல்லுகிறவன் வழியாய் குற்ற முண்டாகாது' என்று முடிவு செய்யப்பட்டது. பதங்கள் சேர்ந்த வாக்யத்தைப் பற்றி ஸந்தேஹம் உண்டாகிறது.

பூர்வபக்ஷம்:—ஸ்வர்க்கம் வேண்டு மென்கிறவன் 'அக்நி ஹோத்ர ஹோமம் செய்ய வேண்டியது' என்கிற வாக்யத்தை அறிவதற்கு (1) ஸங் கதி தெரியவேண்டும். ஆகையால் 'விதியானது ஒன்றையுந் தேடாமல் தானே ப்ரமாணம்' என்று சொல்வது கூடாது.

ஸித்தாந்தம்:—உலகத்தில் "காமா நய" (மாட்டைக்கொண்டுவா) என்று ஒருவன் ஏவும்போது பதங்களுக்கும் அவைகளின் அர்த்தங்களுக்கு முள்ள ஸம்பந்தத்தைத் தானே யறிய வேண்டும். வாக்யத்தின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள மூன்று விஷயங்கள் தெரியவேண்டும். அவையா வன:—1. ஆகாங்க்ஷா, 2. யோக்யதா, 3 ஸந்நிதி என்பனவாம். இவைகள் தவிர வேறொன்றின் உதவியும் தேவையில்லை. இந்த விஷயத்தில் மதபேத மில்லை. அப்படியே வேதத்தின் வாக்யங்களும் இந்த மூன்றைக் கொண்டு தங்கள் அர்த்தங்களைத் தெரிவிக்கக் கூடுமானதால் பூர்வ பக்ஷம் தப்பு. [அதி—7]

14. சில சொற்களால் வேதமும் ஒருவனால் செய்யப்பட்டதென்று ஸந்தேஹம் வர, அது விசாரிக்கப் படுகிறது.

பூர்வபக்ஷம்:—காடகம், கௌதுமம், தைத்திரீயம், இவை முதலான அந்தந்த வேத விஷயமான பெயர்கள் உலகத்தில் வழங்குகின்றன. அந்தச் சொற்களிற் சேர்ந்திருக்கும் "தத்ரு தத்" என்கிற ப்ரத்யயத்திற்கு. 'அவ னாலே சொல்லப்பட்டது' என்பது பொருள். ஆகையால் வேதமானது பல பேர்களால் செய்யப்பட்டது. மேலும், வேதத்தின் வாக்யங்கள் ஒருவ ரால் செய்யப்பட்டன. வாக்யமாய் இருப்பதால்; காளிதாஸன் முதலானவர் களின் வாக்யங்கள் போல என்கிற அநுமானமு மிருக்கிறது.

[குறிப்பு:—(1) ஸங்கதி யென்றால் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள ஸம்பந்தம். இதை மற்ற மதக்காரர்கள் "சக்தி" யென்று சொல்லுகிறார்கள்.]

ஸித்தாந்தம்:—பூர்வ பக்ஷத்தில் சொன்ன பெயர்கள், 'வேதத்தின் பாகங்களை ஒருவர் முதலில் சொல்லிக் கொடுத்தார். அவர் முதல் வரிசையாய் அது வருகிறது' என்று காட்டுகின்றன. அந்தக் காரணத்தால் அந்தப் பெயர்கள் ஏற்பட்டன. காளிதாஸன் முதலானவர்களின் புஸ்தகங்களில் அந்தந்த ஸர்க்கங்களின் கடைசியில் இன்னரால் இது செய்யப்பட்டதென்று காணப்படுகிறது. வேதம் செய்யப்பட்டதானல், அப்படி அதைச் செய்தவர்களின் பெயர்கள் காணப்படுமே. அப்படி காணப்படவில்லை யாகையாலே பூர்வ பக்ஷத்தில் சொன்ன அநுமானமும் பிசகு. அதில் 'வாக்யமா யிருப்பதால்' என்பது ஹேது. வேதத்தில் இந்த ஹேது இருந்த போதிலும் "பௌருஷேயத்வம்" (ஒருவனல் செய்யப்பட்டது) என்கிற ஸாத்யம் இல்லை. ஆகையால், விதியானது ப்ரமாணம் என்பதை ஒருவனும் அசைக்கமுடியாது. [அதி—8]

முதல் அத்யாயம்—இரண்டாவது பாதம்

15. இரண்டாவது பாதத்தில் அர்த்தவாதங்களும், மந்த்ரங்களும், எந்த வழியாய் ப்ரமாணங்கள் என்று சொல்லப்படுகிறது. காம்ய பசுகாண்டத்தில் "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:" என்கிற விதிவாக்ய மிருக்கிறது. அதன் பொருள்—'ஐச்வரியம் வேண்டுமென்று ஆசைப்படுகிறவன் வாயு தேவதைக்கு ஒரு வெளுப்பான ஆட்டைக் கொன்று யாகம் செய்ய வேண்டும்' என்று. இதற்கு மேல் "வாயு என்பவன் சீக்ரமாகப் போகிற தேவதை; அவனுக்கு வேண்டிய பாகத்தைக் கொடுத்து அவனையே ஒருவன் ஸந்தோஷப் படுத்துகிறான். அவனே இப்படி செய்கிறவனுக்கு ஐச்வர்யத்தைக் கொடுக்கிறான்." என்ற அர்த்தவாதம் இருக்கிறது. இங்கே அர்த்தவாத மென்பது கீழ்ச் சொன்ன யாகவிஷயத்தில் ப்ரமாணம் ஆகுமா? ஆகாதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இங்கே விதிவாக்யத்தின் சொற்கள் அர்த்தவாதத்தின் சொற்களின் உதவி யில்லாமலே முழு அர்த்தத்தையும் சொல்லுகின்றன. அர்த்தவாதத்தின் சொற்கள் வேறு சொற்களின் விஷயத்தை உதவியில்லாமல் நடந்த விஷயத்தைச் சொல்லுகின்றன. ராமாயணத்திலும் பாரதத்திலும்போல் ஒருகதை சொல்லப்படுகிறது. செய்யவேண்டியதொன்றும் சொல்லப்பட வில்லை. ஆகையால், விதியும் அர்த்தவாதமும் ஒரு வாக்யமா யிருக்கவில்லை. ஆகவே, அர்த்தவாதம் ப்ரமாண மன்று.

ஸித்தாந்தம்:—பதங்கள் சேர்ந்து ஒரு வாக்யமாக வேண்டாம். வாக்யங்கள் சேர்ந்து மஹா வாக்யமாகின்றன. விதித்த கர்மத்தைச் செய்யும்படி ஒருவனைத் தூண்டி விடுவதற்காக, 'அது உயர்ந்த கர்மமென்று' எது சொல்லப்போகிறது என்று விதிவாக்யம் தேடுகிறது. அத்யயந விதி

ஞல் ப்ரயோஜநத்தைக் கொடுப்பதைதான் வேத வாக்யங்கள் தெரிவிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. ஆகையால், அர்த்தவாத வாக்யம் அத்ய யநம் பண்ணப்பட்ட படியால் ஒரு ப்ரயோஜநத்தைத் தேடுகிறது. விதி வாக்யம் தேடுகிற வேலையைச் செய்து, அது தனக்கு வேண்டிய ப்ரயோஜ நத்தையும் அடைகிறது. ஆகையால் அர்த்தவாதங்களும் விதிவாக்யங் களுடன் சேர்ந்து ஒரு மஹா வாக்யமாகி ப்ரமாணமாகின்றன.

16. இங்கு அர்த்தவாத வாக்யத்திற்குப் பொருள் இப்படிச் சொல்லக் கூடுமோ என்ருல்:—அதை அது லக்ஷணையால் சொல்லுகிறது. 'கங்கையில் இடைச்சேரி' என்கிற வாக்யத்தில், ஓடுகிற ஜலத்தைச் சொல்லுகிற கங்கை யென்கிற சொல், அதைச் சேர்ந்த கரையைச் சொல்லுகிறது. இப்படிச் சொல்வதற்கு லக்ஷணையென்று பெயர். அப்படியே இங்கே இரண்டுவாக்யங் களுக்கு 'சீக்ரம் போகும் ஸ்வபாவமுள்ளபடியால் சீக்ரம் பலனைக் கொடுக் கும் வாயு, இந்தப் பசுவுக்குத் தேவதையாக இருக்கிறபடியால், சிலாக்யமா ன இந்த வாயு தேவதைக்குக் கொடுக்க வேண்டிய பசுவைக் கொல்லு' என்பது பொருள். [அதி-1]

17. கீழ் அதிகாணத்தில் அர்த்தவாத வாக்யமானது விதிவாக்யத் துடன் சேர்ந்து அதில் விதிக்கப் படுவதை ஸ்தோத்ரம் பண்ணி ப்ரமாண மாகிறது என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் ஸ்தோத்ரம் பண்ணவி ல்லையே. பலனையன்ருே சொல்லுகிறது. அங்கே வாக்யத்தை அர்த்த வாதமென்று எப்படிச் சொல்லுகிறது என்று ஸந்தேஹம். உதாரணம்:—

ஔதும்பரோ யூபோ பவதி। ஊர்க்வா உதும்பர:।
ஊர்க் பஶவ:। ஊர்ஜைவாஸ்மா ஊர்ஜம் பஶூநாப்நோதி।
ஊர்ஜோ(அ)வருத்த்யை॥.

என்று ஒருவாக்யம் இருக்கிறது. இதன் பொருள்:—'யூபமானது உதும் பர' (அத்தி) மாத்திஞல் செய்யப்பட்டதாயிருக்கிறது. உதும்பரம் மிக வும் உயர்ந்த அந்நம். பசுக்களும் மிகவும் உயர்ந்த அந்நம். உதும்பரமான உயர்ந்த அந்நத்தாலேயே யஜமானன்பொருட்டு உயர்ந்த அந்நமான பசுக் களை அத்வர்யு அடைகிருன். யூபம் உதும்பரமாயிருப்பதால் உயர்ந்த அந்நத்தை அடைவதற்காக உதவுகிறது'—என்று: இங்கே கடைசி வாக்யம் பலனைச் சொல்லுகிறதா? அல்லது ஸ்தோத்ரம் பண்ணுகிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இந்த வாக்யத்தில் "அவருத்த்யை" என்று ஒரு வட மொழிச்சொல் இருக்கிறது. அதற்குப் பொருள் "அடைவதற்காக" என்று. அது பலனைச் சொல்லுகிறது. "பணம் அடைவதற்காக

ராஜாவிடம் வேலை செய்வது'' என்கிற வாக்யத்தில் இப்படியே காணப்படுகிறது. பலனைச் சொல்லுகிற வாக்யம் ஸ்தோத்ரம் பண்ணக்கூடாது. ஸ்தோத்ரம் பண்ணுகிறதென்று கொண்டால் "ஸ்வர்க்க காமன் (ஸ்வர்க்கத்தை ஆசைப்படுகிறவன்) ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்ய வேண்டும்'' என்கிற வாக்யத்திலும் ஸ்வர்க்கம் என்கிற சொல் ஜ்யோதிஷ்டோமத்தை ஸ்தோத்ரம் பண்ணுகிறதென்று கொள்ளவேணும். அப்போது பலனைச் சொல்லுகிற வாக்ய மில்லாமற் போகும். அந்த வாக்யம் பலனைச் சொல்லுகிறதென்று எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஸித்தாந்தம்:—பூர்வபக்ஷம் சொல்லுகிறவனைக் கேட்க வேண்டியது. 'நீ சொல்லுகிற பலன் எதன் பலன்?' என்று. 'யூபம் உதும்பர மரத்தினால் செய்யப்படுவதின் பலன்' என்று சொல்லமுடியாது. யூபத்தை அந்த மரத்தினாலே செய்யவேண்டு மென்ற விதியில்லையே. விதியைக் கொண்டு ஒரு வேலை செய்தால்தானே பலன்வரும். அது செய்யாமல் த்ரவ்ய மாத்ரத்தால் பலன் எப்படி வரும்? 'ஏன் இங்கே விதி இல்லை?' என்றால், அதைச் சொல்லுகிற "லிங்" என்கிற ப்ரத்யயம் இல்லையே. "ஹவதி" என்கிற சொல்லன்றோ இருக்கிறது? "ஹவிஷா" என்கிற சொல் இல்லையே. 'ஸ்தோத்ரம் பண்ணுவதால் அதை விதியென்று எண்ண வேண்டியது' என்றால்—பதில். 'நீதான், அந்த வாக்யம் ஸ்தோத்ரம் பண்ணவில்லை; பலனைச் சொல்லுகிறதென்று சொல்லுகிறாயே' நீ இதன்மேல் சொல்லலாம்—'விதியைச் சொல்வதற்காக முதலில் ஸ்தோத்ரம் பண்ணி, பிறகு அதன் பலனைச் சொல்லுகிறது' என்று. அப்போது இரண்டு வாக்யமாகுமே. (1) ஆகையால் இங்கே பலனைச் சொல்வதுபோல் காணப்பட்டாலும் இந்த வாக்யம் ஸ்தோத்ரத்தைத்தான் செய்கிறது. [அதி—2]

மேலும் "ஔதும்பர" [உதும்பர மரத்தால் செய்யப்பட்டது] என்கிற சொல்லில் ப்ரத்யயம் பலனைச் சொல்லவில்லை. ஏனென்றால் பலன் விஷயமான விதியில்லை. கிட்டயிருப்பது பாவனை, அதைத்தான் அது விதிக்கிறது; பலன் ஒதுங்கி இருக்கிறது அதை விதிக்கவில்லை. [சாஸ்—9,10]

18. இன்னுமொரு உதாரணம்:—"ஸ்ருவேண ஜுஹோதி தேநஹ்யந்நம் க்ரியதே" [முறத்தினாலே ஹோமம் பண்ணுகிறான். ஏனென்றால் அதனாலே அந்நம் செய்யப்படுகிறது.]

[குறிப்பு:—(1) ஒரே வாக்யமாக வைத்துக் கொண்டு அர்த்தம் பண்ணக் கூடுமானால் அதை இரண்டு வாக்யமாக அர்த்தம் பண்ணுவது குற்றம். இங்கே ஒரே வாக்யமாக வைத்துக்கொண்டு பொருள் கொள்ளலாம்.]

பூர்வபக்ஷம்:—“ ஹி ” என்கிற வடமொழி வாக்யத்திலிருக்கிற சொல்லானது ஒரு காரணத்தைச் சொல்லுகிறது. அங்கம் செய்ய வுதவுகிறதால் முறத்தாலே ஹோமம் செய்யவேண்டிய தென்று பொருளாகும். அப்போது எதெது அங்கம் செய்ய வுதவுகிறதோ அவைகள் எல்லாவற்றாலும் ஹோமம் செய்யலாம் என்று ஏற்படும். ஆகையால் முறத்தினாலும் செய்யலாம் சட்டியாலும் செய்யலாம்.

ஸித்தாந்தம்:—“ஶூர்பேண” என்கிற சொல்லில் ப்ரத்யயத்தால் ‘முறம் ஹோமத்திற்கு ஸாதநம்’ என்று சொல்லுகிற ச்ருதி ப்ரமாணம். மற்றவைகளால் ஹோமம் செய்யலாம் என்பது அநுமாநத்தாலே ஏற்படுகிறது. அநுமாநத்தைக் காட்டிலும் ச்ருதி பலமுள்ளது. இரண்டிற்கும் வலிமை ஸமமாயிருந்தால் எது வேண்டுமோ அதை ஸாதநமாக வைத்துக் கொள்ளலாம். அப்படி இல்லை. முறத்தாலேயே ஹோமம் செய்யவேண்டியது. “ஹி” என்கிற சொல்லிற்குக் காரணப்பொருள் என்று சொல்வதில் ப்ரயோஜநம் இல்லை. ஆகையால் இங்கே ஸ்தோத்ரந்தான் செய்யப்படுகிறது. [அதி—3]

“ ஹி ” என்கிற சொல்லைக்கொண்டு வ்யாப்தி பூர்வ பக்ஷத்தில் கல்பிக்கப் படுகிறது. எதெதால் அங்கம் செய்யப் படுகிறதோ அததால் ஹோமம் செய்யவேண்டியதென்று ஏற்படுகிறது. முறத்தினால், ஹோமம் செய்யவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. அதற்குக் காரணம் வேண்டியதில்லை, வேதமே ப்ரமாணமாகையால், முறத்தால் ஹோமம் செய்வதற்கு அதை ஸ்தோத்ரம் பண்ணவேண்டும். ஆகையால் இரண்டாவது வாக்யம் அர்த்தவாதம். (சாஸ்த்ரம் 13—14)

19. இப்போது மந்த்ரங்களுக்கு ப்ரயோஜநம் த்ருஷ்டமா ? அல்லது அத்ருஷ்டமா ? என்று விசாரிக்கப் படுகிறது. “உரு ப்ரதஸ்வ” என்ற ஒரு மந்த்ரம் கபாலங்களில் புரோடாசத்தை வைத்து, எல்லா கபாலங்களிலும் படும்படி அதை அழுத்தும்போது சொல்லப் படுகிறது. அதன் பொருள்:—“ ஏ ! புரோடாசமே ! எப்படிப் பெரியதாக ஆவாயோ அப்படிப் பரவு ” என்பதுதான்.

பூர்வபக்ஷம்:—இது போன்ற மந்த்ரங்கள் அத்ருஷ்டத்தையே உண்டு பண்ணுகிறது. அவைகள் யாகத்தில் செய்யப்படும் வேலையைக் காட்டுகின்றன. அதற்காக அவைகளைச் சொல்ல வெண்டியதென்று சொல்லக்கூடாது. இந்த மந்த்ரம் காட்டும் விஷயத்தை விதி வாக்யமே சொல்லுகிறது.

“உரு ப்ரதஸ்வேதி புரோடாசம் ப்ரதயதி”

ஸித்தாந்தம்:—இது சரியன்று. செய்ய வேண்டிய வேலைகளைத் தெரிந்து கொள்வது த்ருஷ்ட ப்ரயோஜநம். இதை யெங்குசொல்லக் கூடுமோ அங்கே அத்ருஷ்ட ப்ரயோஜநத்தைக் கல்பிப்பது ந்யாய்ய மன்று. ஆகையால் மந்த்ரத்தைச் சொல்வதற்கு ப்ரயோஜநம், செய்ய வேண்டிய வேலைகளைத் தெரிந்து கொள்வதுதான். இந்த இடத்தைப்போல் விதி வாக்யத்தாலும் அது தெரிந்தாலும் மந்த்ரத்தினாலேயே தெரிந்து கொள்ள வேண்டும் என்பது நியமம் (கட்டாயம்). இந்த நியமத்திற்கு த்ருஷ்டபலன் இல்லாததினாலே இதற்கு அத்ருஷ்ட பலனைக் கல்பிக்கலாம். [அதி—4]

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள்

[ஓரகடம் ஸ்ரீ. உ.ப கொ. ஸுதர்சநாசார்யர், தமிழ்பண்டிதர்.]

(12-வது ஸஞ்சிகை 340-வது பக்கம் தொடர்ச்சி)

இனி, நம்மாழ்வாரையும், அவர் அருளிச்செய்த திருவாய்மொழியையும் குறித்து, ஸ்ரீ வைஷ்ணவேதரரான சங்கப்புலவர் முதலியோர் கொண்ட அபிப்ராயங்களை வெளியிடுவோம். நம்மாழ்வாருடைய சிஷ்யரான மதுரகவி யாழ்வார், அச்சடகோபர் திருநாட்டை அலங்கரித்த பின்பு, தமது நல்லாசிரியரைப் பிரிந்ததற்கு மிக இரங்கி, அரிதில் தேறி, அர்ச்சாரூபமான ஆழ்வார் விக்ரஹத்தை ஏறியருளப் பண்ணி, ஆழ்வார் அவதார ஸ்தலமான திருக்குருகூர் என்னும் திருநகரியிலே ப்ரதிஷ்டை செய்து, அந்தத் திவ்ய மூர்த்திக்கு நித்ய நைமித்திக உத்ஸவங்களை யெல்லாம் சிறப்புற நடத்திக்கொண்டு வந்தார். அந்த உத்ஸவங்களில் "வேதம் தமிழ் செய்த மாறர் வந்தார்.', 'திருமாலுக்குரிய தெய்வப் புலவர் வந்தார்,' 'அளவிலா ஞானத்து ஆரியர் வந்தார்' என இவை முதலாக அநேக பிருதுகளைக் கூறித் திருச்சின்னம் ஒலிமுழங்குதலைக் கேள்வி யுற்ற வளவிலே, 'மதுரைச் சங்கத்தாரது தூண்டுதலால் அவர்கள் மாணாக்கர்கள் வந்து எதிரிட்டு, "உங்கள் ஆழ்வார் பக்தரே யன்றிப் பகவானல்லரே; அவர் சங்கமேறிய புலவரோ? அவர் பாடிய திருவாய்மொழி முதலியன சங்கமேறிய செய்யுள் அல்லவே; அவரை வேதம் தமிழ் செய்தவ ரென்று சிலாகிப்பது தகுதியோ?" என்று பல குதர்க்கம் பேசிப் பிருதுகளைத் தடுத்திட்டனர். அதற்கு மதுரகவிகள் மனம் பொறுது வருந்தி, "இவர்கட்குக் கர்வபங்கம் உண்டாம்படி தேவரீர் செய்தருள வேண்டும்" என்று ஆழ்வாரையே பிரார்த்தித்தார். அதற்கிணங்கிச் சடகோபர் ஒரு கிழப்பிராம்மண வடிவத்தோடு வந்து, "திருவாய்மொழியில்

“ கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்,
என்னும் திருநாமம், திண்ணம் நாரணமே.”

என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக்கொண்டு போய்ச் சங்கப் பலகையில் வைத்திட்டால் அவர்கள் செருக்கு அடங்கும்” என்று கூறி யருளினார். அந்நியமநத்தின் படியே சடகோப பக்தர், ‘ கண்ணன் கழலிணை’யை எழுதிய ஏட்டை எடுத்துப் போய்ப் பலகையில் வைத்திட்டார். அம்மாத்திரத்தில் சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப் பொய்கையில் மூழ்கித் தன் மேலிருந்த புலவர்களை யெல்லாம் நீரில் வீழ்த்தி, உடனே எழுந்து தன்மீது வைத்த சிறு முறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அப்பொழுது நீரில் வீழ்ந்து அமிழ்ந்து தடுமாறி எழுந்து மெல்ல நீந்திக்கரைச் சேர்ந்த சங்க புலவர்கள், சகலவேத சாஸ்த்ரங்களையும் பிறர் கற்பியாமல் தாமே உணர்ந்த பகவதம்சமான ஆழ்வாருடைய தெய்விக பாண்டித்யத்தை உணர்ந்து, இறுமாப்பு ஒழிந்து, தாம் முன்பு அபசாரம் பட்டதிற்கு அநுதாப மடைந்து அதனை க்ஷமிக்கும் பொருட்டு அவரது மஹிமை தங்கிய ப்ரபாவத்தைக் குறித்துத் தனித்தனி ஒவ்வொரு பாடல் பாடி வெளியிடுபவரானார்கள். “ ஈயாடுவதோ கருடற் கெதிரே யிரவிக் கெதிர் மின் மினி யாடுவதோ, நாயாடுவதோ உறுமிப் புலிமுன் நரிகேசரி முன் நடையாடுவதோ, பேயாடுவதோ அழகூர்வசிமுன் பெருமாள் வகுளா பாணன் அருள்கூர்ந், தோவதுரையா யிரமாமறையின் ஒரு சொற்பொறுமே உலகிற்கவியே’ என்னும் பாவின் மூலமாக ஆழ்வாரையும் அவரது அருளிச் செயலையும் துதித்து அன்று முதல் விருதுகூறல் முதலிய விபவங்களை முன்னிலும் மிகுதியாக நடப்பித்து வந்தார்கள்.

முப்பாலை ஈரடிகொண்டளந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் குறள் செய்த காலத்தில், அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த போது மற்றை இருவரும் வள்ளுவரை நோக்கி “நீர் செய்தநூல் எத்தன்மையது?” என்று கேட்ட அவர், “ குறுமுனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை சிறு முனிவன் வாய்மொழியின் சேய் ” என்றார். [அதாவது:—அகஸ்த்ய மஹர்ஷியினால் பிரஸித்தம் செய்யப்பட்ட இயல், இசை, நாடகம் எனும் மூவகைத் தமிழும், என்னுடைய குறளும், உடைய நங்கையின் திருக்குமாரராகிய சடகோபரது திருவாய் மொழியின் புத்ரஸ்தானமாகிய வழிநூலாம்.] இவர் காலத்தில் இருந்த இடைக்காடரும்.

“ சேய்மொழியோ தாய் மொழியோ செப்பில் இரண்டுமொன்று ;
அவ்வாய் மொழியை யாரும் மறையென்ப—வாய்மொழிபோல்
ஆய் மொழிகள் சாலவெனினும் அம்மொழியின்
சாய் மொழியென்பேன் தகைந்து.”

என்று பேசிப் போந்தார். [இதன் பொருள்:—திராவிட வேதமாகிய சேய்மொழியையும் கீர்வாண வேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில் இரண்டும் ஒன்றேயாம்; திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றே சொல்வார்கள்; திருவாய்மொழியைப் போலச் சிறந்த நூல்கள் அநேகம் உண்டு; என்று சிலர் குதர்க்கம் செய்தாலும், நான் அவர்களை மறுத்து, அவைகளும் இந்தக் குறளும் அந்தத் திருவாய்மொழியினது சாயையாய் இருப்பவைகளென்றே சொல்லுவேன்.] அன்றியும்,

"வாய்க்குங் குருகைத்திரு வீதியெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபத மளித்தாய்ந்தநா யோடிந்தப்
பேய்க்குமிட மளித்தாற் பழுதோ பெருமாள் மகுடம்
சாய்க்கும்படி கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே."

"மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழாயிரத்தின் சுவைய மிர்தங்
கறைப்பாம்பணைப் பள்ளியானன் பரீட்டங்களித் தருந்த
நிறைப்பான் கழலன்றிச் சன்ம விடாய்க்கு நிழலில்லையே."

இவை முதலிய செய்யுட்கள், ஸ்ரீ சடகோபர் பகவத்ஸமாவர் என்பதையும், அவரது அருளிச் செயல் பலவித பிறப்புக்களையும் தவிர்த்து முத்தியளிக்கும் ஆற்றலை யுடையது என்பதையும் வலியுறுத்தும். ஆகையால் திராவிடப்ரபந்தம் வேதம் எனத்தட்டில்லை. இவ்விருவகை வேதங்களையும் ஸ்ரீ வைஷ்ணவன் அத்யயநம் செய்தாலொழிய அவனுக்கு உபய வேதாந்த ப்ரவர்த்தகத்வம் ஏற்படமாட்டாது.

மேலும் மனிதர் நடை யாடுகைக்கு எவ்வாறு இரண்டு கால்கள் இன்றியமை யாதனவோ அவ்வாறே நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்துக்கும் உபய வேதங்கள் இன்றியமையாதன. "தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து தல முழுதும் கலியே ஆள்கின்ற நாள்" என்று கூறியுள்ளபடி கலியின் கொடுமையால் ஆரண நூல்வழிச் செவ்வை அழிந்து படாதபடி "மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையுங் கூட்டி ஒன்றத் திரித்தன் றெரித்த திருவிளக்கால்" உண்மையான சித்தாந்தம் உலகத்தில் ப்ரவசனமாயிற்று. இந்த ஸம்ப்ரதாயத்தை நீதி போல் பாது காப்பதற்காகவே ஆசார்யர்கள் பெரும்பாடு பட்டிருக்கிறார்கள். மனிதன் கடைத்தேருவதற்கு ஆசார்யனே கதியென்றும், அவனில்லாவிடில் உலகமே இருளடைந்துவிடுமென்றும், வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆசார்யர்கள், சேதனுடைய அஜ்ஞான அந்தகாரத்தை ஞான தீபத்தால் போக்குகின்றனர் என்னுமிடம்,

"ஏற்றிமனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி உரைப்பதும் புந்தியிற் கொள்வதும் யெங்கும் புகழ்ச்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே"

என்னும் பாசுரத்தால் ஸ்வாமி தேசிகன் பரக்க நிருபித்தருளுகின்றார். ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கரைகாணாமல் தபிக்கிற ஜந்துக்களைக் கரையேற்றுவதற்காக ஸ்ரீமந் நாராயணனே ஆசார்ய ரூபமாக அவதரிக்கிறான் என்று சாஸ்திரம் பகர்கின்றது. பரதேவதையினிடத்தில்போல் ஆசார்யனிடமும் பக்தி செய்யத்தக்கது என்னும், அதுதான் இவனுக்கு ச்ரேயஸ்கரமென்னும், அப்படிப் பக்தி பண்ணுகிறவனுக்குத்தான் ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட எல்லா அர்த்தங்களும் பிரகாசிக்குமென்றும் அவன்தான் மஹாபுருஷனென்றும் அபியுக்ததர்கள் கூறுகின்றனர்.

"ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரரூபீ ந ஸம்ஶய:"

என்று ஆசார்யர்களை பகவத்துல்யர்களாகவும் மிக்கோராகவும் கருதுவது சேதநனுடைய ஸ்வரூபம் ஆகவே "நாட்டிற் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய்" என்றபடி நாட்டார் படுவன படாமைக்காகத்தான் படாதன பட்ட பகவானுக்கும், அவன் கல்யாண குணங்களைக் கண்டறிந்து வெளியிட்டுள்ள ஆழ்வார் ஆசார்யர்களுக்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் யாவையெனில் "[illegible]" என்று அத்யாத்ம சாஸ்திரங்களைப் படித்து அவன் குணம் கூறிக்களிப்பதும், ஸத்ஸபைகளை ஏற்படுத்தி அவற்றின் வாயிலாக ஆழ்வாராதிகள் நாட்டார் நலம் பெருவதற்குத்தாம் செய்த அருளிச் செயல்களைப் படித்தும் அவர்களுக்கு நம்மால் இயன்ற அளவு அபகாரம் நேராமல் உத்ஸவாதிகளை செய்து வருவதுமேயாம்.

இப்பொழுது தெய்வபக்தி ஆசார்யபக்தி இவைகள் வெகு அருமையாய் விட்டன. காலக்கேட்டில் அநுஷ்டானங்களும் அவலமாய்ப் போயின. "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்றபடி மனம் போன போக்கே பெரிதாகக் கருதப்படுகிறதேயன்றி சாஸ்த்திரத்தின் விதி விளக்குகளை நன்கு அறிந்து அனுஷ்டிக்கிறவர்கள் முயற்கொம்பாகி விட்டனர். கருணைக்கடலாகும் கடவுள் கன்றினுக்கிரங்கும் கறவைகள்போல் தண்ணளி சுரந்து கடைக்கணித்தாலன்றி உய்தல் எங்ஙனம் கூடும்? நாம் உய்வதற்கு அவன் கடாக்ஷ லேசம் ஒன்றைத்தவிர ஏனையவை என் செய்ய மாட்டும்?

ஸ்ரீ:

ஸநாதந தர்மம்.

[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸார்ஜ்ஞ தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்]

(12-வது ஸஞ்சிகை பக்கம் 136 தொடர்ச்சி)

"[illegible] ॥
[illegible] ॥"

என்கிற சாஸ்த்ர வசநம் இப்பொழுதல்லவோ இவர்கள் விஷயத்தில் ஸார்த்தக மாயிற்று. இந்த நாமகேதுக்கள் மஹான்களையும் ஸாதுக்களையும் வைதிகர்களையும் சிஷ்டர்களையும் மனதினாலும் வாக்கினாலும் முறையே த்வேஷத்துடன் நினைப்பதாலும் நிந்திப்பதாலும்,

"[illegible] ।
[illegible] ॥"

என்கிற வசநத்தின்படி பசு பக்ஷிகளாகவும் சண்டாளர்களாகவும் மரம் செடி கொடிகளாகவும் பிறந்து ஆத்மாவுக்கு மீளா நரக வாஸத்தைத் தேடி வைக்கத் தயாராகி விட்டார்கள். ஹரி சப்தத்தின் பொருளே விளங்காத மஹாநுபாவர்கள் பள்ளு பறை முதலிய ஹீந ஜாதிக் காரர்களுக்கு ஹரிஜநங்களென்று எவ்வாறு பெயரிட்டார்கள்? தொன்று தொட்டு வந்திருக்கிற வர்ணாச்ரம தர்மங்களை இழப்பதால் தங்களுக்கு இனி வரப்போகிற விபத்துக்களை இந்த நாமகேதுக்கள் அறியாமல் நாசத்தை அடையப் போகிறார்களே என்று நாம் வ்யஸநிக்கிறோம். மேலும் வர்ண ஸாங்கர்யத்தை யுண்டாக்குவதால் இவர்கள் கொடும் பாவிகளாக ஆகிவிட்டார்கள்.

"[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

என்று அர்ஜுநனால் கண்ணன் ஸந்நிதியில் விஜ்ஞாபிக்கப் பட்டிருக்கிற படி தர்ம லோபத்தையும் வர்ண ஸாங்கர்யத்தையும் செய்து பாவிகள் பாவிகளென்கிற ஜந வாதத்தை ஏற்றுக் கொள்ளுகிற இந்த மஹாபுருஷர்களுக்கு மீளா நரகமே கதி. மேலும் இந்த நாமகேதுக்கள் மஹாத்மா வுள்பட ஆசாரத்தை யிழந்து எல்லா அச்ரேயஸ்ஸையும் தேடிக் கொண்டு விட்டார்கள். ஸதாசாரம் எல்லா ஸம்பத்துக்களுக்கும் இருப்பிடம். அப்படியே துராசாரம் எல்லா விபத்துக்களுக்கும் பிறப்பிடம்.

“𑌆𑌚𑌾𑌰𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌨 𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍇𑌨 𑌤𑍁 ।
𑌆𑌚𑌾𑌰𑍇𑌣 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌫𑌲𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑌾𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌹𑍍𑌯𑌾𑌯𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑌾𑌦𑍀𑌪𑍍𑌸𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ।
𑌆𑌚𑌾𑌰𑌾𑌦𑍍𑌧𑌨𑌮𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌮𑌾𑌚𑌾𑌰𑍋 𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌦𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌃 ।
𑌦𑍁𑌃𑌖𑌭𑌾𑌗𑍀 𑌚 𑌸𑌤𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑍋𑌽𑌲𑍍𑌪𑌾𑌯𑍁𑌰𑍇𑌵 𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌹𑍀𑌨𑍋𑌽𑌪𑌿 𑌯𑌸𑍍𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌵𑌾𑌨𑍍𑌨𑌰𑌃 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌶𑍍𑌚 𑌶𑌤𑌂 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌜𑍀𑌵𑌤𑌿 ॥”

என்கிற தர்ம சாஸ்த்ர வசநங்கள் ஸதாசாரத்தைக் காமதேநுவாகப் பகர்கின்றன. இப்படிப்பட்ட ஸதாசாரத்தை விட்டு ஹீந வர்ணத்தைச் சார்ந்திருக்கிற ப்ராணிகளை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வருவதனாலுண்டாகும் தர்மத்தைப் பெரிதென்று எண்ணி அதில் முயற்சிப்பவர்கள்

“𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 [illegible] 𑌵𑌾𑌞𑍍𑌛𑌤𑌿 ।”

என்கிற வசநத்தின் பொருளைப் பின்பற்றினவர்களாகப் பரிஹஸிக்கப் படுகிறார்கள். ஒருவன் உயர்ந்த வர்ணத்தில் பிறந்தும் நல்ல பெற்றோர்களின் நற் பழக்கத்திலிருந்தும் நல்ல கல்விகளைக் கற்றும மதிகேடனாகப் போவது ஜந்மாந்தரத்தில் இவனால் செய்யப்பட்டிருக்கிற வினையின் மூலமாக இவன் மீது ஜநநகாலத்தில் விழும் தமோ மூர்த்தியின் கடாக்ஷ மஹிமையே.

“𑌹𑌰𑌿𑌣𑌾𑌪𑌿 𑌹𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌪𑌿 𑌸𑍁𑌰𑍈𑌰𑌪𑌿 ।
𑌲𑌲𑌾𑌟𑌲𑌿𑌖𑌿𑌤𑌾 𑌰𑍇𑌖𑌾 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌷𑍍𑌟𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 ॥”

என்கிற வசநத்தின் படி வருவது வழி தப்பாது.

“𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌨 [illegible] ।
𑌇𑌤𑌿 [illegible] 𑌕𑌿𑌂 𑌨 [illegible] ॥”

என்பது சாஸ்த்ரம். தூமகேதுக்கள் போல் உலகில் உத்பாதங்களாகத் தோன்றி இருக்கிற இந்த மஹாநுபாவர்களுடைய துர்பாஷணங்களும் துருபதேசங்களும் கலியின் அபிவ்ருத்திக்கு அறிகுறிகளாக இருக்கின்றன. இவைகளால் கலி, மிகச்செழித்து ஓங்கி வளர்ந்து வருகிறதென்று நம்மால் ஊஹிக்கத் தக்கது. இந்தக் கலிபடர்கள், வர்ணாச்ரமங்கள் ஆசாரங்கள் தர்மங்கள் ஒன்றுங் கிடையாது என்று சொல்லிக் கொண்டு நினைத்தவண்ணம் துஷ்க்ருத்யங்களைச் செய்யா னின்றவர்களாக நம்பெரியோர்களைத் தூஷிக்க முற்பட்டு வந்து அதற்கு விபரீதமாக நம் பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள ஸ்ம்ருதி புராணங்கள் அனைத்தும் ஸத்யமென்று நன்கு விளக்கிக் காட்டுகிறார்கள். ஏனெனில் நம் பெரியோர்கள் ‘கலியில் சில துஷ்டர்கள் தோன்றுவார்கள். நாஸ்திக வாதத்தில் நிபுணர்களாக இருப்பதுடன் ஸதாசாரங்களையும் ஸநாதந தர்மங்களையும் ஒழிப்பதில் புஷ்கலமான முயற்சியைச் செய்வார்கள். ஸாதுக்கள், இருக்கிற இடந்தெரியாமல் ஒடுங்குவார்கள். அதர்மம் தழைத்து வ்ருத்தி யடையும். ஸநாதநமான தர்மங் குன்றிவிடும். ஜாதி ஸாங்கர்ய முண்டாகும். அவனவனுக்குத் தோன்றுவது தர்மம். ஸத்யம் ப்ரகாசிக்காது. அந்ருதம் ஸத்யம்போல் ப்ரகாசிக்கும்’ என்று எழுதியிருக்கிறார்கள். இவ்வளவும் இந்தக் கலிபடர்களிடம், காணப்படுகிறது. ஆதலால் இவர்கள் நம்முன்னோர்களான மஹர்ஷியின் வசனங்களை உண்மையென்று உலகத்தாருக்கு நிரூபித்துக் காண்பிக்க பகவானால் பிறப்பிக்கப் பட்டவர்களென்று நாம் இவர்களிடம், க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கக் கட்டுப்பட் டிருக்கிறோம். கலியின் அபிவ்ருத்தியானது நிரங்குசமாக இருப்பதால் எல்லா அநர்த்தங்களும் ஸம்பவித் திருக்கின்றன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

எவர்கள் தர்மத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ள வில்லையோ அவர்கள் மநுஷ்ய கோஷ்டியில் எண்ணத் தக்கவர்களல்ல; பசுபோன்றவர்கள். அதர்மமித்ரனாக இருக்கிற கலிபுருஷனால் இந்த பூமியானது கவரப்பட்டிருப்பதால் இப்புவியில் ஸத்யம் தவம் தூய்மை தயை தாநம் எல்லாம் ஒழிந்தன. மனிதர்கள் நல்லதோ தீயதோ எந்த கார்யங்களையாவது செய்து வயிற்றை நிறப்புவதில் நோக்கமுடையவர்களாகவும் அல்பர்களாகவும் பொய் ஸாக்ஷ்யம் சொல்பவர்களாகவும் மந்த புத்தி யுள்ளவர்களாகவும் அல்ப பாக்யமுள்ளவர்களாகவும் ஆத்யாத்மிகம் முதலான தாபங்களுக்கு ஆள்பட்டவர்களாக

ஷமாய் விட்டார்கள். கதாஸாரம் தீர்த்த ஸாரம் தபஸ் ஸாரம் த்யாநயோக ஸாரம் வஸ்து ஸாரம் எல்லாம் நாசமடைந்து விட்டன. மஹாத்மாவும் இவருடைய சீடர்களான தூமகேதுக்களும் சொல்வது யாதெனில்:—‘சண்டாள ஜாதியே கிடையாது. நடுவில் சிலகபடிகள் தங்களை மேன்மைப் படுத்திக் கொள்வதற்கும் ஈனமான தொழில்களை இவர்கள் வாயிலாகச் செய்வித்து அதன் பயனான சுகத்தைத் தாங்கள் அடைவதற்காகவும் ஏற்படுத்தின ஒரு வகுப்பு. இது நூதநமாக உண்டாகப் பட்ட தென்பதற்கு சாஸ்த்ரங்களே ப்ரமாணம். இந்த ஜாதி தொன்று தொட்டிருக்குமேயாகில் சாஸ்த்ரங்கள் மற்றவைகளைச் சொல்வதுபோல் இந்த ஜாதி வகுப்பையும் சொல்லியிருக்கும். ‘தீண்டாமை யென்பது மஹா பாவமானது. இது எந்த சாஸ்த்ரத்திலும் காணப்பட வில்லை. வேதத்திலுண்டா? புராணங்களி லுண்டா? தர்ம சாஸ்த்ரங்களி லுண்டா? அந்யாயமாகச் சிலர் சில வகுப்பார்களைப் பக்கத்தில் அணுகத்தகாதவர்க ளென்று கருணையில்லாமல் விலக்கித் துன்பத்திற்கே யுட்படுத்தி விட்டார்கள். இது மஹா பாவச்செயல். மேலும் ஈச்வர ஸ்ருஷ்டியில் உத்தம வஸ்து அதம வஸ்து என்கிற பாகுபாடு கிடையாது. எல்லாம் ஒரே அந்தஸ்துள்ளதே. ஜாதியினாலோ கல்வியினாலோ தனத்தினாலோ செய்கையினாலோ ஏற்றத் தாழ்ச்சி யொருவருக்கும் கிடையாது’ என்பதுதான் இந்த தூமகேதுக்கள் சொல்லும் வசநங்கள். இவைமுற்றிலும் அப்ரமாணங்கள். இவர்கள் ஒன்று மறியாத பேதைகள், இவர்களுக்கு ஸம்ஸ்க்ருத வாஸனையே தெரியாது. அவ்வாறு இருக்க, சாஸ்த்ரங்களின் ஆராய்ச்சி யேது? பாப வேகத்தால் நல்ல புத்தி தவறி இவ்வண்ணம் பிதற்றுகிறார்கள். வேதத்திலும் சாஸ்த்ரங்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் சண்டாள ஜாதி தீண்டாமை ஜாதி ஆகிய வகுப்புக்கள் எல்லாம் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ச்ருதியில்

“ச்வயோநிம் வா ஸூகரயோநிம் வா சண்டாளயோநிம் வா”

என்று, சண்டாள ஜாதியானது தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. ராமாயணம் பாலகாண்டம் 59-வது ஸர்க்கத்தில்

‘உக்தவாக்யம் து ராஜாநம் க்ருபயா குசிகாத்மஜ: ।
அப்ரவீந் மதுரம் வாக்யம் ஸாக்ஷாச்சண்டாளரூபிணம் ।
க்ஷத்ரியோ யாஜகோ யஸ்ய சண்டாளஸ்ய விசேஷத: ।
கதம் ஸதஸி போக்தாரோ ஹவிஸ்தஸ்ய ஸுரர்ஷய: ।
ப்ராஹ்மணா வா மஹாத்மாந: புக்த்வா சண்டாளபோஜநம் ।
கதம் ஸ்வர்க்கம் கமிஷ்யந்தி விஸ்வாமித்ரேண பாலிதா: ॥”

என்று சண்டாள ஜாதி தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜாதி சண்டாளர்கள் அநாதியாக இருப்பவர்கள். ப்ரதிலோம ஸாங்கர்யத்தினாலும், சண்டாள ஜாதி ஏற்படுகிறதென்று மநுஸ்ம்ருதியிலும் நன்ருகப் பகரப்பட்டிருக்கிறது. சண்டாள ஜாதியானது உளதென்பது பற்பல ஸ்ம்ருதிகளிலும் பகரப்பட்டிருக்கிறது.

பராஶர:—

"ஶூத்ராஜ்ஜாதஸ்து சண்டால: ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ।
சாஶ்வபாகஶ்சண்டாலோ விப்ராணாமபி ஜாயதே ।
ஶ்வபாகம் சாபி சண்டாலம் விப்ரஸ்ஸம்பாஷதே யதி ।
சண்டாலைஸ்ஸஹ ஸம்வாஸம் த்ரிராத்ரோபவாஸயேத் ॥"

அங்கிரா:—

"சண்டாலஶ்ஶ்வபச: க்ஷத்தா ஸூதோ வைதேஹகஸ்ததா ।
மாகதாயோகவௌ சைவ ஸப்தைதே ஹ்யந்த்யவஸாயின: ॥"

பராஶர:—

"அவிஜ்ஞாதஸ்து சண்டாலோ யத்ர வேஶ்மனி திஷ்டதி ।
விஜ்ஞாதே தூபஸந்ந்யஸ்ய த்விஜா: குர்வந்த்யனுக்ரஹம் ॥"

சண்டாளர்கள் தீண்டத் தகாதவர்கள் என்கிற விஷயத்தில் அநேக ப்ரமாணங்கள் இருக்கின்றன. "ஸ்தாலீபுலாக" ந்யாயத்தால் சில ப்ரமாணங்களைக் காட்டுகிறேன்.

ஜாதியினாலும், செய்கையினாலும், ஸ்வபாவத்தாலும், கல்வியினாலும் ஆஹாரத்தாலும், குணங்களாலும் கீழ்மைப் பட்டிருக்கிற தமோகுணமய மூர்த்திகளின் தர்சனம், ஸ்பர்சனம், பாஷணம், இவை அனைத்தும் ஜாதி முதலியவைகளால் மேம்பாடுடையவர்களுக்கு அருவருக்கத் தக்கவைகளே. அவைகள் போரபரிஹரிக்கத் தக்கவைகள். அவைகளின் ஸம்பந்தம் ஸாதுக்களுக்கு அச்ரேயஸ்ஸை உண்டு பண்ணும். நீசர்களுடைய தர்சந ஸ்பர்சநங்கள் எவ்விதத்தாலும் அநர்த்தாபாதகங்கள். இந்த விஷயத்தில் உலகத்தில அநேக நிதர்சநங்கள் உள. க்ரூர ஹ்ருதயமுள்ள சில மனிதர்கள் கொடிய கண்ணால கறக்கிற பசுவைப் பார்ப்பார்களேயாகில் கரு ரத்தமாகக் கறக்கக் காண்கிறோம், கறக்கும் மாட்டுக்கு வியாதியும் வந்து பால் வற்றியே போகிறது. முலைக்காம்புகள் வெடித்து ரணமுண்டாகின்றது. அசுத்தர்களாக அதாவது வீட்டுக்கு விலக்காக இருக்கிற ஸ்த்ரீகள் அசுத்தியுள்ள மூன்று திநங்களில் மல்லிகைச் செடிகளையும் கரு

வேப்பிலை மறங்களையும் தொட்டார்களே யானல் உடனே அவை பட்டுப் போகின்றன. தொடக்கூட வேண்டியதில்லை அவர்களுடைய நிழல் பட்டாலே எரிந்து போகின்றன. அசேதநங்களான செடி கொடி மரம் இவைகளே அசுத்த ஜநங்களுடைய தர்சநத்தையும் ஸ்பர்சநத்தையும் ஸஹிக்காமலிருக்க சேதநர்கள் நீசர்களுடைய தர்சந ஸ்பர்சநங்களையும் நிழல் தாக்குவதையும் ஸஹிப்பார்களோ? விவேகிகளாக இருப்பவர்களுக்கு நாம் எடுத்துக் கூறவேண்டுவதே அநாவச்யகம். ‘ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் எல்லாம் ஒன்று, ஏற்றத் தாழ்ச்சி யில்லை’ என்று அவர்கள் சொல்லுவது பிதற்றலே. ஏனெனின் ஈச்வரனுடைய படைப்பில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் குணத்தாலும் வடிவத்தாலும் நிறத்தாலும் ஸ்வபாவத்தாலும் வேற்றுமை யுண்டு. எத்தனையோ கோடி ஜந்துக்கள் இருக்கின்றன. உற்றுப்பாருங்கள்- ஒன்று போலொன்று இருக்கிறதா! பாதி வஸ்து வேற்றுமை குடிகொண்டிருக்கிறது. ‘வர்ணாச்ரமங்கள் தொன்று தொட்டு ஏற்பட்டதல்ல. புதிதாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டவை’ என்று தூம கேதுக்கள் கோஷிக்கின்றன. அதுவும் பரிஹஸிக்கத்தக்கது. வர்ணங்கள் அநாதிகளாக இருக்கின்றன. புருஷ ஸூக்தத்தில்

“ப்ராஹ்மணோ(அ)ஸ்ய முகமாஸீத்| பாஹூ ராஜந்ய: க்ருத:|
ஊரூ ததஸ்ய யத்வைச்ய:| பத்ப்யாம் சூத்ரோ அஜாயத”||

வர்ண விபாகங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படியே பகவத் கீதையிலும்

“சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகச: ।
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தாரமவ்யயம்||”

என்று ஸ்ரீ கீதாசார்யனை பரம புருஷனே வர்ணங்களைத் தான் படைத்ததாகக் கூறியிருக்கின்றார். ஆச்ரமங்களும் அப்படியே ச்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் ஸ்பஷ்டமாகப் பகரப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிற ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் இதிஹாஸங்களும் ஸாத்விக புராணங்களும் தர்மங்களைக் கோஷித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவைகளைக் கவனியாமல், கவனித்தாலும் அவைகளிலுள்ள த்வேஷ புத்தியினால் அவைகளைப் புறக்கணித்து தங்களிஷ்டப்படி பிதற்றுகிறவர்களை எவர்கள் தான் அடக்கமுடியும்? காலவைஷம்யத்தால் இவ்வண்ணம் உத்பாதங்கள் தோன்றி யிருக்கின்றன. ஸநாதந தர்மத்தில் த்வேஷத்தை விட்டுக் கேட்டால் இவர்களுக்குத் தர்மங்களையுள்ளபடி சொல்லலாம். அதிலும் தர்ம ஸூக்ஷ்மம் வேறு.

“[illegible]”

என்று வாலியைப் பார்த்து ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் திருவாய் மலர்ந்திருக்கிற வண்ணமாக ஹரிஜந பக்தர்களுக்குத் தர்ம ஸூக்ஷ்மங்களைச் சொன்னால் எங்ஙனம் அவர் மனதில் அது படியும்? ஆக்ரஹம் குடிகொண்டிருக்கிற தருணத்தில் அவர்களுடைய வுள்ளத்தில் தத்வார்த்தங்களுக்கு அவகாசம் எவ்விதம் ஏற்படும்? ஆகவே “ஹயக்ரூஹ்ய நாமாந:” என்கிற நாமாக்களுக்குத் தக்கபடி இந்தக் கலி புருஷர்களால் தர்ம லோபத்தை முன்னிட்டு உலகத்துக்கே பயத்தை யுண்டுபண்ணி யிருக்கிற பரமபுருஷனே நல்லபுத்தியை இவர்களுக்குத் கொடுத்து விபரீத வாஸநா மூலமான துர்புத்தியை அகற்றி ஸநாதந தர்மத்தில் அபிருசியை உண்டு பண்ணி உலகத்திற்கு ஏற்பட்டிருக்கும் தர்ம க்ஷேபத்தைப் போக்கி ஸநாதந தர்மத்தை நன்கு தழைக்கச் செய்து ப்ரபஞ்சத்தைப் பாது காப்பாராக.

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

[மதராஸ் அட்வெகேட். கே. இ. இராஜகோபாலாசாரியர் எழுதுவது.]

பிரதிவாதி பயங்கரம் அண்ணனுடைய ஸந்ததியில் தோன்றினவரும் அந்த திருவம்சத்திற்கு ஏற்ற ஞான அனுட்டானங்கள் நிரம்பப் பெற்றவரும், காஞ்சி நகரத்தில் எழுந்தருளி யிருப்பவரும், நாடெங்கும் பரவிய நற்புகழ் பெற்றவருமான ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமியைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களும், அவருடைய கல்வித் திறத்திலும் உபந்யாஸ சைலியிலும் க்ரந்த லேகந வைகரியிலும் ஈடுபடாதவர்களும் பெரும்பாலும் இருக்கமாட்டார்களென்றெண்ணுகின்றேன். மேற்படி ஸ்வாமி ஸம்ஸ்கிருத பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் இயற்றி வெளியிட்டிருக்கின்றவும் நாளைக்கும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றவுமான பற்பல அரும்பெரும் நூல்களினால் இவருடைய உபய பாஷா ப்ராவீண்யம் ஒப்பற்றதென்பது உலகமறிந்ததாகும். ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளிலும் ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளிலும் அநேக பாகங்களுக்கு இந்த ஸ்வாமியின் அருமையான வியாக்கியானங்கள் வெளிவந்து பண்டிதர்கள் பாமரர்களென்கிற வாசியில்லாமல் எல்லோருக்கும் மிகப்பயன்பட்டுக் கொண்டிருப்பது பற்றி நாம் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை.

தவிரவும் ஸ்ரீ காஞ்சியில் ‘வேத வேதாந்த வைஜயந்தி’ யென்கிற ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்து அதன் மூலமாகப் பல ஸ்ரீ வைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு உபய வேத வேதாந்த ப்ரவசந கைங்கரியத்தை ஆச்சரியமாக இந்த ஸ்வாமி நடத்திவருகின்ற விசேஷமும் ப்ரஸித்தமானதே.

இப்படிப்பட்ட அதிசயங்களெல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஸ்வாமி மூன்று வருஷகாலமாய் சென்னை மாநகரில் பிரதி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தோறும் அருளிச்செய்து கொண்டு வருகிற அமுதமொழி மயமான உபந்யாஸங்களின் சிறப்பு விலக்ஷணமானது. இவ் விஷயத்தைப்பற்றி இங்குக் கொஞ்சம் விவரமாக எழுத விரும்புகின்றேன்.

சென்னைப் பட்டணத்தில் வித்வான்களுடைய உபந்யாஸங்களை அடிக்கடி நடத்தி வைக்க அநேக சபைகளும், சாரிடீகளும் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஸபைகளுள் "பகவத் கதாப்ரஸங்க ஸபா" என்பது ஒன்று. மற்ற எல்லா ஸபைகளைவிட இந்த ஸபையே முதன் முதலாக ஏற்பட்டதென்றும் இது சிறந்த பிரமுகர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. இந்த ஸபை ஏற்பட்டு இன்றைக்கு ஏறக்குறைய நாற்பது வருஷங்கள் போல் ஆகின்றன. இதுவரையில் இந்த ஸபையில் அநேக வித்வான்களுடைய ஹரிகதா காலக்ஷேபங்களும், ஸங்கீதக் கச்சேரிகளும் உபந்யாஸங்களும் விசேஷமாக நடந்திருக்கின்றன. ப்ரஸித்தர்களாயிருந்த ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரியாரவர்கள், பருத்தியூர் கிருஷ்ணசாஸ்திரியாரவர்கள், பண்டிட் லக்ஷ்மணாசார்யாரவர்கள் முதலான மஹான்கள் இந்த ஸபையில் அநேக நாள் காலக்ஷேபங்கள் நடத்தியிருக்கின்றார்கள்.

தங்கசாலை வீதியிலுள்ள தொண்டை மண்டலம் ஹை ஸ்கூல் ஹாலில் இந்த ஸபையின் காரியங்கள் நடந்து வருகின்றன. ஷை ஹால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வீற்றிருக்கக் கூடிய மிக விசாலம் அமைந்தது. 1931-ஆம் வருஷம் ஜூன் மாதத்தில் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஷை ஸபையில் உபந்யாஸங்கள் செய்தருள நியமிக்கப்பட்டார். உடையவர் வைபவம், பாகவதர்களின் வைபவம், தேவப் பெருமாள் வைபவம் போன்ற தனித்தனி விஷயங்களில் பத்தெட்டு உபந்யாஸங்கள் நடந்த பின்பு ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸங்களை விரிவாகக் கேட்க விரும்பின அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி 1931௵ ஆகஸ்டு மாஸத்தில் ஸ்வாமி ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் நடத்த ஆரம்பித்தார்.

புஸ்தகம் வைத்துக் கொள்ளாமலும், கைக் குறிப்புகளுமில்லாமலும் கங்கா ப்ரவாஹம் போல் ஸ்வாமி ஸாதித்துவரும் உபந்யாஸங்களைக் கேட்டு அதிசயப்படாதவர்கள் யாருமில்லை. வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், பிள்ளைப் பெருமாளையங்கார் பாடல்கள், திருக்கோவையார் முதலான தமிழ்க் கிளவி நூல்கள், காவ்ய நாடக அலங்கார ச்லோகங்கள், ஸகல ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் ச்ருதி இதிஹாஸ புராணங்கள், ஆகிய இவ்வளவையும் இனிமையாகப் பொழிந்துகொண்டு ஸ்வாமி நிகழ்த்தும் உபந்யாஸங்கள் மிகவும் அருமையானவை. இப்படிப்பட்ட அமைப்புடன் ஸ்ரீ ராமாயண விசேஷார்த்த உபந்யாஸம் இதுவரை எங்கும் கேட்டதில்லையென்றே பலரும் அபிப்ராயப் படுகிறார்கள். புருஷர்களும் ஸ்திரீகளுமாய் சுமார் ஆயிரம் ஜனங்கள் கேட்டுக் களித்து வருகிறார்

கள். ஆங்கிலத்தில் B. A. M. A. முதலான பட்டப் பரீக்ஷைகள் தோன்றினவர்களும், தமிழ்ப்பண்டிதர்களும் வடமொழிப் புலவர்களும் பலவகை உத்யோகஸ்தர்களும் வியாபாரிகளும், அநேக மத ஸம்பிரதாயஸ்தர்களும் திரண்டு மிக்க குதூஹலங்கொண்டு கேட்டுக் களிக்கும்படியாக நடத்தப்பட்டு வருகின்ற இவ் வுபந்யாஸத்தில் இப்போது விபீஷண சரணாகதி ப்ரகரணம் நடந்து வருகின்றது. இந்த சரணாகதி விஷயத்தில் மாத்திரம் இதுவரை பன்னிரண்டு உபந்யாஸங்கள் நடந்திருக்கின்றன.

சென்ற மே மாத முடிவில், ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய ஹம்ஸ ஸந்தேச காவியத்தின் ஸாரப்பொருள் இரண்டு உபந்யாஸங்களில் வெகு அழகாக எடுத்துரைக்கப் பட்டது. அப்போது முக்கியமாகக் கையாளப்பட்ட சுலோகங்கள் தெலுங்கு லிபியில் தனிப்பதிப்பாக வெளியிடப்பட்டு முள்ளது.

அநேகமாய் நாளது ஆவணி மாதத்தில் பட்டாபிஷேகமும் நடைபெறலா மென்று உத்தேசிக்கப் படுகிறது. அதற்குப் பிறகு ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை ஆநுபூர்வியாக எடுத்துக் கொண்டு உபந்யாஸங்கள் ஸாதிக்கவேணு மென்று பக்த ஜனங்களின் கோரிக்கை இருந்து வருகின்றது. பகவத் கீதை யுபந்யாஸமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து எது வெளிவந்தாலும் அதுவே பரம போக்யமென்று கொள்ளுகிறவர்களாகவே ஸகல ச்ரோதாக்களும் காணப்படுகின்றார்கள்.

சனிக்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 7-30 முதல் 9-30 வரையிலும் இவ் வுபந்யாஸங்கள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வாரம் விடுமுறையாகும்.

கீழ் நடந்த மூன்று வருஷங்களிலும் மார்கழி மாதத்தில் முப்பது நாளும் திருப்பாவை விசேஷார்த்த ஸ்வாபதேசார்த்த அந்யாபதேசார்த்த உபந்யாஸங்கள் வெகு அருமையாக ஸ்வாமியால் நடத்தப்பட்டன. உபய பாஷையிலும் ஸகல க்ரந்தங்களிலும் உபய வேதங்களிலும், உபய வேதாந்தங்களிலும் மிகவும் பாராட்டத் தகுந்த வல்லமை பெற்று ஆங்காங்குப் பொருத்தமான மேற்கோள்களை விளக்கி, சிறியவர் களுக்கும் நெஞ்சில் நன்கு பதியுமாறு எளிதாகவும், அழகாகவும், கம்பீரமாகவும் அமுத மொழிகளை அளித்துவருகின்ற அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் இப்படியே பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து உலகினரை உய்விக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

பிரதிவாதி பயங்கர மடம்

பெருமாள்கோவில்.

ஸ்ரீ ஸ்வாமிகள்:—ஷஷ்டி அப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை உத்தேசித்து எழுந்தருளின ஸ்ரீஸ்வாமிகள் பெருமாள் கோவிலிலேயே எழுந்தருளியிருக்கிறார். பகவதாராதன ததீயாராதன காலக்ஷேபாதிகள் வழக்கம்போல நடந்து வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸங்க ஸ்தாபனம்:— ஸ்ரீ ஸ்வாமியின் நியமனத்தை யொட்டி உள்ளூர் ஸ்ரீ வைஷ்ணவர்கள் 1-4-34-தேதி மடத்தின் அதிதிபவநத்தில் ஓர் கூட்டம் கூட்டினார்கள். அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமி அக்ராஸனம் ஏற்று 1910ம் வருஷத்தில் வட இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற ஸ்ரீ வைஷ்ணவ ஸம்மேளனத்தின் விருத்தாந்தங்களை எடுத்துச் சொல்லி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தியுள்ள பெருமாள் கோவிலில் ஓர் ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம் ஸ்தாபிதமாகவேண்டிய ஆவச்யகதையை எடுத்துச் சொன்னதின் பேரில் கூடியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவ்விதமான ஓர் சங்கம் இருக்கவேண்டியதை உணர்ந்து ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம் என்கிற பெயருடன் ஓர் ஸங்கத்தை ஸ்தாபிப்பதாகவும், இது அகில இந்திய ஸ்ரீ வைஷ்ணவ ஸம்மேளனத்தின் கிளையாக இருக்கவேணுமென்றும் தீர்மானம் செய்தார்கள். அந்த ஸங்கத்துக்கு ஸ்ரீ. உ. வே. அய்யா கிருஷ்ணஸாமி தாதாசாரியார் அக்ராஸநாதிபதியாகவும் ஸ்ரீ. உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் உப அக்ராஸநாதிபதியாகவும் ஸ்ரீமான் C. V. வரதாசாரியாரும், ஸ்ரீமான் M. V. ரெங்காசாரியாரும் கார்யதரிசிகளாகவும் ஸ்ரீமான் M. நரஸிம்மாசாரியர் தநாத்யக்ஷராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கத்தின் ரூல்ஸ் முதலியவைகளைத் தயார் செய்ய ஓர் கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

ஸ்ரீபெரும்பூதூர் மஹோத்ஸவம்:-கடந்த சித்திரை மாதத்தில நடந்த ஸ்ரீபாஷ்யகாரர் மஹோத்ஸவத்துக்கு எழுந்தருளவேணுமென்று ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்ரீ பாஷ்யகாரஸ்வாமி சன்னிதி தர்மகர்த்தர்கள் ப்ரார்த்தித்தபடி, ஷை உத்ஸவத்தில் எட்டாவது திருநாளன்று ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ பெரும்பூதூர் எழுந்தருளினார். வழக்கம் போல் சன்னதி மரியாதைகள் நடந்தன. மங்களாசாஸனம் செய்தருளினார். அந்த ஸமயத்தில் 8 வது திருநாளன்று சாயங்காலம் ஸ்ரீ மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தைப் பற்றி சுமார் 2½ மணிகாலம் உபந்யாஸம் செய்தருளினார். 9 வது திருநாளன்று சாயங்காலம் ஸ்ரீபதி ராஜ மடத்தை யடுத்த மண்டபத்தில் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பற்றி சுமார் 2 மணி காலம் உபந்யஸித்தார்.

ஸ்ரீ ராமாநுஜ திவ்யசரி தோபந்யாசம்—

6—5—34உ பெருமாள்கோவில் ஸ்ரீ வைஷ்ணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீ யதோக்தகாரிப் பெருமாள் சன்னிதியில் ஸ்ரீபொய்கையாழ்வார் மண்டபத்தில் சாய

க்காலம் ஸ்ரீராமாநுஜருடைய சரித்திரமும் கொள்கைகளும் என்கிற விஷயத்தை சுமார் 2½ மணி சாவகாசம் உபந்யஸித்தார். உள்ளூர் வக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் பண்டிதர்களும் கேட்டானந்தித்தார்கள்.

19-5-34௳ மடத்தின் சுத்திப்பிரவசநத்தில் உணவுச்சீர்திருத்த விஷயமாக நடந்த ஸபையில் ஸபையோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீஸ்வாமி சாஸ்திரஸம்மதமான வழியில் ஏற்படவேண்டிய உணவுச் சீர்திருத்தத்தைப்பற்றி சுமார் 1 மணிகாலம் உபந்யாஸம் செய்தார். உணவுச் சீர்திருத்த ஸபை யொன்று ஸதாபிக்கப்பட்டது.

ஸநாதந தர்ம ஸேவா ஸங்கம்:— 3-6-24௳ பெரிய காஞ்சீபுரம் கங்கைகொண்டான் மண்டபத்தில் நடந்த ஷை சங்கத்தின் ருவேஷாத்ஸவத்தில் ஸ்ரீஸ்வாமி அக்ராஸனம் வகித்து ஸநாதந தர்ம மேன்மையைப்பற்றியும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப்போக்க வேண்டிய ஆவச்யகதையைப்பற்றியும் நீண்டதோர் உபந்யாஸம் செய்தார். பலதீர்மானங்களும் செய்யப்பட்டன.

கயா க்ஷேத்ரத்தில் மடஸ்தாபனம்:— வட இந்தியாவில் கயா க்ஷேத்ரத்தில் ஸ்ரீவைஷ்ணவ மடம் இல்லாமலிருந்த குறையைப் போக்க கடந்த வைகாசி மாதத்தில் பிரதிவாதி பயங்கரமடத்தின் சாகையாக ஸ்ரீராமாநுஜமடம் என்கிற பெயரோடு ஓர் மடம் ஸ்தாபிக்கப் பட்டது. ஸ்ரீஸ்வாமி கல்கத்தாவுக்கு ஸநாதந தர்ம மஹாஸம்மேளனத்துக்காக எழுந்தருளி திரும்பும்போது மடஸ்தாபனத்துக்காக வேண்டிய இடம் ஸ்ரீவிஷ்ணு பாதக் கோவில் ஸமீபத்தில் வாங்கப்பட்டது. அங்கு சங்கர மடமும் மத்வமடமும் ஏற்கனவே இருந்தன. ஸ்ரீராமாநுஜ மடம் இல்லாமலிருந்தது. ஸ்ரீவைஷ்ணவர்களின் வேண்டுகோளின் பேரில் ஓர் மடம் ஸ்தாபிக்கத்திருவுள்ளம் பற்றினர். அதன் பலனாக மடம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

தென்னிந்தியாவில் தர்மப்ரசார யாத்திரை:- வடதேசத்தில் செய்ததுபோல் தென்னிந்தியாவிலும் ஸநாதந தர்ம ப்ரசாரம் செய்துகொண்டு யாத்திரை செய்யவேணுமென்று தென்னிந்தியாவிலுள்ள சிலர் ஸ்ரீஸ்வாமி விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி செய்யவேண்டியது ஆவச்யகம் என்பதும், யாத்திரையின் தன்மை எப்படிப்பட்டதாயிருக்க வேணுமென்பதும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது கிடைத்திருக்கும் விண்ணப்பங்களைப்போல் இன்னும் சில கிடைக்குமேயானல் ஷை யாத்திரை நடந்தாலும் நடக்கலாம்.

க்ரந்த ப்ரகாசநம்:— ஏற்கனவே ஸ்ரீஸ்வாமி பல சாஸ்திரீய கிரந்தங்களை அச்சிட்டு வெளியிட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இப்பொழுது இன்னும் சில அபூர்வமான கிரந்தங்களை பிரசுரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வேலை நடந்து வருகிறது.

20_6_34
பெருமாள் கோவில்

கே. திருவேங்கடத்தய்யங்கார்
மடம் ஏஜண்டு.

ஸ்ரீ:

ஶ்ரியை நம:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

ஓர் வித்வத் ஸபாஜநம்.

சற்றேறக் குறைய ஒரு மாஸகாலம் முன், பெருமாள் கோயிலில் ஸ்ரீ வரதனுடைய வார்ஷிகோத்ஸவம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு திநம் ப்ரஹ்மவித்துக்களான அநேக வைதிக சிரோமணிகளும் அநேக லௌகிக ப்ரபுக்களும் ஒன்று சேர்ந்து, மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ. உப. தேசிகாசார்ய ஸ்வாமிக்கு ஸபாஜநமொன்றைச் செய்தார்கள் என்னும் விஷயம் ப்ராயேண ஸ்ரீவைஷ்ணவ ஆஸ்திகர்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இந்த ஸபாஜநத்திற்கு மதிராஸில் ஏற்பட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையின் முயற்சியே முக்ய காரணம். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த க்ரந்தங்களை ப்ரசுரம் செய்வதற்கென்றே ஒன்று சேர்ந்திருக்கும் இச்சபையோர் தமது முதல் ப்ரவ்ருத்தியாக, ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள 'ந்யாய ஸித்தாஞ்ஜநம்' என்னும் க்ரந்தத்தைத் தகுந்த வித்வான்களைக் கொண்டுப் பரிசோதித்து நாகர லிபியில் அச்சுப் பதிப்பித்து வெளியிட்டு வருகிறார்கள். அந்த க்ரந்தத்திற்கு தததநுரூபமான ஒரு முகவுரையை எழுதுவிக்க வேண்டுமென்று கருதி அந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமியை ப்ரார்த்திக்க, அவர் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி ஒரு முகவுரையை அநுக்ரஹித்திருக்கிறார். அப்படி அவர் அநுக்ரஹத்தை வ்யாஜமாகக்கொண்டு, அந்த ஸபையின் ப்ரவர்த்தகர்களான மஹா ப்ரபுக்கள், தம்மால் வெகு காலமாக ப்ரார்த்திதமாயிருந்த இந்த ஸ்வாமியின் ஸபாஜந ரூபமான மனோரதத்தை இப்பொழுது நிறைவேற்றிக் கொண்டார்களென்று நாம் அறிகின்றோம்.

இவ்விதம் இச்சபையோர் ப்ரவருத்தித்தது நமக்கு மிக்க ஆநந்தத்தைக் கொடுக்கின்றது. ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமி நிஸ்ஸமாப்யதிகரான வித்வாந்; வயஸ்ஸாலும் மிகவும் பரிணதர். ஜந்மாந்தர ஸுக்ருத விசேஷத்தாலும் ஸதாசார்ய கடாக்ஷத்தாலும் ஸ்ரீ [illegible]ரண்யனுடைய திருவடிகளில் ஹார்த்தமான அன்பு அளவற்று அவருக்கு ஜநித்திருக்கின்றது; அது காரணமாக அவர் அத்யர்த்தம் பகவத் ப்ரியரே. இப்படிப்பட்ட அநர்க்கமான வஸ்துவை அதன் அருமையை அறிந்து ஆதரிப்பது யாருக்குத்தான் ஸந்தோஷத்தை ஜநிப்பிக்க மாட்டாது? குணவத்துக்களான வஸ்துக்களின் குணத்தை அறிந்து ஆதரிப்பது விவேகிகளின் லக்ஷணம்; அப்படி அவை ஆதரிக்கப்படுகின்றன வென்பதைப் பார்த்து ஆநந்திப்பது ரஸிகர்களுக்கு ஸஹஜம்.

இந்த ஸபாஜநம், ‘ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த விஜயத்வஜம்’ என்னும் பிருது ஸமர்ப்பித்துக் கொள்ளும் ரூபமாக ஏற்பட்டதாம். வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு அழகான ப்ரதிமையின் உள்ளில் அந்த பிருது பத்ரம் வைக்கப்பட்டு ஸமர்ப்பிக்கப்பட்டதாம். அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்த ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி, ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் காதி அநந்தாசார்ய ஸ்வாமி, ஸ்ரீதிருக்கோட்டியூர் ஸ்வாமி, ஸ்ரீநாவல்பாகம் ஸ்வாமி இவர்கள்முதலான வித்வத் ரத்நங்களால் அந்த பிருது ஸமர்ப்பணம் ஆமோதிக்கப் பட்டதாம். இம்மாதிரியாக ப்ரஹ்மவித் ஸபாஜநம் செய்வது பெரியதொரு பகவதாராதநமே. அந்தக் காரணத்தாலேயே நாம் இதைப் பற்றி மிகவும் ஸந்தோஷிக்கின்றோம்.

கபிஸ்தலம் ஸ்வாமியின் திருமேனி கொஞ்சம் அசக்தமாக இருப்பதாக நாம் அறிகின்றோம். ப்ரஹ்ம ஸம்ஸித்தமான அந்தத் தேஜஸ் ஒருகால் சீக்ரத்தில் அஸ்தம் அடைந்து விடுமோ வென்று அவருடைய அருமையை அறிந்தவர்களெல்லாரும் பயந்து கொண்டே இருக்கின்றார்கள். ‘[illegible]’ என்று ஆசாஸித்துக் கொண்டிருப்பது மாத்ரம் நம்மால் ஸாத்யம். அதற்குப் பிறகு பகவத் ஸங்கல்பமே ப்ரமாணம்.

* * * * *

இரண்டு மூன்று திங்கள் முன் மஹாத்மாகாந்தி என்பவர் பூனா நகரத்தில் வீதியில் வண்டியில் போய்க்கொண்டிருந்த பொழுது, அவர் வண்டியின் மீது ஒரு வெடிகுண்டு எறியபபட்டதென்றும், அந்தக் துராக்ரஹி குண்டு லக்ஷ்யம் தவறி வேறொரு இடத்தில் விழுந்து களின் நிரபராதிகளானச் சில ஜநங்களுக்கு அபாயத்தை விளை தௌஷ்ட்யம். வித்ததென்றும் நாம் அறிகின்றோம். இந்த வ்ருத்தாந்தம் நமக்கு மிக்க சோகத்தை ஜநிப்பிக்கின்றது. காந்தியின் மீது ஒரு விதமான வெறுப்பைக் கொண்டிருக்கும் ஸநாதந தர்ம வகுப்பி

னர்களுள் ஒருவராலேயே இந்தக் கார்யம் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்று பலர் அநுமானம் செய்கிறார்களாம். இதன் உண்மையைப் பற்றி இப்பொழுது ஒருவராலும் ஒன்றும் சொல்ல முடியாது. ராஜாங்கத்தார் இதைப்பற்றி விசாரிக்க ப்ரவ்ருத்தித்திருக்கிறார்கள். அவர்களுடைய நிர்ணயம் வெளிவந்த பிறகே நாம் இதைப்பற்றி விமர்சிப்பது யுக்தமாகும்.

இந்தக் கார்யத்தை செய்ய முயன்றவன் எவனாக இருந்தாலும், அவன் கொடியதொரு பாபத்தைச் செய்ய முயன்றான் என்பதில் ஆக்ஷேபமே இல்லை. சாஸ்த்ரோக்தங்களான சில விடங்கள் நீங்கலாக மற்றை இடங்கள் எல்லாவற்றிலும் பராணி ஹிம்ஸை என்பதைப் பெரிய பாபமாக மஹர்ஷிகள் நிஷேதித்திருக்கிறார்கள். அதிலும் மநுஷ்ய ஹிம்ஸை மிகக் கொடிய பாபமென்று அவர்களால் அறுதியிடப்பட்டிருக்கின்றது. ஆகையால் ப்ரக்ருதமான இந்தப் பாபத்தைச் செய்யத் துணிந்தவன், தான் ஸநாதந தர்ம வகுப்பைச் சேர்ந்தவனென்று தன்னைச் சொல்லிக் கொண்டபோதிலும், அந்தப் பெயர் அவனுக்குப் பெயர் மாத்ரத்தில் நிற்குமே தவிர அர்த்தத்தில் அவனை அது கொஞ்சமேனும் தொடமாட்டாது என்று நாம் உறுதியுடன் சொல்லக் கூடும். அவனை ஸாது ஜநங்களெல்லாரும் மிகவும் வெறுப்பார்கள் என்பதில் ஸந்தேஹம் இல்லை.

நிற்க, காந்தி என்பவர் ஸாதாரண வ்யக்தி அன்று. அவர் அஸாதாரணமான ஆத்ம குணங்களால் நிறைந்தவர். பகவான் ஒருவர் உண்டு என்பதில் அவருக்கு த்ருடமான நம்பிக்கை. அவனிடம் அவருக்கு இருக்கும் பக்தியும் அளவற்றது. அப்படிப்பட்டவரிடம் தீங்கு நினைப்பது மிகப் பெரிய பாபமே. அவர் இரண்டொரு வர்ஷ காலமாக ஸநாதந தர்ம வகுப்பினர்களுக்கு ஜுகுப்ஸையை ஜநிப்பிக்கக் கூடிய வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்து வருகிறார் என்பது உண்மையே. பஞ்சமர்களின் தீண்டாமை விஷயமாக ஸநாதந தர்ம வகுப்பினர்களுக்கும் காந்திக்கும் பெரிய மதி பேதம் ஏற்பட்டிருக்கின்றது. நமது மஹர்ஷிகளால் குறிக்கப்பட்டுள்ள ஜாதி வரம்புகளை காந்தி புத்தி பூர்வகமாக அழிக்க ப்ரயத்நப்பட்டு வருவதாகவே ஸநாதந தர்ம வகுப்பினர்கள் எண்ணுகிறார்கள். அந்த எண்ணம் வஸ்து ஸ்திதிக்கு ஒத்ததோ இல்லையோ என்பது கொஞ்சம் ஸம்ஶய க்ரஸ்தமே. அப்படி அவர் புத்தி பூர்வகமாக நமது ஜாதி தர்மத்தை அழிக்க ப்ரயத்நப்படுவது உண்மையாயிருந்த போதிலும் அது காரணமாக அவருக்கு ஹிம்ஸையைச் செய்ய ப்ரயத்நப்படுவது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ? சரியான விவேகமிராமையும் துராக்ரஹமுமே இம்மாதிரி ப்ரவ்ருத்தியில் ஜநங்களைத் தூண்டுகின்றன. இதைப் பெரியோர்களெல்லாரும் கண்டித்தல் வேண்டும்.

நமது ஸுஹ்ருத்துக்களான ஸநாதந தர்ம வகுப்பினர்களுக்கு நாம் இது ஸம்பத்தமாக இன்னுமொரு விஜ்ஞாபநம் செய்யத் துணிவோம்,

ஸ்வல்ப காலமாக சில வித்வான்கள், தம்மால் செய்யப்படும் ப்ரஸங்கங்களிலும் தாம் எழுதும் வ்யாஸங்களிலும் காந்தியையும் அவரைச் சேர்ந்தவர்களையும் மிகவும் உத்வேககரமான வார்த்தைகளைச் சொல்லி திட்டுவதை நாம் கவனித்து வருகிறோம். இப்படி கடுவான சொற்களைச் சொல்லி இதரர்களைத் தூஷிப்பது நமது ஸ்வரூபத்திற்கு ஒரு பொழுதும் லக்ஷணமாக மாட்டாதே. அளவுக்கு விஞ்சி தீங்கைச் செய்ய ப்ரயத்நப்படுமவன் விஷயத்திலும் நாம் கடு பாஷணங்களைச் செய்யக்கூடாதென்றன்றோ நமது பெரியோர்கள் நமக்கு உபதேசித்திருக்கிறார்கள்?

"ஸ்வஸ்த்யஸ்து விச்வஸ்ய கல: ப்ரஸீததாம்
த்யாயந்து பூதாநி சிவம் மிதோ திய:"

[ஜகத் முழுவதும் க்ஷேமத்துடன் இருக்கவேண்டும். துஷ்டர்களெல்லாருக்கும் நல்ல புத்தி வரவேண்டும். எல்லா ப்ராணிகளும் ஒன்றுக்கொன்று எப்பொழுதும் நன்மையையே கோரிக் கொண்டிருக்க வேண்டும்] என்று பக்தோத்தமனான ப்ரஹ்லாதன் ந்ருஸிம்ஹனைக் குறித்து செய்த ப்ரார்த்தனையை நாம் மறக்கலாமோ? எப்பொழுதும் நாம் பரஸ்பரம் மங்களத்தைக் கோருவதைக் கை விட்டு பரஸ்பரம் அருந்துதமான பேச்சுக்களைப் பேசிக்கொண்டு ஹ்ருதயத்திற்குப் புண்களை உண்டாக்கிக்கொள்வது ந்யாய்யமாகுமோ? கடுவான பேச்சுக்கள் ஹ்ருதயத்திற்கு ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடிய ப்ரவ்ருத்தி ஆகமாட்டாவென்றும், ரஸிகர்கள் அவைகளை அங்கீகரிக்கமாட்டார்களென்றும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஒரு த்ருஷ்டாந்தத்தைக்கூறி அது வழியாக அநுக்ரஹித்திருப்பது இந்த வித்வான்களெல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

"கடூந்யபி ஸாமர்த்யாத் காரம் பவந்தி ஸம்ப்ரதா: ।
ததாபி வ்ருத்தி ந து ததா ரஸஜ்ஞாநாமபேக்ஷிதா:॥"

[ஸ்வபாவத்தால் காரமாயுள்ள மிளகாய் முதலிய பதார்த்தங்கள் சில விடங்களில் ஸப்ரயோஜநங்களாக இருந்த போதிலும், அவைகளின் பக்ஷணத்தை ஸுகமென்று நமது நாக்கு அங்கீகரிக்கின்றதோ? அம்மாதிரியே கடுவான வார்த்தைகள் கார்ய வசத்தால் சில விடங்களில் ஸார்த்தங்களாக இருந்த போதிலும், அவை ஒரு பொழுதும் ரஸிகர்களுடைய அங்கீகாரத்திற்கு யோக்யமாகமாட்டா]. இவ்விதமெல்லாம் நமது பெரியோர்கள் கடு பாஷணத்தை நிந்தித்திருக்கையில் நாம் அந்தக் கடு பாஷணத்தைக் கைப்பற்றினல் அந்தப் பெரியோர்களுடைய திருவுள்ளத்திற்கு உகக்கும்படி நடந்தவராக நாம் எவ்விதத்தில் ஆவோம்? காந்தி என்பவரும் அவருடைய அநுசரர்களும் நமக்குத் தீங்கை விளைவிக்கக் கூடிய கார்யங்களைச் செய்து வருகிறா

கள் என்பது உண்மையே ஆயினும், அவர்களை 'தூமகேதுக்கள்' என்றும் 'பிசாசங்கள்' என்றும் 'கலி புருஷர்கள்' என்றும் திட்டுவது ஒரு காலும் நமக்கு கௌரவத்தை ஆவஹிக்கமாட்டாது. இதை நமது வித்வாங்கள் கொஞ்சம் கவனித்தல் வேண்டும். 'ஹராய'!

*   *   *   *   *

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

சென்ற வைகாசி மாஸத்திய ஸஞ்சிகையுடன் ஸ்ரீ வேதாந்த தீபிகையின் 22-வது ஸம்புடம் பூர்த்தி அடைந்தது. இரண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன் ஏற்பட்ட அநேக விக்ந ஸமூஹங்களால் தீபிகையின் ப்ரசாரம் கொஞ்சம் தடைபட்டிருந்ததும், மறுபடியும் சில ஸஹ்ருதக்களின் முயற்சியால் இந்த வர்ஷ ஆரம்பத்தில் ஸ்வல்ப பெயர் மாறுதலுடன் அது வெளிவந்தும், பிறகு பகவத் ஸங்கல்ப மடியாக அது முன்போலவே பழய நாம ரூபங்களைத் தரித்துக்கொண்டு ப்ரசரிக்க ஆரம்பித்ததும் இவையெல்லாம் நமது ஸஹ்ருதக்கள் அறிவார்கள். ஆனால், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பத்ரிகையாக அதை நீண்டகாலம் வெளியிட்டு வருவதில் தோன்றும் ச்ரமங்களை ஆலோசித்து அந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் இப்பொழுது அதற்கு வேறொரு வ்யவஸ்தை செய்யப் போவதாக நிர்ணயித்திருக்கிறார்கள். எந்த வ்யவஸ்தை ஏற்பட்டாலும், அதன் பூர்வ ப்ரவர்த்தகர்கள் மாறி வேறு சிலர் அதை நடைபெறுவிக்கும்படி ஸம்பவித்தாலும், அதன் ப்ரசாரத்திற்கு எவ்வித பங்கமுமின்றிக்கு அது மேன்மேல் அபிவ்ருத்தமாகி வரும் பக்ஷத்தில், அது நமக்குப் போதுமான த்ருப்தியைக் கொடுக்கும். தீபிகை விச்சின்னமாகாமல் ஜீவித்திருத்தல் வேண்டு மென்பதே நமது கோரிக்கை.

அவர்கள் செய்யப்போகும் வ்யவஸ்தை என்னவென்றால், மதிராஸில் இரண்டு வர்ஷ காலமாகப் புதியதாக ஏற்பட்டும், ராஜாங்கத்துச் சட்டபடி ராஜாங்கத்தாரிடமிருந்து அநுமதி பெற்றும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த க்ரந்த ப்ரசார ஸபை' என்னும் பெயருடன் நடைபெற்று வந்துகொண்டிருக்கும் ஸபையின் அங்கத்தினரிடம் இந்தத் தீபிகையை ஒப்புவித்து விட வேண்டும் என்பதே. இந்தப் புதிய ஸபை எல்லாராலும் கௌரவிக்கத் தகுந்த ஒரு மஹா ஸபையே. அதன் அத்யக்ஷர், நமது ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபுக்களுள் ஆஸ்திக சிகாமணியாக விளங்கிவரும் ஸ்ரீ. உ.ப. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி. ஸ்ரீ. உ.ப. வே. கே. எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி முதலிய வேறு சில ஆஸ்திக ப்ரபுக்களும் அதில் அந்வயித்திருக்கிறார்கள். இந்தத் தீபிகையை நடத்தி வருவதற்கும் அவர்கள் ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. அவர்களெல்லாரும் ஆஸ்திகர்

களாகவும் ப்ராயேண தகிகர்களாகவும் இருக்கிறபடியால், அவர்கள், தம்மால் ஏற்றுக் கொள்ளப்படும் பாரத்தை எவ்வித ச்ரமமுமின்றிக்கு நிர்வஹித்து வருவார்கள் என்பதில் ஸ்வல்ப ஐயமுமில்லை. இம்மாதிரி அவர்களிடம் தீபிகையின் பாரத்தை ஒப்புவிப்பதால் புருஷ ப்ரயத்நத்திற்கு எட்டுமளவு தீபிகை விஷயமாகத் தமது தர்மத்தை அதன் அதிகாரிகள் செய்தவர்களே ஆவார்கள். அதற்கு மேற்பட்டு 'ஹாஹ்ஸயத்து'.

இப்பொழுது தீபிகையின் பாரத்தின் வஹநத்தை அங்கீகரித்திருக்கும் புதிய ஸபையின் அதிகாரிகள், அடுத்த மாஸம் முதல் தீபிகையில் அதிகப் பக்கங்கள் முத்ரணம் செய்யவேண்டு மென்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணங்களான சில புதிய அம்சங்களைப் பற்றி விஷயங்களை ப்ரசுரம் செய்யவேண்டு மென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்தபடி தீபிகையின் வர்ஷச் சந்தாவையும் நாலுரூபாயாகச் செய்திருக்கிறார்கள்.

தீபிகையின் சென்ற வர்ஷத்திய வரவு செலவு கணக்குப் பரிசோதிக்கப் பட்டு வருகின்றது. சற்றேறக்குறைய ரூ. 300/- நஷ்டம் வந்திருப்பதாக அறிகின்றோம். இந்த நஷ்டத்தை உதாரர்களான ஆஸ்திக மஹான்கள் யாராவது முன்வந்து நிவ்ருத்திக்கவேண்டுமென்று நாம் ஸ்ரீஶரண்யனை ப்ரார்த்திக்கின்றோம். இப்பொழுது ஆரம்பித்திருக்கும் வர்ஷத்தின் சந்தாவை சந்தாதாரர்களெல்லோரும் க்ருபை செய்து சீக்ரத்திலேயே அனுப்பினல் அது பெரிய உபகாரமாக இருக்கும். சென்ற வர்ஷத்திற் போலச் சந்தாவை 'மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ், கீழ மாம்பலம் தேனும்பேட்டை, போஸ்ட், மதிராஸ்' என்னும் விலாசத்திற்கு அனுப்பலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகையைப்பற்றிய

ஓர் விஜ்ஞாபநம்

ஸ்ரீ வேதாந்த தீபிகை என்னும் இப்பத்ரிகை அநேக வர்ஷங்களாய் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாருடைய அதிகார ஆதரவின் கீழ் நடத்தப்பட்டு வந்திருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால், சென்ற சில வர்ஷங்களாய் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யங்கள் சரிவர நடத்தப்படாமல், தீபிகைக்கும் அநேக கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டு, நடந்த ஜூன் மாஸத்திற்குப் பிறகு தீபிகையை மேல் நடத்த முடியாதென்றும் அதை நிறுத்திவிடவேண்டுமென்றும் ஆலோசிக்க ஆவச்யகதை நேரிட்டது. அந்த ஸமயத்தில் இது விஷயம் அறிந்த "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை லிமிடெட்" என்று புதிதாக ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கம்பெனியார், இந்தப் பத்ரிகை நிறுத்தப்படக்கூடாதென்றும், அப்படி நிறுத்தி விடப்படுமானால் அது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்கே ஒரு கௌரவக் குறைவாக இருக்குமென்றும், ஸித்தாந்த அபிமானிகளுள் அநேகருக்கு அது மஹத்தான சோகத்தை விளைவிக்குமென்றும் பர்யாலோசித்து இந்தப் பத்திரிகையைத் தம்மிடம் ஒப்புவிக்கும் பக்ஷத்தில் தாமே அதைச் சரிவர நடத்துவதாகத் தெரிவித்தார்கள். இதை அறிந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தச் சபையைச் சேர்ந்த சில கமிடி மெம்பர்கள் ஒன்று சேர்ந்து இதைப் பற்றி ஆலோசித்ததில், இனி இந்தத் தீபிகையை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரவின் கீழ் நடத்தமுடியாதென்று தோன்றினதால், அந்த ஸபைக்கு அத்யக்ஷனான அடியேன், அந்த ஸபையின் கமிடி மெம்பர்கள் எல்லாருக்கும் லிகித மூலமாய், அந்த ஸபையின் ஸ்திதி அந்தப் பத்ரிகையின் ஸ்திதி ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையின் அங்கீகாரம் இவையெல்லாவற்றையும் தெரிவித்து, இது விஷயமாக அவர்களுடைய அபிப்ராயத்தை எனக்குத் தெரிவிக்கும்படி ப்ரார்த்தித்தேன். அதற்கு பதில் எழுதினவர்களெல்லாரும், தீபிகையை நடத்தும் விஷயத்தில் மேல் கண்ட விதம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார கம்பெனியாரிடம் தீபிகையை மாற்றிவிடுவதே உசிதமென்று நேரிலும் லிகித மூலமாயும் தெரிவித்து விட்டார்கள். அவ்வித தீர்மானத்தை அநுஸரித்து இந்த வேதாந்த தீபிகை என்னும் பத்ரிகையானது நிகழும் 1934௵ ஜூலை௴

திய ஸஞ்சிகை முதல், மேற்கண்ட "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை லிமிடெட்" என்னும் பெயருடன் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் கம்பெனி உத்தரவாதத்தின் பேரிலும் அதிகார முறைமையிலும் நடத்தி வரப்படும் என்னும் விஷயமானது, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ச்ரத்தாளுக்களாயுள்ள எல்லாருக்கும் தீபிகையின் சந்தாதாரர்களுக்கும் தீபிகையை வாசித்து வருபவர்களுக்கும் இந்த விஜ்ஞாபந மூலமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மேற்கண்ட விதம் ஆதரவு வரவு செலவு விஷயங்களில் தீபிகையானது ஷை கம்பெனியாருக்கு பாத்தியப்பட்டிருந்த போதிலும், மற்றை எவ்விதத்திலும் தீபிகையின் உத்தேசமாவது ரீதியாவது மாற்றப்படமாட்டாது என்பதையும் இதனால் எல்லாரும் அறியவேண்டும். ஸ்ரீமான் வாஸுதேவாசார்ய ஸ்வாமியே இதுவரையில் போலவே இந்த தீபிகையின் ஸம்பாதகராக இருந்து வருவார்; இனி தீபிகா செலவு ஸம்பந்தமான க்லேசங்கள் ஒன்றும் அவருக்கு இருக்கமாட்டாது. இனி இந்தத் தீபிகை மேன்மேல் அபிவ்ருத்தி அடைந்து நம்முடைய ஸித்தாந்தத்திற்கு அநுரூபமான தீபிகையாக பகவத் ஸங்கல்பத்தால் ஏற்படக்கூடுமென்று நம்புகிறோம்.

சென்னை. }
29-6-34 }

வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.

வெதாயதூரத்ந நிபயிரவாமுவகதிவாயாஜா
ஜீயாத்பராங்குஶ பயோயிரஸீமபூமா || ௫

வேதார்த்தமாகிற ரத்நங்களுக்கு நிதியாக இருக்கிறார். ஸமுத்ரம் பகவானுக்கு அத்யந்தம் ப்ரீதி பாத்ரமான வாஸ ஸ்தாநம்; இவரும் பகவானிடம் அதிமாத்ரம் ப்ரீதி யுள்ளவரானதால் இவரிடத்திலும் அதிமாத்ர ப்ரீதியுடன் பகவான் வஸிக்கிறான். ஸமுத்ரத்தின் விஸ்தாரம் அளவிடக் கூடாதது; இவருடைய மஹிமையும் எல்லையற்றது. இப்படிப்பட்ட மஹான் ஸர்வோத்கர்ஷேண இருக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கப் படுகின்றது.

[ப-ரை] ஸக்திப்ரஸாவ - பக்தியின் அதிசயத்தால், ஸவது - ஜநிக்கும், அஜ்ஞாதஸாவபம்ய - ஆச்சர்ய கரமான அபிப்ராய உறுதியால், ஸம்யகூஷித - வ்ருத்தி செய்யப்பட்டிருக்கிற, ப்ரணய ஸார - ஸாரமான ப்ரீதியாகிற, ரஸ ஸ்ரவ பூரிணாஃ - ரஸ ப்ரவாஹத்தால் நிறைந்தும், வெதாயதூரத்நநிபயிஃ - வேதங்களின் அர்த்தங்களாகிற ரத்நங்களுக்கெல்லாம் நிதியாகவும், அவாமுவகதிவாயாஜா - பகவானுக்கு திவ்யமான ஆவாஸ ஸ்தாநமாயும், அஸீமபூமா - எல்லையற்றிருக்கும் மஹிமையை உடையவருமான, பராங்குஶ பயோயிஃ - க்ஷீர ஸமுத்ரம் போன்ற ஸ்ரீ பராங்குசன், ஜீயாத் - ஸர்வோத்க்ருஷ்டராக விளங்க வேண்டும்.

ஸக்திப்ரஸாவ—இந்தப்பெரிய பதம் ஒரு விசேஷத்தை ஸூசிப்பிக்கின்றது. ஸமுத்ரத்திற்கு ஜலத்தை ப்ரவஹித்துக் கொண்டு போகும் நதிகள் எவ்விடத்திலோ இருக்கும் ஒருமலை ப்ரதேசத்தில் உத்பத்தியைப் பெற்று, பிறகு நடுவில் அநேக உப நதிகளால் வ்ருத்தி அடைந்து கடைசியில் மஹத்தான ப்ரவாஹத்துடன் ஸமுத்ரத்தைச் சேர்வது போல், பகவானிடத்தில் பக்தர்கள் செய்யும் பக்தியும் அம்மாதிரி அல்பமன உத்பத்தியை உடையதாயிருந்த போதிலும் கால க்ரமேண மற்றை அநுக்ரஹ விசேஷங்களால் வ்ருத்தி அடைந்து கடைசியில் கரை புரண்ட ப்ரீதியுடன் பகவானைச் சேர்கின்றதன்றோ! நீண்ட மஹாநதீ ப்ரவாஹம் போன்ற இந்தப் பக்தி ப்ரவாஹத்தை வெளியிடுவதற்கு ஒரு நீண்ட பதம் வேண்டுமென்றே ஸ்ரீ கூரேசன் இந்த ஸமஸ்த பதத்தை ப்ரயோகித்திருக்கிறார் போலும். நிற்க, நமது ஸித்தாந்தத்தில் இது ஸம்பத்தமாக ஒரு ஸூக்ஷ்மார்த்தமுண்டு. ஸாத்விக பரிசீலநாதிகளால் பகவானுடைய ஸ்வரூபாதிகளைப் பற்றி உண்டாகும். ப்ரீதி விசேஷத்திற்குப் பக்தி என்று பெயர். இதுவே, தைல தாரை போல இடைவிடாத ஸ்ம்ருதி ரூபமாய் நாள் தோறும் அநுஷ்டிக்கப்பட்டு, பாபங்களைக் கழிக்கக் கூடிய வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந நெறியால் மேன்மேல் வ்ருத்தி அடைந்து, கடைசியாக ஒரு ஜந்மத்தில் ப்ராண வியோக காலத்தில், அந்திம ப்ரத்யயம் என்று சொல்லப்படும் பகவத் ஸ்மரணத்தை ஜநிப்பிக்கும். இந்த அநுஷ்டாநத்தைப் பக்தியோக மென்று சொல்வார்கள். இது மோக்ஷ புருஷார்த்தத்தை

யத³ண்டமண்டாந்தரகோசரஞ்ச ஜயதாரஸுஷி

ஸ்ரீவிஷ்ணுவர்த்மநி வர்த்தி யதாஸுயாணி !

உத்தேசித்துச் செய்யப்பட்டால், இது பர பக்தி என்று சொல்லப்படும். இந்தப் பர பக்தி, இந்தப் பக்தனுடைய அபேக்ஷா மாத்ரமடியாக பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே சிற்சில ஸமயங்களில் ஒரு விதபகவத் ஸாக்ஷாத்காரத்தை உண்டாக்கும். இந்த ஸாக்ஷாத்காரத்திற்கு பரஜ்ஞாநமென்று பெயர். இந்த ஸாக்ஷாத்காரத்தால், பெருவிடாய்ப் பட்டவனுக்கு தடாக தர்சநத்தால் போல, எல்லையற்ற ஒரு ப்ரீத்யதிசயம் ஜநிக்கும். அந்த ப்ரீத்யதிசயத்தைப் பரம பக்தி என்று சொல்வார்கள். இந்த ச்லோகத்தில் தென்படும் 'பக்திப்ரபாவ' 'பாவ்யஸம்ப⁴வ' 'பூர்ணாய பார' என்னும் சப்தங்களால் பர பக்தி பர ஜ்ஞாந பரம பக்தி ஆக இம்மூன்றும் குறிக்கப்படுகின்றன வென்று பெரியோர்கள் சொல்வார்கள்.

ஜீயாசு—ஜய சீலராக இருக்கவேண்டும். அதாவது, ப்ரபந்ந ஜந கூடஸ்தரான நம்மாழ்வார் ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாருக்கும் உத்தாரகராய் ப்ரகாசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கப் படுகிறது.

“ஸ்ரீவிஷ்ணுவ்ருத்தஜநசேதஸி ஷடாரே” என்றும் 'வேதாம்போநிதயே:' என்றும் ஸ்ரீ கூரேசன் கொண்டாடியிருப்பதிலிருந்து, வேதங்களில் ஸுலபமாக அறியக்கூடாத ரஹஸ்யார்த்தங்களெல்லாம் ஸஹஸ்ரகீதிஜநகதநங்களான ஆழ்வார் திவ்ய ஸூக்திகளில் எளிதாகப் புலப்படுகின்றன என்று ஆச்சர்யமடைந்து இந்த ஸூக்திகளில் ஒரு வித ஏற்றத்தை அவர் அநுபவித்திருப்பதாகவும் ஏற்படுகின்றது. ஸஹ்ருதயர்கள் ப்ரமாணம்.

4. இனி பகவானை ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பிக்கிறார். ஒருவனுடைய பெருமையைப் புகழ்ந்து பேசுவதே அவனை ஸ்தோத்ரம் செய்வதாகும். பகவானுடைய பெருமையைப் பேசுவதானால், ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி முதலியவைகளைச் செய்வதாகிற அவனுடைய வ்யாபாரத்தைப் பற்றிப் பேசாமல் வேறு எதைப்பற்றி பேசக்கூடும்? ஆகையால் ஸ்தோத்ரத்தின் முதல் ச்லோகமாகிற இந்த ச்லோகத்தில், ஜகத்தின் ஸ்ருஷ்டி முழுவதற்கும் அவனே காரணமென்றும் அதன் ஸ்திதியும் அவனைச் சார்ந்தே நிற்கின்றதென்றும் சொல்லி ஸ்தோத்ரத்தை ஆரம்பிக்கிறார். ப்ரஹ்ம ஸூத்ரத்தைச் செய்ய ஆரம்பித்த வ்யாஸரும், “ஜந்மாத்யஸ்ய யத:” [இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலியவை எவனிடத்திலிருந்து ஏற்படுகின்றனவோ] என்று அவனுடைய ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தை அவலம்பித்தே வேதாந்த சாஸ்த்ரத்தை ஆரம்பித்தார். ஸ்ரீ பாஷ்யகாரரும், “அகிலபுவனஜந்மஸ்தேமபங்காதிலீலே” [ஸகல லோகங்களுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவை முதலிய லீலையை உடைய] என்று அவனுடைய ஜகத் வ்யாபாரத்தை இட்டே அவனை ஸ்தோத்ரம் செய்தார். இது தான் பெரியோர்கள் போயுள்ள மார்க்கம்.

வந்தே ததேவ ஸரஸிஜேக்ஷணமத்விதீயம்
வேதாந்தவேத்யமநிதம்ப்ரதமம் மஹஸ்தத் ‖ ௩௦

பகவான் கேவலம் தேஜஸ் ஸ்வரூப மென்றும் அவனுக்கு இருப்பதாகச் சொல்லப்படும் திவ்ய மங்கள விக்ரஹம் முதலியவை யெல்லாம் பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவனால் எடுத்துக் கொள்ளப்படும் ரூபமே என்றும், ஆகையால் அவை நித்யங்களல்ல பரம ப்ராப்யங்களுமாக மாட்டா வென்றும் சிலர் அபிப்ராயப் படுகிறார்கள். அது நமது ஸித்தாந்தமன்று. பகவானுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநாநந்த மயமாக இருக்கையிலும், அந்த ஸ்வரூபத்தைச் சார்ந்து நிற்கும் ஜ்ஞாந பல சக்தி முதலிய குணங்கள் எவ்விதம் நித்யங்களாகவும் பரம ப்ராப்யங்களாகவும் இருக்கின்றனவோ அம்மாதிரியே அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹமும் நித்யம், அது பரம ப்ராப்யம் என்பதே நமது ஸித்தாந்தம். ஜ்ஞாநம் முதலிய குணங்களை ஒழித்து விட்டுப் பார்த்தால் பகவான் என்னும் தத்வம் எவ்விதம் முயல் கொம்பு போல துச்சமாகி விடுமோ, அவ்விதமே இந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தை விலக்கிப் பார்த்தால் அது துச்சமாகிவிடும் என்றே நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஸ்வரூபத்தைக் காட்டிலும் குணம் வேறாக இருப்பது போல, விக்ரஹமும் ஸ்வரூபத்தைக் காட்டிலும் பின்னமான வஸ்துவே. ஆனால் குணங்களின்றி குணிக்கு எப்படி இருப்பில்லையோ, அப்படியே விக்ரஹமின்றி ஸ்வரூபத்திற்கும் இருப்பில்லை. இந்த அர்த்தத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே இந்த ச்லோகத்தில், பகவத் ஸ்வரூபம் தேஜோமயம் என்பதை ஸூசிப்பிக்கிறதற்கு 'மஹஸ்' [தேஜஸ்] என்னும் சப்தத்தையும் அது விக்ரஹவிசிஷ்டம் என்பதை ஸூசிப்பிக்க 'ஸரஸிஜேக்ஷணம்' [தாமரைப் புஷ்பம் போன்ற கண்களை உடையது] என்னும் சப்தத்தையும் ப்ரயோகித்திருக்கிறார். ச்ருதியும், தாமரைப் புஷ்பம் போன்ற கண்களை ப்ரஸ்தாவித்தே அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹ வைசிஷ்ட்யத்தை 'யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ' [மலர்ந்த தாமரைப் புஷ்பம் போன்றவை அவனுடைய கண்கள்] என்று விவரித்திருக்கின்றது.

[ப—ரை] யத்- யாதொரு தேஜஸ்ஸானது, ஜகதாம்-ஸகலஜகத்துக்களுடையவும், மஹதே ச பவாய-பெரிய க்ஷேமத்தின் பொருட்டு (ஆகின்றதென்று),உசந்தி - (அதை அறிந்தவர்கள்) சொல்லுகிறார்களோ, த்ரிவிஷ்டபாதீநி பதாநி - பரலோகம் முதலிய ஸகல ஸ்தாநங்களும், யதாச்ரயாணி - யாதொரு தேஜஸ்ஸை ஆதாரமாக உடைத்தா யிருக்கின்றனவோ, தத் - அந்த, அநிதம்ப்ரதமம் -காலத்தால் அளவிடப்படக் கூடாத, அத்விதீயம் - இரண்டாவது அற்ற, வேதாந்தவேத்யம் - வேதாந்தம் ஒன்றாலேயே அறியப்படக் கூடிய, ஸரஸிஜேக்ஷணம் மஹ:- தாமரைப் புஷ்பம் போன்ற கண்களை உடைய தேஜஸ்ஸை, வந்தே - நமஸ்கரிக்கிறோம்.

பீதாம்பரம் வரதசீதலத்ருஷ்டிபாதம்
ஆஜாநுலம்பிபுஜமாயத கர்ணபாசம் ।

ஜகதோ மஹதே—ப்ரளய காலத்தில் அதிமாத்ரம் ஸூக்ஷ்மமாகவும் நாம ரூபங்களற்றுமிருக்கும் வஸ்துக்களுக்கு மறுபடியும் நாம ரூபங்களைக் கொடுத்து அவைகளை ஸ்ருஷ்டிப்பதே அவைகளுக்குச் செய்யப்படும் பெரிய க்ஷேமமாகையால், ஜகத்தின் ஸ்ருஷ்டியே இவ்விடத்தில் ஜகத்தின் பெரிய க்ஷேமமென்று சொல்லப்படுகின்றது.

த்ரிவிஷ்டபாநி—'த்ரிவிஷ்டபம்' என்பது ஸ்வர்க்க லோகத்தைக் குறிக்கும். இவ்விடத்தில் அது, ப்ராக்ருத மண்டலத்திலுள்ள லோகாந்தரங்களைக் குறிப்பதுடன் அப்ராக்ருதமான நித்ய விபூதியையும் குறிக்கின்றது. பகவான், இரண்டு விபூதிகளுக்கும் நாதனன்றோ? இரண்டு விபூதிகளின் ஸ்திதியும் அவனுக்கு அதீநமே.

அநிதம் ப்ரதமஸ்ய—'இதம் ப்ரதமஸ்ய' என்பதற்கு 'கால பரிச்சின்னம்' என்பது பொருள். ஆகையால் 'அநிதம்ப்ரதமஸ்ய' என்பது கால பரிச்சேதமற்றிருப்பதைக் குறிக்கும்.

அத்விதீயஸ்ய—பகவான் ஜகத் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களில் வேறொரு நிமித்த காரணத்தையும் அபேக்ஷியாமல் இருப்பவனாகையால், அவன் இரண்டாவதற்றவன் என்று சொல்லப்படுகிறான்.

வேதாந்தவேத்யஸ்ய—வேதாந்தம் என்று சொல்லப்படும் சாஸ்த்ரமொன்றே பகவான் ஒருவன் உண்டு என்பதற்கு ப்ரமாணம். அவனை நாம் நமது இந்த்ரியங்களால் அறியக் கூடாததலால் அவனை அறிவதில் ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாகமாட்டாது. அநுமாநம் என்னும் ப்ரமாணத்தைக்கொண்டும் அவனை அறிய முடியாது. ஆகையால் அவன் சாஸ்த்ரமொன்றாலேயே அறியத்தகுந்தவன்.

5. கீழ் ச்லோகத்தில் 'ஸாரவிலக்ஷணாய' என்னும் சப்தத்தால், பகவானுக்கு திவ்ய மங்கள விக்ரஹமொன்று உண்டு என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. அந்த விக்ரஹத்தை இந்த ச்லோகத்தால் வர்ணிக்கிறார்.

[ப—ரை] பீதாம்பரம் - பீத வர்ணமுள்ள வஸ்த்ரத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறவும், வரதசீதலத்ருஷ்டிபாதம் - அபேக்ஷிதத்தை கொடுப்பதும் ப்ரீதியால் குளிர்ந்திருப்பதுமான கடாக்ஷத்தை உடையதும், ஆஜாநுலம்பிபுஜம் - முழந்தால் வரை நீண்டுள்ள கைகளை உடையதும், ஆயத கர்ணபாசம் - நீண்டும் அழகுள்ளதுமான காதுகளை உடையதும், ஜலதமேசகம் - நீருண்ட மேகம் போன்ற வர்ணத்தை உடையதும், உந்நதவிசாலவக்ஷ: - உயர்ந்தும் விசாலமாயுமுள்ள மார்பை உடை

ஏனிப் பாலிவ் வண்ண மழுந்தற் கெனமுன்னும்
வானத் தச்சனங்கை குவித்து மதிசூடு
ஞானத் தில்லாங் கும்ப முனீச னடங்தேதென்
பாணிற் பின் னிப்பாலெழு மென்றே பகர்தந்தான். 34

அம்மா வப்பே ராற்ற லுறுங் கொலவற் கென்றப்
பெம்மான் பேசப் பின்னு மிவனனிப் பிரமாண்டஞ்
செம்மா கோலின்சீர் கொளின்மேலா மொ[illegible]ாலி
னிம்மா வங்குட் டத்தினன் றட்டே யிறக்கும்மே. 35

என்றத் தச்சன் சொல்லுதன் முன்னே யிருமுந்நீர்
பொன்றப் பானஞ் செய்தவன் பொங்கி யெழுபாரு
மின்றற் றெல்லா மாய்ந்தன வென்றே சுரர்கம்ப
மொன்றச் சீறியா னனை நோக்கியுரை செய்வான். 36

என்பே ராற்ற லின்ன தென்றோ ராயநகை செய்தா
யுன்பேர் வஞ்சத் துள்ளவ ரின்று முதலானுங்
இன்போ ராகிக் கள்ளு மிழிந்தே திரிகிற்பார்
பொன்பேர் கள்ள ரென்றெனுஞ் சாபம் புரிதந்தான். 37

அந்தச் சாபத் தேறிடி யுண்ட வரவென்ன
னொந்தத் தச்ச னுண்மையி னுன்பேர் விறல்யானும்
முந்தச் செப்ப முன்னுத லின்றி முறையின்றி
யிந்தத் தீய சாப மிழைத்தா யிதுகேண்மோ. 38

கன்னன் மானுஞ் செந்தமி ழூன்றுன் கடல்சூழு
மின்னன் மேதினித் தலையெங்கு மிழிந்துள்ளார்.
சொன்னன் கோரா வாயின் முகத்திற் சொலன்மேவு
மென்னங் குள்ளம் பொங்கி யெழுந்தே யிசைத்திட்டான். 39

வேறு

விச்சுவ கரும னிந்த விதமெதிர் சபித்த லோடு
மச்சிறு கடத்தின் வந்தோ னூழியி னவனி யெல்லா
நச்சுறுந் தனது நாவின் விழுங்கிடக் கிளர்ந்து பேழ்வா
யச்சுறத் திறந்து காயு மந்தகன் கடுப்பப் பொங்கி. 40

ஆங்குல கனைத்துந் தீய வண்டமும் பிளந்து சாய
வீங்குறுந் தொனியுந் தூம விதானமும் விரவ வெங்கு
மோங்குறுஞ் சிகையின் விஞ்சுங் கடையன லுமிழ்ந்து கண்க
டாங்கரும் புலிங்கங் காலத் தழலெனச் சிவந்து மற்றும். 41

முழையெனத் திறந்த வாயி னுசியின் முதிர்ந்து வீசுந்
தழைதரு தருவுந் தீயுந் தன்மையா முயிர்ப்பு மங்காள்
பழையவேழ் புவன முற்றும் பாழ்பட விசைத்துச் சாடுங்
குழைதரு சண்ட வாயு வெனக் குலை குலையச் சீறி. 42

மும்மை சாலுலகத் தோடும் மூதண்ட முடிய வின்னே
வெம்மை சேர்தவத் தாரென்றன் விறலினிற் புரிவே னென்றுங்
கும்மென வுருத்த போழ்தே விதிர்விதிர்த் துலைந்த வெங்குஞ்
செம்மை சேரமரார் யாருஞ் சிதைந்துளம் வெருவி னுரால். 43

குடங்கையிற் பரவை யெல்லாங் குடித்திடு முனியுஞ் சீறின்
மடிந்திடா துலக மூன்றும் வாழ்வதுஞ் சரத மாமே
முடிந்தது மூவ ராற்றுந் தொழிலு மிப்பகலே யென்று
நடுங்கினர் கமலை நாயக னற்பதம் பழிச்சு கிற்பார். 44

விண்முதற் பெருகு பூத மாயு மவ்வுறவின் வீறு
மெண்ணறு மியங்கி யங்காப் பொருள்களி னுளத்து மன்னுங்
கண்ணனே கரியைக் காத்தோர் கரிதனைக் கடிந்த மேக
வண்ணனே குறளாய் மற்றும் வானுற வளர்ந்த மாலே. 45

இக்குறு முனியின் சீற்றத் தெமையவிந் தொழித லின்றி
யிக்கணத் தளிப்பா யென்றே யெழிற்கரங் குவித்து மாழ்க
விக்குவின் மதனைச் செற்றோன் பிரமனோ டிருடி முன்போர்
திக்கதம் புலனை வென்றோர்க் கியையுமோ விசையின் மிக்கோய். 46

குறுமுய லிடமுஞ் சீற்றங் கொண்டரி வனத்தில் வாழும்
மறியெலாம் படுத்தன் மானு மற்றன தெழுச்சி யீங்கே
பொறுபொறு வினது பூந்தேன் பொருவு மித்தமிழே வையம்
நிறைதருங் கலைகட் கெல்லா முடியென நிலவ யானே. 47

அப்பர் சுந்தரர் மாணிக்க வாசக ரெனவே யாருஞ்
செப்பிட வுதித்துச் செய்ய தமிழ்கொடு தலங்க டோறு
மொப்புற வமிழ்தி னெங்கும் பாடுவேன் பகர்ந்தே னுண்மை
யிப்பெரும் வெகுளி விள்க வெனப்பல விசைத்தான் மன்னோ 48

அவ்வணஞ் சபதஞ் செய்து மவர்சின மடங்கா தாகிப்
பவ்வநீர் பருகுந் தீய வடவையிற் படர்ந்து மீறத்
தெய்வவான் மலருள் வைகுந் திசைமுகன் மதுர மானுங்
கொவ்வைவாய் திறந்து கோல நன்மொழி பகர லுற்றான். 49

ஆரண நான்கு மாய்ந்தா யவைகளின் முடியுந் தேர்ந்தாய்
காரண முணர்ந்து நன்ஞான் முறையெலாங் கருதி வையம்
நாரண னடியை நாடி யுய்ந்திடச் செலுத்துஞ் செய்ய
வேரண வுலக வாசா னெனப்பல ரிசைக்க நின்றாய். 50

கருவினு ளுறையுஞ் சேயுங் காலினா லுதைத்த தென்று
தெரிவுறு மனையு மந்தச் சிசுவினைச் சினந்த துண்டோ
விரிதழ லனைய சீற்றந் தணிந்தினி விமலை கேள்வன்
மருமல ரடியை நாடி யருந்தவ மகிழ்ந்து செய்வாய் 51

அருண்மழை பொழியு மந்தக் கருமுகி லெழுந்தன் முன்னர்
மருவுமுன் மனத்தின் வண்ணம் புரியுமென் றுணர்ந்து தேற்றத்
திருமுனி தெளிந்து சிந்தை வெருளிபோய் மகிழ வெங்கும்
பருவர லொழிந்து தண்மை பரந்துகங் குளிர்ந்த மாதோ 52

அக்கணத் தெழுந்தத் தெய்வ முனியுஞ் சந்தடவி யாடி
வெப்புறு முலகந் தண்மை யேய்ந்தகங் குளிர வீசு
மிக்குவில் லிரதி கேள்வ னூர்திநின் றெழும்புந் தென்யாற்
சக்கர மணுகிச் சங்க சக்கரன் பதத்தை நாடி. 53

ஊன்றிய வொருதா ளாலே யுறுதியா முளத்தா னின்று
கான்றிடு வெயிலோன் றன்னைக் கண்களை மலர்த்திக் கண்டே
யான்ற வெங்கனற் பிழம்பு மருகுற வெரிந்து விஞ்ச
நோன்றன வுணவு மின்றி நோன்மையிற் பலவாண் டன்றே. 54

நினைப்பவு மரிய வெய்ய நீடவ முதிர வன்னோன்
தனிச்சிரத் தெழுந்த வேகத் தவக்கனற் கொழுந்தின் வானோர்
துணிப்பட வெதும்பக் கண்ணோ ராயிரந் துலங்கு வேந்தன்
பனிப்பிறைச் சடையோன் பாங்கர் படர்ந்தனன் பகர்ந்தான் மன்னோ. 55

செவியுறுஞ் சிவனு மந்தச் செழுந்தருப் பொழிலோர் சூழச்
சவியுறு மெகின வூர்தி சார்பணைந் திதனைச் சாற்ற
நவிலுறு மறைநான் கந்த நான்முகத் தவனும் வந்த
தியியுறு மமர ரோடுந் திருமனன் பதத்தைச் சார்ந்தான். 56

சார்ந்து சங்கதி யியம்ப வடியவர் விழுமந் தன்னைத்
தேர்ந்தொரு கணமுந் தாழா வெம்பிரான் றிருவின் றிங்க
ளார்ந்த பொன்வதன நோக்கா விளநகை யமர்ந்து பூப்ப
நேர்ந்துள கலுழன் மீதே நிவந்துட னிவர்ந்தா னங்கே. 57

ஆரண வுருவா மந்த வருணனை யிளவன் மீதே
சீரணி மலர்த்தாள் சேர்த்திச் செவ்வி தி னமரு முன்னம்.
வாரணி முலையு லோபா முத்திரை கணவன் வைகுங்
காரணி பொருப்பி னன்னோன் கண்முகப் பெழுந்து நின்றான். 58

நின்றருந் தவத்தே யுன்ற னினைவு முற்றுறற்குப் போந்தே
னென்றிசைத் தருள லோடு மிருடி கண்டிறப்பப் பொன்னங்
குன்றின்மேற் பலசெந் தோட்டு மரைமலர் மலர்ந்த கோலந்
துன்றுபைங் கொண்ட ன்மூன்று மின்னுடன் றுலங்கக்கண்டான். 59

ஆறஞ்சு மூன்று கோடி யமரரு முனிக டாமு.
மேறுஞ்சீ ரொருத்த னன்ன னிந்திரன் முதலெல் லோரு
நாறுஞ்செம் மலர்க்கை கூப்பி நனிதுதித் தடைய நாப்பண்
வீறுஞ்செங் கலுழன் மீதுன் விரைமலர்ப் பதநான் காண. 60

செய்தவென் றவமே செய்ய தவமெனச் செப்ப லாற்று
மெய்தருந் திருவு மின்னு மென்னுள தெனவே போற்றிக்
கைதலை மிசையே கூம்பக் கண்களிற் களிநீர் கால
மெய்தகை புளகி னூர மெய்மறந் தாடி னானே. 61

தாமரைக் கண்ண னந்தத் தாபத னிரும்பே ரன்பாந்
தாமமார்த் திடவே யுள்ளந் தண்மையிற் குளிர நோக்கி
நாமகி ழணியு நம்மாழ் வார்முதற் கவிய னீறாய்ப்
பூமியி லுதித்தே யுன்றன் பொருவருந் தமிழின் மாதோ. 62

சுருதிக ளடைய வாரா வமுதெனச் சுவையே பாயும்
விரிதமிழ் வேத மென்று விளங்குறுஞ் செய்யு ளாக
வரிதினி லியற்றி யங்கண் மாநிலத் தவையே முந்திப்
பரிதியின் கதிர்க ளென்னப் படர்தரப் புரிது மன்றே. 63

ஆகையி னினிநின் சிந்தை யகற்றுகென் றருளித் தோகை.
பாகனம் புயத்தோ னாதி பண்ணவ ரவர்தஞ் சூழ
லேக வின்கருணை செய்தே யெழில்விழை திருவை குந்தம்
வேக வெங் கலுழன் மீதே விரைந்தெழுந் தடைந்தா னன்றே. 64

எண்ணுளா ரெண்ணே போலு மெங்கணும் விரவிக் காணும்
விண்ணுளார் பெருமா னேக விழுத்தவன் மகிழ்ந்தத் தெய்வப்
பண்ணுளார் முடியின் வாழும் பருப்பதத் துறைந்தே யிந்த
மண்ணுளார் மகிழுஞ் செய்யு தமிழினை வளர்த்தி வாழ்ந்தான். 65

வேறு.

பரமபதத் தெழுந்த விடையோரேழ் செற்றுப்
பைங்கழைத் தோளப் பின்னை மணந்தமாயன்
விரைமலராட் கிசைத்தபடி முன்னே பொய்கை
வேரிமல ரிடையுதித்தோர் முதலா நால்வர்
தரைமிசையே யவதரிக்கப் பணித்துங் கும்பந்
தனிலெழுந்தோர்க் கறைந்த வனைத்தனது சேனைக்
கொருமகிமை யதிபதியை மருங்கிற் கூவி
யொளிர்பவளந் திறந்திதனை யுரைக்க லுற்றான். 66

காரிக்குங் குறுமுனிக்குங் கழறினே மக்கட்பேரை
யின்படி யிழைக்கக் கடல்சூழ் வையத்
தாருக்கு முயர்குருகை நகரா ளந்த
வுத்தமற்குப் புத்திரனா யுதித்து வேதம்
பாரிக்கும் பொருள்களைப் பைந்தமிழின் பாவாய்ப்
பாடுக நீ பண்புறு மப்படிவந் தன்னி
லாருக்கு மறிவருமெம் பங்குஞ் சேரு
மடைகவெனப் பகர்ந்தருளிப் பரிந்து விட்டான். 67

அத்திருவாய் மொழிவழியச் சேனை மன்ன
னுழத்தியர்கள் களைகளைய வலரு நீலஞ்
சித்திரமா ரெமதுவிழிக் கிணையா மென்று
சினந்தவற்றைப் பறித்தெறியும் வரம்பின் பாங்கர்
நித்திலங்க ணிலவெறிக்கப் பகலு மாம்ப
லிரைமலருந் தடவயல்சூழ் குருகை வேந்தன்
பத்தினியின் றிருக்கருவிற் படிய வந்தப்
பைங்கிளியும் பளபளெனத் துலங்கிப் பின்னும். 68

கஞ்சத்தைப் பழித்த திருக்கவுளும் வெண்மை
கலந்த குயச்சூசுக முங்கறுத்து வாசக்
கஞ்சமலர் விழியிரண்டும் பிறழ்ந்து நோக்கக்
கருவினுறை படைத்தவிவன் காத்தி லேந்து
மஞ்சளமார் பொற்பிரம்பே யான நீல
மயிரொழுங்கும் புலப்படமுன் காண்டற் கொல்லாக்
குஞ்சரமும் பூங்கொடி நேரிடையுந் தோன்றக்
கோடொரு மூன்றுங் காக்கக் குலவினளால். 69

அச்சிதிய மருங்கு புலப்பட்ட துண்மை
யறிவில்லா வாதியரின் மறைந்த வேதத்
துச்சியுறும் பரம்பொரு ணன்குணர்ந்தோர் தம்மா
லுலகறிய வொளிர்குவதே யுறழ்ந்த தன்றிப்
பச்சைமணின் னமுதமொளி யனிலம் வான
மாமிவற்றின் பண்புறு நற்செழிப்புந் தாலங்
கச்சைமுலை யுடனுசி யிவற்றின் கண்ணே
கண்டுறவோர் கண்களிக்க நிகழ்ந்த தம்மா. 70

அவளடைவே நவமதியு நடந்த பின்ன
ரையிரண்டா வதிற்கலி யிவ்வுகத்தே யாதி
திவசமொரு நாற்பான் மூன்றதுவா மேலுந்
திருத்தகு நல்விசாக முறு கடகந் தன்னில்
திவளொளிசேர் முத்துயிர்த்த நந்தே போலுந்
திருமகளைப் பெற்றெடுத்துத் திகழ நீரு
மவனியெலாந் தெளிந்த னிலன் குளிர்ந்துலாவ வமர
ரெலாங் களித்தலரைச் சொரிந்தா ராங்கே. 71

திசையெங்குந் தெளிந்தன நூற்பயின்ற கல்வித்
திறத்தினர் தம்முளந் தெளிந்த தந்தணாளர்
வசையின்று மவிசொரிந்து வளர்த்துந் தீயும்
வலஞ்சுழலுஞ் சிகையோடுஞ் சொலித்த தோங்குங்
கசிகர மணநாறுங் கரடமேழுங் கான்ற
திங்களித் ததுகாண் பணியே காலுஞ்
சசியுதர முரிஞ்சிடு தென்மலையில் வாழுந்
தமிழ் முனியு முளங்குளிர்ந்து துதித்தா ரன்றே. 72

வண்டறையு மான்மதமே பயின்ற கூந்தல்
வசுதேவன் மனைக்கிழத்தி வயிறு வாய்த்த
புண்டரிகக் கண்ணனென வுதித்த வந்தப்
புத்திரற்கப் புயல்வண்ணன் புவனங் கண்ட
திண்டிறல்சேர் கேழலுரு வுடனே வந்து
திருஞானப் பால் புகட்டத் தேவிட்டா ரங்கே
யுண்டதனைத் தாய்முலையைப் பருக லோடு
முரோதனமு மின்றமைந்தா ரிழ்வா ரம்மா. 73

அவ்வண்ண மவர் பயமே யாதி யொன்று
மருந்தாமே யிழிந்ததென வகன்றா ரேனும்
மெய்வண்ண நாடோறுஞ் சுருங்க லின்றி
மேம்படக்கீழ் மலைமுகட்டின் மிசையே தோன்றுஞ்
செவ்வண்ணச் செழுங்கதிரோ னெனவில் வீசச்
செழிப்பதுகண் டிருகுரவர் வியப்பின் விஞ்சி
யுய்வண்ண மிதுவென விக்காரணத்தி னோங்கு
திருமாற னென்று மொருபே ரோதி. 74

ஆறிரண்டாந் திவசமதி லவரை யேந்தி
யந்நகர்வாழ் பொலிந்துநின்ற பரமன் கோயி
லேறியவ னுலகளந்த வடிக்கீழிட் டாரிட்
டவுடன் றவழ்ந்தவன் முன்னிசைக்கப் போந்தவ்
வீறுதிருச் சினகரத்தின் வடபாற் சேடன்
விழுப்புளியந் தருவெனவே செழிக்கு மந்தப்
பேறமருந் தருவடி யிற்பதும வாச
னத்தினராய்ப் பிறங்கி வலக்கரத்தின் மாதோ. 75

திருஞான முத்திரையுந் திகழக் கொண்டு
மறுகரத்தை மடிமிசையே பொலிய வைத்துப்
பெருமானை நினைந்தவண்ணம் மௌனி யாகிப்
பிறங்குவதைப் பெற்றவரோ டெவருங் கண்டு
திருமாலின் கருணையினே யுதித்த தீதோ
ரவதார மெனவியந்து தெளிந்து பின்னோர்க்
கொருநாளுந் திருவுளத்திற் கியையா வண்ண
முஞற்றிடவொல் லாதெனவுண் மகிழ்ந்தார் மன்னோ. 76

மற்றந்தத் திருப்புளியைச் சூழ வாச
மலர்ப்பந்த ரமைத்திரவும் பகலு மாங்கே
பெற்றவரு மற்றவரும் புரந்து வந்தார்
பின்பாழ்வா ரெண்ணிரண்டாண் டளவா யோக
முற்றமர்ந்தே கண்விழிப்பு முரையு மின்றி
யொளிருகையிற் பரமபதத் துலகின் றுயாம்
பொற்றிருவு முபேந்திர னின்வதன நோக்காப்
புன்னகையி னன்னயமாய்ப் புகல நின்றான். 77

நம்மானைக் கொடுசேனைச் செல்வன் மாநீர்
நகர்க்குருகை புதித்திட்டா னவற்கே வையந்
தம்மா வெம்பவந் தொலைத்துத் தளரா வின்பந்
தாமடைய விழைந்திடு மாறுபதே சிக்கப்
பெம்மானே வேண்டுவ லென்றிசைக்க வந்தப்
பேய்முலையில் வாய்வைத்த பெருமா னுள்ளஞ்
செம்மாந்து சிறுநகை செய்தின்றுர் போதுஞ்
செகத்திலெவர் பரிவரெனச் செப்பிப் பின்னும். 78

தன்சேனை பதியை விளித்துன்பங் காதித்
தரணியிட மவதரித்த சடகோ பற்குப்
பின்செய்ய படியனைத்தும் பெருமை கண்டு
பிழைத்திடு மிரகசியங் கள்பெறப்போ தித்து
நின்சாலம் பணிபுரிய மீள்க வென்று
நிகழ்த்தருள விலயிசை யங்கிமலன் போந்து
மன்சேரும் புளியடியின் மௌனி யாகி
மன்னுகுரு கைப்பானை மகிழ்ந்து கண்டான். 79

கண்டுதிரு விலச்சினையே முதலா னைந்து
திருத்தமு னவியற்றி யவர்கமல மாதுர்
ண்டமறைக் கடைக் களித்துத் திரும்ப வந்தத்
தூயவரும் பன்னிருபுண் டரமுந் தோன்றக்
கண்டொளிரக் கதிரவனைத் தின்னே குள்ளங்
களித்தாழ்வார் சடக்காற்றை யகற்று மாற்று
லெண்டிசையுஞ் சடகோப னெனவே போற்று
மெழிற்றிரு நாமமுமிசைத் தாங்கினைத்து வாழ்ந்தார். 80

ஸ்ரீ:

நம்மாழ்வார் வைபவம்

5-வது, சருக்கம்

மதுரகவி யாழ்வா ரவதாரம்.

பெரியவ னுடன்கலந்து பேசி முனிராமப்
பிரியனை யுயர்த்த வெதுகிரி மிசை பிறங்கத்
திருவுள முடன்றனர் விண்ணெடு சேர்த்த
நியமுனில் பாதமலர் பணிந்து வாழ்வாம்,

ஸ்திரத்வம் வஸ்துந: ப்ரமாணஸம்பந்தயோக்யத்வே ஸத்யபி விகாராஸ்பதத்வேநாஸ்திரத்வாத், தத்விபரீதம் ஸ்திரத்வவிசேஷம் ஸத்யபதேநாபிதத்தே। 'ஸத்யஸங்கல்ப:' இத்யேதேந போக்யபோகோபகரணாதிஷு நித்யேஷு நிரதிசயேஷ்வநந்தேஷு ஸத்ஸ்வப்யபூர்வாணாமபரிமிதாநாமத்யாச்சர்யாணாம் ஸங்கல்பமாத்ரேண ஸ்ருஷ்டிம் வததி। தேஷாம் ச போகோபகரணாநாம் லீலோபகரணாநாம் சேதநாநாமசேதநாநாம் ஸ்திராணாமஸ்திராணாம் ச தத்ஸங்கல்பாயத்தஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதாதி ஸர்வம் வததி 'ஸத்யஸங்கல்ப:' இதி।

றிக்கு லீலோபகரணமாக இருக்கும் ப்ராக்ருத வஸ்துக்களும் நித்யங்களாக இருந்த போதிலும், அவைகளிடம் ப்ரமாண ஸம்பந்தத்திற்கு யோக்யமாயிருப்பதால் ஏற்படும் நித்யத்வம் மாத்ரம் இருக்கின்றதே தவிர, விகாரமடையாமலிருப்பதால் ஏற்படும் நித்யத்வம் அவைகளிடம் இல்லை; ஆகையால் அவை ஸ்திரங்களென்று சொல்லப்படமாட்டா. அவிகாரமாக இருப்பதால் ஏற்படும் நித்யத்வத்தை உடைய நித்ய விபூதி வஸ்துக்களே ஸ்திரங்கள்; அப்படிப்பட்ட நித்யத்வமே இவ்விடத்தில் ஸத்ய பதத்தால் குறிக்கப்படுகின்றது. இம்மாதிரி அநந்தங்களாக இருக்கும் வஸ்துக்கள் நிரதிசயங்களாக இருக்கையிலும், அபூர்வங்களான கணக்கற்ற வேறு புதிய பதார்த்தங்களையும் ஸங்கல்ப மாத்ரத்தால் ஸ்ருஷ்டிக்க அந்தப் பகவானுக்குச் சக்தி உண்டு என்பதை 'ஸத்ய ஸங்கல்பன்' என்னும் பதம் சொல்லுகின்றது. லீலா விபூதியிலுள்ள சேதநாசேதந ரூபமாயும் ஸ்திராஸ்திர ரூபமாயுமிருக்கும் லீலோபகரணங்கள் போல, நித்ய விபூதியிலுள்ள சேதநாசேதந ரூப ஸ்திராஸ்திர ரூப போகோபகரணங்களும் அவனுடைய ஸங்கல்பத்திற்கு உட்பட்ட ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்களை உடையவை என்பதே இந்த 'ஸத்யஸங்கல்ப' என்னும் பதத்தின் தாத்பர்யம்.

ப்ரமாணஸம்பந்தயோக்யத்வே ஸத்யபி — ஸத்யத்வம், ப்ரமாணத்தின் ஸம்பந்தத்திற்கு யோக்யமாயிருப்பதென்றும் விகாரம் அடையாமல் இருப்பதென்றும் இருவகைப்படும். இந்த லீலா விபூதியிலுள்ள பதார்த்தங்களும் ப்ரமாண ஸம்பந்தார்ஹங்களே, ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களைக் கொண்டே அவைகளை நாம் க்ரஹிக்கிறோம். ஆகையால் அவைகளை ஸ்திரங்களென்றே நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்: ஆனாலும், அவை அவிகாரிகளல்ல. எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும் ஸ்வபாவமுள்ளவை. ஆகையால் அவைகளை நித்ய விபூதியிலுள்ள வஸ்துக்களைப் போல ஸத்யங்களென்று சொல்வது ஸாத்யமில்லை.

சேதநாசேதநாநாம் ஸ்திராணாமஸ்திராணாம் — லீலா விபூதியில் ப்ராக்ருத பதார்த்தங்கள் அசேதநங்கள், ஸம்ஸாரி ஜீவன்கள் சேதநர்கள்; நித்ய விபூதியில் சுத்த ஸத்வம் அசேதநம், முக்தர்களும் நித்யர்களும் சேதநர்கள்; லீலா விபூதியில் சேதநர்கள் ஸ்திரமான வஸ்துக்கள், அசேதநங்கள் அஸ்திரங்கள்; நித்ய விபூதியில் லீலா வ்யாபாரம் முதலியவை அஸ்திரங்கள், மற்றவை ஸ்திரங்களே.

இதிஹாஸபுராணயோர் வேதோபப்ரும்ஹணயோ: ச்ருத்யைகார்த்ய முச்யதே |

"தௌ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ |
வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: ||"

இதி வேதோபப்ரும்ஹணதயா ப்ராரப்தே ஸ்ரீமத்ராமாயணே,

"வ்யக்தமேஷ மஹாயோகீ பரமாத்மா ஸநாதந: |

இதிஹாஸ புராணயோ:—வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாக இருக்கும் இதிஹாஸ புராணங்களிலும் இந்த அர்த்தமே விளக்கப் பட்டிருக்கின்றது. "தௌ து மேதாவிநௌ" இத்யாதியான ச்லோகத்திற் சொல்லியிருக்கிறபடி வேதத்தை உபப்ருஹ்மணம் செய்ய வேண்டுமென்றே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் ராமாயணத்தில், 'இந்த ராமன் மஹாயோகியா யிருக்கும் பரமாத்மாவே ; இவன் எப்

இதிஹாஸ புராணயோ:—பகவானுக்கு ஒரு திவ்ய மங்கள விக்ரஹமுண்டு, அவன் ஒரு ஸ்தாந விசேஷத்தைத் தனது வாஸமாக வைத்துக் கொண்டிருக்கிறான், இவை முதலிய விஷயங்கள் ச்ருதி வாக்யங்களைக் கொண்டு இது வரையில் உபபாதிக்கப்பட்டன. ஸ்ரீமத் ராமாயணம் மஹா பாரதம் முதலிய இதிஹாஸங்களிலும் ஸ்ரீ விஷ்ணு புராணம் முதலிய புராணங்களிலும் இந்த விஷயங்கள் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன வென்பது இப்பொழுது நிரூபிக்கப் படுகின்றது. தவிர, பகவானுக்குச் சிற்சில பூஷணங்களும் சிற்சில ஆயுதங்களும் உண்டு என்பது ச்ருதியில் வ்யக்தமாகக் காணப்படவில்லை; இதிஹாஸ புராணங்களில் அது கண்டோக்தமாக இருக்கின்றது என்பதும் இப்போழுது இவ்விடத்தில் இதிஹாஸ புராணங்களை ஸங்க்ரஹிப்பதற்குக் காரணம்.

தௌ து மேதாவிநௌ—முதலில் ஸ்ரீமத்ராமாயண வாக்யங்கள் ப்ரமாணமாகக் கூறப்படுகின்றன. 'ஸ்ரீமத் ராமாயணம் கேவலம் காவ்யமோ? அப்படியானால் அது எவ்விதத்தில் ப்ரமாணமாகும்?' என்னும் சங்கையை நிவ்ருத்திப்பித்துக்கொண்டு, 'ஸ்ரீமத் ராமாயணம் கேவல காவ்யமன்று ; அது காவ்யம் போல இருக்கையிலும், வேதத்தின் அர்த்தத்தையே அது வெளியிடுகின்றது' என்பதை இந்த ச்லோகத்தால் நிரூபிக்கிறார். இந்த ச்லோகத்தின் பொருள்—'அந்த இரண்டு குழந்தைகளும் நாலு வேதங்களுடைய விஷயங்களையும் தரிக்ககூடிய புத்தியை உடையவர்களென்றும், வேதங்களை அங்கங்களுடன் அத்யயநம் செய்திருக்கிறார்களென்றும் வால்மீகி மஹர்ஷி அறிந்துகொண்டு வேதங்களின் உபப்ருஹ்மண ரூபமாக இருக்கும் தமது க்ரந்தத்தை அவர்களுக்கு உபதேசித்தார்.' இதிலிருந்து ஸ்ரீமத் ராமாயணம் வேதத்திற்கு உபப்ருஹ்மணம் என்பது வெளியாகின்றது. வேதத்தின் நிஷ்க்ருஷ்டமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் க்ரந்தங்களை 'உபப்ருஹ்மணங்கள்' என்று சொல்வார்கள். அம்மாதிரியான க்ரந்தங்களில் சொல்லப்படும் விஷயங்களெல்லாம் ப்ரமாணங்களே என்பது விவக்ஷிதம்.

வ்யக்தமேஷ மஹாயோகீ—இந்த ச்லோகம் யுத்த காண்டத்தில் இருக்கின்

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌨𑌿𑌧𑌨𑍋 𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌾𑌤𑌾 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌵𑌕𑍍𑌷𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌰𑌜𑌯𑍍𑌯𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍋 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃 ।।"
"𑌶𑌰𑌾 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌧𑌨𑍁𑌰𑌾𑌯𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌵𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑍇𑌶 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑌶𑌰𑍀𑌰𑌃 𑌸𑌹𑌾𑌨𑍁𑌗𑌃 ।।"

பொழுதும் இருப்பவன். இவனுக்கு ஆதியுமில்லை மத்யமுமில்லை அந்தமுமில்லை. மஹான்களாக இருக்கும் ப்ரஹ்மா இந்த்ரன் இவர்களைக் காட்டிலும் மிக உயர்ந்தவன். ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பாலுள்ள அப்ராக்ருதமான வைகுண்ட லோகத்தில் இருப்பவன்; சங்கம் சக்ரம் கதை இவைகளை ஆயுதங்களாக உடையவனாய் ஜகத்தை ரக்ஷிக்குமவன் இவனே. இவனுடைய மார்பில்தான் ஸ்ரீவத்ஸம் என்னும் மறு இருக்கின்றது. தன்னை விட்டு விலகாத லக்ஷ்மியை இவன் பத்நியாக உடையவன். இவனை ஜயிப்பது என்பதும் ஒருவராலும் சக்யமன்று. இவன் சாச்வதன்; இவன் த்ருவன்.' 'பல விதங்களான பாணங்களும் நீண்ட மூர்த்தியை உடைய கோதண்டம் என்னும் வில்லும் இவையெல்லாம் புருஷனுடைய ஆகாரங்களைத் தரித்துக் கொண்டு இவனைப் பின் தொடர்ந்து சென்றன. இவன் தனது சரீரத்துடனும் தன்னுடைய அநுசரர்களுடனும் விஷ்ணு ஸம்பந்தமான தேஜஸ்ஸில் அந்தர்தாநத்தை அடைந்தான்' என்று இவனைப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது.

றது. ராவணன் வதமடைந்தவுடன், அவனுடைய ஜ்யேஷ்ட பத்நியாகிற மண்டோதரி அவனுடைய வதத்தைப் பற்றி ப்ரலாபிக்குமிடத்தில் 'ஸ்ரீராமன் கேவல மநுஷ்யனன்று; அவனுடைய க்ருத்யங்களைப் பார்க்குங்கால் அவன் அமாநுஷனென்றே ஏற்படுகின்றது. ஒரு கால் அவன் யமனாக இருப்பானோ : இல்லாவிட்டால் இந்த்ரனாக இருப்பானோ ? இல்லை, அவன் யமனுமன்று இந்த்ரனுமன்று ; அவன் ஸாக்ஷாத் சங்க சக்ர கதா தரனாகிற விஷ்ணுவே' என்று சொல்லிக் கதறி அழுகிறாள். ஒரு ஸ்த்ரீயின் வார்த்தையைக் கொண்டே 'விஷ்ணு மற்றை எல்லா தேவதைகளைக் காட்டிலும் உயர்ந்தவர்' என்பதை வால்மீகி இவ்விடத்தில் ஸ்தாபிக்கிறார். இதில் '𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌾𑌤𑌾' [ப்ராக்ருத மண்டலத்திற்கு அப்புறமுள்ள அப்ராக்ருதமான ஸ்ரீ வைகுண்டத்தில் இருப்பவன்] என்பதில் சொல்லப்படும் அர்த்தமே இவ்விடத்தில் முக்யமாக அபேக்ஷிதம். ஸ்ரீ வைகுண்டம் என்னும் அப்ராக்ருத ஸ்தாநமொன்று உண்டு என்பதற்கு இது ப்ரமாணம். 𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌨𑌿𑌧𑌨𑌃, 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌃, 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃 என்று மூன்று பதங்கள் இருக்கின்றன. இவையெல்லாவற்றுக்கும் 'நித்யமாக இருப்பவன்' என்பதே பொருள். இப்படி ஓரே பொருளுள்ள மூன்று பதங்கள் ப்ரயோகம் செய்திருப்பதன் கருத்து என்னவென்றால்-முதல் பதம் பகவானுடைய ஸ்வரூபம் நித்யம் என்பதையும், இரண்டாவது பதம் குணங்களுடன் கூடினவனாகவே பகவாந் நித்யன் என்பதையும், மூன்றாவது பதம் திவ்ய மங்கள விக்ரஹத்துடன் கூடினவனாகவும் அவன் நித்யன்

ஸ்ரீவைஷ்ணவே ச,

"ஸமஸ்தா: ஶக்தயஶ்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: |
தத்விஶ்வரூபவைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத் ||"
மூர்த்தம் ப்ரஹ்ம மஹாபாக ஸர்வப்ரஹ்மமயோ ஹரி: |
நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ ||"
"யதா ஸர்வகதோ விஷ்ணுஸ்ததைவேயம் த்விஜோத்தம |"
"தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ |
விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநும் ||"
"ஏகாந்திந: ஸதா ப்ரஹ்மத்யாயிநோ யோகிநோ ஹி யே |
தேஷாம் தத்பரமம் ஸ்தாநம் யத்வை பஶ்யந்தி ஸூரய: ||"

ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்—‘ இந்தச் சக்திகளெல்லாம் எவ்விடத்தில் ப்ரதிஷ்டிதங்களாக இருக்கின்றனவோ, அந்த பகவத்ரூபம் விலக்ஷணமான ஸந்நிவேசத்துடன் கூடியது, அது வேறு த்ரவ்யமே, அது அளவுக்கு விஞ்சினது;' ‘ஹரி என்னும் விஷ்ணு, விக்ரஹத்துடன் கூடிய ப்ரஹ்மம்; ஸகல ஜீவன்களும் அவனுக்குச் சேஷபூதங்கள்.' ‘ஜகத்திற்கெல்லாம் மாதாவாக இருக்கும் நித்யையான இந்த லக்ஷ்மி அந்த விஷ்ணுவை விட்டு ஒரு பொழுதும் விலகாதவள்; விஷ்ணு எப்படி எங்கும் வ்யாபித்திருக்கிறாரோ, அவ்விதமே இவளும் எங்கும் வ்யாபித்திருப்பவள். விஷ்ணு தேவனாக அவதரித்தால் இவளும் தேவர்களுடைய தேஹத்தை எடுத்துக் கொள்ளுகிறாள்; மநுஷ்யாவதாரம் செய்யும் பொழுது மநுஷ்ய தேஹத்தை எடுத்துக் கொள்ளுகிறாள். விஷ்ணு எடுத்துக் கொள்ளும் ரூபங்களுக்கு அநுரூபமான ரூபத்தையே இவள் எப்பொழுதும் தனது ரூபமாகச் செய்து கொள்ளுகிறாள்'. ‘விஷ்ணுவுக்குப் பரமமான ஸ்தானமொன்று உண்டு; எப்பொழுதும் ப்ரஹ்மத்தையே த்யானம் செய்துகொண்டு ஏகாந்திகளாயும் யோகிகளாயும் இருப்பவர்கள் அந்தப் பரமமான ஸ்தானத்தில் இருக்கிறார்கள்; அந்த ஸ்தானத்தை ஸூரிகளென்னும் நித்யர்கள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.' ‘அந்த

என்பதையும் குறிக்கின்றன என்பது தான். இதிலிருந்து பகவானுக்கு நித்யமாக திவ்ய மங்கள விக்ரஹமொன்று உண்டு என்பது ஏற்படுகின்றது. ‘நித்யஶ்ரீ:' என்னும் பதம் அவனுக்கு லக்ஷ்மி என்னும் பத்நி ஒருவள் உண்டு என்பதைக் குறிக்கின்றது. சங்கம் முதலிய ஆயுதங்களும் அவனுக்கு உண்டு என்பதைக் காண்பிக்கின்றது ‘ஶங்கசக்ராயுத:' என்னும் பதம்.

ஸர்வப்ரஹ்மமய:.—இவ்விடத்தில் ‘ப்ரஹ்ம' என்னும் பதம் ஜீவனைக்குறிக்கின்றது. சுத்த ஜீவ ஸ்வரூபம் அவனுக்குச் சேஷம் என்பது தாத்பர்யம்.

ஶக்தய:.—பத்த ஜீவன் முக்த ஜீவன் கர்ம ரூபமான அவித்யை இவை சக்திகள். ‘விஶ்வரூபவைரூப்யம்' என்பதற்கு ‘ஸந்நிவேசத்தின் வைலக்ஷண்யம்' என்பது பொருள்.

நித்யைவைஷா—லக்ஷ்மி அவனுக்கு பத்நி என்பதற்கு இது ப்ரமாணம்.

''கலா முஹூர்த்தாதிமயச்ச காலோ
ந யத்விபூதே: பரிணாமஹேது:||''

மஹாபாரதே ச,

''திவ்யம் ஸ்தானமஜரம் சாப்ரமேயம்
துர்விஜ்ஞேயம் சாகமைர்கம்யமாத்யம் |
''கச்ச ப்ரபோ ரக்ஷ சாஸ்மான் ப்ரபன்னான்
கல்பே கல்பே ஜாயமான: ஸ்வமூர்த்யா ||''
''காலஸ்ஸ பசதே தத்ர ந காலஸ்தத்ர வை ப்ரபு: |''

இதி | பரமஸ்ய ப்ரஹ்மணோ ரூபவத்த்வம் ஸூத்ரகாரஸ்ச வததி ''அந்தஸ்தத்தர்மோபதேசாத்'' இதி | [illegible]

ஸ்தானம் நித்யமானது. கலை முஹூர்த்தம் முதலிய காலப் பிரிவுகள் அந்த விபூதிக்கு எவ்வித மாறுதல்களையும் செய்ய சக்தியற்றவை.'

மஹா பாரதத்திலும்—' விஷ்ணுவின் ஸ்தானமாகிற வைகுண்டம் என்பது ஒரு திவ்யமான ஸ்தானம்; அதற்கு அழிவு இல்லை; அது அளவற்ற பெருமையை உடையது; அது நமது இந்த்ரியங்களால் அறியத் தகுந்ததன்று; சாஸ்த்ரங்களால் மாத்ரம் அதை அறியக்கூடும். அது ஆதி முதல் இருப்பது. ஹே ப்ரபோ ; அந்த லோகத்திற்கு நீர் போகலாம். ஆனால் ஒவ்வொரு கல்பத்திலும் நீர் உம்முடைய திவ்ய மூர்த்தியுடன் அவதரித்து உம்மை அடுத்திருக்கும் எங்களைக் காப்பாற்றவேண்டும்'. ' அவ்விடத்தில் காலத்திற்கு எவ்வித சக்தியுமில்லை; இவ்விடத்தில் அது வஸ்துக்களை மாற்றுவதுபோல அவ்விடத்தில் மாற்ற மாட்டாது '

பர ப்ரஹ்மத்திற்கு ரூபம் உண்டு என்பதை ஸூத்ர காரரும் ''அந்தஸ்தத்தர்மோபதேசாத் '' என்னும் ஸூத்ரத்தால் வெளியிட்டிருக்கிறார். அந்த ஸூத்ரத்தின்

[illegible]:—பரமமான ஸ்தானமொன்று உண்டு என்பதற்கு இது ப்ரமாணம்.

அந்தஸ்தத்தர்மோபதேசாத்— இது ப்ரஹ்ம ஸூத்ரங்களுள் ஒன்று. இதன் பொருள்:—அந்த:- ஸூர்யனிடத்திலும் கண்ணின் உள்ளிலும் தென்படும் புருஷன் ஜீவனைக்காட்டிலும் விலக்ஷணமான பரமாத்மாவே; ஏனென்றால், 'தத்தர்மோபதேசாத்'- அந்தப் பரமாத்மாவுக்கே ஸம்பவிக்கக்கூடிய தர்ம விசேஷமானது இந்த உபநிஷத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யத்தில் தென்படும் ' ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஸ்யதே ' என்றும் 'அத ய ஏஷோऽந்தரக்ஷிணி புருஷோ த்ருஸ்யதே ' என்றும் ஆரம்பிக்கும் வாக்யங்களால் விலக்ஷண புண்ய சாலிகளான ஆதித்யன் இந்த்ரன் ப்ரஹ்மா முதலிய ஜீவன்களுள் ஒருவன் சொல்லப்படுகிறானா? இல்லாவிட்டால் அவர்களைக்காட்டிலும் வேறுபட்ட பரமாத்மா சொல்லப்படுகிறானா? என்று ஸந்தேஹித்துக்கொண்டு, 'ஜீவனைக்காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவே சொல்லப்படுகிறான்!

வபு: தப்தகார்தஸ்வர கிரிவரப்ரப: ஸஹஸ்ராம்சுசதஸஹஸ்ர கிரணோ கம்பீராம்ப:ஸமுத்பூத ஸம்ருஷ்ட நாள ரவிகர விகஸித புண்டரீக தளாமலாயதேக்ஷண: ஸுப்ரூ லலாட:

தாத்பர்யமாவது—ஸூர்ய மண்டலத்தின் அந்தா வர்த்தியாகத் தென்படும் புருஷ ச்ரேஷ்டன் ஸாக்ஷாத் பரமாத்மாவாகவும் பரப்ரஹ்மமாகவும் இருக்கும் நாராயணனே; ஏனென்றால் அவனுடைய தர்மங்களல்லவோ அதைச் சொல்லும் உபநிஷத்தில் நிர்த் தேசிக்கப்பட்டிருக்கின்றன? அந்த உபநிஷத்தில் சொல்லியிருப்பதவிருக்க அந்தப் பரம புருஷன் ச்ரேஷ்டமான தங்க மலைபோன்ற ப்ரபையுடன் கூடியவனென்றும், கோடி ஸூர்யனுடைய கிரணங்கள்போல அளவற்ற கிரணங்களை உடையவனென்றும், ஆழமான ஜலத்தில் உத்பத்தியைப் பெற்றும் த்ருடமான தண்டுடன் கூடியதும்

என்று இந்த ஸூத்ரத்தால் ஸ்ரீ வ்யாஸர் ஸித்தாந்தம் செய்கிறார். இப்படி ஸித்தாந்தம் செய்வதற்குக் காரணம் பின்வருமாறு இருக்கின்றது. இந்தச் சாந்தோக்யத்திலேயே இந்த வாக்யங்களுக்குப் பின் வரும் வாக்யங்களில் இந்தப் புருஷனைப்பற்றி பேசுமிடத்தில் 'ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:' (அவன் எவ்வித கர்ம பந்தத்துடனும் ஸம்பந்தப்படாதவன்) என்று அவனுடைய அபஹத பாப்மத்வம் பேசப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அபஹதபாப்மத்வம் ஜீவன்களொருவருக்கும் ஸம்பவிக்கமாட்டாதாகையால் இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுமவன் பரமாத்மாவே என்பது ஸித்தம். இந்த உபநிஷத்தில் பகவானுடைய அபஹத பாப்மத்வம் சொல்லப்பட்டிருப்பதுடன் அவனுக்கு திவ்ய மங்கள விக்ரஹமொன்று உண்டு என்பதும், 'ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே' [தங்கம் போல ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு புருஷன் அவ்விடத்தில் தென்படுகிறான்] 'யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ' [அவனுக்குத் தாமரை புஷ்பம் போன்ற இரண்டு கண்கள் உண்டு] இத்யாதி வாக்யங்களால் ஏற்படுகின்றது. அந்தத் திவ்யமங்கள விக்ரஹம் நம்முடைய ஊனக் கண்ணுக்குத் தெரியமாட்டாது; விசுத்தமான மனஸ்ஸாலேயே அது அறியப்படக் கூடும் என்பதும் அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அதீந்த்ரிய ரூபம் பரமாத்மாவுக்கே உண்டு என்பது, 'ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா' [கண்ணுக்கு எட்டாதது அந்த ரூபம், வாக்காலும் வர்ணிக்கமுடியாதது] 'மனஸா து விசுத்தேன' [சுத்தமான மனஸ்ஸால் மாத்ரம் அதை க்ரஹிக்கக்கூடும்] இத்யாதியான வேறு வாக்யங்களிலிருந்து ஏற்படுகிற படியால் இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுமவன் பரமாத்மாவாகவே இருத்தல் வேண்டும். இது தான் இவ்விடத்தில் உபபாதிக்கப்படும் விஷயம்.

தப்தகார்தஸ்வர கிரிவரப்ரப:— ச்ரேஷ்டமான தங்க மலையின் ப்ரபை போன்ற ப்ரபையை உடையவன். இது 'ஹிரண்மய:' என்பதன் பொருள். இவ்விடத்தில் 'ஹிரண்மய:' [ஸ்வர்ண மயமான] என்பது ஔஜ்ஜ்வல்யத்தைக் குறிப்பதற்கு மாத்ரம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஸுநாஸ: ஸுஸ்மிதாதரவித்ரும: ஸுகோமலகண்ட: கம்புக்ரீவ: ஸமுந்நதாம்ஸவிலம்பிசாருரூபத்யுதிகர்ணபாசக்லிஷ்டய: பீநவ்ருத்தாயதபுஜ: அத்யுஜ்ஜ்வலாத்யந்தாதாம்ரகரதலாநுரக்தம்

ஸூர்ய கிரணங்களால் மலரச் செய்யப் பெற்றுமுள்ள தாமரைப் புஷ்பத்தின் தளங்கள் போன்ற அழுக்கற்ற நீண்ட கண்களை உடையவனென்றும், அழகான புருவம் நெற்றி மூக்கு இவைகளை உடையவனென்றும், அழகான மந்த ஸ்மிதத்துடன் கூடிய பழவம் போன்ற உதடுகளையும் மனோஜ்ஞமாயும் கோமளமாயுமுள்ள கன்னங்களையும் சங்கம் போன்ற கழுத்தையும் உயர்ந்த தோள்களில் தொங்கிக்கொண்டிருக்கும் நன்றாக அமைந்துள்ள திவ்ய காதுகளையும் திரண்டு உருண்டிருக்கும் புஜங்களையும் உடைத்தாயிருக்கிறானென்றும், மிக்க அழகு பொருந்தியும் மிகச் சிவந்துமிருக்கும் உள்ளங்

கம்பீராம்பஸ்ஸம்பூத — இது 'யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ' என்னும் ச்ருதி வாக்யத்தின் அர்த்தத்தை விளக்குகின்றது. இந்த ச்ருதி வாக்யத்திற்கு மூன்று அர்த்தங்கள் வாக்யகாரரால் உபபந்ந அர்த்தங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—(1) கே-ஜலத்தில், ஆஸ்தே-நின்று கொண்டிருக்கிற. 'கே ஆஸ்தே' இதி கப்யாஸம் | இவ்விடத்தில் 'ஆஸ்தே' என்பதிலுள்ள 'ஆ' லோபமடைகிறபடியால், 'காப்யாஸம்' என்று ரூபம் ஏற்படாமல் 'கப்யாஸம்' என்று ரூபம் ஏற்படுகின்றது. ஜலத்தை விட்டு எடுக்கப்பட்ட தாமரைப் புஷ்பத்தைக் காட்டிலும் ஜலத்தில் இருக்கும் புஷ்பத்திற்கு சோபை அதிகமாகையால் அவ்விதம் இவ்விடத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. (2) கம்-ஜலத்தை, பிபதி-குடிக்கின்றது; என்று கபி:, அதாவது 'தாமரைத் தண்டு' என்று சொன்னதாயிற்று. கபௌ-அந்தத் தண்டில், ஆஸ்தே-இருக்கின்றது; என்று கப்யாஸம் | தண்டிலிருந்து கொய்யப்பட்ட புஷ்பத்தைக் காட்டிலும் தண்டுடன் இருக்கும் புஷ்பத்திற்கு சோபை அதிகமாகையால், இந்த வர்ணனம். (3) கம்-ஜலத்தை, பிபதி ஆகர்ஷிக்கிறான் என்று-கபி:-ஸூர்யன்; கபிநா-ஸூர்யனால், அஸ்யதே-மலரச் செய்யப்படுகின்றது, என்று 'கப்யாஸம்' | ஸூர்ய கிரணத்தால் மலரும் தாமரைப் புஷ்பத்திற்கு, வேறுவிதமாக மலரச் செய்யப்படும் தாமரைப் புஷ்பத்தைக் காட்டிலும் சோபை அதிகமாகையால் இந்த வர்ணனம். இந்த மூன்று அர்த்தங்களையும் ஸ்ரீ பாஷ்யகாரர், 'கம்பீராம்பஸ்ஸம்பூத' [ஆழமான ஜலத்தில் உண்டாகியிருக்கிறவும்,] 'ஸம்ம்ருஷ்டநால' [த்ருடமான தண்டுடன் கூடியிருக்கிறவும்,] 'ரவிகரவிகஸித' [ஸூர்ய கிரணங்களால் மலரச் செய்யப்பட்டிருக்கிறவும்] என்று மூன்று விசேஷணங்களால் விவரித்திருக்கிறார். 'புண்டரீக' என்னும் சப்தம் வெள்ளைத் தாமரைப் புஷ்பத்தையே குறிக்கும். ஆனால், அந்த அர்த்தம் இவ்விடத்தில் உபபந்நமாக மாட்டாதாகையால், இவ்விடத்தில் அந்தச் சப்தம் சிவந்த தாமரைப் புஷ்பத்தையே குறிக்கின்றது என்று நிர்வஹித்திருக்கிறார்கள்.

ஶாகாபிரலங்க்ருதஸ்தநுமத்யோ விஶாலவக்ஷஸ்ஸ்தல: ஸமவிபக்த ஸர்வாங்கோ(அ)நிர்தேஶ்யதிவ்யரூபஸம்ஹநந: ஸ்நிக்தவர்ண: ப்ரபுத்தபுண்டரீகசாருசரணயுகல: ஸ்வாநுரூபபீதாம்பரதரோ(அ)மலகிரீடகுண்டலஹாரகௌஸ்துபகேயூரகடக நூபுரோதரபந்தநாத்யபரிமிதாஶ்சர்யாநந்ததிவ்யபூஷண: ஶங்கசக்ரகதாஸிஶார்ங்கஶ்ரீவத்ஸவநமாலாலங்க்ருதோ(அ)நவதிகாதிஶயஸௌந்தர்யாஹ்ருதாஶேஷமநோத்ருஷ்டிவ்ருத்திர்லாவண்யாம்ருதபூரிதாஶேஷசராசரபூதஜாதோ(அ)த்யத்புதாசிந்த்யநித்யயௌவந: புஷ்பஹாஸஸுகுமார: புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராளஸ் த்ரைலோக்யாக்ரமணப்ரவ்ருத்தகம்பீரபாவ: கருணாநுராகமதுரலோசநாவலோகிதாஶ்ரிதவர்க: புருஷவரோ பரித்ருஶ்யதே । ஸ ச நிகிலஜகதுதயவிபவலயலீலோ நிரஸ்தஸமஸ்தஹேய: ஸமஸ்தகல்யாணகுணநிதி: ஸ்வ

கையுடன் சேர்ந்துள்ள விரல்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறானென்றும், அல்பமான மத்யத்துடனும் விசாலமான மார்புடனும் ஸமமாகப் பிரிந்திருக்கும் ஸகல அங்கங்களுடனும் வர்ணத்திற்கு எட்டாத திவ்ய ரூப அமைப்புடனும் ப்ரியமான திருமேனி வர்ணத்துடனும் மலர்ந்த தாமரைப் புஷ்பம்போல இருக்கும் அழகான திருவடி யுகளத்துடனும் தனக்கு அநுரூபமான பீதாம்பரத்தைத் தரித்துக் கொண்டு இருக்கிறானென்றும், நிர்மலமான கிரீடம் குண்டலம் ஹாரம் கௌஸ்துபம் கேயூரம் கடகம் நூபுரம் உதர பந்தநம் இவை முதலிய அளவற்ற ஆச்சர்ய ரமங்களான அநந்த திவ்ய பூஷணங்களை அணிந்து கொண்டிருக்கிறானென்றும், சங்கம் சக்ரம் கதை கத்தி சார்ங்கம் ஸ்ரீவத்ஸம் வநமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறானென்றும், அளவற்ற மேன்மை பொருந்திய ஸௌந்தர்யத்தால் ஸகல ஜந்துக்களுடைய மநஸ்ஸையும் த்ருஷ்டியையும் ஆகர்ஷித்து நிற்கிறானென்றும், தனது லாவண்யமாகிற அம்ருதத்தால் ஸகல சராசரங்களையும் நிரப்பிக்கொண்டு அத்யாச்சர்ய ரமமாயும் மநஸ்ஸால் நினைக்கக்கூடாததாயுமுள்ள நித்யமான யௌவநத்துடன் இருக்கிறானென்றும், புஷ்பம் போன்ற புஞ்சிரிப்பினால் மநஸ்ஸுக்கு மிக ப்ரியனாகவும் தனது புண்யமான கந்தத்தால் ஸகல திக்ப்ரதேசங்களையும் வாஸனையால் வாஸித்துக் கொண்டும், மூன்று லோகங்களையும் தனது காம்பீர்யத்தால் ஆக்ரமித்துக் கொண்டும், தனது ஆச்ரிதர்களெல்லோரையும் கருணையாலும் ப்ரீதியாலும் மதுரமாயுமுள்ள தனது கடாக்ஷங்களால் அநுக்ரஹித்துக் கொண்டும் ப்ரகாசிக்கிறானென்றும் நன்றாக விளங்குகின்றது. அவன் ஸகல ஜகத்தினுடையவும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைத் தனது லீலையாகக் கைக் கொண்டிருக்கிறான்; அவனிடம் எவ்வித ஹேயமுமான குணமும் இல்லை; ஸகல கல்யாண குணங்களு

'லாவண்ய' என்னும் பதம் ஸமுதாய சோபையையும், 'ஸௌந்தர்ய' என்பது அவயவ சோபையையும் குறிக்கின்றன.

ஸ்ரீ:

நவனீதம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி முத்திரிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத்தின்கண் உள்ள வேதசாஸ்திர பாரங்கதர்களான பண்டித ஸிரேஷ்டர் பலராலும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அனேகராலும், பலபடியாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ஒருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்று தொட்டு ப்ரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், பௌத்தம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங்களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அருளப்பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பலவற்றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனைப் பக்ஷபாதமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களை யெல்லாம் இருபாலாரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத்தைக் கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத்தினரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்றனர். சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட்டில் இதுகாறும் உண்டாகியதே யில்லை யென்று கெட்டியாகக் கூறிவிடலாம். இத்தகைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. புத்தகம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸில் ஸுமார் 400 பக்கங்கள் கொண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து சீர்த்தியாகக் காலிகோ பயின்டு செய்து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ 3 தான். வேண்டியவர்கள் "ரா. வரதாசார்யர். B. A., L. T., ஸ்ரீ ஸதவித்யா புத்தகசாலை மானேஜர், 1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ்" என்ற விலாசத்திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை

அடியிற்கண்ட புஸ்தகங்கள் அவைகளுக்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள குறைந்த விலைக்கு விற்கப்படும். மணி ஆர்டர் மூலமாகவாவது வி. பி. மூலமாகவாவது பணத்தைச் செலுத்தலாம்.

1. பெரியாழ்வார் திருமொழி — பல்லாண்டு உள்பட வ்யாக்யானத்துடன் (2 வால்யூம், 3 பௌண்ட்)	3	4	0
2. பெரிய திருமொழி—வ்யாக்யானத்துடன் (3 வால்யூம்—பௌண்ட்)	3	0	0
3. திருவாய்மொழி—1 முதல் 9 பத்துக்கள்: 6000, 12000, பதவுரை (2 வால்யூம்—பௌண்ட்)	5	8	0
4. இயற்பாவில் சில (1 வால்யூம், பௌண்ட்)	1	0	0

ஏ. சேஷாசாரியர்,
சிங்குவார் அக்ரஹாரம், மவுண்ட் ரோட், மதிராஸ்.

Registered No. M. 916.

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ. 3.
தனிப் பிரதி: அணா 5.

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, 1 ராமஸ்வாமி தெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30உ தினமே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

27—5—34
மதராஸ்.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Sabha, Madras.

ஸம்புடம் 23] AUGUST 1934 [ஸஞ்சிகை 2

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

பவ ௵

ஆடி ௴

PUBLISHED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha,
MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 389
2. பராங்குச பயோதி:—[ஸ்ரீ. உப. டி. ராம ஸ்வாமி ஐயங்கார், அட்வொகேட், மயிலாப்பூர்.] ... 393
3. ஸ்ரீ வைஷ்ணவ மதமும் யாகமும்:— [வித்வான் ஸ்ரீ. உப. வி. அரந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ், மதிராஸ்] ... 397
4. ஸ்ரீ விபீஷண சரணாகதி:—[காரக்குறிச்சி தட்டை ராமஸ்வாமி ஐயங்கார், (B. A. Hons)] ... 399
5. தேவாலயங்களும் அவைகளின் தூய்மையும்:— [மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 405
6. கடிதங்கள்:— ... 411
7. ஸம்பாதகீயம்:— ... 412
8 ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 29
9. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 57
10. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:— [வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 401

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி— ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது]. ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு· 23.] பவ ஆடிமீ [ஸஞ்சிகை· 2

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(தொடர்ச்சி ஸம். 23, ஸஞ் I, 364 பக்கம்.)

முதல் அத்தியாயம் – மூன்றாவது பாதம்.

20. முதல் பாதத்தில் விதி ப்ரமாணம் என்றும், இரண்டாவது பாதத்தில் அர்த்த வாதங்களும் மந்த்ரங்களும் ப்ரமாணங்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டன. இதனால் ஒருவராலும் செய்யப்படாத வேதம் முழுவதும் ப்ரமாணம் என்று சொல்லிற்றாயிற்று. இந்த மூன்றாவது பாதத்தில் மனிதர்களால் செய்யப்பட்டு பெரியவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஸ்ம்ருதிகளும் ஆசாரங்களும் எவ்வளவு வரையில் ப்ரமாணங்கள் என்று விசாரிக்கப்படுகிறது.

21. போதாயநர், ஆபஸ்தம்பர், ஆச்வலாயநர், காத்யாயநர் இவர்கள் முதலானவர்கள் பெயர்களுடன் சேர்ந்த கல்பஸூத்ரங்களும், நிருக்தம் முதலான வேதத்தின் ஆறு அங்கங்களும் மநு முதலானவர்கள் ஸ்ம்ருதி

களும் பௌருஷேயங்களா? (செய்யப்பட்டவைகளா?) அல்லது வேதம் போல் ஒருவராலும் செய்யப்படாதவைகளா? —என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அவைகள் செய்யப்படாதவைகள். தர்மத்தைப் பற்றி அறிவை உண்டுபண்ணுவதால், வேதம் போல. இங்கே ஒரு கேள்வி கேட்கலாம்—வேதம் ஒரு ப்ரமாணத்தையும் தேடவேண்டியதில்லை. அதுவே ப்ரமாணம். அப்படியன்று கீழ்ச் சொன்ன புஸ்தகங்கள். அவைகள் எந்த ப்ரமாணத்தைப் பொருந்தி இருக்கின்றன—என்று. பதில்—இவைகளால் உண்டாகும் அறிவு வேறொன்றையும் தேடாமல் தானே ப்ரமாணம் என்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஸித்தாந்தம்:—இந்த அநுமாநம் பிசகு. போதாயநஸூத்ரம், ஆபஸ்தம்பஸூத்ரம் என்று இவ்விதமாய் ஒருவர் பெயருடன் சேர்த்து அவைகள் சொல்லப் படுகின்றன. காடகம் முதலான பெயர்கள் போல் (பாரா-14) இவைகளும் முதலில் சொல்லிக் கொடுத்தவர்கள் பெயர்கள் என்று சொல்லக் கூடாது. அந்தப் புஸ்தகங்களைச் செய்த காலத்திலே அவர்களால் செய்யப் பட்டதென்று அப்போதுள்ளவர்கள் அறிந்தார்கள். அந்த அறிவு இடைவிடாமல் வரிசையாய் வந்து கொண்டிருக்கிறது. ஆகையால் காளிதாஸன் புஸ்தகங்கள் போல் அவைகள் செய்யப்பட்டவைகளே. (அதி-7)

22. "𑌅𑌷𑍍𑌟𑌕𑌾𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃" (அஷ்டகா ச்ராத்தம் செய்யவேண்டியது) என்று ஸ்ம்ருதி வாக்யம் இருக்கிறது. அது ப்ரமாணமா? இல்லையா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஸ்ம்ருதி ப்ரமாணமன்று. ஒருவரால் செய்யப்பட்டதனாலே. அதற்கு மூலமான ப்ரமாணம் இல்லாமையாலும், மோசம் பண்ணுகிறவன் சொல்லும் வாக்யம் போல. மேலும், மூலமான ப்ரமாணம் இருக்கிறதென்று சொல்லுவதற்காக வேதத்தின் விஷயத்தைத்தான் ஸ்ம்ருதி சொல்லுகிறது என்றால் வேதத்தினாலேயே அதைத் தெரிந்து கொள்ளலாமே! ஸ்ம்ருதிக்கு ப்ரயோஜநம் இல்லையே. அது அநுவாதமாய் விடும். (அநுவாதம்—சொன்னதையே சொல்லுவது) அது ப்ரமாணமன்று.

ஸித்தாந்தம்:—விவாதத்திற்கு விஷயமான ஸ்ம்ருதிக்கு மூலம் வேதம். வேதத்தை நன்றாக அறிந்த மநு முதலானவர்களால் செய்யப்பட்டபடியால், உபநயநம், அத்யயநம் முதலான விஷயங்களைப் பற்றின ஸ்ம்ருதிகள் போல. ஸ்ம்ருதிகளுக்கு ப்ரயோஜநமில்லையென்று சொன்னது பிசகு. நாம் தெரிந்து செய்யவேண்டிய கர்மங்கள் படிக்கிற வேதத்திலும் இப்போது படிக்கப்படாத வேதங்களிலும் இறைந்து கிடைப்பவைகளைச் சேர்த்து ஒரு இடத்திலே சொல்லுவதாலே நாம் அவைகளை லகுவாய் அறியலாம். (அதி - 1)

23. ஸம்ருதி ப்ரமாணம் என்று முடிந்ததற்கு அபவாதங்கள் (விலக்குகள்)—(1) அக்னிஷ்டோம யஜ்ஞத்தில் ஸதஸ் என்கிற இடத்தில் ஒரு அத்திமரம் நடப்படுகிறது. அதற்கு "ஔதும்பரீ" என்று பெயர். அதைத். துணியால் முழுவதும் மூடவேண்டும். என்று ஸ்ம்ருதி சொல்லுகிறது. "ஔதும்பரீ ஸர்வா வேஷ்டயிதவ்யா" என்று. இது ப்ரமாணமா ? இல்லையா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இதுவும் ப்ரமாணம். 21வது பாராவில் ஸித்தாந்தத்தில் சொன்னபடி இதுக்கு வேதம் மூலம் என்று அநுமானம் சொல்லக்கூடும்.

ஸித்தாந்தம்:—வேதத்தில் "ஔதும்பரீம் ஸ்ப்ருஷ்ட்வா உத்காயேத்" (ஔதும்பரியைத் தொட்டுக்கொண்டு உத்காதா ஸாமகானம் செய்யவேண்டும்.) என்று அதைத் தொடும்படி சொல்லியிருக்கிறது. அதை முழுவதும் துணியால் மூடினால் தொடமுடியாது. ஆகையால் அநுமானம் ப்ரத்யக்ஷமான வேதவாக்யத்திற்கு விரோதம். ஆகையால் இதற்கு வேதம் மூல ப்ரமாணமன்று. (அதி-2)

24. (ii) அக்நிஷ்டோம யஜ்ஞத்தில் வைஸர்ஜன ஹோமம் என்று ஒரு ஹோமம் செய்யவேண்டியது. அப்போது யஜமானன், பத்நீ, அவர்கள் பிள்ளைகள், மற்ற கிட்டினவர்கள் இவர்களைப் புதுத்துணியால் மூடிக்கொண்டு உத்திர வேதிக்குப்போய் அதின் தலைப்பில் ஜுஹுவைக் கட்டிக்கொண்டு ஹோமம் செய்யவேண்டியது. அந்தத் துணியை அத்வர்யு எடுத்துக் கொள்ளவேண்டியது—என்று ஒரு ஸம்ருதி வாக்ய மிருக்கிறது. அது ப்ரமாணமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—கீழ் பாராவில் சொன்னபடி வேதவாக்யத்திற்கு விரோதம் ஒன்றுமில்லை. ஆகையால் அது ப்ரமாணம்.

ஸித்தாந்தம்:—எப்போதாவது ஒரு அத்வர்யு லோபத்தால் இந்தத் துணியை எடுத்துக் கொண்டிருக்கலாம். அது முதல் ஓர் வாடிக்கை ஏற்பட்டு அதை ஸ்ம்ருதி சொல்லுகிறதென்று சொல்லக்கூடும். தக்ஷிணையைக் கொடுப்பதாகச் சொல்லி ருத்விக்குகளை யஜமானன் வேலையைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிற படியால் அவர்களுக்கு லோபம் இருப்பதாக ஏற்படுகிறது. ஆகையால் இப்படிச் சொல்வது பிசகு அன்று. இந்த ஸ்ம்ருதிக்கு இப்படி காரணம் சொல்லக் கூடுமானதால் அதற்கு மூலமான வேதவாக்யம் இருக்க வேண்டுமென்று கல்பிக்கவேண்டாம், ஆகையால் இந்த ஸ்ம்ருதி ப்ரமாணமன்று. (அதி - 3)

த்ருஷ்டகாரணம் சொல்லக்கூடுமானால், அத்ருஷ்டமான காரணத்தை கல்பிக்கக் கூடாது. (சாஸ்த்ர தீபிகை—25 பக்கம்)

25 (iii) ஒருவனுக்கும் ஹிம்ஸை செய்யக்கூடாது என்பது முதலானவைகளை தர்மங்கள் என்று வேதம் சொல்வது போல் சாக்யர்கள் மதத்திலும் சொல்லப்படுகிறது, ஆகையால் சாக்யர்கள் ஸம்ருதி, ப்ரமாணமாகுமா ? என்று ஸந்தேஹம்.

ஸித்தாந்தம்:—அது ப்ரமாணமன்று. பால் நல்லது தான். அதை நாயின் தோலிற் வைத்திருந்தால் அசுத்தமாய் போய்விடுகிறது. அதுபோல் அந்த ஸம்ருதியில் சொல்வது தர்மமானாலும் சாக்யர் ஸம்பந்தத்தாலே அதர்மமாய் விடுகிறது. அதைக்கொண்டு தர்மத்தை அறியக்கூடாது. (அதி - 4)

26. (iv) "க்ஷுதே ஆசாமேத்" (தும்மினால் ஆசமநம் பண்ண வேண்டியது) என்று ஒரு ஸ்ம்ருதி வாக்யமிருக்கிறது. இது ப்ரமாணமா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இது ப்ரமாணமன்று. "வேதம் க்ருத்வா வேதிம் கரோதி" என்று வேதம் சொல்லுகிறது. (வேதத்தை செய்து வேதியை செய்யவேண்டியது) என்று. இந்த இரண்டு வேலைகளுக்கு நடுவில் தும்மினவன் ஆசமநம் செய்தால் வேதம் சொன்ன வரிசைப்படி - வேதியைச் செய்ததாக ஏற்படாது. ஆகையால் இந்த ஸ்ம்ருதி வேதத்துக்கு விரோதமானது. ஆகையால் அது ப்ரமாண மன்று.

ஸித்தாந்தம்:—(1) வேதத்தையும் வேதியையும் போல் ஸ்ம்ருதி சொல்லும் ஆசமநமும் செய்யவேண்டிய வேலை (பதார்த்தம்). வரிசை (க்ரமம்) வேலைகளின் தர்மம். அது செய்யவேண்டிய வேலையைப் பொருத்திருக்கிறது. ஆகையால் வேலைக்கும் வரிசைக்கும் விரோத முண்டானால் வரிசையைத் தள்ளி விடவேண்டியது. வரிசையைப் பெரியதாக எண்ணி வேலையை விடக்கூடாது. ஆகையால் இந்த ஸ்ம்ருதி ப்ரமாணம். (அதி - 4)

(2) எல்லா கர்மங்களும் ஏற்பட்டபிறகு அவைகளைச் செய்யும் காலத்தில் எந்த வரிசையாய் (க்ரமமாய்) செய்ய வேண்டியதென்று விசாரிக்கப்படுகிறது. க்ரமமானது கர்மங்களுடைய தர்மம். அது கர்மங்களைத் தேடுவதாகையால் பலக்குறைவுள்ள ப்ரமாணத்தால் ஏற்பட்டாலும் கர்மமானது முதலில் ஏற்படுகிறது. பிறகு க்ரமம். ஆகையால் கர்மங்களோடு அதுக்கு விரோதமில்லை. விரோதம் இருப்பதாக ஒப்புக்கொண்டாலும், க்ரமமானது பலக்குறைவுள்ளது. ஆசமநம் முதலானவைகள் கர்மங்களானபடியால் பல முள்ளவைகள். ஆகையால் க்ரமமானது அவைகளைத் தடுக்காது.

(3) மேலும் ப்ரமாணங்களுக்கு நேரே ஒன்றுக்கொன்று விரோதமில்லை. அவைகளால் ஏற்படும் கர்மங்களின் விரோதத்தால் அவைகளுக்கு

விரோத முண்டாகிறது. ஆகையால் எப்போது கர்மங்களுக்கு விரோதம் தோன்றுகிறதோ அப்போது தான் ப்ரமாணங்களுக்கு பலமுள்ளது பலக்குறைவுள்ளது என்று விசார முண்டாகிறது. ஆகையால் கர்மத்துக்கும் க்ரமத்துக்கும் விரோதம் உண்டானால் ப்ரமாணங்களின் பலத்தையும் பலக்குறைவையும் கவனிக்கவேண்டியதில்லை. (சாஸ்த்ர– 29)

27. பெரியவர்களுடைய ஆசாரம் ப்ரமாணமாகுமா? ஆகாதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— ஆகாது. ஏனென்றால் அதற்கு மூலமான வேதவாக்யமில்லை.

ஸித்தாந்தம்:—ப்ரமாணமாகும். ஏனென்றால் வேதத்தை நன்றாய் தெரிந்த நல்ல ஒழுக்கமுள்ளவர்களாலே அது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. புஸ்தகங்கள் பெரியதாய் விடும் என்கிற பயத்தால், மநு முதலானவர்கள் இன்ன இன்ன ஆசாரம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லவில்லை. ஆனபோதிலும் பெரியவர்கள் ஆசாரம் ப்ரமாணமென்று பொதுவாய் சொல்லியிருக்கிறார்கள். (அதி – 4)

2[illegible]. தெற்குதேசத்தில் பெரியவர்கள் அம்மான் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள். இந்த ஆசாரம் ப்ரமாணமாகுமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்: —இது ப்ரமாணம். பெரியவர்கள் ஆசாரமாயிருப்பதால்.

ஸித்தாந்தம்:—இது ப்ரமாணமன்று. ஸ்ம்ருதிக்கு விரோதமாயிருப்பதால்.

பூர்வபக்ஷம் சொல்லுகிறவன் கேட்கிறான்:—ஸ்ம்ருதிக்கும் ஆசாரத்துக்கும் மூலமான வேதவாக்யம் இருக்கவேணும் என்று அநுமானத்தால் தீர்மானம் செய்கிறோம். இது இரண்டுக்கும் பொதுவாயிருக்கிறபடியால் ஸ்ம்ருதிக்கு வலிமையையும் ஆசாரத்துக்கு வலிமைக் குறைவையும் ஏன் ஒப்புக் கொள்ளவேணும்-என்று. இதற்கு பதில்- ஆசாரத்தைக் கொண்டு மூலமான வேதவாக்யம் இருக்கிறதென்று தீர்மானம் செய்ய முடியாது. இப்போது இருக்கிற பெரியோர்கள் மநு முதலான பெரியோர்களைப் போல் உயர்ந்த ஜ்ஞானத்தாலே வேதவாக்யங்கள் எல்லாவற்றையும் அறிய சக்தியுள்ளவர்களன்று. ஆனாலும் யாராலும் ஒரு பெரியவர் எந்த இடத்திலாவது எந்த காலத்திலாவது ஆசாரத்துக்கு மூலமான ஸ்ம்ருதியடங்கிய புஸ்தகத்தைப் பார்த்திருக்கக் கூடும். ஆகையால் ஆசாரத்தால் ஸ்ம்ருதி இருக்கிறதென்று முதலில் தீர்மானம் செய்யவேண்டியது. அந்த ஸ்ம்ருதிக்கு மூலமாக வேதவாக்யத்தை அநுமானம் செய்யவேண்டியது. ஆகையால் வேதவாக்யத்துக்கு ஸ்ம்ருதி அடுத்தபடியானதால் வலிமையுள்ளது. ஆசாரம் இரண்

டாவது படியானதால் ஸ்ம்ருதியைக் காட்டிலும் வலிமைக் குறைவுள்ளது.
(அதி – 5)

ஸ்ம்ருதி புஸ்தகமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆசாரம் அப்படியன்று.
ஆசாரத்தைப் பார்த்து, அதின் ஸ்வரூபம் மாத்திரம் தெரிகிறது. அது ஒரு
பெரியவருடைய ஆசாரமாயிருப்பதால் செய்யத் தகுந்ததென்று கல்பிக்க
வேண்டும். பிறகு அதற்கு மூலம் வேதவாக்யமென்று கல்பிக்கவேண்டும்.
ஸ்ம்ருதி விஷயத்தில் அதில் சொல்வதை செய்ய வேணுமென்று சீக்ரம்
தோன்றுகிறது. அதைக் கல்பிக்க வேண்டியதில்லை. மூலமான வேதவாக்
யம் இருக்கிறதென்று மாத்ரம் கல்பிக்கவேண்டியது. ஆகையால் வேதத்
துக்குக் கிட்ட இருக்கிறது ஸ்ம்ருதி. இன்னமொருபடி விலகியிருக்கிறது
ஆசாரம். (சாஸ்த்ர–34]

29. இதன் பிறகு சொற்களுக்கு அர்த்தம் தெரிந்து கொள்ளும்
விஷயத்திலும், சொற்களை உபயோகப்படுத்தும் விஷயத்திலும் எவ்வளவு
வரையில் ஆசாரம் ப்ரமாணமென்று விசாரிக்கப்படுகிறது.

(i) முதலில் ஒரு சொல்லுக்கு இன்னது பொருள் என்று உலகத்தி
லும் வேதத்திலும் ப்ரஸித்தி யிருக்கிறது. இரண்டிற்கும் விரோதமிருந்
தால் எந்த அர்த்தத்தை எடுத்துக் கொள்ளுகிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இரண்டு ப்ரஸித்திக்கும் வலிமை ஸமமாயிருப்பதால்
எந்த அர்த்தம் வேணுமோ அதை எடுத்துக் கொள்ளலாமென்று.

ஸித்தாந்தம்:—வேதத்தின் ப்ரஸித்தியைத்தான் எடுத்துக் கொள்ள
வேண்டியது. தர்மம் கெட்டுப்போகக் கூடாதென்று பெரியோர்கள் அர்த்
தத்தை வரிசையாய் இடைவிடாமல் ரக்ஷித்து வந்திருக்கிறார்கள். மேலும்,
இந்த அர்த்தந்தான் கிட்ட இருக்கிறது. ''யவமய ஶ்சரு-ர்பவதி'' (யவ
த்திலே சருவைச்செய்யவேண்டியது) என்று வேதம் சொல்லுகிறது. 'யவ
ம்' என்கிற சொல்லுக்கு 'ப்ரியங்கு' என்பது பொருள் என்று உலகத்தா
ரும், 'நீண்ட முனையை உடைய தான்யம்' என்று பெரியோர்களும் சொல்லு
கிறார்கள். ஒரு அர்த்தவாதம் சொல்லுகிறது—'எப்போது மற்றசெடிகள்
வாடுகின்றனவோ, அப்போது இவைகள் ஸந்தோஷப்படுவது போல் இருக்
கின்றன' என்று, இது 'ப்ரியங்கு' என்பதுக்குப்பொருந்தாது. ஏனென்றால்
மற்றவைகள் பழுப்பதற்கு முன்னாலே அது பழுக்கிறது. இப்படியே
'வராஹம்' என்னும் சொல் பன்றியையும் 'பீலு' என்ற சொல் ஒரு
மரத்தையும் சொல்லுகின்றன. உலகவழக்கப்படி கருப்பு பக்ஷியையும்
யானையையும் சொல்லவில்லை. (அதி – 5)

'' த்ரிவ்ருதம் வைஷ்வதேவம் '' என்கிற வாக்யத்தில் 'த்ரிவ்ருத்'
என்கிற சொல்லுக்கு என்ன பொருள் என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—உலகத்தில் அதற்கு "[illegible]" என்றுபொருள். வேதத்தில் இந்த வாக்யத்துக்கு மேல் வருகிற ஒரு வாக்யத்தால் உத்காதா கானம் பண்ணும் ஸ்தோத்ரங்களுடைய ஸ்தோத்ரீயாக்களுடைய 'ஒன்பது' என்கிற ஸங்க்யையை சொல்லப்படுகிறது. ஒரு சொல்லுக்கு இன்னது பொருள் என்று முடிவு செய்வதற்கு வேதத்தில் சொல்லப்பட்ட அர்த்தம் ப்ரபலம்தான், ஆனபோதிலும், ஒருசொல்லுக்கு இன்னது பொருள் என்று அறிவதில் உலகத்து ப்ரஸித்திக்கும் வேதத்தின் ப்ரஸித்திக்கும் பலம் ஸமமாக இருக்கும். ஆகையால் எந்தப் பொருள் வேணுமோ, அந்தப் பொருளை வைத்துக் கொள்ளலாம்.

ஸித்தாந்தம்:-உலகத்துப்ரஸித்தியைக்கொண்டு அர்த்தம் பண்ணுவதானுல் சொன்ன விதிவாக்யம் ஒன்றைச்சொல்லும், அதின் பின்னுல் வருகிற அர்த்தவாத வாக்யம் வேறொன்றைச் சொல்லும். அவைகளுக்கு ஒற்றுமையிருக்காது. அவைகள் ஒரு வாக்யமாகவும் ஆகாது. விதியும் அர்த்தவாதமும் ஒரே வாக்யமாக இருக்கவேண்டியது. (பாரா-15) ஆகையால் இரண்டும் ஒரே வாக்யமாக இருப்பதற்காக வேதத்தில் சொன்ன அர்த்தத்தையே எடுத்துக் கொள்ளவேண்டியது. (அதி - 5)

ஸ்ரீ:

பராங்குச பயோதி.

[ஸ்ரீ. உ.ப. டி. ராம ஸ்வாமி ஐயங்கார், அட்வகேட், மயிலாப்பூர்.]

மொழியைக் கடக்கும் பெரும்புகழ் பெற்ற ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச் செய்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தின மூன்றுவது ச்லோகமான "[illegible]" மென்கிற நம்மாழ்வார் விஷயமான ச்லோகத்திற்கு நமது தீபிகையின் ஸம்பாதகரான ஸ்ரீ உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸாதித்த வ்யாக்யாநம் சென்ற ஸஞ்சிகையில் வெளிவந்தது. வ்யாக்யாந மிட்டவரும், ஆழ்வானைப்போல் பகவத் தாஸ்ய மஹாரஸஜ்ஞராகையாலே நம்மாழ்வாரின் திவ்ய ப்ரபந்தங்களில் காணப்படும் பகவத் ப்ரீதி, ஆரம்பம் முதல் இறுதி வரையில் எவ்வண்ணம் அபி வ்ருத்தமாய்க் கொண்டே போகிறது? என்பதை உணர்ந்து, அதை வெகு ஸூக்ஷ்மமாய் "பகவானிடத்தில் பக்தர்கள் செய்யும் பக்தியும், அம்மாதிரி அல்பமான உத்பத்தியை உடையதாயிருந்த போதிலும் காலக்ரமேண வ்ருத்தி யடைந்து கடைசியில் கரை புரண்ட ப்ரீதியுடன் பகவானைச் சேருகின்றது." என்று குறித்திருக்கின்றுர். இந்த வ்ருத்தியை ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளில் எப்படி நேரே காணலாமென்பதைத் தான் இங்கே விஜ்ஞாபிக்க விரும்புவது. "[illegible]" என்று ஆழ்வாருடைய திருக்குமாரரான பட்டர் ஸாதித்துப்

போந்தபடி பகவத் ப்ரேமையே உருக்கொண்ட ஆழ்வார் விஷயத்தில் ஆர வத்தின் பர்வாக்களைக் கல்பிப்பது உசிதமென்றெனினும் ஆழ்வார் அருளிச் செயல்களின் போக்கு எத்தன்மைத்து என்ப தொன்றையே இங்கே எடுத் துப் பேசும்படி.

ப்ரதம ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தின் தொடக்கத்திலேயே:—

" முழுநீர் முகில்வண்ணன் கண்ணன்
விண்ணாட்டவர் மூதுவராம்
தொழு நீரிணையடிக்கே—அன்பு
சூட்டிய சூழ்குழற்கே " [திரு—2]

என்று உபக்ரமித்தவர், சரம ப்ரபந்தமாகிய திருவாய் மொழியின் இறுதி யில் "என்ன வாவறச் சூழ்ந்தாயே" என்று உபஸம்ஹாரம் செய்தருளினர். இங்ஙனம் அன்பில் தொடங்கி அவாவில் முடிகின்றன ; ஆழ்வாருடைய திவ்ய ப்ரபந்தங்கள். இப்படியே ப்ரபந்தங்களின் நடுவில் அப்யஸிக்கப் படு வதும் இந்த பகவத் ப்ரேமையே இவ்வண்ணம் பரிபூர்ணமாக தாத்பர்ய லிங்கங்களெல்லாம் பகவத் விஷயத்தில் ஆழ்வாருக்கு உண்டாகிய வேட்கை யையே காட்டுவதால் தான் " [illegible] " என்று ஆழ்வான் ஆழ்வாரை வ்யவஸ்த்ரித்தது. ஸ்வாமி தேசிகனும், இந்த ப்ரபந்தங்களால் மறை தெளியாத நிலங்களை யெல்லாம் தெறிந்து "[illegible]" என்று பரிசுர மிட்டார். பகவானுடைய ஆனந்த ஸ்வரூபத்தை அநுபவிக்க முற்பட்டச்ருதி "நிவர்த்தந்தே" என்று திரும்பி ஆழ்வாருடைய ஸ்ரீ ஸூக்திகளில் அநுபவ ரஸத்தைக்கண்டு அதில் மூழ்கித்தான் போய் மீண்ட விடாயெல்லாம் தீர்த்துக் கொண்டது போலும்.

இனி ப்ரேமையின் பர்வாக்களைப் பேசுவோம். எம்பெருமான் திரு வடிக்கு அன்பு சூட்டும் முதல் ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில் (1) "கைய பொன் னாழிவெண் சங்கொடும் காண்பா னவாவுவ னான் " என்றும், (2) "இணங்கு நின் னோரையில் லாய் !நின்கண் வேட்கை யெழுவிப்பனே என்றும்." தம்மிடத்தும் பிறரிடத்தும் ஆசையைத் தோன்று வித்தமுதல் தசை, இப்படிச் சிறிதாய் ஆரம்பித்த அவாவ்ருத்தி யடைந்து அடுத்தப்ரபந் தமாகியதிருவாசிரியத்தில் (3)"உலகுபடைத்துண்ட வெந்தை—அறைகழற் சுடர்ப்பூந் தாமரை சூடுதற்கு அவா ஆருயிருருகியுக்க" என்றபடி விம்மிவி ட்டது. மேல் ப்ரபந்தமாகிய பெரியதிருவந்தாதி திருமாலிடத்தில் மாலுற்ற மனத்தோடு ஆரம்பிக்கப்படுவது, " எங்கள் மால் கண்டா இவை " என்

(1) " திருவிருத்தம் 84-வது பாசுரம்
(2) " திருவிருத்தம் 96-வது பாசுரம்
(3) " திருவாசிரியம் 2வது பாசுரம்

பது இரண்டாவது பாசுரம். எட்டாவது பாசுரத்தில் " அன்பே பெருகும் மிக " என்று ஆழ்வாரே பேசும்படி, சிறு துளிகளாய்ச் சேர்ந்து இப்பொழுது பெருவெள்ளமாய் ஆறாய்ப் பெருகும் எம்பெருமானிடத்தன்பு. மாவாய் பிளர்ந்தார் பின்னே திரிந்துழலும் சிந்தனையுடன்(50–வது பாசுரம்)" காண்பான் நங்கண்ணவா மற்றொன்று " (52—பாசுரம்) என்கிறபடி இந்த பகவத் ப்ரேமம் அநந்ய ஸம்பந்தியாய்த் தெளிந்து ப்ரவஹிக்கிறது. இந்த தசையில் கடைசி ப்ரபந்தமான திருவாய்மொழி ஆரம்பிக்கிறபடியால் அதில் அவா வினுடைய மேல் பரிமாணங்களே பேசப் படுகின்றன.

திருவாய் மொழியின் முதலில் 4 பத்துக்களில் 'காதல்' என்னும் சப்தம் அடிக்கடித் தோன்றி அதனுடைய கார்யங்களும் குணங்களும் விவரிக்கப்படுகின்றனவேயன்றி அதனுடைய அளவு இவ்வளவுஎன்று காட்டப்படவில்லை. முதல் முதலில் 5-ம் பத்து 3-ம் திருவாய் மொழி 4ம் பாசுரத்தில "போமர் காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி நங் கண்ணன்" என்று எம்பெருமான் தன் நெஞ்சப் பெருஞ் செய்யுள் செய்த க்ருஷியை வர்ணித்துத் தமது காதலுக்கு ஸமுத்ர ஸாத்ருச்யம் கற்பிக்கிறார். முன்பு ஆறாய்ப் பெருகியது இப்போது கடலாய்க் காண்கிறதென்கிறார். நெஞ்சில் கடல் புகுந்தால் இடைவிடாது அலைமோதாதோ? அந்த அவஸ்தையை அடுத்த தசகத்தில் அநுபவித்து, "பின் நின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால்" (5ம் பத்து–4ம் திரு, 6பாசு) என்று நோவு படுகிறார். கடல் கரையைக் கறைக்குமாப் போலே ஆழ்வார் திருமேனியை இக்காதற்கடல் கரைய உருக்குகின்றது. "அடியேனுடலும் நின்பாலென்பாய நீராயலைந்து கரையை உருக்குகின்ற நெடுமாலே" (5ம்–ப–8-திரு– –பாசு) இப்படி "ஓதமும் நானும் உறங்கா திருந்தேன்" என்றபடி, "கங்குலும் பகலும் கண் துயிலறியாமல் " நிற்கும் தசையையும் எம்பெருமானை வசீகரிக்கப் போதாது கண்டு காதலை இன்னும் வளர்த்துகிறார். "வெள்ளைச் சுரிசங்கில் (7–ப–3–தச) ஆறுவது பாசுரத்தில் "காதல் கடலின் மிகப் பெரிதாகி" அதே தசகம் எட்டாம் பாசுரத்தில் "என் காதலுரைக்கில்-தோழீ!, "மண்டிணி ஞாலமு மேழ் கடலும் நீள் விசும்பும் கழியப் பெரியதால்" என்கிறபடி விரைவில் ப்ரக்ருதி மண்டலம் முழுவதைக் காட்டிலும் பெரிதாக ஓங்கிவிட்டது. ப்ருக்ருதியை அதிக்ரமித்து காலவரைக்கு மட்டில் அகப்படுமோ? "திருமாலின்சீர் இறப்பெதிர் காலம் பருகினு மார்வனோ?" (7-9-9) என்றவாறு முக்காலத்தையும் கடந்து காலாதீதமாய்க் கிடக்கும் ஆழ்வாரது ஆர்வம்.

இப்படிச் சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழாகிய ப்ரக்ருதிக்கு மேல்பட்டு நிற்கிறது ஆழ்வாரது அவா. சூழ்ந்ததனில் பெரியது அதாவது ப்ராக்ருதிக்கு மேற்பட்டது ஜீவாத்ம ஸ்வரூபம். அந்த அளவில்

காதல்வளரவும் ஆழ்வார் எட்டாம் பத்து முதல் திருவாய் மொழியில் "ஆவியே" என்று முதல் பாசுரத்திலும் "என்னுடை ஆருயிரேயோ" என்று 4ம்பாசுரத்திலும் எம்பெருமான் பக்கல் தமக்கேற்பட்ட ஆத்ம துல்யமான அபிநிவேசம் தோற்ற ஆதரவோடு ஸம்போதிக்கிறார். தன் ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் பெரியதொரு காதல்கொண்டது அல்லது எம்பெருமானை வசப்படுத்த இயலாததாகையால் ஆழ்வாருடைய அவா மேலும் அபிவ்ருத்தமாகி, ஒன்பதாம் பத்தில் திருக்காட்கரைக்காண, ஆறும் திருவாய் மொழியில் "உயிரின் பரமன்றிப் பெருமால் வேட்கையும்" என்ற நிலையில் ஆத்மாதீதமாய் நிற்கிறது. இதற்கும் மனமிறங்கி அருளாத ஈசனை நோக்கி இப்படி என்னிலும் பன்மடங்கு உன்னை நேசித்த காலையிலும் தகவிலாது, நீ என்னை இங்ஙனே புறக்கணிப்பது உனக்கழகோ என்று மன மழுங்கி எம்பெருமானை நோக்கி "அகவுயிரகமந்தோறு முள்புக் காவியின் பரமல்ல வேட்கை யந்தோ–! (10-3-2) என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறார். இப்பொழுது பா நன்மலர்ச் சோதியாகிய ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் சூழ்ந்ததனில் பெரிதாயிற்று ஆழ்வாருடைய அவா.

இதற்கும் ப்ரஸாதித் தானில்லை ஸ்ரீய:பதி. இது வரை அவனிலும் சிறியவைகளை அதிக்ரமித்த அவாவைப் பேரவாவென்றெண்ணினோம். இனி அவனையே அதிக்ரமித்தாலல்லது நம் அவா இஷ்ட ஸித்தி பெற வல்லதென்றுணர்ந்து அவனையே வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணில் என்னும்படி அவனைச் சூழ்ந்து மூழ்க்கவல்ல பெரிய தொரு அவாக்கொண்டு நிற்கிறார் ஆழ்வார். அதன் முழு பரிமாணத்தைத் தாம் முக்தராகி அவாவற நின்ற தசையில் பேசுங்கால் சுடர் ஞானவின்பமாகிய பரமாத்ம ஸ்வரூபத்தைச் "சூழ்ந்ததெனில் பெரியது என் அவா" (10-10-10) என்று அளவு காட்டுகிறார். ப்ருஹத்தன்மையைக் காட்டக் கூடிய ப்ரஹ்ம சப்தவாச்யனை ஸர்வேச்வரனையும் தாண்டிச் சென்ற ப்ரணயஸார ரஸநிதி யாகையால் தான் அதை ஆழ்வார் "சூவலீலை-ஜீர" என்று வ்யவஹரித்தது. இப்படி அளவு கடந்து எம்பெருமானையே சூழ்ந்து நின்று மன்றுட எம்பெருமானும் தனது திவ்ய சக்தியாலே தன்னை விஞ்சிய ஆழ்வாருடைய அவா வைத்தான் ஒருபடி விஞ்சி நின்று 'என் அவாவறச் சூழ்ந்தாயே' என்று ஆழ்வாரே அநுஸந்திக்கும்படி செய்து தன்னுடைய ஆர்த்தியும் ஆழ்வார் ஆர்த்தியும் ஒருங்கே அடங்க, அனைத்துலகங்களும் ஆரவாரிக்க, ஆழ்வாருக்கு ப்ரஸாதிக்கிறான. இதுவே ஆழ்வாருடைய "அவா, காளடைவில் பெருகிய நீதி." இதுவே வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியும் வாஸமும்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ மதமும் யாகமும்.

[வித்வான் ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ், மதிராஸ்]

வேதத்தின் பூர்வகாண்டங்களில் விரிவாய் கூறப்பட்ட யாகங்களைப் பற்றி தென்னிந்தியப் பத்ரிகைகள் பலவிதமான அபிப்ராயங்களைக் கூறுகின்றன. மதாசாரத்தோடு கலந்து ஆலோசிக்கும் முறையில் இவ்விஷயத்தைக் கொஞ்சம் கவனிப்போம்.

ஈச்வரன் ஜநங்களை ஸ்ருஷ்டிக்கும்போது யஜ்ஞங்களோடு கூடவே ஸ்ருஷ்டித்தார் என்று பகவத்கீதையில் ஸ்ரீ கீதாசார்யன் வார்த்தை. இவ்விடத்தில் யஜ்ஞம் என்னும் பதத்திற்குப் பொருள், பூர்வகாண்ட விஹிதமான ஜ்யோதிஷ்டோமாதிகள் அல்ல. அப்படியானல் 'ப்ரஜா:' என்ற பதத்திற்கு அர்த்த ஸங்கோசம் பண்ணவேண்டி வரும். ஆகையால் தேவதாராதநம் என்று பொதுவான பொருள் கொள்வதுதான் உசிதம். பகவத்கீதையில் இந்த ச்லோகத்திற்கு எல்லாமதாசார்யர்களுடையவும் பாஷ்யங்களையும் அவைகளின் வ்யாக்யாநங்களையும் பார்த்தால் ப்ரஜைகள் சரீரதாரணத்திற்காகச்செய்யும் ஒவ்வொரு கர்மமும் தேவதாராதநரூபந்தான் என்பது நன்கு விளங்கும். அவரவர்களுடைய ஜாத்யாசாரம், மதாசாரம் இவைகளுக்குத் தக்கபடி தேவதைகளையும் ததாராதநங்களையும் ஸ்வீகரிக்க வேணும் என்பது நமது முன்னோர்களுடைய கட்டளை. இந்த ஆராதநங்கள் வேதங்களிலும் புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் மிகவும் விரிவாய்க் கூறப்பட்டன. அவைகளிலிருந்து நம்முடைய நிலைமைக்கேற்றவாறு கர்த்தவ்யங்களை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. ஜாத்யாசாரங்கள் எல்லாம் மதாசாரங்களுக்கு விரோதமின்றி ஒற்றதாகவே இருக்கும் என்று சொல்வதற்கு இடமில்லை. இதில் ஒரு ரஹஸ்யம் உண்டு. ஜாதி என்பது பிறப்பினுல் வந்தது. மதம் என்பது நமது கொள்கை. அநேக மதங்களில் ஒரு மதத்தை ஏற்றுக் கொள்வதற்கு 'நமது கொள்கையைத் தவிர்த்து வேறு ஆதாரம் கிடையாது. ஆனுல் அந்த மதம் ஜாதிக்கு விரோதம் இல்லாததாய் இருத்தல் வேண்டும். மதங்களில் ஸ்ரீவைஷ்ணவ மதம் என்பது ஒன்று. இந்த மதத்தை எல்லா ஜாதியரும் ஏற்றுக் கொள்ளலாம். மதம் ஸம்பந்தப் பட்டவரையில் எல்லாருக்கும் ஸமத்வம் உண்டு. ஜாதி ப்ரயுக்தமாகவோ மத ப்ரயுக்தமாகவோ செய்யப்படும் க்ரியைகளுக்கும் ஸம்ஸ்காரங்கள் எனப் பெயர். அவைகளில் ப்ராஹ்மணங்களுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்கள் உண்டு. அவைகளில் கர்பாதாநம் முதல் உபநயநம் வரை யுள்ள

ஸம்ஸ்காரங்கள் ஆவச்யகங்களானவை. அதற்குமேல் சொல்லப்பட்டக்ரியை
கள் அவனுடைய மனோபாவங்களுக்கும் யோக்யதைகளுக்கும் தக்கபடியா
கும். ஜாதி தர்மங்களுக்கும் மத தர்மங்களுக்கும் விரோதம் ஏற்படுமாகில்,
நாம் தர்ம ஸங்கடங்களில் அகப்பட்டுக்கொண்டு வருந்த வேண்டிவரும்.
ஆகையால் ஜாதிக்கு விரோதம் இல்லாத மதத்தை ஏற்றுக்கொள்வது உசி
தம். ஸ்ரீ வைஷ்ணவனுக்கு தேவதாந்தர ஸம்பந்தம் பெரும் பாபமாகும்.
ஆனால் ஜாதிக்குரியதர்மங்களில் தேவதாந்தர ஸம்பந்தம் நேருமாகில் அதைக்
கஷ்டப்பட்டு மதத்திற்கு விரோதமில்லாததாய் ஆக்கிக்கொள்ளவேணும்.
ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜாதிப்ராயுக்தமான கர்மத்தில் எவ்வளவு
தூரம் பாத்யம் உண்டு? என்றால்- எந்த க்ரியைகளைச் செய்யாவிட்டால் ப்ர
த்யவாயம் (அதாவது பாபம்) ஸம்பவிக்குமோ அவ்வளவு தூரந்தான். அத
ற்கு மேற்பட்ட தர்மங்களை மதத்திற்கு விரோதமில்லாததா என்பதை விசா
ரித்துச் செய்யவேண்டும். இதுதான் பூர்வாசார்யர்களுடைய அபிப்ராயம்.

இப்படி இருக்க ஸ்ரீ வைஷ்ணவமதத்தைச் சார்ந்த ப்ராஹ்மணருக்கு
ஸாக்ஷாத் பசுபந்த மடங்கிய யாகம் எப்படி கர்த்தவ்யங்களில் சேரும்? என்
பது விசாரிக்க வேண்டிய விஷயமாகத்தான் இருக்கிறது. இவன் ஆநுகூல்ய
ஸங்கல்பத்திலும் ப்ராதிகூல்ய வர்ஜநத்திலும் ப்ரதிஜ்ஞை செய்தவன். விசி
ஷ்டாத்வைத மதத்திற்கு அடிப்படை, ஸர்வ சேதநாசேதநங்களையும் சரீர
மாகக் கொண்டவன் பரமாத்மா என்ற கொள்கை. ஜாதிப்ரயுக்தங்களான
கார்யங்களில் அவர்ஜநீயங்களான பஞ்ச ஸூநாதி தோஷங்களுக்கு பஞ்ச
மஹாயஜ்ஞாதிகள் ப்ராயச்சித்தங்கள். அப்படி இந்த யாகங்கள் அவர்ஜநீ
யங்களா? யாகம் செய்யாவிட்டால் ப்ராயச்சித்தமுண்டா? மஹாபாரதம்
மோக்ஷதர்மம் நாராயணீயத்தில் சொல்லப்பட்ட சில உபாக்யானங்களையும்
தத்வோபதேசங்களையும் பார்த்தால் இவ்விஷயம் நன்கு விளங்கும்.

வேத ப்ராமாண்யத்தை ஸ்தாபிப்பதையே பரம ப்ரயோஜனமாகக்கொ
ண்ட மீமாம்ஸா சாஸ்த்ரம் வேதவிஹிதங்களான கர்மங்களை அநுஷ்டித்
தால் தோஷமில்லை என்று சொல்லுகிறதே ஒழிய செய்யாவிட்டால் ப்ரத்ய
வாயம் உண்டு என்று கூட உபதேசிக்கிறதா? இல்லையே. மத விஷயத்தில்
மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஒப்புக்கொள்ளுகிறோமா? வேத ப்ராமாண்யத்
திற்காக அது உபயோகப்படுகிறது. ஸாங்க்யம் கூட சிற்சில அம்சங்களில்
உபயோகப்படுகிறது. ப்ருஹ்ம ஸூத்ரத்திலும் 'யாகம் அவச்யம் செய்ய
வேணும், என்று விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மஹா பாரதத்
தினுடைய உபாக்யானத்தில், ஸ்ரீ வைஷ்ணவ மதநிஷ்டியாக விலக்ஷணாதிகாரி
யான உபரிசரவஸு என்பவர் யாகம் செய்யும்போது, பசு வதம் நடைபெற
வில்லை என்றும், பிஷ்ட பசுவைக்கொண்டுதான் வபாஹோமம் நடந்ததென்

றும், ஸ்ரீமந் நாராயணனைத் தவிர்த்து வேறு தேவதைகளுக்கு ஹவிர்பாகம் கிடைக்கவில்லை என்றும், அதனால் தேவதைகளுக்குக் கோபம் உண்டான தென்றும், அதற்கு ரிஷிகள் அனைவரும் கூடி உபரிசரவஸு செய்தது ஸரி தான் என்று ஸித்தாந்தம் செய்ததாகவும் காணப்படுகிறது. இதைப் பார்க்கிறபோது, விலக்ஷணாதிகாரிகள் இந்த ஹிம்ஸாகர்பமாயும் தேவதாந்தரஸம்பந்த கர்பமுமான யாகத்தை எப்படிச் செய்யலாம்' என்ற ப்ரச்நம் பலப்படுகிறது. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாராதி க்ரந்தங்களில் பரமைகாந்திகள் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களை விவரிக்கும்போது யாகத்தையும் சேர்த்ததாகத் தெரியவில்லை. நாதமுநி முதலான ஆசார்யர்களும் யாகம் செய்ததாக ஐதிஹ்யம் காணோம். ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவ பரமைகாந்திகளுக்கு யாகம் எப்படி ப்ராப்தமாகும் என்பது அடியேனைப் போன்ற அநேகருக்கு ஜநித்த ஸந்தேஹம். இதில் ஸூக்ஷ்மாம்சங்கள் இருக்குமானால் அவைகளை வித்வான்கள், தீபிகையின் மூலமாய் ப்ரகாசிப்பிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ விபீஷண சரணாகதி.

[காரக்குறிச்சி தட்டை ராமஸ்வாமி ஐயங்கார், (B. A. Hons)]

ஸர்வ சரண்யனுடைய வசீகரணத்தில் ஸர்வாதிகாரமாயும் ஸுலபமாயுமுள்ள சரணாகதி, இதர உபாயங்களின் அபேக்ஷையன்றிக்கே ஸாதந பூதமென்று "முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே" என்ற ச்வேதாச்வதர ச்ருதியில் ச்ரவிக்கப்பட்டது. "ஶரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோகவிவர்ஜிதா:" என்று ஸ்ம்ருதியும் இந்த அர்த்தத்தை அநுவாதம் செய்தது. "ந்யாஸ இத்யாஹுர் மநீஷிண:" என்கிற தைத்தரீயாநுவாகத்தில் சரணாகதி ரூபமான ந்யாஸமானது ஸத்யம், தர்மம், சாந்தம் முதலான பன்னிரெண்டு தபஸ்ஸுக்களில் ச்ரேஷ்டமானது. என்று "தாநி வா ஏதாந்யவராணி தபாம்ஸி ந்யாஸ ஏவாத்யரேசயத்" என்கிற வாக்யத்தால் சொல்லப்பட்டது. அசப்யுபகத ப்ராப்தத்தையும் போக்கி ப்ரபந்நனுடைய அந்திம ஸ்ம்ருதியை ஈச்வராதீநமாகச் செய்வதால் கர்மஜ்ஞான பக்தியோகங்களைக் காட்டிலும் சிறந்தது. என்றும்:—

"[illegible] ।
[illegible] ॥"

என்பதில் ப்ரபந்நனுடைய அஸாதாரணமான நிலைமையும் ப்ரசம்ஸிக்கப்பட்டது. இப்படி ச்ருதிகளில் வேத்யமான பாகங்களை உபப்ருஹ்மணம் செய்கிற இதிஹாஸ புராணங்களிலும் இந்த சரணாகதியை ப்ரதிபாதித்தும் விதிக்கிறதுமான ஸ்ரீ பகவத் வாக்யங்கள் அநேகமிருக்கின்றன. அந்த வாக்யங்களிலும்:—

"[illegible]" என்றும்,

"[illegible]" என்றும்,

"[illegible]
[illegible]"

என்கிறபடி தக்ஷிண ஸமுத்ரத்தின் வடதிருக்கரையில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனால் ஸ்ரீ விபீஷணாழ்வாரை உத்தேசித்து திருவாய் மலர்ந்தருளியதும், அர்ஜுநனுடைய தேர்தட்டில் அவனைக் குறித்து திருவாய் மலர்ந்தருளியதுமான ஸ்ரீ ஸூக்திகளோ சேதநர்களான நமக்கு ப்ரதாநமாக உபஜீவ்யங்கள். இந்த இரண்டு அவஸரங்களுக்குள் மிதஜ்ஞரான நமக்கு ஸ்ரீ விபீஷண சரணாகதியின் வ்ருத்தாந்தமே மிகவும் ஸுலபமாக மநஸ்ஸில் தரிக்கக்கூடும். இதரமானது கூடமான அபிப்ராயங்களுடன் கூடியதாலும், சரம ரஹஸ்யார்த்தமான படியாலும், விசேஷஜ்ஞரே நன்றாய் அறியக்கூடும். மேலும், ஸ்ரீ ராகவன், தன்னுடைய சரணாகத த்ராண வ்ரதத்தை வாநர ஸைந்யத்தின் மத்தியில் விசதமாக திருவாய் மலர்ந்தருளி அநேக ப்ரமாணங்களாலும், உபாக்யாநங்களாலும், அந்த தர்மத்தை உபந்யஸித்து தானும் அந்த ஸமயத்தில் அநுஷ்டித்தருளினார். இந்த அவஸரத்தில் மதுமய பணிதிகளுக்கு மார்கதர்சியான ஸ்ரீ வால்மீகி பகவான், சாஸ்த்ரஜ்ஞர் க்ருதஜ்ஞராம்படி சரண்யன் ருபம், சரணாகதியின் நிலைமை, சரணாகதியின் ஸ்வரூபம்; அதன் அங்கங்கள், அதன் விரோதி, அதன் பலன் ஆக அர்த்த பஞ்சகத்தையும் ப்ரதிபாதித்து ரஸிகர் விஸ்மயிக்கும்படி லௌகிக ஸம்விதாநத்தையும் செய்திருக்கிறார்.

ஸுக்ரீவ மஹாராஜாவால் பரிபாலிக்கப்பட்ட வாநர வாஹிநியானது தக்ஷிண ஸமுத்ரத்தின் உத்தர தீரத்தையடைந்து ஸ்ரீராம நியோகத்தால் யதார்ஹமான ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. மைந்தன், த்விவிதன், முதலிய வாநர ச்ரேஷ்டர்கள் நாலுதிக்குக்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டு ஸேனையை ரக்ஷியா நின்றார்கள். ஏற்கனவே சிறிய திருவடி லங்கையில் ப்ரவேசித்து ராக்ஷஸர்களை ஹிம்ஸித்து மாளிகைகளில் நெருப்பிட்டது

முதல் ராக்ஷஸர்கள் ஸ்வஸ்தர்களாக இருக்கக் கூடவில்லை. மேலும் ஸமுத்ரக் கரையில் வாநர ஸைந்யத்தின் ஸந்நிவேசத்தை அறிந்த ராவணன், '[illegible]' என்கிறபடி ப்ரஹஸ்த ப்ரமுகர்களான மந்த்ரிகளை அழைத்து ஸ்ரீராகவ விஜயத்தில் ஆலோசனை செய்தான். அவர்களும் "[illegible]" என்று ராஜாவை பஹுவாக ஸ்துதித்து ஜாநகியை தன் வசத்தில் வைத்துக்கொள்ளும்படி நிச்சயித்தார்கள். அவர்கள் மத்தியில் '[illegible]' என்று ஸ்வஜாதிஸ்வபாவரஹிதனும் அஸமாந விநய விஜ்ஞாந பூஷணனுமான ஸ்ரீவிபீஷணாழ்வார் தன் ப்ராதாவான ராவணனுக்கு ஹிதைஷியாய் 'ஸுலபா: புருஷா: ராஜந் ஸததம் ப்ரியவாதிந:" என்று துர்மந்த்ரிகளை நிராகரித்து ஸ்ரீ ராகவனுடைய யதார்த்தமான உத்கர்ஷத்தை விவரமாகப் பேசி "ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று கர்த்தவ்யத்தின் ஸௌகர்யத்தையும் "வஸேம ராஜந் இஹ வீதஶோகா:" என்று அதின் பலத்தையும், "யாவந்ந க்ருஹ்ணாதி ஶிராம்ஸி பாணா:" என்று அகரணே ப்ரத்யவாயத்தையும் விஸ்தாரமாக விஜ்ஞாபநம் செய்தார். ஆச்ரய தோஷத்தால் ஸர்வாச்வாஸகரமான தென்னல் ஜ்வரகாலத்துக்கு அஸஹ்யமாமாப்போல் இந்த பரமஹிதம் ராவணனுக்கு பருஷமாயிற்று. ஸ்ரீ விபீஷணனுடைய பாசுரங்களுக்கடி ஜ்ஞாதி ஸ்வபாவமென்றும் அநார்யனுகையால் பரித்யாஜ்யன் என்று நிச்சயித்த ராவணன்:—

'அந்யஸ்த்வேவம்விதம் ப்ரூயாத் வாக்யமேதந்நிஶாசர |
அஸ்மிந் முஹூர்த்தே ந பவேத் த்வாம் து திக் குலபாம்ஸநம் ||"

என்று அவரை பருஷித்து நிராகரித்து விட்டான். இது கண்ட விபீஷணாழ்வார் ராவணன் அதிக்ரமணத்தைக் கண்டபோதே அவனைக் கைவிட ப்ராப்தமாக யிருக்க, அவ்வளவுகாலம் லங்கையில் வர்த்தித்ததற்கு சோகித்தார். தனக்கு ஸ்வரூபஹாநி பிறந்ததாக நினைத்தார். ஸ்ரீராம கோஷ்டியை தன்னிலமாக உணர்ந்தார். தம்பிசொல்லு ஜீவியாத ராவண கோஷ்டியை விட்டு 'யதோ ராமஸ்ததோ லக்ஷ்மண:' என்று தம்பியிட்ட வழக்கான ஸ்ரீராம கோஷ்டியை அடையத் தீர்மானித்தார். ஹுதவஹ க்ருஹீதமான க்ருஹத்திலிருந்து குதித்துக்கொண்டு கிளம்புவாரைப்போல் லங்கையிலிருந்து தனது நாலுமந்த்ரிகளுடன் ஸ்ரீராகவன் எழுந்தருளி யிருந்த தேசத்தை உத்தேசித்து ஆகாசத்தில் கிளம்பிவிட்டார்.

இந்த ஸமயத்தில் ஓர் சங்கை ஏற்படக்கூடும். ராவணன் பருஷித்து நிராகரித்தாலும் அவனைக் கைவிடுவது விபீஷணனுக்குக் கூடுமோ?

"𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌚𑍈𑌵 𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃"

என்று பித்ரு ஸமானனான ராவணனுடைய பருஷமானது ஸஹ்யமல்லவா?

"𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑍃𑌸𑌮𑌃"

என்று பேசுகிற விபீஷணனுக்கு இந்த ஸமாந்யந்யாயம் தெரியாது என்று சொல்ல இடமில்லை. அறிந்தும் ப்ரதிகூலாசரணம் செய்தால் "𑌵𑌿𑌷𑌵𑍃𑌕𑍍𑌷𑍋𑌽𑌪𑌿 𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑍍𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂" என்ற ந்யாயம் ப்ரவ்ருத்தியாதோ? மேலும், ராவணனை த்யஜித்தாலும் ஸ்ரீராகவ பக்ஷத்தை ஆதரிக்கவேணுமோ? கநிஷ்டன் ஜ்யேஷ்டனுக்கு ந்யாயம் சொல்லக்கூடுமோ? என்று ஆபாதரஸிகர்கள் ஸந்தேஹிக்கக் கூடும். இந்த ஸந்தேஹங்களெல்லாம் உசிதமான ஹேதுக்களால் பரிஹரணீயங்களே. விபீஷணனே ராவணனை த்யஜித்ததற்கு '𑌨 𑌚 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌾𑌪𑍋 𑌹𑌿𑌤𑌃' என்பதைக் காரணமாகச் சொல்லிவிட்டார்.

"𑌅𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌚𑍍𑌚 𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌨𑌰𑌃 𑌪𑌤𑌨𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿"

என்கிற தர்மசாஸ்த்ரத்தை அநுஸரித்து ராவணன் பதிதனுகையாலும் '𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍇𑌣 𑌪𑌤𑌤𑌿 𑌪𑌤𑌿𑌤𑍇𑌨 𑌸𑌹𑌾𑌚𑌰𑌨𑍍' என்கிற ந்யாயப்படி அவனுடன் வஸிப்பவனும் பதிதனாகக் கூடுமாகையால் விபீஷணன் ராவணனை த்யஜித்தது கூடும். அத்துடனில்லாமலும்:—

"𑌗𑍁𑌰𑍋𑌰𑌪𑍍𑌯𑌵𑌲𑌿𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌜𑌾𑌨𑌤𑌃 ।
𑌉𑌤𑍍𑌪𑌥𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑍋 𑌦𑌣𑍍𑌡𑍋 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥"

என்கிறபடி அவனுடைய நிக்ரஹத்தில் ஸ்ரீராகவனுக்கு உதவி செய்ததும் உசிதம். மேலும், விபீஷணன் ராகவனை ஓர் யுத்த வீரனை ஓர் மனுஷ்ய ராஜாவாக நினைக்கவில்லை. "𑌪𑌰𑌮𑌾𑌪𑌦𑍍𑌗𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌮𑌮 𑌮𑌤𑌿𑌃 𑌸𑌦𑌾" என்று ப்ரஹ்மாவிடம் வரத்தை யாசித்து, அதை அடைந்தவனுகையால் ஸ்ரீராகவனை வேதப்ரதிபாத்யனை பரமபுருஷனை ஸ்ரீமந் நாராயணனே லோக ரக்ஷணார்த்தமாக இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்திருப்பதாக நினைத்தார்.

"𑌨𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑌿𑌃" என்கிறபடி விஷ்ணுவே பூபதி ரூபமாக வந்திருக்கிறபடியாலும் ராவணனுக்கு ஜநஸ்தாந வ்ருத்தாந்தத்தைச் சொன்ன அகம்பநனின்:—

"ஸ தாந் ப்ரஹஸ்தப்ரமுகாந் ஸர்வாநுவாசாப்ரியம் ॥ ஸம்ஹ்ருத்ய வா வாநரமுக்யகாரு விக்ருதேந ஸமாயயௌ ॥ ஸர்வஸ்ய வாந்தரிக்ஷஸ்த்ரஸ்ய ஸ்ஷ்டம் வாநரேஷு ரஜா: ॥"

என்கிற வாக்யங்களிலிருந்தும், "ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்த்திதம் ... வா" என்று ராகவனை ப்ரசம்ஸித்த திருவடியின் பசுரங்களிலிருந்தும் அப்படி அறியக்கூடுமென்று சொல்லத் தட்டில்லை. அப்படியே ஜாநகியையும் லோகமாதாவாக நினைத்தார். இந்த ஆத்மவஸ்து அந்த மிதுனசேஷமென்றுணர்ந்தார். தன்னிலமான ஸ்ரீராமகோஷ்டி ப்ராப்யா ஸர்நமாயிருப்பதை அறிந்து அவிழ்த்து விட்ட கன்று தாய் முலையை நோக்கி ஓடுமாப்போல் அதை அடையக் கிளம்பினார். இவருக்குத் தன் ஆத்மாத்மீய பாரஸமர்பணம் தான் முக்கிய நோக்கமே தவிர இவர் ஸ்ரீராகவனை ஆச்ரயித்து லங்கா ராஜ்யத்தை அடைய விரும்பினாரில்லை.

"த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத: ।
பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச ॥"

என்று, ப்ராப்யபாபங்களில் ருசியைக் கழித்து "பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச" என்று ஸர்வத்தையும் ஸ்ரீராகவார்பணம் செய்தார்.

"கடியார் காளைய ரைவர்பு குந்து காவல் செய்தவக் காவலைப்
பிழைத்துக் குடிப்போந் துன்னடிக் கீழ்வந்து புகுந்தேன்-கூறை
சோறிவை தந்தெனக் கருளி அடியேனைப் பணி யாண்டுகொ
ளெந்தாய்"

என்று திருமங்கை யாழ்வாரின் திருவுள்ளமே இவர் உட்கருத்து. அப்படியாகில் லங்கா ராஜ்யத்தை இவர் அங்கீகரிக்கலாமோ வென்றால், மோக்ஷார்த்திகளுக்கு ஆநுஷங்கிகமாக இதர போகங்களையும் அளிக்கின்ற ஸ்ரீராகவ நியோகத்தால் லங்காராஜ்யலக்ஷ்மியானது இவரை யடைய விரும்பினால் "ஸ்வயமேவ ... ந ச ஶ்ரியம் ஶ்ரியா ... [illegible] ॥" என்கிறபடி இவரால் நிஷேதிக்கக் கூடுமோ! மேலும் பெருமான் தன்னுடைய சோதிக் கெழுந்தருளும்போது உத்தர கோஸலத்திலுள்ள ஜங்கம ஸ்தாவர விபாகமற ஸர்வ ஜந்துக்களுக்கும் ஸம்பவித்த பாக்யத்தை தனக்குமபேக்ஷித்த ஸ்ரீ விபீஷணாழ்வானைக் குறித்து "[illegible] ... [illegible]

ஶாஸநெ॥'' என்று லங்காராஜ்யத்தில் நியமித்த ஸ்ரீராகவ வாக்யத்தால் இது ஸித்தம். அப்படியே ஹிதம் சொல்லுவதிலும் ஜ்யேஷ்ட கநிஷ்ட விபாகமில்லை. அறிந்தவன் அறியான் என்றே உண்டு. வயலுக்கு பருவம் சொல்லுகிற அந்த்யனுடைய வார்த்தை ஜாதி ப்ரயுக்த தோஷத்தால் அநாதரணீய மாகாது. ''ஸுவஶ்யஂ ச ப்ரியா வாச்யஂ யத்யப்யஹிதமாத்மநः'' என்பதை உணர்ந்த விபீஷணன் இந்த ஹிதத்தை '[illegible] [illegible] [illegible] [illegible]॥'' என்றும், '[illegible] [illegible] [illegible]॥'' என்று ஸவிநயமாக விஜ்ஞாபநம் பண்ணச் செய்தேயும், அப்ரியமானல் அந்த வார்த்தையை உபேக்ஷித்து விடலாம் அத்துடனில்லாமலும், ராஜமர்யாதைக்கு விரோதமாக '[illegible] [illegible]' என்று உச்சிஷ்ட போஜிகளான ப்ரஹஸ்தாதிகள் முன்னிலையில் அவரை நிராகரித்தது அஸஹ்யமல்லவோ! தன்னுடனில்லாமலும் பாலனான இந்த்ரஜித்தை யிட்டும் ''[illegible]'' என்றும் '[illegible] [illegible] [illegible] [illegible]॥'' என்றும் அவமானித்தது க்லேச காமல்லவோ! ஆகவே, ஸ்ரீ விபீஷணாழ்வாருக்கு ராவண த்யாகபூர்வக ஸ்ரீ ராகவாச்ரயமானது ஸ்வரூபாநுரூபமென்றே பர்யவஸித்தது.

ஸ்ரீ விபீஷணன் ராவண பவநத்தை விட்டு ஆகாசஸ்தானபோதே ''[illegible] ஶ்ரீமாந்'' என்கிறபடி, ராமஸம்பந்தத்தால் வந்த ஐச்வர்யம் குடிகொண்டது. இந்த ஐச்வர்யத்தோடேயே திருமங்கையாழ்வாரும் ''.........செல்வ விபீடணற்கு..........நல்லானை.........'' என்று கூறினர். பூமியில் வாநர ஸைந்யத்தின் ரக்ஷையில் நியமிக்கப்பட்ட முதலிகள் ஸ்ரீராம விஷயத்தில் பரிவாலே தாங்கள் அதிகரியாத ககந ரக்ஷணத்தில் ஜாகரூகாளாய் ஆகாசத்தில் விபீஷணனைப் பார்த்தார்கள். மஹாராஜரும் தன் க்ரீவாசோபை ப்ரகாசிக்கும்படி தலையை நிமிர்ந்து பார்த்தார். ''[illegible]'' என்று கையில் ஒரு கதையை மட்டும் வைத்திருந்த போதிலும் முதலிகளுக்கு ''[illegible] [illegible]'' என்று விபீஷணன் ஸமஸ்த ஆயுதங்களை தரித்திருப்பதாகக் காணப்பட்டார். அதற்கடி '[illegible] [illegible] [illegible]'' என்கிறபடி பெருமாளையுங்கூட தவியும்படியான ப்ரஹ்மாஸ்த்ரமான ச

ணாகதியை இவர் தரித்திருந்தார். முதலிகள் தங்களை நலிய வருவதாகவே நினைத்தார்கள். விபீஷணனை வதம் செய்வதற்கு மஹாராஜரின் ஆதேசத்தை அபேக்ஷித்தார்கள். இவர்களின் ஸம்வாதம் ஸ்ரீ விபீஷணாழ்வார் செவியிற்பட்டது. லங்காராஜ்யத்தில் முடிசூடி இருப்பதைக் காட்டிலும் தன்னிலமான ஸ்ரீராம கோஷ்டியில் அங்கீகரிக்கப் படாது, கொலை செய்யப் படினும் ச்லாக்யம் என்று நினைத்தபடியால் அவர்களின் வார்த்தையை அநாதரித்தார். ஸமுத்ரத்தைத் தாண்டி வடகரை அடைந்தார்.

ஸ்ரீ:

தேவாலயங்களும் அவைகளின் தூய்மையும்.

[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ தட்டை.
ஸ்ரீ. உ. ப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

இம் மண்ணுலகில் பிறப்பு வாய்ந்தவர்களும் நற்கதியை அடைவதில் விருப்பமுள்ளவர்களுமான மனிதர்களனைவர்களாலும் தத்வம், ஹிதம், புருஷார்த்தம், இவைகள் மூன்றும் அவச்யம் அறியத் தக்கவைகள். இவற்றுள் தத்வமானது, ப்ரமாணங்களால் நிலைபெற்ற வஸ்து. அந்த வஸ்துவானது ஸ்ரீதேவிக்கு நாதனும் ஹேய விரோதியும் கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக இருப்பவரும் ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணமாகவும் எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமாகவும் இருப்பவரும் எல்லாமறிந்தவரும் ஸத்ய ஸங்கல்ப முள்ளவரும் கருணாநிதியும் ஒப்புயர்வு இல்லாதவரும் பர ப்ரஹ்ம மென்றும் பரம புருஷனென்றும் வ்யவஹரிக்கப் படுகிறவருமான ஸ்ரீமந் நாராயணனே. ஹிதமாவது, பக்தி, ப்ரபத்தி இவ்விரண்டே. புருஷார்த்தமாவது, கர்ம பந்தமற்று தேச விசேஷத்தை யடைந்து பரம புருஷனை அணுகி அவனுடைய சரணாரவிந்தத்தை தன் முடியினால் தாங்கி குணாஷ்டகாவிர்பாவத்துடனும் ஸ்வஸ்வரூபாவிர்பாவத்துடனும் தேசகாலாவஸ்தைகளால் ஸங்கோசமில்லாதபடி அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவத்துடனும் அந்த அநுபவ பரீவாஹமாக இருக்கிற பகவச் சரணாரவிந்த பரிசரண ஸ்வரூபமான ஸாயுஜ்யமூர்த்தியே. இவைகள் உபநிஷத்துக்களின் ஸாராம்சங்கள். ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் இதிஹாஸங்களாலும் புராணங்களாலும் பரத்வமென்று சொல்லப்படுகிற அந்த பரம புருஷன்.

“க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே”, “யோऽஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்”, “ஸஹஸ்ரஸ்தூணே விமிதே த்ருட உக்ரே, யத்ர தேவானா-

க்ஷயிதேவ ஸூர்ய:" | "யத்ர கேவலதாம் ப்ராப்ய யத்ர மஹர்ஷயோ ந சோசதி" "காலம் ஸ பசதே தத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபு:" | "திவ்யம் ஸ்தாநமஜரம் சாப்ரமேயம்", "தேஷாம் து தத் பரமம் ஸ்தாநம் யத்வை பச்யந்தி ஸூரய:"

என்று ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் ப்ரதி பாதிக்கப் பட்டிருப்பதும் ஆநந்தமயமாயும் ஷாட்குண்ய பூர்ணமாயும் பஞ்சோபநிஷந்மயமாயும் பஞ்சசக்தி மயமாயும் நித்ய விபூதி பரமபதம் முதலிய சப்தங்களால் வ்யவஹரிக்கப் படுவதாயும் குணத்ரயாதீதமாயும் சுத்த ஸத்வமயமாயு மிருப்பதும் காலத்தினுல் பரிபாகத்தை அடைவிப்பிக்க முடியாததும் ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டி இருப்பதுமான ஸ்ரீ வைகுண்டத்தில் திவ்யாஸ்தாந மண்டபத்தில் ஸ்ரீ-பூமி-நீளை என்கிற திவ்ய மஹிஷிகளுடனும் ஸஹஸ்ர பண மண்டலத்துடனும் கூடின திருவநந்தாழ்வானென்கிற திவ்ய யோக பர்யங்கத்தில் வீற்றிருப்பவராய், நித்யமாயும் நிர்தோஷமாயும் ஒப்புயர்வு இல்லாததுமான திவ்ய பூஷணங்களுடனும் திவ்யாயுதங்களுடனும் கூடின திவ்ய விக்ரஹத்துடன் கூடினவராய் ஸ்வாபாவிகமாயும் எல்லையில்லாத மேன்மை உடன் கூடியதுமான ஜ்ஞாநம் பலம் ஐச்வர்யம் வீர்யம் சக்தி தேஜஸ் முதலிய கல்யாண குணங்களாகிற ரத்நங்களுக்குக் கடல் போன்றவராய் நித்யர்களாலும் முக்தர்களாலும் எப்பொழுதும் அநுபவிக்கப் படுகிறவராய் தன் ஸங்கல்பத்தாலே உலக வ்யாபாரங்களனைத்தையும் நிர்வஹிப்பவராய் வேறொருத்தருக்கும் ஈடுதியற்றதான ஸாம்ராஜ்யத்துடன் ப்ரகாசிக்கிறார் என்பது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ப்ரக்ரியை. அந்த பரம புருஷன் "ஆ ஸமந்தாத் காசதே ப்ரகாசதே" எங்கும் ப்ரகாசிக்கிறான் என்கிற பொருளுடன் கூடின ஆகாச சப்தத்திற்கு வாச்யமாக இருப்பதும் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியும் விபுவும் தேசகால வஸ்துக்களால் அளவிட முடியாததும் காலத்தினுல் பரிமாணத்தை அடைவிப்பிக்க முடியாததும் காரணகளேபரங்களில்லாததும் நிரவயவமாகவும் நீரூபமாகவு மிருப்பதும் "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" என்கிற ச்ருதி வசநத்தின்படி விபுவான ஆகாசம் முதலிய வஸ்துக்களைத் தவிர்த்த மற்ற பெருத்த எல்லா வஸ்துக்களையும் விடப் பெரியதாயும் அணுவான ஜீவாத்ம ஸ்வரூபத்தை விட அணுவாயும் அதாவது அதி ஸூக்ஷ்மமான எந்த வஸ்துக்களிலும் தடையின்றி ப்ரவேசிப்பதுமான திவ்யாத்ம ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்து விளங்குகிறான். "ப்ருஹத்த்வாத் ப்ரும்ஹணத்வாச்ச ப்ரஹ்மேதி பரிகீயதே" என்று ஸ்வரூபத்தால் மிகப் பெரிதாகவிருப்பதாலும் ஸம்ஸார தசையில் கர்ம பந்தத்தால் அழுந்திருந்த ஜ்ஞாநத்தை கர்மபந்தத்

தை அறுத்து விகஸிக்கச் செய்து முக்தியைக் கொடுக்கும் ஸ்வபாவமுள்ளவனாக இருப்பதாலும் ப்ரஹ்மமென்று கூறப் படுகிறான். இந்த பரம புருஷன் திவ்யாத்ம ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்து அத்விதீயனாக இருந்த போதிலும் பரத்வ ஸௌலப்ய ஸௌசீல்ய குணங்களடியாக திவ்யமங்கள விக்ரஹ விசேஷத்தோடு கூடினவனாக இருந்து கொண்டு பரம் வ்யூஹம் விபவம் ஹார்தம் அர்சை என்று ஐந்துவகைப் பட்டிருக்கிறான். இவற்றுள் பர ஸ்வரூபமாவது:—

"வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: |
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ || வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: | உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: || தேவைர் வைகுண்டநாயைச் ச நித்யைர் முக்தைஸ் ச ஸேவித: | ஸேவ்ய: ஸ்ரீபூமிநீளாப்யாம் ப்ரத்யக்ஷேணைவ ஸர்வதா ||

என்கிற வசநங்களின்படி ஆத்யந்த மில்லாததும் அபரிமிதமான ஆநந்தத்தினுல் அழகியதும் ஸ்வயம் ப்ரகாசமாக இருப்பதும் 'பரமவ்யோமா' என்று வ்யவஹரிக்கப் படுவதுமான ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீபூமிநீளாதேவிகளுடன் கூடியதும் நித்யர்களாலும் முக்தர்களாலும் ஸேவிக்கப் படுவதும் ஜ்ஞாநாதி ஷாட்குண்யங்களால் நிறைவுள்ளதுமான பரவாஸுதேவஸ்வரூபம். இந்த பரவாஸுதேவமூர்த்தியானது ஜ்ஞாநாத்மகம். இந்த பரஸ்வரூபத்தினிடத்திலிருக்கிற ஆறு குணங்களுக்கும் உபயோகம் யாதெனில்:—

"யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:"

என்று தானே எல்லாவற்றையும் எல்லாவிதத்தாலும் எப்பொழுதும் ஒரே ஸமயத்தில் நேராகக் காணுதல், அப்படியே நேரில் காணப்பட்ட எல்லாவற்றையும் தரித்தல், தரியாநின்றவனாகவே, நியமநம் செய்தல், தரித்துக் கொண்டும் நியமநம் செய்து கொண்டும் தளர்ச்சியடையாமலிருத்தல், அடிதங்களை கடிப்பித்தல், அதிலும் ஒருத்தருடைய உதவியை எதிர்பாராதவராக இருப்பதுடன் ஒருவராலும் அவமதிக்கப்படாமலிருத்தல். மேலும் எல்லோரையும் இவரே கீழ்ப்படுத்துதல் இவைகள். பகவத்குணங்களில் சிலது பாத்வோபயோகிகள். சிலது ஸௌலப்யோபயோகிகள். பரத்வம், ஸௌலப்யம் இரண்டும், எல்லோரும் பகவானை ஆச்ரயிக்கும் விஷயத்தில் ப்ரயோஜநங்கள். ஈச்வரனுடைய ஸ்வரூபமானது ஸத்யத்வம் முதலிய ஸ்வரூபநிரூபக தர்மங்களாய் ஸத்யமாய் ஜ்ஞாநமாய் அநந்தமாய் ஆநந்தமாயிருக்கும். மற்றுமுள்ள குணங்களும் திவ்ய மங்கள விக்ரஹாதிகளுமெல்லாம் ஈச்வரனுக்கு நிரூபிதஸ்வரூப விசேஷணங்களாக இருக்கும்.

வ்யூஹமென்பது பரரூபத்திலிருந்து உண்டான வேறு ரூபம். அது வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன், என நான்கு விதமாக இருக்கிறது. இந்த வ்யூஹரூபங்களில் முதன்மை வாய்ந்திருக்கிற வாஸுதேவ ரூபமானது குணம் முதலியவைகளால் பரரூபத்தைக் காட்டிலும் கொஞ்சமேனும் வேறுபாடுள்ளதல்ல. இக்காரணத்தாலேயே வ்யூஹங்கள் மூன்றென்று சாஸ்த்ரங்கள் சொல்லும். இந்த வ்யூஹ மூர்த்திகளில் முதன்மை வாய்ந்த வாஸுதேவ மூர்த்தியானது ஆறு குணங்களால் நிறைந்தது. மற்ற மூன்று மூர்த்திகளுள் இரண்டிரண்டு குணங்களோடு கூடியவைகள்.

“𑌷𑌾𑌡𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑌰 𑌇𑌤𑌿 𑌸 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑌭𑍋-
𑌗𑍍𑌯𑍋 𑌬𑌲𑌾𑌢𑍍𑌯𑌾𑌤𑍍 𑌬𑍋𑌧𑌾𑌤𑍍 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌹𑌰𑌸𑌿 𑌵𑌿𑌤𑌨𑍁𑌷𑍇
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌧𑌰𑍍𑌮𑍌 𑌨𑌯𑌸𑌿 𑌚 𑌭𑌗-
𑌵𑌨𑍍 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑍋𑌽𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑌾𑌸𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌗𑌮𑌯𑌸𑌿 𑌚
𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑍂𑌹𑍍𑌯 𑌰𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌰𑌾𑌜 ॥”

என்கிற இந்த ச்லோகத்தால் ஆசார்யர்கள் இந்த விஷயத்தை ஸங்க்ரஹித்தார்கள்.

கேசவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள்.

விபவமானது பத்மநாபன் முதலிய முப்பத்தேசொச்சம் ரூபங்கள்.

“𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋 𑌵𑌰𑌾𑌹𑌶𑍍𑌚 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌶𑍍𑌚 𑌵𑌾𑌮𑌨𑌃 ।
𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑌶𑍍𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌕𑌲𑍍𑌕𑍀 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥”

என்று ப்ரஸித்தமாக தசாவதாரங்களென்று வழங்கப்படுகிற பத்து மூர்த்திகளும், கீழ் சொன்ன முப்பத்தே சொச்சம் விபவ மூர்த்திகளில் உள்ளடங்கினவைகளே. இவற்றில் அவாந்தர பேதங்கள் அநந்தங்கள். ஹார்த்த ரூபமாவது—எல்லோருடைய ஹ்ருதயங்களிலே ஸூக்ஷ்ம மாயிருப்பதொரு ரூப விசேஷத்தைக் கொண்டு நிற்கிற அந்தர்யாம்யவதாரம். இது ஸர்வாந்தர்யாமியான திவ்யாத்ம ஸ்வரூபத்தை அநுஸந்திக்க இழிவார்க்குத் துறையாகயிருக்கும்.

“𑌅𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌯𑍋𑌗𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌤𑍍𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌹𑍃𑌦𑌯𑍇𑌶𑌯𑍇 ॥”

என்கிற வசநத்தின்படி இந்த ஹார்த்தரூபமானது யோகிகளுக்கே த்யாநம் செய்வதற்குத் தகுதியுள்ளது.

அர்சையாவது—பரவ்யூஹாதி ரூபங்கள் ஆச்ரிதர்களுக்காக அவரவர்கள் அபேக்ஷித்த வண்ணமாக:—

“𑌬𑌿𑌂𑌬𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌬𑌿𑌂𑌬𑍇 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ।”

என்கிறபடியே சிலை, தாரு, ஸுதை, ஸ்வர்ணம், வெள்ளி, தாம்ரம், பஞ்ச லோஹங்கள், இவைகளால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற ப்ரதிமைகளில் மந்த்ரத்தினால் ஆவாஹநம் செய்யப்பட்டு அந்த பிம்பங்களில் ஸாந்நித்யம் செய்கிற பகவத்ரூபம்.

‘[illegible]’

என்கிற திவ்ய ஸூக்தியின்படி எம்பெருமானுக்கு இந்த அர்சாரூபமானது திவ்யாத்ம ஸ்வரூபத்தைவிட அதிக அபிமதமானது. ஸம்ஸார ஸாகரத்திலமிழ்ந்து கரை காணமுடியாமல் தத்தளிக்கிற ஸமஸ்த ப்ராணிகளுக்கும் த்யாநம், அர்சநம், ப்ரதக்ஷிணம், ப்ரணமம், ஸ்தோத்ரம் பரிசரணம், தர்சநம், முதலியவைகளால் ஈச்வரனை வழிபட்டு அவனுடைய கருணைக்கு பாத்ரமாய் கர்மயோக, ஞாநயோக, பக்தியோகங்களால் அவனை ஆராதித்தும், உபாஸித்தும், வினைகளை அறுத்து முக்தி அடைவதற்கு ஸாதநமாக இருப்பது இந்த அர்சா ரூபமே. அறிவிலிகளாகவும், பரிமிதஜ்ஞாந முள்ளவர்களாகவும், தேகபலம், மநோபலம், தபோபலம், யோகபலம், மந்த்ரபலம், ப்ரஹ்மவர்சஸபலம், ஜ்ஞாநபலம், ப்ரஹ்மசர்யபலம், வைராக்யபலம், வித்யாபலம், இவைகளை முற்றிலும் இழந்திருப்பவர்களுமான இக்கலியுக மனிதர்களுக்கு இந்த அர்சாரூபியாயிருக்கிற எம்பெருமானே பரமகதியாக விளங்குகிறார்.

“𑌅𑌗𑍍𑌨𑍌 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌤𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌹𑌰𑌿𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌾𑌮𑍍 ॥”

என்கிற வசநத்தின் படிக்கு இயற்கையாகவே அப்ரபுத்தர்களால் நிறைந்திருக்கிற இவ்வுலகம் நற்கதியடைவதற்கு அர்சையே கதி. பர்வ்யூஹம் முதலிய ஐந்து பகவதவதாரங்களில் பரஸ்வரூபமானது அப்ராக்ருத லோகத்தில் நித்யர்களுக்கும் முக்தர்களுக்குமே போக்யமாக இருக்கிறது. வ்யூஹ மூர்த்திகளோ ஆமோதம் ப்ரமோதம், ஸம்மோதம், முதலிய விஷ்ணு லோகங்களில் வஸிக்கிற சில விஷ்ணு பக்தர்களுக்கே உபஜீவ்யங்கள் விபவ மூர்த்திகளோ அந்தந்த மூர்த்திகள் ப்ராதுர்பவித்த காலத்திலிருந்தவர்களுக்கே போக்யங்கள். ஹார்தமூர்த்தியோ யோகிகளுக்கு மாத்திரம் த்ருச்யமாக இருக்கிறது. ஐந்தாவதான அர்சையோவென்றால் த்யாநிப்பவர்களின் சித்தத்திற்கு ஆலம்பநமாக த்யாநத்தை நன்கு நிலைபெறச் செய்து த்யாதாக்களின் கல்மஷங்களைப் போக்கி உயர்ந்த கதியை அடையச் செய்கிறது. மூர்த்தியின் தர்சநத்தில் விருப்பமுள்ளவர்களுக்கு:—

“[illegible]
[illegible]”

என்கிற வசநத்தின்படி தன்னுடைய ஸேவையினால் மஹாபாதகங்கள் முதலிய பாபங்களைப் போக்கி அவர்களை நற்கதியை அடைச் செய்கிறது. நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களெல்லோரும் இந்த அர்சாவதாரத்திலேயே ஈடுபட்டு இவனுடைய ஸௌலப்யத்தையும் பரத்வத்தையும் ஆயிரக்கணக்கான பாசுரங்களால் கொண்டாடிப் போந்தார்கள். பசுப்ராயங்களான பாமரர்கள் கூட இந்த அர்சாவதார எம்பெருமானை நாடி ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்தும் துதித்தும் தர்சித்தும் நற்கதியை அடைகிறார்கள். இவ்வண்ணம் ஸர்வோபஜீவ்யமாக இருக்கிற இந்த அர்சாவிக்ரஹம் அமர்ந்திருக்குமிடம் கோவில்கள். ‘கோ’ என்றால் ஜகத்ரக்ஷகனான எம்பெருமான். அவனுக்கு ‘இல்’, வாஸஸ்தாநம், என்று அர்த்தம். அது அதிபரிசுத்தமான இடம்.

“[illegible]
[illegible]”,

என்கிற வசநப்படி மந்த்ரத்தினால் விக்ரஹங்களில் மஹான்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு எம்பெருமான் ஸாந்நித்யம் செய்கிறான்:—

“[illegible]
[illegible]”

என்று ஆராதகர்களுடைய தபோபலத்தாலும், ஆராதநத்தின் ஆதிக்யத்தாலும் பிம்பத்தின் ஸௌஷ்டவத்தாலும் அர்சா விக்ரஹங்களில் பகவான் ஸாந்நித்யம் செய்கிறான். விக்ரஹங்களில் பகவத் ஸாந்நித்யத்துக்குக் காரணம் ஆஸ்திகர்களின் மந்த்ர ப்ரதிஷ்டையே:—

“[illegible]
[illegible]”

என்கிற வசந ப்ரகாரம் எல்லா சாஸ்த்ராநுஷ்டாநங்களுக்கும் ஆசாரம் முதன்மை வாய்ந்ததென்று ஏற்படுகிறது. ஆசாரத்தினின்று தர்மம் உண்டாகிறது. தர்மத்துக்கு நியந்தா அச்யுதன். இதனால் தர்மநியந்தாவான பரமாத்மாவின் ஸாந்நித்யம் தர்மத்தைச் சார்ந்திருக்கிறது. ஆசாரமொன்றுமில்லாவிடில் உள்ளபடி சாஸ்த்ராநுஷ்டாநமோ பகவத் ஸாந்நித்யமோ ஒன்றும் கிடையாதென்று ஏற்படுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ புத்தகங்கோட்டகம் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்.

பேங்களூர் வாஸிகளான சில ஸ்ரீவைஷ்ணவ ப்ரபுக்களுடைய பிரார்த்தனையின் பேரில் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் புத்தம்கோட்டகம். ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி பேங்களூரிலிருக்கும் கோட்டை ஸ்ரீநிவாஸ பெருமான் ஸந்நிதியில் பகவத்கீதையை வைகாசி௴ 31௳ முதல் ஆனி௴ 10௳ வரையில் உபந்யாஸம் செய்தார். ஸாயங்காலம் 7-மணிமுதல் சுமார் 9-மணி வரையில் உபந்யாஸம் நடைபெற்றது. அக்காலங்களில் வித்யா பூஷணம் கொக்கி ஹள்ளி. ஸ்ரீ. உ. வெ. வித்வான் திருமலாசாரியர், முதலான அநேகம் பண்டிதர்களும் அநேகம் லௌகிகப் பிரபுக்களும் தினந்தோறும் வந்திருந்தார்கள். ஷை வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி உபந்யாஸத்தின் ஆரம்பத்தில், ஜந்ம ஸித்தங்களான ஜாதிபேதங்களும் அவற்றின் தர்ம பேதங்களும் ஆதரணீயங்கள் என்னும் விஷயமும் ஜாதி ஸாங்கர்யம் நரகஹேதுவென்கிற விஷயமும், வர்ணாச்ரமங்களை விட்டு விட்டவர்களுக்கு பரலோகத்தில் க்ஷேமமில்லாததோடு நரகமே வருமென்னும் விஷயமும் நாம் சாஸ்த்ரத்தையே அநுஸரித்து நடக்கவேண்டுமே யல்லது காலாநுகுணமாக சாஸ்த்ரங்களை மாற்றுவிக்கக் கூடாதென்பதும் ஸ்ரீ பகவத் கீதையிலேயே சொல்லப்பட்டிருப்பதை அந்தந்த ச்லோகங்களை யெடுத்துக்காட்டி விஸ்தாரமாகச் சொல்லி தத்காலத்திய நாகரிகர்கள் சொல்வதெல்லாம் கீதாசாரியனுடைய வார்த்தைகளுக்கு ஸர்வதா விருத்த மென்பதை யாவருமறியும்படி தெளிவாக உபந்யஸித்து விட்டு, தத்காலத்தில் இவ்வுலகத்தில் பிரஸித்தங்களான மற்றை மதங்களில் சொல்லப்படும் தத்வம் ஹிதம் புருஷார்த்தங்கள் எல்லாம் ப்ராயேண கீதாசாரியனுடைய உபதேச வாக்யங்களுக்கு பொருந்தாமல் விருக்கிறபடியையும் விசிஷ்டாத்வைத மதத்தில் சொல்லப்படும் தத்வஹித புருஷார்த்தங்கள் ஸ்ரீ கீதாசாரியனுடைய உபதேச வாக்யங்களுக்கு மிகவும் அநுகுணமாக விருக்கிறபடியையும் அந்தந்த கீதையின் ச்லோகங்களில் வ்யக்தமாக எடுத்துக்காட்டி ஸ்ரீ கீதாசாரியனுக்கு விசிஷ்டாத்வைத மதந்தான் ஸம்மதமென்பதை விஸ்தாரமாக உபந்யஸித்ததோடு ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தின்பொருளழகின் பெருமையையும் ஆங்காங்கு யாவருமறியும்படி விஸ்தாரமாக உபந்யஸித்தார். அக்காலத்தில் அங்கு வந்திருந்த வித்வான்களும் தனவான்களும் செவிக்கினிய செஞ்சொல்லான அவ்வழகமர்ந்த உபந்யாஸங்களை யெல்லாங்கேட்டு மெய்ம்மறந்து பக்தி பரவசர்களாய் ஷை ஸ்வாமியை மிகவுங்கொண்டாடினதுடன் தத்காலத்திய நாகரீகர்களுடைய விபரீத உபதேசங்களினால் நாளுக்குநாள் குறைந்துவரும் நமது ஸநாதந தர்மத்தில் சிரத்தையை விருத்திசெய்ய இம்மாதிரியான வித்வான்களுடைய உபந்யாஸங்களை ஆங்காங்கு அடிக்கடி நடைபெறும்படி நமது மடாதிபதிகள் பிரயத்தப்படவேணுமென்று நாம் பிரார்த்திக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

நாட்டேரி வெங்கடரங்காசாரியர்.

பெங்களூர், 14-7-34

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஸ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

அத்வைதமும் பக்தியும்.

அத்வைத ஸித்தாந்தத்தைப் பற்றி, ஒரு பாச்சாத்ய வித்வான் பின் வருமாறு எழுதி இருக்கிறார். 'அத்வைதிகளின் கொள்கைகள் ப்ரகாரம் ஸம்ஸார பந்தமென்பது அஜ்ஞாநத்தையே காரணமாக உடையதாகையால் அந்த பந்தம் நீங்க வேண்டு மென்றால், அந்த அஜ்ஞாநமும் நீங்க வேண்டும். அஜ்ஞாநம் நீங்குவது ஜ்ஞாந ஸாத்யமே ஆதலால், ஜ்ஞாநத்தைப் பெறுவதே மோக்ஷத்தை அடைவதற்கு முக்ய ஸாதநமாகின்றது. ஜந்மம் மரணம் முதலியவை யெல்லாம் அஜ்ஞாந கார்யங்களே; ஆகையால் அவைகளை விலக்குவதில் அநுராக ரூபமான பக்திக்கு எவ்வித அவகாசமுமில்லை. நிற்க, அத்வைதிகள், பரமாத்மாவுக்கு எவ்வித குணமும் இல்லையென்றும் அது ஜ்ஞாதாவுமன்று ஜ்ஞேயமுமன்றென்றும் அந்தப் பரமாத்மாவைத் தவிர்த்து வேறு ஒரு வஸ்துவும் இல்லையென்றும் ஒத்துக் கொள்ளுகிறபடியால், இரண்டு சேதந வஸ்துக்களுக்குப் பரஸ்பரம் உண்டாகக்கூடிய பக்திக்கு அவர்களுடைய மதத்தில் கொஞ்சமேனும் அவகாசமில்லை.'

[According to the Advaita philosophy the Way of Deliverance is the Way of Knowledge, for only so can the bondage of ignorance, producing the illusion of reality, be removed. All action works itself out with impersonal justice and there is no room for anything else Thus *Bhakti*, in any really valuable sense, is impossible, both because the Supreme Being is without attributes, unknowable, unapproachable, unapproaching and because it is without a second. *Bhakti* involves a mutual relationship of love and trust, a relationship which to be valuable must be between a real human soul and the One with whom that soul has finally to deal."]

இம்மாதிரி அத்வைத மதம் பக்தியைத் தூர விலக்கி விடுகின்றது என்னும் வார்த்தையை நாம் அந்த மதத்தைச் சரிவர அறியாதவர்களின் வார்த்தையென்று நினைத்திருந்தோம். மற்றை மதஸ்தர்கள் பக்தியைக் கொண்டாடுவது போல அத்வைத மதஸ்தர்கள் அதைக் கொண்டாடாவிடினும், அந்த மதத்திலும் அதற்கு ஒரு ப்ரதாந ஸ்தாநமுண்டு என்பதே இதுவரையில் நமது நினைவாக இருந்து வந்தது. இப்பொழுது ஒரு சிறந்த அத்வைத வித்வானால் ஸமீப காலத்தில் செய்யப்பட்டுள்ள சில உபந்யாஸங்களிலிருந்து, நாம் இது வரையில் அத்வைத மதத்தைப் பற்றி க்ரஹித்து வந்தது தவறான க்ரஹணமென்றும் கீழ்க் கூறப்பட்டுள்ள பாச்சாத்யரால் வெளியிடப்பட்டிருக்கும் அபிப்ராயமே அதன் வஸ்து ஸ்திதியை உணர்த்துகிறதென்றும் நினைக்க இடம் உண்டாகின்றது.

இவ்வர்ஷத்தில் நடந்த அத்வைத ஸபையில் மன்னார்குடி சாஸ்த்ர ரத்நாகரம் ப்ரஹ்ம ஸ்ரீ பஜ்ஞஸ்வாமி சாஸ்த்ரிகள் ஸ்ரீ மது ஸூதந ஸரஸ்வதிகளைப் பற்றி ஒரு உபந்யாஸம் செய்ததில் பின்வருமாறு சில உக்திகளை அவர் சொல்லி இருப்பதாக நாம் அறிகின்றோம். அவையாவன:—

(1) "ஸ்ரீ ஸரஸ்வதி ஸ்வாமிகள் சிறந்த அத்வைதியாக இருந்தபோதிலும் க்ருஷ்ண பக்தியில் அவர் மிகவும் ஈடுபட்டவராகவே இருந்தார்."

(2) "இவர் மஹத்தான ஆத்ம ஜ்ஞாநம் பெற்றிருப்பினும் இவர் ஸ்ரீ க்ருஷ்ண பக்தியில் ஈடுபட்டவரே."

(3) "ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தைப் போல ஸ்ரீமத் பகவத் கீதைக்கும் பக்தியிலேயே தாத்பர்யம் என்பதாக இவருடைய அபிப்ராயம் இருக்கிறபடியாலேயே, இவர் ஸ்ரீ பகவத் பாதர்களுடைய அபிப்ராயத்துக்கு விபரீதமாக "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் ச்லோகத்தில் பகவத் கீதைக்கு இந்தப் பக்தியிலேயே தாத்பர்யமென்று சொல்லி இருக்கிறார்."

(4) "பக்தியிலுள்ள அபிநிவேசத்தால் இவர் பகவத் கீதைக்குப் பக்தியிலேயே தாத்பர்யமென்று விவரித்த போதிலும், இவர் அத்வைதாநுபவி என்பதில் ஸந்தேஹமில்லை."

இந்த உக்திகள் நமது புத்தியைச் சலிப்பிக்கின்றன. இவைகளைப் பார்த்தால், பக்தி செய்வது அத்வைதியாக இருப்பதற்கு விருத்தம் என்னும் ஒரு சங்கை உண்டாகின்றது. அப்படி அது விருத்தமாக இருக்கும் பக்ஷத்தில் அத்வைத மதத்தின் மஹிமை கொஞ்சம் குறைவுபடுமன்றோ?

ஆனால், பக்தியில் ஸாதந பக்தியென்றும் ஸாத்ய பக்தியென்றும் இரண்டு விதமுண்டு. மோக்ஷமாகிற பலத்தைப் பெறுவதற்கு உபாயமாக நாம் கைப்பற்றும் பக்தி ஸாதந பக்தியாகும்; பரம புருஷார்த்தமென்றே அநந்ய ப்ரயோஜநமாகச் செய்யப்படும் பக்தி ஸாத்ய பக்தியாகும். இவைகளுள் முதலிற் கூறப்பட்டுள்ள ஸாதந பக்தியை அத்வைதம் நிராகரிக்க வில்லையென்றும், பரமபுருஷார்த்தமாகக் கைக்கொள்ளப்படும் ஸாத்ய பக்திமாத்ரம் அத்வைதத்திற்கு விருத்த மென்று சொல்லப்படுகின்றதென்றும் ஒரு ஸமாதானம் சொல்லக்கூடும். அப்பொழுது ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதி போன்ற சிலர் சிறந்த அத்வைதிகள் ஸாத்ய பக்தியை எவ்விதம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்காமலே நிற்கின்றது. ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதிகளைப் போன்ற மஹான்கள் ஸாத்ய பக்தியைக் கைப்பற்றிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய க்ரந்தங்களிலிருந்து நன்றாகத் தெரிய வருகின்றது. ஸ்ரீ ஸரஸ்வதிகளின் "பக்திரஸாயநம்" என்னும் க்ரந்தத்தைப் பார்த்தால், அவர்கள், தர்மம் முதலான நான்கு புருஷார்த்தங்கள்போல பக்தியும் ஒரு ஸ்வதந்த்ர புருஷார்த்த மென்றும், ஜ்ஞாநமானது எப்படி அக்நிஹோத்ரம் முதலான கர்மங்களால் ஸாத்யமோ அப்படியே பக்தியும் அவைகளால் ஸாத்யமாகின்றதென்றும், ப்ருஹ்ம வித்யைக்கு அவித்யா நிவ்ருத்தி ப்ரயோஜநமாயிருப்பதுபோல ஸாத்ய பக்திக்குப் பகவானிடம் பரமாநந்த மயமான பரமப்ரேமை ப்ரயோஜநமாகின்றதென்றும், ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் முதலியவைகளை எவர் அநுஷ்டிக்கிறாரோ அவரே ப்ரஹ்ம வித்யைக்கு அதிகாரி ஆகிறாரென்பது போல பாகவத தர்மங்களை அநுஷ்டிப்பவர்களே ஸாத்ய பக்தியை அடைகிறார்களென்றும், அத்வைதாத்மாநுபவம் வந்தவர்களுக்கும் இந்த ஸாத்ய பக்தி புருஷார்த்தமாகிறதென்றும், மஹத்ஸங்கம் முதலியவைகள் ஸாத்ய பக்திக்கு ஸாதநங்களாகின்றனவென்றும் விரிவாகக் கூறி இருக்கிறார். இவர் அத்வைத ஸித்தி முதலிய பலச் சிறந்த அத்வைத க்ரந்தங்களின் கர்த்தாவாக இருக்கிறபடியால் இவர் அத்வைத மதத்திற்கு விருத்தமாக நிரூபணங்களை ஒருகாலும் செய்யமாட்டாரன்றோ? இதன் தத்வத்தை அபிஜ்ஞர்கள் தெரிவிப்பார்களோ?

* * * * *

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை

வேதாந்த விசாரம் செய்யும்
ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

(மதிராஸ் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாரால் ப்ரசுரிக்கப்பட்டது.)

1933—34

[ஆங்கிரஸ — பவ]

ஸம்புடம்—22

ஸம்பாதகர்:— வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

சென்னை.

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1934.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

(அகராதி)

(1933—1934)

22-வது ஸம்புடம்

		பக்கம்
1.	அஸூயையும் அதனால் வரும் தீமையும்	259
2.	ஆதி காவ்யமும் மேல் நாட்டாரும்	305
3.	ஆதாரா தேயங்கள்	79
4.	இரண்டு வித பக்தி	22
5.	இந்தியா சட்டஸபைக்கு ஓர் மனு	179
6.	கடிதங்கள்	117, 149, 216, 279, 317
7.	சக்ரவர்த்தி அரசியல்	102
8.	தர்மசாஸ்த்ரம்	47, 99, 136, 231
9.	திவ்ய ஸூரி சரிதம்	1—41
10.	தீண்டாமை	131, 159
11.	பஞ்சஸ்தவம் (ஸ்ரீஸ்துதி)	1—20
	டை (வைகுண்டஸ்தவம்)	21—24
12.	பத்ரிகையின் வரலாறு	1
13.	பாகவத ஸம்ப்ரதாயம்	42
14.	புஸ்தக விமர்சம்:— க்ரந்தவிமர்சம்:—	
	அதிகாரஸங்க்ரஹம்	315
	ஆசார்யசேகரம்	316
	திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை	147
	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம்	316
	ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி	116
15.	மனமும் மனவிலக்கமும்	310
16.	மீமாம்ஸா ஸங்க்ரஹம்	340
17.	வேதார்த்த ஸங்க்ரஹம்	305—392
18.	வைதிக மதத்தின் மஹிமை	20
19.	ஸ்ரீ விசிஷ்டாத்வைத-ஸித்தாந்தம்	4, 35, 66, 105, 139 209, 272, 299
20.	ஸ்ரீமத் ராமாயணமும் வேதமும்	11
21.	ஸ்ரீபகவத் ராமாநுஜனுடைய ஔதார்யம்	16
22.	ஸ்ரீராமாவதார மஹிமை	75
23.	ஸ்ரீராமமூர்த்தியின் குணவிசேஷங்கள்	110

24. ஸ்ரீதேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம் 246
25. ஸ்ரீஸீதாராம தாம்பத்யம் 204
26. ஸ்ரீவைஷ்ணவ விபூதி 284
27. ஸ்ரீவைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள் 336
28. ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வைபவம் 347
29. ஸர்வமத விஞவிடை 29, 59, 91, 123, 164, 200, 223, 265, 327
30. ஸநாதநதர்ம ஸம்ரக்ஷணம் 330
31. ஸம்பாதகரின் குறிப்புகள்:—
1. அர்ச்சையின் தூஷணம் 52
2. ஆதாராதேயபாவம் 88
3. எ. எஸ். வாடியாவின் கீதாதாத்பர்யம் 292
4. ஒரு விண்ணப்பம் 27
5. கங்கா தீர்த்தத்தின் மஹிமை 324
6. சாஸ்த்ரங்களும் உலகத்தின் தன்மையும் 24
7. சீர்திருத்தக் காரர்களுக்கு ஓர் விஜ்ஞாபநம் 86
8. சுத்த கணிதவாக்ய பஞ்சாங்கம் 298
9. டாக்டர் ரங்காசாரியர் 353
10. தர்மராஜ்யம் 221
11. தீபிகையின் அபிவிருத்தி 258
12. துக்கங்களும் அவைகளின் ஹேதுவாகும் பாபங்களும் 321
13. நமது தீபிகை 326
14. நாம் செய்ய வேண்டும் கார்யம் 84
15. புருஷ ஸூக்தம் 155
16. பூகம்பம் 222
17. ப்ரஜாவ்ருத்தியைத் தடுத்தல் 218
18. மஹாத்மா காந்தியும் ஹரிஜனங்களும் 254
19. ராஜாங்கத்தாரும் மதவிஷயசட்டங்களும் 351
20. ஸ்ரீ வேதாந்த தீபிகை 57, 89
21. ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸபை, கும்பகோணம் 121
22. ஸ்ரீ வேதாந்த தீபிகையும் வைதிக மததீபிகையும் 181
23. ஸ்ரீதேசிக தூஷண சரிஹாரம் 122, 157
24. ஸ்ரீ உ. வே வலய பேட்டைஸ்வாமி 297

தத்³தே³வதே³வமஹிஷீவிப்⁴ரமவக்ஷஸா
ஶ்ரியம் கிமபி வஸ்து மமாவிரஸ்து ‖ ௫

யத் தத்த்வமக்ஷரமசக்ஷுஷ்யமநாமரூபம்
அப்ரமேயமநவத்³யமநந்தமத்³விதீயம் |

யதும், ஶ்ரியம் - லக்ஷ்மியை தரித்துக் கொண்டிருப்பதுமான, கிமபி தத் வஸ்து - இப்படிப்பட்டதென்று வர்ணிக்கமுடியாததான அந்த வஸ்துவானது, மம - எனக்கு, ஆவிரஸ்து - ப்ரகாசிக்கவேண்டும்.

பீதாம்ப³ரம் — ச்ருதியில், 'தஸ்ய மஹாரஜதம் வாஸ:' [அவனுடைய வஸ்த்ரம் மஹாரஜதம் என்னும் ஒரு வர்ண விசேஷத்தால் நனைக்கப்பட்டிருக்கின்றது) என்று சொல்லப்பட்டிருக்கின்றது அந்த வர்ணமே பீதம் என்னும் சப்தத்தால் சொல்லப் படுகிறது.

வாத்ஸல்யத்ருஷ்டிவர்ஷம் — 'கருணாவருணாத்ருஷ்டிஸ்நிக்³த⁴தீக்ஷணம் மாமவலோகய' [தயையால் நிறைந்துள்ள கண்களால் தீக்ஷணை என்னைக் கடாக்ஷிக்கவேண்டும்] என்று 'ஜிதந்தே' ஸ்தோத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆஜாநுலம்பிபு⁴ஜம் — 'பீநவ்ருத்தாயதபு⁴ஜ:' என்பது ஜிதந்தே வசநம்.

ஆயதகர்ணபாஶம் — 'ஸமுந்நதாம்ஸவிலம்பிசாருகர்ணபாஶ:' [உயர்ந்த தோள்கள் அளவு தொங்கிக் கொண்டிருக்கும் அழகான காதுகளை உடைய] என்பது ஸ்ரீ பாஷ்யகாருடைய திவ்ய ஸூக்தி.

6. திவ்ய மங்கள விக்ரஹத்தை வர்ணித்து விட்டு, திவ்ய ஸ்வரூபத்தை வர்ணிக்கிறார்:

[ப-ரை] யத் - எந்த (ஸ்வரூபமானது), தத்த்வம் - ஸத்யமோ, அக்ஷரம் - அநந்தமோ, அசக்ஷுஷ்யம் - மாம்ஸக்கண்களால் க்ரஹிக்கத்தகாததோ, அநாமரூபம் - நாம ரூபமற்றதோ, அப்ரமேயம் - அநுமாநம் முதலிய ப்ரமாணங்களுக்கு எட்டாததோ, அநவத்³யம் - குறைவற்ற கல்யாண குணங்களுடன் கூடியதோ, அநந்தம் - பரிச்சேதிக்கக்கூடாத ரூபம் குணம் விபூதிகள் இவைகளை உடையதோ, அத்³விதீயம் - தனக்கு ஸமமானவும் தன்னை விட உயர்ந்ததுமான வேறு வஸ்து ஒன்றுமற்றதோ, ஸர்வஜக³த் ஶாஸநம் - சேதநாசேதநங்கள் அடங்கியுள்ள ஸகல ஜகத்தையும் நியமித்துக் கொண்டிருக்கிறதோ, அணோரணீய: - அணுவுக்கும் அணுவோ, உதா³ரம் - பெரியதுக்கும் பெரியதோ, தத் - அந்த, வைஷ்ணவம் வபு: - விஷ்ணுவின் ஸ்வரூபத்தை, உதா³ஹராம: - ஸ்தோத்ரம் செய்கிறோம்.

[25-வது பக்கம் 1-வது வரியில் "அவ்யாஹதிவ்யயாரச" என்பது அசுத்தம்; "அவ்யாஹதிவ்யயாச:" என்பது சுத்தம்.]

[illegible] ஜகதோ யதணோரணீய:
[illegible] பதம் [illegible] ॥

அசக்ஷுஷ்யம்— இந்தக் கண்களால் க்ரஹிக்கத்தகாத. ''ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா'' (கண்ணுக்கும் வாக்குக்கும் எட்டாத) என்பது ச்ருதிவாக்யம். பகவானுடைய ரூபம் அப்ராக்ருதமாகையால் ப்ராக்ருதங்களான இந்த்ரியங்களால் க்ரஹிக்கத் தகாதது என்பது தாத்பர்யம்.

அக்ராஹ்யம்—கீழில், தோஷ துஷ்டங்களான இந்த்ரியங்களுக்கு அகோசர மென்று 'அசக்ஷுஷ்யம்' என்னும் சப்தத்தால் விவரித்தாகி விட்டதானபடியால், இந்த 'அக்ராஹ்யம்' என்னும் சப்தத்திற்கு 'சாஸ்த்ரம் தவிர்த்து மற்றை ஒரு ப்ரமாணத்தாலும் க்ரஹிக்கப்படக் கூடாத' என்று அர்த்தம் கொள்ளவேண்டும். பகவத் ஸ்வரூபமோ அவனுடைய ரூபமோ இவைகளுள் ஒன்றும் ப்ரத்யக்ஷத்திற்காவது அநுமாநத்திற்காவது எட்டமாட்டாது என்பதே நமது ஸித்தாந்தம். ஏனென்றால் அவையெல்லாம் இவ்விடத்தில் தென்படும் சேதநாசேதந வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணங்கள்.

அநிர்தேஶ்யம்—ஒருவித அளவுக்கும் உட்படாத ரூபம் முதலியவற்றை உடைத்தா யிருக்கிறபடியால், அந்தப் பகவத் ஸ்வரூபம் 'இப்படிப் போன்றது' என்று சொல்லக்கூடிய தன்று. அன்றிக்கே, இவ்விடத்தில் நம்மால் க்ரஹிக்கப்படும் பொருள்கள் போலவிராமல் அது அத்யந்தம் விலக்ஷணமாக இருக்கிறபடியால், 'அது இப்படிப்பட்டதன்று' என்று சொல்லப்படுகின்றது.

அத்விதீயம்—இதற்கு 'இரண்டாவது பொருளற்ற' என்பது தாத்பர்யமாக மாட்டாது. 'நமது அரசன் அத்விதீயன்' என்று நாம் சொல்லும் பொழுது, அவன் 'ஒருவனே உண்டு, மற்ற ஒருவரும் இல்லை' என்று நாம் அர்த்தம் கொள்ளுகிறோமோ? ஆகையால், இதற்கு 'அவன் போன்ற மற்ற ஒருவரும் இல்லை' என்பதே பொருள். அவனைப்போன்றவரே இல்லை யென்றால், அவனுக்கு மேற்பட்டவரும் இல்லை என்பது தானே ஸித்திக்கும்.

அணோரணீய:—அணுவுக்கும் அணுவென்பதால் 'ஸகல வஸ்துக்களின் உள்ளிலும் ப்ரவேசிக்கக்கூடிய சக்தியை உடையது அந்த ஸ்வரூபம்' என்பது சொல்லப்படுகின்றது. ஜீவன் அணு; அது ஸகல அசேதநவஸ்துக்களிலும் ப்ரவேசிக்கக்கூடியது. அந்த ஜீவன்களின் உள்ளிலும் பகவத் ஸ்வரூபம் ப்ரவேசித்து நிற்கிறபடியால் அதை அணுவுக்கும் அணுவென்று சொல்லுகிறார்கள்.

உதாரம்—அணுவுக்கும் அணுவென்பதுடன் இது படிக்கப்பட்டிருக்கிறபடியால், இதற்கு 'மஹத்தைக் காட்டிலும் மஹத்' என்னும் அர்த்தம் கொள்ளப்படுகின்றது. அதாவது- அந்த ஸ்வரூபம் எவ்விடத்திலும் பரவி நிற்கக்கூடிய சக்தியுடன் கூடியது என்று சொன்னதாயிற்று.

பதம்—இதற்கு இவ்விடத்தில் 'ஸ்வரூபம்' என்பதில் நோக்கு. பத்யத இதி பதம் [எது ப்ராப்யமோ அது பதம்] என்பது அதன் வ்யுத்பத்தி.

த்ரய்யந்தமூர்த்நி [illegible]
யத்ர [illegible] ஸஹஸ்ரக்ஷ [illegible]
தத்ர [illegible] வாசோ கோசரதாமேதி [illegible]
[illegible] ததீயமாஶ்ரிதவத்ஸலத்வம் ॥ 7
[illegible]
[illegible] ॥

7. ஸ்வரூபத்தை வர்ணித்தவுடன் அதன் பெருமையையும் தமது சிறுமையையும் பார்த்து, 'அப்படிப்பட்ட பெருமையுடன் கூடிய வஸ்துவைத் தாம் தமது சிறிய வாக்கைக் கொண்டு ஸ்தோத்ரம் செய்யத்துணிந்தோமே!' என்று ஆச்சர்யப்படுகிறார். அப்படித் தாம் துணிந்து செய்யப் புகும் ஸ்தோத்ரத்தை, அதன் சிறுமையைச் சற்றேனும் பாராமல் பகவான் அங்கீகரிக்கிறான் என்பதைக் கண்டு அவனுடைய ஆச்ரித வாத்ஸல்யத்தைப் புகழ்கிறார்.

[ப—ரை] யத் [illegible]—யாதொரு விஷ்ணு ஸம்பந்தியான தேஜஸ்ஸானது, த்ரய்யந்த [illegible]—வேதாந்தங்களிலும், [illegible], பூர்வாசார்யர்களுடைய, [illegible]—சிரஸ்ஸுக்களிலும், ஸஹஸ்ர [illegible]—மிகவும், [illegible]—ப்ரகாசிக்கின்றதோ, தத்—அந்தத் தேஜஸ்ஸானது, மாத்ருசாம்—என் போன்றவர்களுடைய, வாசாம்—வாக்குக்களுக்கும், கோசரதாமேதி—விஷயமாகின்றது. [illegible]—இப்படி அது விஷயமாவது, ததீயம்—அந்த விஷ்ணுவுக்கு இயற்கையாயுள்ள, ஆச்ரிதவத்ஸலத்வம்—ஆச்ரித வாத்ஸல்யமென்றே, [illegible]—நினைக்கிறேன்.

த்ரய்யந்தமூர்த்நி—வேதத்தின் சிரஸ்ஸில்; அதாவது, உபநிஷத்துக்களில். உபநிஷத்துக்களாலேயே எட்ட முடியாத வஸ்து, என்னுடைய சொற்களுக்கு கோசரமாகின்றதே என்பது, ஆச்சர்யம்.

வத்ஸலத்வம் — ஒருவனிடத்தில் இருக்கும் தோஷங்களை அநாதரிக்குமளவு அவன்மீது செய்யப்படும் ஸ்நேஹ விசேஷத்தை வாத்ஸல்ய மென்று சொல்வார்கள்.

கோசரதாமேதி—[கோசரத்தை அடைகின்றது]. இது 'கோசரத்வமேதி' [கோசரமாக இருக்கும் தன்மையை அடைகின்றது] என்னும் அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆச்ரிதவத்ஸலத்வம்—(ஆச்ரித வாத்ஸல்யம்). 'ஆச்ரித வாத்ஸல்யத்தின் [illegible]' என்னும் அர்த்தத்தை உடையது.

8. பகவானுடைய ஸ்வரூபமோ அளவற்றது; ஸ்தோத்ரத்திற்கு விஷயமாகும் தன்மையோ அளவுக்கு உட்பட்டது என்பதைக் குறிக்கும். அளவற்ற வஸ்துவை ஒரு அளவுக்கு உட்பட்டதாக ஸ்தோத்ரம் செய்வது அந்த ஸ்வரூபத்தைச் சரியானபடி ஸ்தோத்ரம் செய்ததாக மாட்டாதே. தவிரவும், தம்மால் [illegible]

ந ஶ்வாவலீடமபி தீர்த்தமதீர்த்தமாஹு:
நோதந்யதா ச ஶுநா கிமு ஜிஹ்ரிதவ்யம் ॥ ௮

யத்தை ஸாதிக்க முயல்வதுதான் புத்திமத் க்ருத்யமாகுமோ? இத்யாதிகளான சங்கைகளைச் செய்துகொண்டு, அவைகளை ஒரு த்ருஷ்டாந்தத்தைக் கொண்டுப் பரிஹரிக்கிறார்.

[ப – ரை] அஹம் - நான், கிம் - என்னை, ஜாநந்நபி - அறிந்திருந்தும் [அஜ்ஞனென்று அறிந்திருந்தும்], அநபத்ரபிஷ்ணு: - எவ்வித லஜ்ஜையுமின்றிக்கே, விஷ்ணோ: ஸ்வரூபணயிநீம் கிரம் - விஷ்ணுவின் ஸ்வரூபம் முதலியவைகளில் ப்ரீதியை உடைய சொற்களை, ஆத்ரியே - ஆதரிக்கின்றேன். [இது என்ன ஸாஹஸம்? ஸாஹஸமானாலும், இதில் ஒரு வித பாதகமுமில்லை; ஏனென்றால்], தீர்த்தம் - [கங்காமுதலிய நதிகளில் ப்ரவஹிக்கும்] சுத்தமான தீர்த்தத்தை, ஶ்வநா அவலீடமபி - அது நாயால் குடிக்கப்பட்ட போதிலும், அதீர்த்தம் - [அதனால் அது] அசுத்தமாகி விட்டதென்று, ந ஆஹு: - [பெரியோர்கள்] சொல்லவில்லையன்றோ? உதந்யதா - தாஹத்துடன் கூடிய, ஶுநா ச - நாயாலும், கிமு ஜிஹ்ரிதவ்யம் - வெட்கப்படக்கூடாதன்றோ?

விஷ்ணோ: ஸ்வரூபணயிநீம் கிரமாத்ரியே—விஷ்ணுவின் ஸ்வரூபத்தில் ப்ரீதியுள்ள சொற்களை ஆதரிக்கிறேன். அதாவது-ப்ரீதியைக் காண்பிக்கும் ஸ்துதி வார்த்தைகளைச் சொல்லி அவனை ஸ்துதிக்க ஆரம்பிக்கிறேன் என்று சொன்னதாயிற்று. ப்ரீதி காரணமானாலும் அதற்கும் ஒரு அளவு வேண்டாவோ? அஜ்ஞனான நான் எங்கே? ஸர்வஜ்ஞனான விஷ்ணு எங்கே? அணுவான நான் எங்கே? விபுவாய் எவ்விடத்திலும் வ்யாபித்து நிற்கும் விஷ்ணு எங்கே? அத்யந்தம் அசக்தனான நான் எங்கே? 'ஸர்வஜ்ஞ: ஸர்வஶக்த:' என்று சொல்லப்படும் அவன் எங்கே? என்பது தாத்பர்யம்.

ஶ்வாவலீடமபி—இந்த த்ருஷ்டாந்தம், தமது தாழ்ச்சியைக் காண்பிக்கும் பொருட்டு. தாம் அதிமாத்ரம் தாழ்ந்தவரென்பதே அவர் நினைவு. நம் போன்றவரைக் காட்டிலும் அவர் மிக உயர்ந்தவராக இருக்கையிலும், பகவானைப் பார்க்கும்பொழுது அவர் தம்மைத் தாழ்ந்தவராகவே பாவிக்கிறார்?

உதந்யதா—இது 'உதந்ய' என்னும் சப்தத்திலிருந்து ஏற்படுத்தப்பட்ட பதம். 'உதந்ய' என்பதற்கு 'தாஹம்' என்பது பொருள்; ஆகையால் 'உதந்யத்' என்பதற்கு 'தாஹிக்கும்' என்னும் பொருள் கிடைக்கும்.

தேவஸ்ய தைத்யமதநஸ்ய குணேஷ்வியத்தா
ஸங்க்யா ச வாங்மநஸகோசரவர்த்திநௌ தௌ ।
அப்யேவமண்வபி ச தத்ர மமார்திஶாந்த்யை
கீடஸ்ய த்ருஷ்யத உதந்வதி விப்ருஷேவாலம் ॥ ௯

---

9. 'லஜ்ஜையைத் துறந்து ஸாஹஸமான இந்த வ்யாபாரத்தில் ப்ரவர்த்தித்தீர். அப்படி ப்ரவர்த்தித்தும் உம்மால் அதில் எவ்வளவு ஆஸ்வாதிக்கக் கூடும்?' என்று கேட்க, 'அணு மாத்ரமே நான் ஆஸ்வாதித்தாலும், அது என்னுடைய தாக சமநத்திற்குப் போதாதோ?' என்று பரிஹரிக்கிறார்

[ப – ரை] தைத்யமதநஸ்ய - அஸுரர்களை நசிப்பிக்கிறவும், தேவஸ்ய - அளவற்ற ஔஜ்வல்யத்தை உடைத்தாயிருக்கிறவுமான [அந்தப் பகவானுடைய], குணேஷு - குணங்களில், இயத்தா - இவ்வளவுதான் ப்ரமாணம் என்பதும், ஸங்க்யா ச - எண்ணிக்கையும், வாங்மநஸகோசரௌ - வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டுதலை, அதிவர்த்திநௌ - தாண்டியே நிற்கின்றன. ஏவமபி - அப்படி இருக்கையிலும் [அந்தக்குணங்கள் அப்படி அளவுக்கும் எண்ணிக்கைக்கும் விஞ்சி இருக்கையிலும்], தத்ர - அந்தக் குணங்களில், அண்வபி ச - அணு மாத்ரமே [ஏகதேசம் மாத்ரமே], மம - என்னுடைய, ஆர்திஶாந்த்யை - கஷ்டத்தின் சமநத்தின் பொருட்டு, அலம் - போதுமானது. த்ருஷ்யத: - தாஹிக்கும், கீடஸ்ய - புழுவுக்கு, உதந்வதி - ஸமுத்ரத்தில், விப்ருஷா - ஒரு பிந்து மாத்ரத்தாலேயே, அலம் - போதுமன்றோ?

தேவஸ்ய தைத்யமதநஸ்ய—இந்த இரண்டு விசேஷணங்களும் பகவான் கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கிறான் என்பதையும் அவனிருக்குமிடத்தில் ஹேயகுண மொன்றும் இருக்கமாட்டாது என்பதையும் குறிக்கின்றன வென்று பெரியோர்கள் சொல்வார்கள்.

ஸங்க்யா வாங்மநஸகோசரவர்த்திநீ—குணங்களின் எண்ணிக்கை வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாத அளவு விஞ்சி நிற்கின்றது. அதாவது இத்தனை குணங்கள் தாம் அவனுக்கு உண்டு என்று சொல்லவும் முடியாது, நினைக்கவும் முடியாது என்பது தாத்பர்யம். இயத்தா ச வாங்மநஸகோசரவர்த்திநீ. (ஒவ்வொரு குணத்திலும்) அளவு இம்மாத்ரமே என்று சொல்லவாவது நினைக்கவாவது ஒண்ணாது. ஈதம் பூர்ணஸ்யேதி யாவந்து தஸ்ய ஶரவ: இயத்தா.

வெநாசு-நவிஹாஸுகிரஃ வாராஷாஃ வாராணா
ஹாரம் தாஷ்ட-வா தீய-ரிஜெவா சய-டெவாவ-டெவாஸிஃ ।

10. மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் போன்றவர்களே பகவானுடைய குணாதிசயங்களை ஸ்துதி செய்ய அர்ஹர்களாவார்கள்; அப்படி இருந்த போதிலும், தாம் ஸ்துதி செய்வதால் பகவானுக்கு ஒரு அதிசய விசேஷம் உண்டாகின்றதென்று சொல்லி, தாம் ஸ்தோத்ரம் செய்யப் புகுவதைப் பற்றி ஜநித்த சங்கையைப் பரிஹரிக்கிறார். ஆழ்வார் முதலானவர்கள் ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தால், மதுரங்களான அர்த்தங்களை இனிய சொற்களால் வெளியிட்டு பகவானுடைய திருவுள்ளம் உகக்கும்படி ஸ்துதிப்பார்களே தவிர்த்து பகவானிடத்தில் அபராதப்படும்படி ஸ்துதிக்க மாட்டார்கள்; தாம் ஸ்துதித்தாலோ தமது ஜ்ஞாந சக்திகள் மிகவும் மிதங்களாக இருக்கிறபடியால் பகவானிடம் அபராதப்பட்டே ஸ்துதி செய்யும்படி நேரும். ஆகையால் அபராதங்களைப் பொறுத்துப் போகும் க்ஷமை என்னும் குணம் வெளிவந்து ப்ரகாசிப்பதற்குத் தமது ஸ்துதி மாத்ரம் இடம் கொடுக்குமே அன்றி, அப்பெரியோர்களுடைய ஸ்தோத்ரம் அதற்கு இடம் கொடுக்கமாட்டாது. அப்படி பகவானுடைய கல்யாண குணங்களுள் ஒன்று நிர்விஷயமாகப் போனால் அது பகவானுக்கு அவத்யாவஹமாகுமாதலால், அந்த அவத்யம் நேராமல் பாது காப்பது பெரியதொரு விசேஷமே ஆகும் என்பது தான் இவ்விடத்திற் செய்யப்படும் பரிஹாரம்.

[ப - ரை] ஹெ மயாரிவெ - ஹே மதுஸூதந, வெநாசு-நவிஹாஸுகிரஃ - பக்தியால் நனைந்தும் அந்தக் காரணத்தால் கலங்கியும் இருக்கும் சொற்களை உடைய, வாராணாஃ வாராஷாஃ - பழைய காலத்திய பெரியோர்கள், சய-டெவாவ-டெவாஸிஃ - இனியசொற்களால், துாழ - உன்னை, துவஷ்-வாஃ - ஸ்துதி செய்திருக்கிறார்கள். நீவவாவஃ - அதிமாத்ரம் அல்பமாயுள்ள வாக்கை உடைய, சச - என்னுடைய, ஊழ - இந்த ஸ்தோத்ரமோவென்றால், வாவெவாஸிஸாஸி தழ - [அந்தப் பெரியோர்களுடைய] வார்த்தைகளை அநுகரித்து உச்சரிக்கப் பெற்றதே [ஹார்த்தமான ப்ரீதியின் பரிவாஹமாக வெளிவந்ததன்று]. தா - ஆனால், சச - வ-டெவாஸிஃ - என்னுடைய துருக்திகளால், தெ க்ஷாஸிஃ - உன்னுடைய பொறுமையானது, ஸவிஷயா - ப்ரஸரிக்கும் இடத்தை உடையதாக ஆகின்றது.]

வெநாசு-நவிஹாஸுகிரஃ - ஹ்ருதயத்தில் உணரப்பெற்று, அந்த உணர்ச்சியின் கடைப்போக்காக ப்ரவஹித்து வரும் உக்திகளுக்கன்றோ ஏற்றமுளது? "ஹடாகஷ்டாநாம் கவிபவஷாநாம் ரவயிதா" [பலாத்காரமாக இழுக்கப்பட்ட சில சொற்களைக்கோப்பவன்] என்கிறபடி அஹ்ருதயமாகச் சொல்லப்படும் வார்த்

வாவெவாஸிஸாஸி தழிதம் சச நீவவாவஃ
க்ஷாஸிஸா தெ ஸவிஷயா சச வ-டெவாஸிஃ ॥ ௧௦

ஹுஜ்ஜா தவாஉருஹவதீ விஹிதா த்வயீ ஸா
தாம் ஹி ஹ்ருசாண வைஜஜூராதீம்ஜ யெஉமெ-ந ।

தைகளுக்கு எது ஏற்றம்? ப்ரீதி மேலிட்டால், வாக்கும் தழுதழுக்குமாதலால், அந்தத் தழுதழுப்பை 'விஹாஸு' என்னும் பதம் குறிக்கின்றது. அப்படிப்பட்டத் தழுதழுப்பு அர்த்தச் சொற்களுக்கு ஒருவித அலங்காரமாகுமன்றோ?

வாராணாஃ வாராஷாஃ—பராங்குச யாமுந முநி முதலிய பூர்வ புருஷர்கள்.

வாவெவாஸிஸாஸி தழ—ஸஹ்ருதயமாக பகவானை ஸ்தோத்ரம் செய்திருக்கும் பெரியோர்களுடைய சொற்களை மாத்ரம் தாம் அஹ்ருதயமாக உச்சரிக்கிறபடியால் அது பரிஹாஸத்திற்கு ஆஸ்பதமாகுமென்று லஜ்ஜைப்படுகிறார். பகவத் விஷயத்தில் இப்படி லஜ்ஜைப்பட்டுப் பேசுவது அந்தப் பகவானுடைய பெருமையையும் தமது சிறுமையையும் உணரும் பெரியோர்களுக்கு ஸஹஜமே. ஆழ்வாரும் திருவிருத்தத்தில்

"எப்படியூராமிலைக்கக் குருட்டாமிலைக்கு மென்னு
மப்படியானுஞ் சொன்னேனடியேன் மற்றியாதென்பனே"

(எப்படி ஊர் புக்கு அணைந்த பசுக்கள் இலைகண்டு மகிழ்ந்து கனைக்கக் கண்ணில்லாத பசுவும் அது கேட்டுத் தான் இன்னதென்றறியாமலே ஒக்கக் கனைக்குமோ, அவ்விதமாகவே பூர்வ புருஷர்கள் சொன்ன பாசுரத்தைக் கேட்டு நானுஞ் சொன்னேன்) என்று தம்மால் சொல்லப்பட்ட பேச்சுக்கள் அறியாமல் பேசப்பட்டன வென்றும் அப்பிழையை பகவான் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ப்ரார்த்தித்திருக்கிறாரன்றோ?

க்ஷாஸிஸா தெ ஸவிஷயா—தாம் இவ்விதம் அபராதப் படாவிட்டால் பகவானுடைய பொறுமை எவ்விதம் வெளிப்படும் என்பது கருத்து. இவ்விதம் தாம் அஜ்ஞதமாகவும் அஹ்ருதயமாகவும் ஸ்தோத்ரம் செய்வதால் பகவானுடைய க்ஷாந்தி என்னும் குணம் ப்ரகாசிப்பிக்கப் படுகிறபடியால் தமது ப்ரவ்ருத்தி பயனுள்ளதென்பது தான் தாத்பர்யம்.

11. இனி ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பிக்கிறவராய், முதலில், வேதங்களைக் கொண்டே பகவான் அறியப்படத் தக்கவனே தவிர, மற்றை ஒரு ப்ரமாணத்தாலும் அவன் விளங்கான் என்று வேதங்களைப் புகழ்கிறார்.

ஆபாஸதாம் ஸமியுரந்ய ப்ரமாணானி தோஷை:
ஏஷா து தோஷரஹிதா மஹிதா அநாதி: ॥ கக

[ப — ரை] ஸதாமதீ - பூஜைக்கு அர்ஹங்களான, ஸா த்ரயீ - ப்ரஸித்தங்களான வேதங்கள், தவ ஆஜ்ஞா விதிதா - உன்னுடைய ஆஜ்ஞை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். தாம் - அந்த வேதங்களையே, அதீந்த்ரியே - இந்த்ரியங்களுக்கு எட்டாமலுள்ள, அர்தே - வஸ்துவின் விஷயத்தில், ப்ரமாணம் - ப்ரமாணமென்று, வேதவித: - [வேத மறிந்தவர்களெல்லாரும்] அங்கீகரித்திருக்கிறார்களன்றோ? அந்யானி - மற்றை ப்ரமாணங்களெல்லாம், தோஷை: - தோஷங்களால், ஆபாஸதாம் - ஆபாஸத் தன்மையை, ஸமியு: - அடைகின்றன. ஏஷா து - இந்த வேதமோ வென்றால், அநாதி: - அநாதிகாலமாக வழங்கிவருமது; தோஷரஹிதா - எவ்வித தோஷமுமற்றது; மஹிதா - [ஆகையால் ப்ரமாணங்கள் எல்லாவற்றிலும்] மிகவும் ச்லாக்யமானது.

ஆஜ்ஞா—பகவானே, "ச்ருதி: ஸ்ம்ருதி: மமைவாஜ்ஞா" (ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய கட்டளைகளே) என்று சொல்லியிருக்கிறார்.

ப்ரமாணம்—லோகத்தில் சில பதார்த்தங்களை நமது இந்த்ரியங்களைக் கொண்டே நாம் அறியக்கூடும்; மற்றும் சில வற்றை அநுமாநத்தாலேயே அறியக்கூடும். இவை இரண்டாலும் அறியக்கூடாதவை சில உண்டு; அவைகளை நமது ஆப்தர்களான மஹர்ஷி போன்றவர்களின் வார்த்தையைக் கொண்டே நாம் அறிகின்றோம். இந்த்ரியங்களைக் கொண்டு அறியு மிடங்களில் ப்ரத்யக்ஷமும், இரண்டாவதில் அநுமாநமும் மூன்றாவதில் சப்தமும் அந்தந்த ப்ரமாணங்களின் பெயராகப் பெரியோர்கள் சொல்வார்கள். பகவான் ஆத்மா முதலியவை இந்த்ரியங்களால் அறியக்கூடியவை அல்ல, அவைகளை அநுமாநத்தால் அறிவதும் ஸாத்யமில்லையென்று நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஆகையால், ஆப்த வாக்யமாகிற சப்தமே அவைகளைச் சரிவர அறிவிக்கக் கூடியவை. அநுமாநத்தால் ஈச்வரனை ஸாதிப்பதில் என்ன தோஷங்கள் இருக்கின்றன வென்பதை அறிவதற்கு ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களைப் பார்த்தல் வேண்டும்.

அநாதி:—அனாதி காலமாக வழங்கிவருவது என்று சொல்வதால், அது அபௌருஷேய மென்றும் [புருஷ புத்தியால் ஏற்படுத்தப் பட்டதன்றென்றும்] பகவானைப் போல அது நித்ய மென்றும் சொன்னதாயிற்று.

மானசட கோபனினி மண்மிசை யுதிப்பா
ஞனவனி னுய்வனென நாடிமு னுதித்தும்
மானசை யினின்ற திருமதுர கவிவந்த
மேனிலை யுறுஞ்செயன் மிழற்றது முணர்ந்தே. 2

மண்மகண் முகத்திலக மென்னவெழின் மன்னும்
வண்மைமிகு பாண்டிவள நாடதனின் வாசத்
தண்மலரி எம்பொழி றடங்களு மலிந்த
வொண்மைமிகு கோளூ ரெனவுண்டு நகரொன்றே. 3

அத்திரு நகர்க்கிடை யி லங்கையை யழித்த
வித்தக னிளைப்பொழிய வெண்பணியின் போக
மெத்தெனு மணைத் தலையின் மேவியறி யோக
நித்திரை யிழைத்தொளிரு நேர்மைபெற வையம். 4

கன்னன் மொழியார் குழல்புலர்த்தி யிடுகாலை
மென்னறு மகிற்புகையு மீதெழலி னுங்கே.
பன்னரிய தேவநதி பானிற மொளித்தே
மன்னெழுமை யென்றுகண் மயங்குற வயங்கும். 5

மண்ணமரர் மாமறைக ளோதொலியும் வேள்வி
விண்ணமரர் பாகமுற கூவிசையும் வேலார்
கண்ணியர் நரம்பொடு கலந்தினிது பாடும்
பண்ணரவ முந்தினமும் பம்பியெழு மாதோ. 6

இலக்கணம் பயின்றிடுவ ரோர்புற மிருந்தே
சொலற்கருந் தருக்கமொடு சோதிடமு மோர்பால்
நலக்குரிய காவியமு நவின்றிடுவ ரோர்சார்
இலக்கரு வேதாந்த மொருவெள்ளிடை படிப்பார். 7

மந்திரமோ டஞ்சமிதை மன்னுகுசை யீர்வா
ரந்தமுறு சம்மையுட னம்மறுகு செல்வார்
சந்தைசொல வாய்மறைகள் சால்புதவு முந்நூ
லிந்துநக மென்னமுறு மெய்தவிழைக் கிற்பார். 8

அரிகரியென் றறைந்தபடி வைகறையி லேகி
விரிபுனல் படிந்தெழுந்து வெங்கதி ரிறைக்கு
மருமலரி னருக்கியமு மந்திரத்தி னீந்து
மருவலர் மந்தேகர் படமன்னு பவந்நீர. 9

எங்குமுறை யெம்பரனை யுள்ளமல ரேற்றி
மங்களம ருள்சபமு மாடியொளிர் வெண்மண்
ணங்கமோரீ ராறுகளின் மின்னவெழி ற்றோண்மே
றோங்குதிருப் புட்டிலொடு தூமறுகின் மீள்வார். 10

இன்னதிரு மந்நகரி லேற்றமுறு சாம
மென்றுமறை யேய்ந்தகுலந் தன்னிடை யெழுந்தோன்
முன்னமம ருஞ்சிகையன் மூதறிவன் மாலே
யென்னரிய தெய்வமென் றிருந்தனனோர் பார்ப்பான். 11

சென்றயுகத் தீறிலொரு சித்திரை மதிக்க
ணொன்றுமரு சித்திரையி லன்னவ னுவக்க
நின்றகண நாதர்களிற் குமுதனெனு நேயந்
துன்றுமொரு சூரிமக னாகவுதித் திட்டான். 12

அக்கருவி லேதிருவ டைந்தவருக் கீன்றோர்
மிக்கநல மதுரகவி யென்றுபொருண் மேவுந்
தக்கதிரு நாமமமைத் தெக்கலை தமக்கு
மொக்கவிலை யாருமென வோதவு மிழைத்தார். 13

வாளை நிகர்ந் தாளை மருட்டங்கண் மடமாதர்
நீளவுல வந்நகரு ணின்றதிரு வாழ்வார்
காளையெரு தேழைமு னடர்த்தவெழிற் கண்ணன்
றாளமண நாறுமன தாமரையில் வைத்தே 14

யோகமிரு நான்கினுட னுற்றவனு றைந்தே
யேகவெகு நாள்களு மிரும்புவன மெங்கும்
போகியரும் புண்ணிய வனங்களிடை யாடி
மேகவணன் கோயிறொழு மேவிமன மன்றே. 15

கோகுல பிருந்தாவனங் கோகருண மாதி
நாகநிகர் நல்லதல மெங்குநனு குற்று
வேகமுறு கங்கைமுதல் வெம்பவம கற்றும்
பாகுநிகர் தீர்த்தங்களிற் பான்மை யுட னாடி. 16

ஏழ்பரியன் வாழ்மர பிருந்துல களித்த
பாழ்பட வரக்கர் திருப்பைம்புய னுதித்த
சூழ்புன லயோத்திநகர் மேவியிளஞ் சோதி
யூழ்பட வியங்குமரு யோகமதி லார்ந்தார். 17

அவ்வண மனேகபக லாரவொரு வைகல்
வவ்வுமுயிர் வானவன் வதிந்திடு திசைக்க
ணோவ்வறுமோர் சோதியுயர்ந் தோங்கியொளிர் நிற்கத்
திவ்விய சுவைக்கவி திருக்கணுறக் கண்டார் 18

கண்டிதெளி தன்றொரு கனம்பெருகு யோகி
யுண்டுகொல வண்சரத முண்டெனத் துணிந்தே
கொண்டுநிதி கூர்வறிஞன் கொள்ளுமகிழ் வென்ன
வண்டுதும வர்க்கருகி லென்னவகம் பொங்கி. 19

வேறு

சிக்கென் றெழுந்தன னவர்சீ ரணிமைக்
கொக்குந் திறலா னமனேங் குநிசைப்
பக்கஞ் செலவவ் வொளிர்பார்த் தவணம்
நிற்கப் புறமன் னதுநீங் கினரே. 20

பின்கண் டதுமீண் டுபிளைங் துவியப்
பென்கண் டனமென் றுமகிழ்ந் துவர
முன்கண் டதுமூ தெயில்சூழ் குருகைக்
கண்கண் டுநடந் துகலந் தனரே 21

சடமா ருதஞ்சா டியசால் பினருக்
கிடமா ரகக்கண் ணிறெரிந் தவர்தம்
மிடமா ருதலேன் றளிவிண் டுதவங்
கடைமா மலர்க்கண் களிநோக் கினரே. 22

கருணா ரதமூ றுகடைக் கணிவ
ருருமேல் விழவோங் கியபுத் தியினித்
திருமா றனெனைக் கரைசேர்த் தருளுங்
குருவே யெனவீழ்ந் துகுளிர்ந் தகமே 23

மாறன் மலரார் பதமன் னியவர்
கூறும் பணிசெய் துகுருக் களிட
மூறின் றபயின் றுயர்வுற் றயுகல்
வாறின் கொளவம் புவிகாட் டினரே 24

பண்ணா ளவரவ் வண்ம்பண் ணாகையிற்
றென்னா டமர்தேர்ந் தசிலச் சிலர்க
ணன்மா றனைநா டிவணங் கியுல
கின்மா நெறியேக வியப்பு வாரால் 25

உய்யும் மணியொன் றொளிருண் மையினைப்
பொய்யின் மதமா கியபூழ் திபல
வையம் மருள்கொள் ளமறைத் தனவால்
செய்யும் வகையொன் றுதெரிந் திலமே 26

றம்மே ரருளம் புதநோன் மைபெறச்
செம்மா மொழியா கியசீ ரமுத
மிம்மா நிலமுய் யவெழுந் துபெய
வம்மா துகணீங் கியலங் குமதே 27

என்றே யவரேங் கியிரங் கிடலுங்
குன்றோர் குருகைக் கிறைதொண் டருணீர்
நன்றே குகநா டுறுமவ் வணமென்
றன்றே யதனு றுதுணிந் தனரே. 28

தம்மின் றிருவாய் மொழிதஞ் செவியி
லிம்மென் னுறவெண் ணிநசைந் துறமச்
செம்மின் மதுரம் பெறுசீர் கவியை
வம்மின் னெனநன் குவழங் குவரே. 29

வேறு.

பாவியூக விபவங் களுமங் கரியாமி யர்ச்சையு மென்ப
முரணைவென் றவன்றன் னவதார மம்முறை மையின்முத னென்னைப்
பரவுமார ணம்பாஞ்ச ராத்திர விதிகா சங்களு டனன்றே
விரவுமா மிருதியு முலகுணர்ந் திடவிளக் கிடுமிக மாதோ 30

தாருலோ கசிலா வுருவா மருச்சா வதாரமு மின்பஞ் [வெய்துஞ்
சேருமா மறைப்பொரு ளெலாஞ்செறி தமிழ்மறை தனிற்றெளி
சீரினு லிருந்தெண் ணுதல்யோக மேசெய்கு தலருச் சித்த
லாரமுன் றிவையாற் றிமுன்யுகங் களிலடைந் தனரரும் பேறே 31

அந்தரும் பயனிக் கலியகத் தரிநாம கீர்த்தன மாற்றின்
வந்துசே ருமுன்செய் தவப்பய னிவண்வலி யவந்துறு மாபோ
லிந்தமா நிலங்க ளையுற வெம்பிரான் கலுழன்மீ திவர்ந்தேதன்
சொந்தமாம் பரிவா ரமுஞ்சூழ் வரத்தோன் றினன்முன மென்கண்

பாரமற்ற செங்கருணை யென்பாலிழைத்தா ரணப்பொரு ளெல்லாம்
பாரதத்தை முன்பரா சரன்மகன் முகம்பால் பாடிய பரிவேபோல்
பாரகத்தி னென்வா யினுன்மறைப் பிரபந்த நான்கென வோங்கப்
பாரலைக் கடலெனப் பசுந்தமிழி னற்பாடி னன்பரிந் தம்மா. 33

பாடி யென்னகம் பதிந்திடத் தந்தனன் பரமபத மனுகுற்றுன்
னாடி யன்னவை நானிவண் மிழற்றுவ னன்குநீர் வரைகென்றுங்
காடி யின்முக மலர்தலு மதுரமே வழிகவி யாழ்வாரு
மேடு கொண்டெழுத் தாணியி னெழுதிட விசைத்தன ரவரம்மா. 34

இருக்கு வேதமா றிரதநற் றிருவிருத்தம் மெனமணி வண்ணன்
றிருக்கு ணங்களைத் தெரித்திடு நூறது காண்டமேழ் கலந்துள்ள.
வுரைப்ப ரும்மெசுர் வேதமதி ரதமே யுறுசுவை யெழுபாடல்
விரிப்ப ரேதிரு வாசிரிய மதென விழுமியோ ரொருநாமம். 35

பெரியவுந் திருவும் முதலிடை களிற்பிணைந் துபின்கடை தன்னின்
மருவியுள்ள வந்தா தியைப்பெய ரிணைமரு வியமிர பந்தஞ்
சொரியுதேன் கவியெண் பதிற்றே றெனச்சொல் லுவரது சோதிக்
கரியமா லுரைத்த ருளிய வதர்வணத் திரதமே கலந்தன்றே: 36

வாமனன் றிருவரை யறுகுணங் களைநரம் பொடுமிசை பாடுஞ்
சாமசா ரமேயா யிரத்தொடு செறிநூற் றிண்டெனச் சாற்று
மேமமார் கவியுள ததின்பெயர் திருவாய் மொழியெனும் வையம்
நாமமா யிரம்படைத் தவனன்றி தன்பக டெவர்நவில் கிற்பார். 37

கானநூல் வழிசதி முறைபிறழ் கிலாக்கரு விகளுடன் பாடற்
கானதொன் பாதமிர தமுமார்ந் துளதக முருகிடும் பால
தீனமாய நுன்மதத் தினர்வா யடைக்கிற் பதாமிது கேட்டும்
வானநா டிருபாச மதொழித் தவர்மன மதர்ப்புற வீறும் 38

ஆரணங் களுமாக மமாதி நூலடை யவுமக டார்க்கும்
காரணம் மெனத்திகழ் தருபிரண வங்கலந்த வக்கர மூன்றுஞ்
சீரணிந்த முற்செய் யுளின்முத லடிமூன் றினுமுதல் சேரு
மேரணிந்த மற்றவை யுபநிடத மாறின் பொருண்முழு தூட்டும் 39

மோதரு திரைப்பற வையின முதினைமொண்டு கொண்டெழு மங்
மேதினித் தலைப்பொழிவது கடுப்ப வெம்பர மதமிகவாட்டு (குன்
மேதகுங் கவியா கையிற் பராங்குச ரென்றிட மிளிர்கிற்போர்
வேதநான் கருஞ்சா ரமுமிவ் வணம்விளங் குறக்கொடு பெய்தார் 40

பெய்தவத் திருநா லொருநான் கையும்பெட் புறவரைத் தேற்ற
செய்தவத் தினர்யானு மிச்செகமு முய்ந்தன மெனவிரைந் தேத்தி
மெய்தவத் தெழுமா றனையன்றி யான்மேவி யுய்ந்திட வேறோர்
தெய்வதத் தையுங்கண்டிலே னெனவவர் திருவடிமுடி சேர்த்தார். 41

அச்சடத்தை யன்றகன் றவர்தமக் கருளன் பினையகன் ஞாலம்
மெச்சநற் கணிஹுண் சிறுத்தாம் பெனமிழற் றலுமொரு நாலாய்
வைச்சதஞ் செவிவாங் கருமதுர மேவழி தரவெ வரோனு
முச்சவின் பதமளித் திவனொளிர் தாவிழைத் தனருவங் தம்மா 42

தாளதா மரைத்தட வயற்குரு கையர்தம்பி ரானது கேட்டு
நீளகங் களித்திருக் கையிற் பொலிங் தவணின்ற வெம்பெரு மானுங்
கோளமர்ந் ததன்மகிழ் மணத்தா ரவர்கொள் கெனவருள் கூற
நாளலர்ந் தனைத்தரித் தவர்வகுள பூடண னெனநவில் குற்றுர். 43

பொலிந்து நின்றதிற் புனிதரா மதுரமா கவிகளின் பொருவற்ற
வலிந்த பத்தியிற் கரைந்தக மலர்க்கருண் மழைமிசை விழநோக்கி
மலிந்த வாண்டு முப்பானு டனேந்துமம் மகிழ்புளி யடியோங்கிக்
கலந்தொ ளிர்ந்தன ருச்சையின்முன் னுருகையிகந்தனராங்கே 44

பின்னை யஞ்சுவைக் கவிகளு மாறனின் பிறங்கிருந் தமிழ் நான்கா
மின்ன றுஞ்சுவை யமிழ்தினைப் படிமிசை யெங்கணும் பெயலாற்றி
மன்ன வின்றிய பரமதத் துகள்படிந் தடங்குற வயங்கிப்பின்
பன்ன ரும்விழா வயர்ந்தனர்பராங்குசர்க் கடைவுடன்பரிந்தம்மா 45

ஐந்து பத்துமே லாண்டுகள் வகுளபூட ணன்பத மருச்சித்தே
யெந்த பத்திக ளினுங்குரு பத்தியே யேற்றமென் றுணர்ந்தெங்கு
முய்ந்து பெற்றிட வுயர்பதம் விளக்கியவ் வொளிமணிநிரைமாடத்
தந்திருப் பதித னிலிருந் தெழிற்பரம் பதந்தனையடைந்தாரால் 46

நம்மாழ்வார் வைபவம்

முற்றிற்று.

ஆக சருக்கம் 5க்கு, செய்யுள் 204

குலசேகர ராழ்வார் வைபவம்.

6–வது சருக்கம்

வே று.

வேலை தப்பி விருந்தென வெம்முனி
நீள வந்து நெருக்க வழுங்கிய
காலை யைவர் களிப்புற வந்தருள்
தாளை யுற்று மகிழ்ந்து தளிர்த்துமே.

வெற்ப னேக மெனப்புவி வெம்பொருள்
பொற்போ டங்கு திரண்டு பொருந்தலா
லற்பி னம்மலை நாடென் றறைதரு
மற்பு தத்தி னமர்ந்துள தொன்றரோ 2

கூட லார்களெல் லாரையுங் கொன்றுவென்
றூட லார்மன்ன ராள்கையிற் கொல்லியென்
றூட லாம்பெய ரண்மி யமரரு
நாட லாகு நகரதற் குண்டரோ 3

பூவின் மேவிய புங்கவன் முன்றிரு
மேவு பொன்னக ரோடிதை மின்றுலைக்
காவ லின்னிறை யாற்றிட விங்கர்
தாவ ருங்கனத் தாலிவண் டாழ்ந்ததே 4

இரத்தி னத்திர ளெல்லலை வீசுமங்
குரைத்தி டற்கரு மாவண வோளிக
ளிரத்தி னுகர மென்னுங் கடலினைச்
சிரித்த சிப்ப தெனத்திகழ் கிற்குமே 5

ஓங்கு மாட மிசைக்குயி லேறியர்
பாங்கர் பாற்க லவிச்செரு பண்ணியே
வீங்க யர்வுயர் விண்ணிதித் தண்டுளி
தாங்கி வீசிளங் காலிற் றணியுமே. 6

தேவர் கோயிலுந் தேசிகர் கோயிலுங்
காவ லன்புவி காத்திடுங் கோயிலு
நாவ லர்கலை நாடுறு கோயிலு
மேவி யெங்கு மிடைந்தொளிர் கிற்குமே. 7

வேத சாலையும் வேள்வியின் சாலையும்
மாதர் மன்னுந டம்பயில் சாலையு
மோது பல்கலை யோர்தரு சாலையு
மேத கும்பல மேவியங் கென்பவே. 8

வைய மன்னவர் வையம தாருவார்
செய்ய வந்தணர் செம்மறை யோதுவார்
பொய்யி லாவணி கர்பொருள் போற்றுவார்
செய்வ ரின்பணி யேரினர் செவ்வனே. 9

பொன்னெ யின்மணி பூவையர் பூண்மணி
மன்னர் கோயின் மலிந்தெழு மின்மணி
யின்ன செஞ்சுட ரீண்டியெ றித்தலால்
பொன்ன னுடன் வல்லும் பொலியுமே. 10

நாலு வேதமு நான்கற மும்பொரு
ளாலு மன்னர ரண்படை நாலொடு
நாலு பாயமு நால்வகை யாழுமன்
கேலு மென்றுமெ ழில்பெற வென்பவே 11

ஒன்றெ னத்திகழ் மாயவ னெண்பத
நன்றி ரண்டையு நாடி நவிவுறும்
வென்று மூன்று புரைகளை வெஞ்சுக
மொன்றி வாழ்குவர் நால்வகை யோருமே 12

வேறு.

இன்னமு மிசைத்தற் கெட்டா விருபக டுடைய வந்தப்
பொன்னகர் புரந்த சேர பூபதி களிலோ வரய்மை
மன்னு திடவிர தத்த னெனவொரு மகிபன் றோன்றி
நன்னெறி வழுவ லின்றி நனிபகல் புரந்து மற்றும் 13

நாவலர் புகழ்ந்து பாடு நங்குலம் வளர்க்க விங்கோர்
காவல னிலையே யென்று கலுழ வாகனனைப் போற்றத்
தாவரு மவன்றன் மார்பிற் றயங்கொளி மணியே யந்தக்
கோவுள மகிழ மைந்த னுய்வரக் குறித்தா னன்றே. 14

இக்கலி யிருபத் தெட்டாம் பாபவத் தெழில்சூழ் மாசிக்
கொக்க வெண்புனர் பூசத்தி லுவண கேதனன்முன் செய்சங்
கற்ப மதழியா வண்ணங் கௌத்துப மரையன் றேவி
தக்க வின்கரு வினின்றுந் தனய னுதித்த தம்மா 15

கண்டது கொல்லி காவல் பூண்டவன் களித்தெல் லோர்க்கு
மொண்டரு நிதியை யீந்து கன்னலுங் கண்டும் மொய்த்துக்
கொண்டவர்க் குறவழங் கிக்குல சேக ராழ்வா ரென்று
மண்டலம் புகழுநாம கரணமு மதித்துச் செய்தான் 16

சருக்கரைக் கிடையே தோன்றித் தக்க போழ்தமுதம் பாய
மருக்கமழ் மலரி னேங்குங் கற்பக மெனவே யாழ்வார்
விருப்புற வளர்ந்து கல்வி வேலையை யறிவாம் போதத்
தொருப்படக் கடந்து காம னெளித்தெழச் செழித்தார் மன்னோ. 17

[illegible]

கரும் அவன் இருப்பிடம்; தன்னைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாவற்றையும் காட்டிலும் அதிமாத்ர விலக்ஷணன் இப்படிப்பட்ட ஸ்ரீமந் நாராயணனே அந்த உபநிஷத் வாக்யத்தால் சொல்லப்படுகிறானென்று எப்படி ஏற்படுகின்றதென்றால், அந்த உபநிஷத்தில் அப்படிப்பட்ட நாராயணனுக்கு அஸாதாரணங்களான தர்மங்களை நிர்த்தேசிக்கப்படுகின்றனவன்றோ? 'அவன் ஸர்வ லோகங்களுக்கும் ப்ரபு; எல்லாருடைய இஷ்டங்களையும் நிறைவேற்றி வைப்பவன் அவனே; அவனிடத்தில் ஒருவித கர்ம பந்தமும் ஒட்டுகிறதில்லை;' என்பதே அவ்விடத்தில் தென்படும் நிர்த்தேசம். இம்மாதிரியான நிர்த்தேசம் 'ஸகலத்தையும் தனது வசத்தில் அடக்கும் திறமையுள்ளவன்; எல்லாவற்றுக்கும் சேஷி; கர்ம ஸ்பர்ச மற்றவன்; ஜரை முதலியவை அவனிடம் இல்லை' என்று ஆரம்பித்து 'அவன் ஸத்ய ஸங்கல்பன்' என்று முடியும் வாக்யங்களாலும், 'இந்த லோகத்தில் தென்படும் ஸகல சேதநர்களைக்காட்டிலும் அவன் உயர்ந்தவன்; அவன் நித்யன்; அவனே எல்லாவற்றுக்கும் அந்தராத்மா; அவன் தான் நாராயணன்; அவனே ஹரி; இந்த விச்வம் முழுவதற்கும் அவன் சேஷி; அவனுக்கு மேற்பட்டு வேறு ஒரு ஈச்வரனுமில்லை' என்னும் வாக்யங்களாலும் அந்த நாராயணனாகிற பரமாத்மாவுக்கே அம்மாதிரியான குணங்கள் உண்டு என்பது வேறு ச்ருதி வாக்யங்களிலிருந்து ஏற்படுகின்றது. வாக்ய காரரும் இந்த அர்த்தத்தைப் பின்வரும் வாக்யத்தால் வெளியிட்டிருக்கிறார்—'ஸ்வர்ணமயமான புருஷன் காணப்படுகின்றான் என்று சொல்லும் உபநிஷத் வாக்யத்தால் ப்ராஜ்ஞனும் எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாகவும் இருக்கும் பரமாத்மாவே குறிக்கப்படுகின்றான்; ஏனென்றால், 'அவன் ஸகல லோகங்களுக்கும் ஈசன், ஸகல காமங்களுக்கும் ஈசன், அவனை ஒருவித கர்மமும் ஸ்பர்சிக்கமாட்டாது,' என்று அவ்விடத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றதன்றோ?,

தஸ்யைவைதே குணா:—'இந்த உபநிஷத்தில் காணப்படும் வாக்யங்களில் ஸர்வலோகேச்வரத்வம் முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன என்பது உண்மையே; அதனால், இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுமவன் பரமாத்மாவே என்பது எப்படி ஸித்திக்கின்றது?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அதற்குப் பரிஹாரமாக "தஸ்யைவைதே குணா:" [அவனுடைய குணங்களல்லவோ இவை?] என்று இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது.

ஷேர ஏகரூப்யத இதி ப்ராஜ்ஞ: ஸர்வஜ்ஞ: ஸ்வரூபாகாரமேவாதேஸாத் வதேஸாச் ச 'தத்வதநாதாத்' இத்யாதிநா | தஸ்ய ச ரூபஸ்ய அநித்யத்வாதி வாக்யகாரேணைவ ப்ரதிஷித்தம் — 'ஸ்யாத் தத்ரூபம் க்ருதகமநுக்ரஹார்த்தம் தச்சேதஸாமைச்வர்யாத்' இதி [உபாஸிதுரநுக்ரஹார்த்தம் பரமபுருஷஸ்ய ரூபஸங்க்ரஹ இதி] பூர்வபக்ஷம் க்ருத்வா, "ரூபம் வாதீந்த்ரியமந்த:கரணப்ரத்யக்ஷம் தந்நிர்தேசாத்" இதி ஸித்தாந்திதம் | யதா ஜ்ஞாநாதய: பரஸ்ய ப்ரஹ்மண: ஸ்வரூபதயா நிர்தேசாத் ஸ்வரூபபூதா குணா ஸ்ததேதமபி ரூபம் ச்ருத்யா ஸ்வரூபதயா நிர்தேசாத் ஸ்வரூ

பகவானுடைய இந்த ரூபம் ஒருகால் அநித்யமோ? என்னும் சங்கையும் அந்த வாக்ய காராலேயே பரிஹரிக்கப் பட்டிருக்கின்றது. 'ஒருகால் ஈச்வரன் தனது இச்சையைக் கைப்பற்றி, இந்த ரூபத்தை ஆச்ரிதர்களின் அநுக்ரஹத்தை உத்தேசித்துச் செய்து கொண்டிருக்கிருனே?' என்னும் வாக்யத்தால் இந்த ரூபம் உபாஸிக்கிறவனை அநுக்ரஹிக்கும் பொருட்டு பரம புருஷனல் ஒருகால் எடுத்துக்கொள்ளப்பட்ட ரூபமாக இருக்குமோ வென்று ஒரு சங்கையைச் செய்துகொண்டு, வாக்யகாரர், 'அந்த ரூபம் இந்த்ரியங்களால் க்ரஹிக்கக் கூடாதது, சுத்தமான அந்த: கரணத்தால் மாத்ரம் க்ரஹிக்கக்கூடியரூபமே அது; ஏனென்றல் அப்படிப்பட்ட நிர்த்தேசமே அவ்விடத்தில் செய்யப்படுகின்றது' என்னும் வாக்யத்தால் அந்தச்சங்கையைப் பரிஹரித்திருக்கிருர். இதன் கருத்து என்ன வென்றல், 'ஜ்ஞாநம் முதலியவை பர ப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபக தர்மங்களென்று நிர்த்தேசிக்கப்பட்டிருக்கின்றன வென்னும் காரணத்தைக் கொண்டு அவைகளை ஸ்வரூப பூத குணங்களாகவும் [அந்தக் காரணத்தால் நித்யங்களாகவும்] நாம் எப்படி க்ரஹிக்கிறேமோ, அப்படியே இந்த ரூபமும் ச்ருதியில் பர ப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபக தர்மமாகக் கூறப்பட்டிருக்கிறபடியால் இதையும் அந்தப் பர ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் போல நித்யமென்றே நாம் க்ரஹித்தல் வேண்டும்' என்

ப்ராஜ்ஞ: — இதற்கு 'விபஸ்சித்' என்பது பொருளாகையால், 'விபஸ்சித்' என்று மற்ரேரிடத்தில் வ்யக்தமாகக் குறிக்கப்படும் ப்ரஹ்மமே [ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதா' என்பதில் நோக்கு] இவ்விடத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகின்றது. அம்மாதிரியே 'ஸர்வஜ்ஞ:' என்னும் சப்தத்திலும் 'ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்' என்பதைக் கவனித்தல் வேண்டும்.

ரூபாகாரமேவாதேஸாத் — இதற்கு 'ரூபாகாரமேவேத்யவதேஸாத்' என்பதில் நோக்கு.

தத்வதநாதாத் — சில கோசங்களில் 'தத்வதஸாத்' என்னும் ஒரு பாடாந்தரம் காணப்படுகின்றது. அந்தப் பாடத்தில் அர்த்தம் யாது என்பது விளங்கவில்லை.

ஸ்வரூபதயா நிர்தேசாத் — இதற்கு 'ஸ்வரூபமாக நிர்த்தேசிக்கப்

பபூதமேவ | பாஷ்யகாரேண தத்வ்யாக்யாதம் — "ந வா மாயாமாத்ரம், அஞ்ஜஸைவ விச்வஸ்ருஜோ ரூபம்; தத்து ந சக்ஷுஷா க்ராஹ்யம், மநஸா த்வகலுஷேண ஸாதநாந்தரவதா க்ருஹ்யதே 'ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா; மநஸா து விசுத்தேந' இதி ச்ருதே: | ந ஹ்யரூபாயா தேவதாயா ரூபோபதேசோ ஸ்தி; யதாபூதவாதி ஹி சாஸ்த்ரம்; 'மஹாரஜதம் வாஸ:', 'ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்' இதி ப்ரகரணாந்தரநிர்தேசாச்ச ஸாக்ஷிண:" இத்யாதிநா | "ஹிரண்மய இதி-ரூபஸாமாந்யாத்

பதே. [த்ரமிடாசார்யராகிய] பாஷ்யகாரராலும் இது இவ்விதமே வ்யாக்யாநம் செய்யப்படிருக்கின்றது. 'ஜகத் ஸ்ரஷ்டாவினுடைய இந்த ரூபம் இந்த்ரஜால வஸ்துக்கள் போல மாயையால் செய்யப்பட்டதன்று. அது இந்த மாம்ஸக் கண்ணுல் பார்க்கப் படமாட்டாது; வேறு ஸாதநங்களுடன் கூடிய சுத்தமான மநஸ்ஸால் மாத்ரம் அது க்ரஹிக்கப்படக்கூடும். "ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா" [அது கண்ணுக்கு எட்டாதது; வாக்குக்கும் எட்டாதது] "மநஸா து விசுத்தேந" [விசுத்தமான மநஸ்ஸால் மாத்ரம் அதை க்ரஹிக்கலாம்] என்று ச்ருதிகளும் சொல்லுகின்றன. ரூபமற்ற தேவதைக்கு ரூபமுண்டென்று ச்ருதி ஒரு காலும் உபதேசிக்க மாட்டாது; ஏனென்றல் ச்ருதி வஸ்துக்களை உள்ளபடியே உபதேசிக்கின்றதன்றே? "மஹாரஜதம் வாஸ:" [அவனுடைய வஸ்த்ரம் மஹாரஜத வர்ணத்தை உடையது] "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" [ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டுள்ள ஒரு ஸ்தாந விசேஷத்தில் ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை உடையவனாக அவன் ப்ரகாசிக்கிறான்] என்று வேறு ப்ரகரணங்களில் ச்ருதி செய்யும் நிர்த்தேசங்களும் இதற்கு ஸாக்ஷிகள். நிற்க, "ஹிரண்மய இதி-ரூபஸாமாந்யாத் சந்த்ரமுகவத்" [ஹிரண்மய' என்னும் சப்தத்திற்கு 'ஸ்வர்ணத்தால் செய்யப்பட்ட' என்பது பொருளன்று; 'ஸ்வர்ணம்போல உஜ்வலமாயிருக்கிற' என்பது மாத்ரம் அதன் பொருள். ரூபம் ஸமாநம் என்பதில் மாத்ரம் நோக்கு. சந்த்ர முகம்' என்னு மிடத்திற்போல] என்பதும் வாக்ய காருடைய வாக்யம். இதை வ்யாக்யாநம் செய்யுமிடத்தில் த்ரமிடாசார்யர் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிருர் — 'ஹிரண்மய என்னும் சப்தத்தில் காணப்படும் 'மயட்' என்னும் ப்ரத்யயம் விகாரார்த்

பட்டிருக்கிறபடியால்' என்று பொருள் தோன்றக்கூடும். அது ஜ்ஞாநம் முதலியவைகள் விஷயத்தில் விருத்த மாகையால், 'ஸ்வரூபநிரூபகதயா நிர்தேசாத்' என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

ஹிரண்மய: — இது ச்ருதியில் காணப்படும் சப்தம். இதற்கு 'ஹிரண்யத்தால் செய்யப்பட்ட' என்பது பொருளன்று. ஹிரண்யம் போல ஜ்வலித்துக் கொண்டிருக்கும்' என்பதே பொருள். முதலில் கூறப்பட்டுள்ள பொருள் விருத்தமாகையால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஸ்தி2ஸம்ப4வ:” இதி ச வாக்யாத் | தத்ர வ்யாவ்ருத்தி:—“ந ச யத்ர விகாராதா4ய ப்ரயுஜ்யதே; அநாரோப்யத்வாதா4நு:” இதி | யதா2 ஜ்ஞாநாதி3கல்யாணகு3ணாநந்த்ய நிர்தே3ஶாத் ஸ்வாபா4விக கல்யாணகு3ணவிஶிஷ்டம் பரம் ப்3ரஹ்மேத்யவக3ம்யதே, ததா2தி3த்யவர்ணாதி3 ரூபநிர்தே3ஶாத் ஸ்வாபா4விக ஸ்வாஸாதா4ரண தி3வ்யரூபவிஶிஷ்டஶ்ச பரப்3ரஹ்மபூ4த: புருஷோத்தமோ நாராயண இதி ஜ்ஞாயதே |

ததா2 ‘அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ’ ‘ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ’ ‘ஸதா3 பஶ்யந்தி ஸூரய:’ ‘தமஸ: பரஸ்தாத்’ ‘க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே’ இத்யாதி3நா பத்நீபரிஜந ஸ்தா2நாதீ3நாம்

தத்தை [அதனுல் செய்யப்பட்ட என்னும் அர்த்தத்தை] குறிக்கவில்லை; ஏனென்ருல் விக்ஹாரத்துடன் கூடியுள்ள ஆத்மா அம்மாதிரி உண்டுபண்ணக் கூடியதன்ருகையாலே? ஜ்ஞாநம் முதலிய கல்யாண குணங்களின் எல்லையற்ற இருப்பைச் சொல்லும் ச்ருதி வாக்ய பலத்தால், பர ப்ரஹ்மத்தைக் கல்யாண குணங்களுடன் கூடியதென்று நாம் எப்படி அறிகின்ருேமோ, அப்படியே ‘ஆதித்ய வர்ணம்’ என்பது முதலிய ச்ருதி நிர்த்தேச பலத்தைக்கொண்டு, பர ப்ரஹ்மமாயும் புருஷோத்தமனுயும் இருக்கிற நாராயணன் தனக்கு அபிமதமாயும் தனக்கு அநுரூபமாயுமுள்ள ஒரு ரூபத்துடன் கூடியிருக்கிருனென்றும் அறிதல் வேண்டும்.

ததா2ஸ்யேஶாநா...“அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ” [விஷ்ணுவின் பத்நி இந்த ஜகத் முழுவதற்கும் ஈச்வரீ.] ‘ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ” [பூமியும் லக்ஷ்மியும் உன்னுடைய பத்நிகள்] ‘ஸதா3 பஶ்யந்தி ஸூரய:” [நித்ய ஸூரிகள் எப்பொழுதும் பார்த்திருக்கிருர்கள்] “தமஸ: பரஸ்தாத்” [ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்புறத்தில் (அவனுடைய ஸ்தானம் இருக்கின்றது)] “க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே” [இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டு வஸித்துக்கொண்டிருக்கும்] இவை முதலிய ச்ருதி வாக்யங்களாற் செய்யப்படும், நிர்த்தேசத்தைக் கொண்டே பகவானுக்குப் பத்நிகள் உண்டென்றும், பரிஜனங்களுண்

யதா2 ஜ்ஞாநாதி3—இவ்விடத்தில் சொல்லப்படும் ந்யாயம் இதுவே—‘ எது ப்ராமாணிகமோ அது அது அங்கீகரிக்கப்படத்தக்கது. ஜ்ஞாநம் முதலிய கல்யாண குணங்கள் ப்ராமாணிகங்கள்; அப்படியே ரூபமும் ப்ராமாணிகம். இப்படி இருக்கையில் இவைகளுள் ஒன்றை மாத்ரம் அங்கீகரித்து மற்ருென்றை அங்கீகரியாமல் விடுவது ந்யாயத்திற்கு ஒத்ததாக மாட்டாது ’ என்பதுதான்.

ததா2ஸ்யேஶாநா—வாக்ய காரரும் பாஷ்யகாரராகிய த்ரமிடாசார்யரும், ரூபத்தை ஸமர்த்தித்திருக்கிருர்கள். அவர்களால் சொல்லப்பட்டுள்ள ந்யாயம் பத்நீ பரிஜநங்கள் முதலிய விஷயங்களிலும் அந்வயிக்குமாதலால், அவைகளையும் அவர்கள் தமது கருத்தில் கொண்டிருக்க வேண்டுமென்று இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது.

நிர்தே3ஶாதே3வ தத்தே3வ ஸஞ்ஜ்ஞாயதே | யதோ2க்தம் பா4ஷ்யகாரை: “யதா2பூ4தவாதி3 ஹி ஶாஸ்த்ரம்” இதி | அத்ரோக்தம் ப4வதி—யதா2 ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்3ரஹ்ம’ இதி நிர்தே3ஶாத் பரஸ்ய ப்3ரஹ்மண: ஸ்வரூபம் ஸகலஹேயப்ரத்யநீகாநவதி4காநந்தைகதாநதயா அபரிச்சே2த்3யதயா ச ஸகலேதரவிலக்ஷணம் அவக3ம்யதே, யதா2ஸ்ய ‘யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்’ ‘பராஸ்ய ஶக்திர்விவிதை4வ ஶ்ரூயதே ஸ்வாபா4விகீ ஜ்ஞாநப3லக்ரியா ச’ ‘தமேவ பா4ந்தமநுபா4தி ஸர்வம்

டென்றும் ஒரு ஸ்தாந விசேஷமுண்டென்றும் நாம் அறிதல் வேண்டும். ‘யதா2பூ4தவாதி3 ஹி ஶாஸ்த்ரம்” [உள்ளபடியன்ருே சாஸ்த்ரம் சொல்லுகிறது?] என்று பாஷ்யகாரர் சொல்லியிருக்கிருர் ஆகையால் நாம் அறியவேண்டியது இதுதான்—‘ பரமாத்மாவின் ஸ்வரூபமானது ஸகல ஹேய ஸம்பந்தமற்றும் எல்லையிராத ஆநந்தத்திற்கு இருப்பிடமாயும் ஒருவித அளவுக்கும் உட்படாததாயும் இருக்கிறபடியால் மற்றை ஸகல வஸ்துக்களைக் காட்டிலும் அது விலக்ஷணமென்று நாம் எப்படி ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்3ரஹ்ம” என்னும் ச்ருதி நிர்த்தேசத்திலிருந்து அறிகின்ருேமோ, அந்த ப்ரஹ்மத்தின் குணங்களெல்லாம் எல்லையுமற்றவை எண்ணிக்கையுமற்றவையென்றும் மற்றை வஸ்துக்களில் காணப்படும் குணங்களைக் காட்டிலும் விலக்ஷணங்கள் என்றும் “யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்”, “பராஸ்ய ஶக்திர்விவிதை4வ ஶ்ரூயதே ஸ்வாபா4விகீ ஜ்ஞாநப3லக்ரியா ச”, “தமேவ பா4ந்தமநுபா4தி ஸர்வம் தஸ்ய பா4ஸா ஸர்வமித3ம் விபா4தி” என்னும் இவை முதலிய ச்ருதி நிர்த்தேசங்களிலிருந்து நாம் எப்படி அறிகின்ருேமோ, அப்படியே “ஆதி3த்யவர்ணம்” என்பது முதலான நிர்த்தேசங்களிலிருந்து பகவானுக்கு ரூபம் உண்டென்றும் பரிஜநங்கள் இருக்கிருர்களென்றும் ஸ்தாநவிசேஷம் முதலியவை

அத்ரோக்தம் ப4வதி—கீழ்ல் “யதா2 ஜ்ஞாநாதி3” என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் உபபாதிக்கப்படும் விஷயமே மறுபடியும் இவ்விடத்தில் சொல்லப்படுவது போலத் தோன்றும். கீழ்ல் ‘ கல்யாண குணங்கள் எப்படி ப்ராமாணிகங்களோ, அப்படியே ரூபமும் ப்ராமாணிக மாகையால் இதுவும் அங்கீகரிக்கப்பட வேண்டும் ’ என்று சொல்லப்பட்டது. ‘ கல்யாண குணங்களையும் நாங்கள் ப்ராமாணிகங்களாக ஒத்துக் கொள்ளவில்லை ’ என்று வாதிப்பவர்களுக்காக இந்த வாக்யம். இதில் சொல்லப்படும் விஷயமாவது—‘ நீங்கள் பகவத் ஸ்வரூபத்தை அங்கீகரித்து, கல்யாண குணங்களை அங்கீகரியாமல் இருப்பது சரியன்று; ஏனென்ருல் ஸ்வரூபம் ப்ராமாணிகமாக இருப்பது போல, குணங்களும் ப்ராமாணிகங்களே ’ என்பது தான். ஸ்வரூபத்தையும் ப்ராமாணிகமாக ஒத்துக் கொள்ளாதவரும் உளர். அவர்களுக்கு “வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்” என்று ஆரம்பிக்கும் மேல் க்ரந்தத்தால் ஸமாதாநம் சொல்லப்படுகின்றது.

ஔத்பத்திக:—உத்பத்தியாலேயே ஏற்பட்டது; அதாவது ‘ ஸ்வாபாவிகம் ’ என்று சொன்னதாயிற்று.

தஸ்ய ஸாவா ஸர்வவிஜ்ஞாநம் விஹாதி' இத்யாதிநிர்தேஶாச்ச நிரதிஶயாஸங்க்யேயா கல்யாணகுணாஃ ஸகலேதரவிலக்ஷணாஃ; ததா ஶ்ருதிஷு' இத்யாதிநிர்தேஶாச்ச ஸர்வவஸ்துவிஜாதீயஸ்ய ஸகலேதரவிலக்ஷணாஃ ஸ்வாபாவிகாநந்தநிரதிஶயாஸங்க்யேய ஸ்வாபாவா இதி ।

வேதாஃ ப்ரமாணம் சேத் விதியர்த்தவாதமந்த்ரகதம் ஸர்வமபூர்வமவிரோதி ஜாதம் யதாவஸ்திதமேவ போதயதி । ப்ராமாண்யம் ச வேதாநாம் 'ஔத்பத்திகஸ்து ஶப்தஸ்யார்த்தேந ஸம்பந்தஃ' இத்யுக்தம் । யதா அக்நிஜலாதீநாம் ஔஷ்ண்யாதிஶக்தியோகஃ ஸ்வாபாவிகஃ, யதா ச சக்ஷுராதீந்த்ரியாணாம் புத்திவிஶேஷஜநநஶக்திஃ ஸ்வாபாவிகீ, ததா ஶப்தஸ்யாபி போதநஶக்திஃ ஸ்வாபாவிகீ । ந ச ஹஸ்தசேஷ்டாதிவத் ஸங்கேதமூலம் ஶப்தஸ்ய போதகத்வமிதி

உண்டென்றும் இவை யெல்லாம் மற்றை வஸ்துக்களில் காணப்படும் ரூபம் முதலிய வைகளைக் காட்டிலும் விலக்ஷணங்களென்றும் இவையெல்லாம் அவனுக்கே அஸாதார ணங்களென்றும் இவைகளின் ஸ்வரூபமும் ஸ்வபாவமும் ஒரு விதத்தாலும் நம்மால் இப்படிப்பட்டவை யென்று நிர்த்தேசிக்கக் கூடாதவை யென்றும் அறிகின்றோம்.

வேதாஃ ப்ரமாணம் சேத்—[அர்த்த வாதங்களாகிற வேத பாகங்களுக்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்ய மில்லையாதலால் ப்ரஹ்ம ஸ்வரூபமே ஒத்துக்கொள்ளத் தக்க தன்று என்று சங்கிப்பதும் யுக்தமன்று]. வேதங்களில் காணப்படும் விதி பாகங்களோ, அர்த்தவாத பாகங்களோ, மந்த்ர பாகங்களோ, இவையெல்லாம், வேறு ஸாதக ப்ரமா ணங்கள் இராமலும் மற்றை ப்ரமாணங்களுக்கு விரோதியாமலும் இருக்கும் வரையில், தம் தம்மால் குறிக்கப்பட்டுள்ள அர்த்தங்களை உள்ளபடியே அவை போதிக் கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. வேதங்களிலுள்ள சப்தங்களுக்கும் அவைகளால் போதிக்கப்படும் அர்த்தத்திற்கும் உள்ள ஸம்பந்தமும் இயற்கையாலேயே ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாம் அறிதல் வேண்டும். நெருப்பு ஜலம் முதலியவை களுக்கு உஷ்ணமாயிருப்பது முதலியவை போலவும், கண் முதலிய இந்த்ரியங்களுக்கு புத்தி விசேஷத்தை உண்டுபண்ணும் சக்தி இருப்பது போலவும், சப்தங்களுக்கு அர்த் தத்தைப் போதிப்பிக்கும் சக்தி ஸ்வபாவத்தாலேயே உண்டு. ஸங்கேதத்தால் சிற்சில கை ஜாடைகளுக்குச் சிற்சில அர்த்தங்களை நாம் ஏற்பாடு செய்து கொள்வதுபோல,

நநு ச—சப்தங்கள் ஸ்வபாவத்தாலேயே அர்த்தத்தைப் போதிக்குமாகில், ஏன் அந்தப் போதம் அவைகளுக்குப் பரஸ்பரமுள்ள ஸம்பந்த ஜ்ஞானத்தை அபேக்ஷித்து நிற்கின்றது? அப்படி அது அபேக்ஷித்து நிற்கிறபடியால், சப்தங்கள் ஸ்வபாவத் தாலேயே அர்த்தத்தை உணர்த்துகின்றன என்று சொல்வது அயுக்தமென்று ஏற்பட வில்லையோ? அது ஸங்கேதத்தாலேயே ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லவேண் டாமோ? இதுதான் இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபம்,

வக்தும் யுக்தம்; அநாதேரநவச்சிந்நாவிச்சேதேऽபி ஸங்கேதயித்ரு புருஷஜ்ஞாநாத் । யாநி ஸங்கேதக்ருதாநி தாநி ஸர்வாணி ஸாக்ஷாத் பாரம்பர்யேண வா ஜ்ஞாயந்தே । ந ச தேவதத்தாதிஶப்தவத் கல்பயிதும் யுக்தம், தேஷு ச ஸாக்ஷாத் பாரம்பர்யேண வா ஸங்கேதா ஜ்ஞாயந்தே । கவாதிஶப்தாநாம் து அநாத்யநவச்சிந்நாவிச்சேதேऽபி ஸங்கேதயித்ரஜ்ஞாநாதேவ போதகத்வஶக்திஃ ஸ்வாபாவிகீ । அக்நேர்தாஹகத்வாதிஶக்திவதிந்த்ரியாணாம் போதகத்வஶக்திவச்ச ஶப்தஸ்யாபி போதகத்வஶக்திராஶ்ரயணீயா ।

நநு ச இந்த்ரியவச்சப்தஸ்யாபி யதி போதகத்வம் ஸ்வாபாவிகம், ஸம்பந்தக்ரஹணம் போதகத்வாய கிமித்யபேக்ஷ்யதே? லிங்கவத் த்ரஷ்டவ்யதே । யதா ஜ்ஞாதஸம்பந்தநியமம் தூமாதி அக்ந்யாதிவிஜ்ஞாந

சப்தத்தின் சக்தி ஸங்கேதத்தால் ஏற்படுத்தப்பட்டதன்று. ஏனென்றால், அப்படி ஒரு ஸங்கேதம் எவனால் ஏற்படுத்தப்பட்டதென்று இப்பொழுது ஒருவராலும் அறியப் படவில்லையன்றோ? அதன் அநுஸந்தானம் அநாதிகாலமாய் எவ்வித பங்கமுமிராமல் அநுவர்த்தித்துக்கொண்டு வந்திருக்கிறபடியால, ஸங்கேதத்தை ஏற்படுத்தின புருஷ னுடைய ஜ்ஞானம் மறக்கப்பட்டுப் போய்விட்டது என்று சொல்வதும் ஸாத்யமில்லை. எவை எவை ஸங்கேதத்தால் ஏற்பட்டிருக்கின்றனவோ, அவை ஸம்பந்தப்பட்ட விஷயங்களெல்லாவற்றிலும் அந்த ஸங்கேதம் எவனால் ஏற்படுத்தப்பட்டது என்பது ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ அறியப்பட்டே இருக்கின்றது. '[ஒருவன் பெய ராக வழங்கிவரும்] தேவதத்தன் போன்ற சப்தங்களிற்போல, இவைகளிலும் நாம் ஒரு ஸங்கேதத்தைக் கல்பிக்கக் கூடாதோ?' என்று கேட்பதும் யுக்தமன்று. தேவ தத்தன் முதலிய பெயர்களிலும், ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ ஸங்கேதம் அறியப்பட்டே இருக்கின்றது 'கோ' (பசு) முதலிய சப்தங்கள் விஷயத்திலோ வென்றால், அநாதி காலமாக அநுஸந்தானம் எவ்வித பங்கமுமிராமல் அநுவர்த்தித்து வந்துகொண்டிருக்கையிலும், ஸங்கேதத்தை ஏற்படுத்தினவன் எவனென்பது அறியப் படவில்லை ஆகையால் அந்தச் சப்தங்களில் காணப்படும் அர்த்த போதகத்வ சக்தி ஸ்வபாவ ஸித்தமென்றே சொல்ல வேண்டும். ஆகையால் நெருப்பினிடத்தில் காணப் படும் எரிக்கும் சக்தி போலவும், இந்த்ரியங்களில் காணப்படும் புத்திவிசேஷ போத கத்வ சக்தி போலவும், சப்தத்தில் காணப்படும் அர்த்த போதகத்வ சக்தியும் ஸ்வபாவ ஸித்தமென்பதே ஸித்தம்.

யதா தூமாதி—மலையில் புகை தெரிகிறபடியால் அவ்விடத்தில் அக்நியும் இருக் கின்றது என்று அறிவதற்கு, புகைக்கும் அக்நிக்குமுள்ள ஸம்பந்த ஜ்ஞானம் அவச்யம் வேண்டுமென்றோ? அது போலவே இவ்விடத்திலும். இவ்விடத்தில் வேறு ஒரு த்ருஷ் டாந்தமும் சொல்லலாம். இந்த்ரியங்களுக்குப் பதார்த்தங்களை அறிவிக்கும் சக்தி இயற் கையாக இருக்கையிலும், அவை வெளிச்சம் முதலானவைகளை அபேக்ஷித்து நிற்கின் றனவன்றோ? அதுபோலவே இவ்விடத்தில் ஸம்பந்த ஜ்ஞானம் உதவுகின்றது.

ஜநகம், ததா ஜ்ஞாதஸம்பந்தநியம: ஶப்தோऽபி கஸ்யசித்விஶேஷ
புத்திஜநக: | ஏவம் தர்ஹி ஶப்தோऽப்யர்த்தவிஶேஷஸ்ய லிங்க
த்வாதநுமாநமேவ ஸ்யாத் | நைவம், ஶப்தார்த்தயோ: ஸம்பந்தோ
போத்யபோதகபாவ ஏவ, தூமாதீநாம் து ஸம்பந்தாந்தர
மிதி தஸ்ய ஸம்பந்தஸ்ய ஜ்ஞாநத்வாரேண புத்திஜநகத்வமிதி
விஶேஷ: | ஏவம் க்ருஹீதஸம்பந்தஸ்ய போதகத்வ தர்ஶநாச்
சநாத்யநவஸ்யாநாவிச்சேதேऽபி ஸங்கேதாஜ்ஞாநாச் போதகத்வ
ஶக்திரேவேதி நிஶ்சீயதே | ஏவம் போத்யகாநாம் பதஸங்காதாநாம்

இவ்விதம் இந்த்ரியங்கள்போல சப்தங்களும் ஸ்வபாவத்தாலேயே அர்த்தத்தை
உணர்த்தும் சக்தியை உடையவையானல், அப்படி அவை அர்த்தத்தை
தில் தமக்கும் தமது அர்த்தத்திற்குமுள்ள ஒருவித ஸம்பந்த ஜ்ஞானத்தையும் சார்ந்து
நிற்பது ஏன்? என்றால், 'லிங்கத்தில் தென்படுவது போலவே இவ்விடத்திலும்' என்
பதே அதற்கு ஸமாதானம். அதாவது —புகையைப் பார்த்தவுடன் அந்தப் புகையிருக்கு
மிடத்தில் நெருப்புமிருக்கின்றது என்று அறிவதற்கு, புகைக்கும் நெருப்புக்கும் உள்ள
ஸம்பந்த நியமத்தின் ஜ்ஞானம் எப்படி அபேக்ஷிதமோ, அப்படியே ஒரு சப்தத்தைக்
கேட்டவுடன் அதன் அர்த்தம் ஸ்புரிப்பதற்கும் அந்தச் சப்தத்திற்கும் அதன் அர்த்தத்
திற்கு முள்ள ஸம்பந்த நியமத்தின் ஜ்ஞானம் அபேக்ஷிதமே என்பது தான். 'அப்
பொழுது சப்தத்திற்கு அர்த்தம் தோன்றும் பொழுது ஏற்படும் தோற்றமெல்லாம், ஹே
துவைக்கண்டு அநுமானம் செய்வதுபோல அநுமானமே ஆகிவிடுமன்றோ?' என்று சங்கிக்க
லாம். அப்படி இல்லை; சப்தத்திற்கும் அர்த்தத்திற்கு முள்ள ஸம்பந்தம் ஒரு வகைப்பட்
டது, ஹேதுவுக்கும் ஸாத்யத்திற்கு முள்ளது வேறு வகைப்பட்டது. ஒருவித ஸம்பந்த
ஜ்ஞானத்தின் வழியாக புத்தி உண்டாகின்றது என்பது மாத்ரம் இரண்டு இடங்களிலும்
ஸமானம். இவ்விதம் ஸம்பந்தம் அறியப்பட்டவுடன் சப்தங்கள் அர்த்தத்தைப் போதி

ஏவம் தர்ஹி—இவ்விதம் சப்தமும் ஸம்பந்த க்ரஹணத்தை அபேக்ஷிக்
கும் பக்ஷத்தில், அப்பொழுது சப்தம் அர்த்தத்தை உணர்த்தும் பொழுதெல்லாம் அநு
மான வழியாகவே உணர்த்துகின்றதென்றன்றோ ஏற்படும்? அது சரியோ? இதற்கு
ஸமாதானமாவது-இவை இரண்டாலும் அபேக்ஷிக்கப்படும் ஸம்பந்த ஜ்ஞானங்கள் வேறு
பட்டவை, என்பதே. அநுமானத்தில் ஜந்ய ஜநக ஸம்பந்தமென்றும் சப்தத்தில் போ
த்ய போதக ஸம்பந்தமென்றும் அவைகளுக்குப் பரஸ்பரம் பேதம் சொல்லப்படும்.

ஏவம் க்ருஹீத—இப்படி எல்லா சப்தங்களுக்கும் போதகத்வ சக்தியானது
ஸ்வாபாவிகமாக இருந்தால், லௌகிக சப்த ராசிகளென்றும் வைதிக சப்த ராசிகளென்
றும் வழங்கி வரும் விபாகம் எப்படி ஏற்படுமென்றால், அது ஏற்படும் மாதிரியை விளக்
குகிறார்.

குத்தலை முழுது மானிடர் தொலைத்த
குரைகழ லரிபெழுந் தருளுந்
தொத்தழு தலங்கொடோறு மவனடியார்
தொகுதியிற் படர்ந்தவன் விறலை
யெத்திறத் தவரு முணர்ந்துயும் வகையே
யிசைத்தனர் தொழுதன ரிருந்தார். 55

ஆக சருக்கம் 6க்கு, செய்யுள் 259

குலசேகர ராழ்வார் வைபவம்

முற்றிற்று.

ஸ்ரீ:

விஷ்ணுசித்தர் வைபவம்.

வேறு.

முன்னோ ரந்தணன் முழுமடி மணந்த செந்தவத்தோன்
றன்ன தின்னவ லயின்ற தற்கவன் றனைத்தனத
னென்ன மின்ன வாங்கிரும் பொருளருளிய விறைவன்
பொன்னி னின்னடி மலர்சிர முடித்தனம் புகன்றே. 1

நாடெ லாமிக நசைகொளும் வழுதி நாடதனிற்
பாட லாம்பல பகடுறுங் கவிஞரோர் நகர
மாட லார்திரு வில்லி புத்தூரென வதனை
மாட லாம்பொழின் மலர்மணங் கமழ்ந்தெழுந் தினமும். 2

வல்லி நுண்ணி டையரம் பையர்வதியு மங்ககரும்
வில்லி புத்தூரின் விழுமிதிக் குடைந்துளம் வெட்கி
வில்லி லின்பிறை வேணிய ஜெரித்த தன்றென்றுற்
சொல்லி யெங்கதன் முடிவுறுஞ் சொலற்கரும் பணையே. 3

ஓங்கு மாமணி மாடமீ துலவறக் குழலார்
பாங்கி னனை மதியிள முறுவலிற் படரும்
பூங்க திர்த்திர ளிலவினிற் புனிதவிண் ணதியார்
தேங்கொ ளின்குமு தம்பல தெளிவுற மலரும். 4

ஸம்ப³ந்த⁴விஶேஷபோ³த⁴கத்வேந வாக்யஶப்³தா³பி⁴தே⁴யாநாமுச்சா
ரணக்ரமோ யத்ர பத³வ்யஷ்டிவ்யபதே³ஶா:, தே வர்ணவிஶேஷா:
ஶ்ருத்யா உச்யந்தே; யத்ர ச கேநசிது³ச்சாரணக்ரமே பூர்வபூர்வோச்சா
ரணக்ரமஜநிதஸம்ஸ்காரபூர்வகா: ஸர்வதா³ ஸமாநோச்சாரயா
ஸ்ச, தே ச வேதா³ இத்யுச்யந்தே। அத ஏவ வேதா³நாமபௌரு
ஷேயத்வம் நித்யத்வம் ச, யத்பூர்வபூர்வோச்சாரணக்ரமஜநித ஸம்
ஸ்காரேண ததை²வ க்ரமவிஶேஷம் ஸ்ம்ருத்வா தேநைவ க்ரமேணோ

க்கிற படியால், அர்த்தப் போதகத்வ சக்தி ஸ்வாபாவிகமென்றும் அது ஒரு ஸங்கேதத்தை இட்டு ஏற்படவில்லை என்றும் நிச்சயிக்கப்படுகின்றது. ஸங்கேதம் செய்தவரின் ஜ்ஞானம் இருந்தாலன்றோ அது ஸங்கேதத்தை இட்டு ஏற்பட்டதென்று சொல்லக்கூடும்? அநுஸந்தானம் அநாதிகாலமாகத் தொடர்ந்து வந்திருக்கையிலும் அம்மாதிரி ஒரு ஸங்கேதாவின் ஜ்ஞானமும் தென்படவில்லையே.

இவ்விதம் சப்தங்கள் அர்த்தத்தை ஸ்வபாவத்தாலேயே உணர்த்துகிறபடியால் பல சப்தங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு 'வாக்யம்' என்று வ்யவஹரிக்கப்படும் பத ஸமூஹங்களும் தம்மால் குறிக்கப்படும் அர்த்தங்களுக்குப் பரஸ்பரம் இருக்கும் ஸம்பந்தத்தை முன்னிட்டு ஒரு ஜ்ஞான விசேஷத்தை உணர்த்தும். அந்தச் சப்தங்கள் ஒரு மநுஷ்யனுடைய புத்தி க்ரமப்படியாகச் சேர்க்கப்பெற்று அந்த க்ரமத்தில் உச்சரிக்கப்படும் பொழுது, அவைகளைப் பௌருஷேயங்களென்றும் (மனிதனால் ஏற்படுத்தப் பட்டவை என்றும்), அப்படி மநுஷ்யனுடைய புத்தியை முன்னிடாமல் அநாதிகாலமாக உச்சரிக்கப்பட்டு வரும் க்ரமத்தால் ஏற்படும் ஸம்ஸ்காரமடியாக அவை உச்சரிக்கப்பட்டு வந்தால் அப்பொழுது அவைகளை அபௌருஷேயங்களென்றும் அறிந்தவர்கள் சொல்வார்கள். வேதங்களென்று சொல்லப்படுமவையெல்லாம் இம்மாதிரி அபௌருஷேயங்களே. இந்தக் காரணத்தாலேயே வேதங்கள் நித்யங்களென்று சொல்லப்படுகின்றன. அதாவது, பூர்வம் பூர்வம் உச்சரிக்கப்பட்டு வந்த க்ரமத்தால் உண்டாகும் ஸம்ஸ்காரத்

அத ஏவ—வேத சப்த ராசிகளின் உச்சாரணம் பூர்வ நினைவை முன்னிட்டு ஏற்படுகின்றது என்று இருந்தாலும், இரண்டு சப்த ராசிகளும் புருஷாதீனங்களாக இருக்கிறபடியால், வேதத்திற்கு மாத்ரம் எவ்விதத்தில் அபௌருஷேயத்வம் சொல்லக்கூடுமென்றால், வேத சப்த ராசிகள் புருஷாதீனங்களாக இருக்கையிலும் புருஷ புத்தியை மூலமாக உடைத்தாயிராமல் இருப்பதாலேயே அவைகளுக்கு அபௌருஷேயத்வம் சொல்லப்படுகின்றது என்பது இவ்விடத்தில் விளக்கப்படுகின்றது.

நித்யத்வம்—இந்த நித்யத்வம், பதங்கள் நித்யங்களாக இருப்பதையாவது அக்ஷரங்கள் நித்யங்களாக இருப்பதையாவது குறிக்கவில்லை; பத நித்யத்வமாவது வர்ண நித்யத்வமாவது அபௌருஷேயமாயிருப்பதற்கு ப்ரயோஜநமென்று சொல்லும் பக்ஷத்தில், மநுஷ்யர்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களும் அபௌருஷேயங்களாகத் திரியும். ஆகையால், அநாதிகாலமாக ஒரு ஆநுபூர்வியுடன் உச்சரிக்கப்பட்டு வருவதையே அது குறிக்கின்றது.

ஷ்யுச்சாரணாத் । தே ச அநந்தா அவிச்சிந்நவிஸேஷேண ஸம்ஹித அக்ஷராஸயோ வேதா: ருக்யஜுஸ்ஸாமாதர்வபேதபிந்நா அநந்த ஸாகா வர்தந்தே । தே ச வித்யர்த்தவாதமந்த்ரரூபா வேதா: பரப்ரஹ்மபூதநாராயணஸ்வரூபம் ததாராதநப்ரகாரம் ஆராதிதப்ராப்யபலவிஸேஷம் ச போதயந்தி । பரஸ்வரூபவச்ச தத்ஸ்வரூப ததாராதநதத்பலஜ்ஞாபகவேதாக்யஸப்தஜாதம் நித்யமேவ । வேதாநாமநந்தத்வாத் துரவகாஹத்வாச்ச பரமபுருஷநியுக்தா: பரமர்ஷய: கல்பே கல்பே நிகிலஜகதுபகாரார்த்தம் வேதார்த்தம் ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா வித்யர்த்தவாதமந்த்ரமூலாநி தர்மஸாஸ்த்ராணி இதிஹாஸபுராணாநி ச சக்ரு: । லௌகிகாஸ்ச ஸப்தா: வேதராஸேருத்த்ருத்யைவ தத்தத்பதார்த்தவிஸேஷநாமதயா பூர்வவத்ப்ரயுக்தா: பாரம்பர்யேண ப்ரயுஜ்யந்தே । நநு ச வைதிகா ஏவ ஸர்வே வாசகா: ஸப்தாஸ்சேத், சந்தஸ்யேவம் பாஷாயாமேவேதி லக்ஷணபேத:

தைகொண்டு அந்த க்ரமத்தை நினைத்து நினைத்து அந்த க்ரமப்படி உச்சரிக்கப்படுவதே அபௌருஷேயத்வம், அதுவே நித்யத்வமென்று சொன்னதாயிற்று. இப்படிப்பட்ட க்ரம விசேஷத்துடன் நிற்கும் அக்ஷரக் கூட்டங்களாகிற வேதங்கள் ருக் யஜுஸ் ஸாம அதர்வங்களென்று நாலு வகைப்படும்; ஒவ்வொரு வகையிலும் அனந்தங்களான சாகைகளுண்டு. ஒவ்வொரு வேதத்திலும் விதியென்று சில பாகங்களும் அர்த்த வாதங்களென்று சில பாகங்களும் மந்த்ரங்களென்று சில பாகங்களும் உண்டு. இவையெல்லாம் பர ப்ரஹ்மமாகிற நாராயணனுடைய ஸ்வரூபத்தையும், அவனை ஆராதிக்கும் முறைகளையும், அப்படி ஆராதிக்கப்படும் அவனிடமிருந்து நாம் அடையும் பல விசேஷங்களையும் போதிக்கின்றன. அப்படி நித்யமான பரம புருஷனைப் போதிக்கிறபடியால், அந்தப் பரம புருஷன் போல அவனுடைய ஸ்வரூபம் முதலியவற்றைப் போதிக்கும் சப்தங்களும் நித்யங்களே. ஆனால், இந்த வேதங்கள் அனந்தங்களாகவும் ஸுலபமாக அறியக்கூடாதவைகளாகவும் இருக்கிறபடியால், பரம புருஷனாகிற நாராயணனால் ஏவப்பட்டவர்களான சில மஹர்ஷிகள், ஒவ்வொரு கல்பத்திலும் வேதங்களின் பாகங்களாகிற விதி அர்த்தவாதம் மந்த்ரம் இம் மூன்றுகளிலும் சொல்லப்பட்டுள்ள அர்த்தங்களை ஸகல ஜனங்களுடைய நன்மையையும் உத்தேசித்து தர்ம சாஸ்த்ரங்களென்றும் இதிஹாஸங்களென்றும் புராணங்களென்றும் பல க்ரந்தங்களால் விவரித்திருக்கிறார்கள். லோகத்தில் ஜனங்களுக்குள் நித்ய வ்யவஹாரங்களில் வழங்கிவரும் சப்தங்களும்

ருக்யஜுஸ்ஸாமாதர்வபேதபிந்நா:—ருக் யஜுஸ் ஸாமம் அதர்வம் என்று வேதங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால் அவைகள் முடிவற்றவை என்று எப்படி சொல்லக்கூடுமென்றால், இவ்விதம் நான்கு பிரிவாக அவை இருந்த போதிலும் ஒவ்வொரு பிரிவிலும் அவை அனந்தங்களான சாகைகளை உடைத்தாயிருக்கிறபடியால் அவை அனந்தங்களாகக் கூடுமன்றோ?

வேதார்த்தம் ஸ்ம்ருத்வா—வேதங்களின் அர்த்தங்களை,

கதமுபபத்யதே । உச்யதே-வைதிகா ஏவ ஸப்தா: தஸ்மாதேவ வாதாவருவ்யூரம் வக்ஷ்யமாணம் தமேவ ப்ரயோகம், அந்யத்ர ப்ரயுஜ்யமாநாநாமந்யேதி ந கஸ்சித்தோஷ: ।

ஸேதிஹாஸபுராணதர்மஸாஸ்த்ரோபப்ருஹ்மிதஸாங்கஸவேதவேத்ய: பரப்ரஹ்மபூதோ நாராயணோ நிகிலஹேயப்ரத்யநீக: ஸகலேதரவிலக்ஷணோऽபரிமிதஜ்ஞாநாநந்தைகஸ்வரூப: ஸ்வாபாவிகாநவதிகாதிஸயாஸங்க்யேயகல்யாணகுணா

வேத ராசியிலிருந்தே எடுக்கப்பட்டு சிற்சில பொருளைக் குறிக்கின்றனவாக பரம்பரையாய் முன் போலவே ப்ரயோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விதம் எல்லா வாசக சப்தங்களும் வேதங்களிலிருந்தே எடுக்கப்பட்டவையாக இருந்தால், வைதிக சப்தங்களுக்கும் லௌகிக சப்தங்களுக்கும் லக்ஷண பேதம் சொல்வது உபபன்னமாகுமோ? சாஸ்த்ரங்களில் அவைகளுக்கு லக்ஷண பேதம் சொல்லப்பட்டிருக்கின்றதே. அதிலிருந்து அவைகளுக்குச் சப்த பேதமும் உண்டென்று ஏற்படவில்லையா? என்றால், அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகின்றது. வேதங்களில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள சப்தங்களுக்கும் லோகத்தில் வழங்கிவரும் சப்தங்களுக்கும் லக்ஷண பேதமுண்டு; அது அவை தென்படும் க்ரம பேதத்தைச் சார்ந்ததே ஒழிய, சப்த பேதத்தைச் சார்ந்ததன்று.

ஸேதிஹாஸ... இவ்வாறு இதிஹாஸம் புராணம் தர்ம சாஸ்த்ரம் இவைகளால் உபப்ருஹ்மிதங்களான ஸாங்க வேதங்களால் ப்ரதி பாதிக்கப்படும் பர ப்ருஹ்மமாகிற நாராயணன் ஸகலஹேய பதார்த்தங்களுக்கும் ப்ரதி படனென்றும், தன்னைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணனென்றும், அளவற்ற ஜ்ஞானத்தையும் ஆநந்தத்தையும் ஸ்வரூபமாக உடையவனென்றும், ஸ்வபாவத்தாலேயே ஏற்பட்டவைகளாகவும் எல்லையிராத மேன்மையை உடையனவாகவுமான எண்ணிக்கையற்ற கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிட மென்றும், தனது ஸங்கல்பத்தைச் சார்ந்திருக்கும் ஸ்வரூப

விளக்குமவைகளாக உபப்ருஹ்மணங்கள் என்னும் பெயருடன் சில க்ரந்தங்கள் தென்படுகின்றனவே. அப்படி வேதங்கள் உபப்ருஹ்மணங்களை அபேக்ஷித்து நின்றால், அவைகளுக்கு நித்யத்வம் எவ்விதம் சொல்லக்கூடும்? என்று ஒரு ஆக்ஷேபமுண்டு. வேதங்கள் அனந்தங்களாகவும் ஸுலபமாக விளங்காதவைகளாகவும் இருக்கிறபடியால் மாத்ரம் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்கள் தேவையாக இருக்கின்றன; ஆகையால் அந்தக் காரணத்தைக் கொண்டு அவைகளுக்கு அநித்யத்வம் சொல்வது ஸாத்யமில்லை என்பதே இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்.

ஸேதிஹாஸ... இந்த ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட விஷயங்களை இவ்விடத்தில் ஸங்க்ரஹித்துச் சொல்லுகிறார்.

அநந்தமஹாவிபூதி—இந்தப் பதம் நித்ய விபூதியைக்குறிக்கின்றது. அது அனந்தமாக இருப்பதாவது அது எவ்வித அழிவுமிராமல் நித்யமாக இருப்பதே. அடுத்துவரும் "நாநாவித" இத்யாதியான பதம் லீலாவிபூதியைக் குறிக்கின்றது.

ஸ்ரீ:

நவநீதம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி, முத்திரிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத்தின்கண் உள்ள வேதசாஸ்திர பாரங்தர்களான பண்டித சிரேஷ்டர் பலராலும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அநேகராலும், பலபடியாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ஒருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்றுதொட்டு பிரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், பௌத்தம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங்களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அருளப்பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பலவற்றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனாகப் பக்ஷபாதமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களையெல்லாம் இருபாலாரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத்தைக் கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத்தினரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்றனர். சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட்டில் இதுகாறும் உண்டாகியதே யில்லையென்று கொட்டியாகக் கூறிவிடலாம். இத்தகைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. புத்தகம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸில் ஸுமார் 400 பக்கங்கள் கொண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து கீர்த்தியாகக் காலிகோ பயிண்டு செய்து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ 3 தான். வேண்டியவர்கள் "ரா. வரதாசார்யர், B. A., L. T., ஸ்ரீ ஸதவித்யா புத்தகசாலை மானேஜர், 1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ்" என்ற விலாசத்திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை

அடியிற்கண்ட புஸ்தகங்கள் அவைகளுக்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள குறைந்த விலைக்கு விற்கப்படும். மணி ஆர்டர் மூலமாகவாவது வி. பி. மூலமாகவாவது பணத்தைச் செலுத்தலாம்.

1. பெரியாழ்வார் திருமொழி — பல்லாண்டு உள்பட வ்யாக்யாநத்துடன் (2 வால்யூம், 3 பௌண்ட்)	3	4	0
2. பெரிய திருமொழி—வ்யாக்யாநத்துடன் (3 வால்யூம்—பௌண்ட்)	3	0	0
3. திருவாய்மொழி—1 முதல் 9 பத்துக்கள்: 6000, 12000, பதவுரை (2 வால்யூம்—பௌண்ட்)	5	8	0
4. இயற்பாவில் சில (1 வால்யூம், பௌண்ட்)	1	0	0

ஏ. சேஷாசாரியர்,

சிங்குவார் அக்ரஹாரம், மவுண்ட் ரோட், மதிராஸ்.

Registered No. M. 916.

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ. 4
தனிப் பிரதி: அணா 6

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெருவு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30உ திகதியே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

27—5—34 மதராஸ்.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] SEPTEMBER 1934 [ஸஞ்சிகை 3

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 9-JAN 1935 MADRAS

பவ ௵ ஆவணி ௴

PUBLISHED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha,
MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 417
2. தேவாலயங்களும் அவைகளின் தூய்மையும்:—[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 423
3. அத்வைத ஸித்தாந்தமும், பகவத் பக்தியும்:—[வித்யாரத்நாகர வேதாந்த கேசரி ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசாரியர்.] ... 429
4. கடிதங்கள்:— ... 438
5. ஸம்பாதகீயம்:— ... 443
6 ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 37
7. திவ்ய ஸூரி சரிதம்:—[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 65
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 409

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தகோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] பவ ஸ்ரீ ஆவணி மீ [ஸஞ்சிகை. 3

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யார்.]

(தொடர்ச்சி ஸம். 23, ஸஞ் 2, 393 பக்கம்.)

30. (ii) “பிக, நேமி, தாமரஸ” என்கிற சொற்களுக்கு என்ன பொருள் என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—பெரியோர்கள் இவைகளை உபயோகப் படுத்தவில்லை. ம்லேச்சர்கள் சொல்லுவது ப்ரமாணமன்று. ஆகையால் நிருக்தத்தையும் வ்யாகரணத்தையும் கொண்டு பொருள் கல்பிக்கவேண்டியது.

ஸித்தாந்தம்:—வேதத்தில் ப்ரஸித்தி இல்லாத இடங்களில் ம்லேச்சர்கள் சொல்லுவதையும் ஒப்புக்கொள்ளலாம். அர்த்தம் புதிதாய் கல்பிப்பதைக் காட்டிலும் ஏற்பட்டிருக்கும் (ரூடி) பொருளே சிறம். புதிதாய் கல்பிக்கும்போது இன்னதுதான் பொருள் என்று ஒரு நிலை ஏற்படாது. இந்த சொற்களின் பொருள்:—பிகம்—கோகிலம். நேமி-பாதி. தாமரஸம்—தாமரைப் பூ. (அதி – 6)

31. பசுமாட்டுக்கு ‘கோ’ என்று வடமொழியில் பெயர். அந்தந்த தேசங்களில் அதற்குப் பதிலாக ‘காவீ’ கோணீ, கோவோதவிகா, என்னும் சொற்

[illegible]

தர்மாநுஷ்டாநத்துடன் சரிவர அப்யஸித்து, அந்த அப்யாஸத்தால் தனக்கு பகவானி டம் இருக்கும் ப்ரீதி முதிர்ச்சி அடைந்து, அந்தப்ரீதி எல்லையற்ற பெருமையுடன் கூடிய தாக ஆகவே தர்சந ஸமாநாகாரமான தெளிந்த பகவத் த்யாநமொன்று ஏற்படும். அந்த த்யாநம் நிலைபெற்று நின்றால் அதைப் பர பக்தி என்று சொல்வார்கள். ஆகையால் இந்தப் பக்தி என்பது ஒரு ப்ரீதி விசேஷம்; அந்த ப்ரீதியும் ஒரு ஜ்ஞாந விசேஷம்.

[illegible] ... ஆனால், 'ஸுகம் ப்ரீதி இந்த இரண்டும் ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் பதங்களல்லவோ? ஸுகம் என்பது ஒரு ஜ்ஞாந விசேஷத்தால் அடையக்கூடிய வேறொரு பொருளென்று லோகத்தில் சொல்லவில்லையா? அப்படி ஜ்ஞாநத்தின் கார்யமாயுள்ள ஸுகத்தை ஜ்ஞாநமே' என்று எவ்விதம் சொல்லக் கூடும்? 'என்று ஒரு ஆக்ஷேபம் இவ்விடத்தில் உதிக்கலாம். 'ஸுகம் ஜ்ஞாநத்தால் ஸாதிக்கப்படக் கூடியதாக இருந்தாலும் அது ஜ்ஞாநமே' என்று சொன்னால் அது அஸங்கதமே ஆகும். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. நாங்கள் சொல்வது என்னவென்றால்:- 'ஸுகம்' 'துக்கம்' 'ஸுகமும் துக்கமுமல்லாதது' இந்தச் சப்தங்களெல்லாம், தாம்தாம் ஸம்பந்தப்பட்டுள்ள விஷயங்களின்

[illegible]—பக்தி யோகத்தின் அப்யாஸம். '[illegible]' என்பது பகவானை அடைவதற்கு முன்னிருக்கும் அவஸ்தை.

[illegible]—'ஜ்ஞாநமன்றோ மோக்ஷத்திற்கு உபாயமாகவேண்டும்; அப்படி இருக்கையில், பக்தியை மோக்ஷோபாயமென்று சொல்வது எவ்விதம் உபபந்நமாகும்.' என்று ஒரு சங்கையைச் செய்துகொண்டு, அதற்கு ஸமாதாநமாக 'பக்தியும் ஒரு ஜ்ஞாந விசேஷமே' என்று சொல்லுகிறார்.

[illegible]—இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபமாவது—'பக்தி என்பது ஒருவித ப்ரீதியானால், ப்ரீதியும் ஸுகமும் ஒன்றாகையால், பக்தி என்பது ஒரு வித ஸுகமென்று ஏற்படுகின்றது. ப்ரீதியும் ஒரு ஜ்ஞாந விசேஷமாகையால், ஜ்ஞாந விசேஷமே ஸுகம் என்றன்றோ ஸித்திக்கும்! அது அநுபபந்நமாயிற்றே! ஏனென்றால், லோகத்தில் (வைசேஷிக மதஸ்தர்கள்) ஸுகத்தை ஜ்ஞாநத்தால் ஸித்திக்கும் வேறொரு பதார்த்தமென்றன்றோ சொல்லுகிறார்கள்?' என்பது தான். இதற்கு ப்ரத்யுத்தரம் 'ஜ்ஞாநத்தைக் காட்டிலும் வேறுபட்ட பதார்த்தமன்று ஸுகமென்பது; 'ஸுகமென்பது ஒருவித ஜ்ஞாநவிசேஷமே' என்பதுதான். இது தான் இவ்விடத்தில் உபபாதிக்கப்படுகின்றது.

[illegible]

ஜ்ஞாநங்களையே குறிக்கின்றன. அந்த ஸுகம் முதலியவைகளுக்குப் பரஸ்பரமுள்ள விசேஷங்களெல்லாம் அந்தந்த விஷயங்களையே சார்ந்திருக்கிறபடியால், அவைகள் அந்தந்த விஷயங்களுக்குத் தக்கபடி ஸுகமாயும் துக்கமாயும் ஸுகமும் துக்கமுமல்லாதவைகளாயும் ஆகின்றன. ஒரு விஷயத்தில் ஒருவன் ஸுகத்தை அநுபவிக்கும்பொழுது, அந்த விஷயத்தின் ஜ்ஞாநமே அவனுக்கு ஸுகமாகின்றதே தவிர, அந்த ஜ்ஞாநத்தைக்காட்டிலும் ஸுகமென்று வேறொரு வஸ்து உண்டாகின்றது என்பது இல்லை. ஒருவன் ஸுகியாக இருப்பதை அந்த விஷயத்தின் ஜ்ஞாநத்தைக் கொண்டே நிர்வஹிப்பதும் ஸாத்யமே.

[illegible]—இந்த ஸுகரூபமான ஜ்ஞாநமானது, ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களின் விஷயத்தில், ஒரு அளவுக்கு உட்பட்டதாகவும் சீக்ரத்தில் நசித்து விடுவதாகவும் இருக்கின்றது; ப்ரஹ்மத்தின் விஷயத்திலோ வென்றால் அது அளவற்றதாகவும் சாச்வதமாகவும் இருக்கின்றது. ச்ருதியும் '[illegible]' [ப்ரஹ்மம் என்பது ஆநந்தமே] என்று சொல்லுகின்றது. ஜ்ஞாநம் என்பது விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது; ஆகையால் ஸுக ரூபமாக இருக்கும் ப்ரஹ்மத்தை ஸுகமென்று சொல்வது அயுக்தமாக மாட்டாது. ச்ருதியும் '[illegible]' [அவன் ரஸமே] [illegible] [அப்படிப் பட்ட ரஸத்தை அடைந்த ஜீவன் ஆநந்தத்தைப் பெற்றவனாகிறான்] என்று சொல்லுகின்றது. ப்ரஹ்மம் ஸுகமாகிறபடியால் அந்த ப்ரஹ்மத்தை அடைந்து அவன் ஸுகியாகிறான் என்பது பொருள். பரம புரு

[illegible]—லோகத்தில் எது ஒருவனுக்கு ஸுகமாக இருக்கிறதோ, அது தனக்கும் ஸுகமாக இருப்பதை ஒருவரும் கண்டதில்லையே! ப்ரஹ்மமும் அம்மாதிரி பிறருக்கு மாத்ரம் ஸுகமாக இருக்கின்றதோ?' என்று சங்கித்துக் கொண்டு, 'அவ்விதம் இல்லை; ப்ரஹ்மம் பக்தர்களுக்கு ஸுகமாக இருக்கையில் தனக்கும் ஸுகமாக இருக்கின்றது' என்று சொல்லுகிறார். ப்ரஹ்மம் என்பது எவனுக்கு ஜ்ஞாந விஷயமாகின்றதோ அவனுக்கு அது ஸுகமாகவே இருக்கின்றது; தனக்கும் ஜ்ஞாந விஷயமாவதால் தனக்கும் ஸுகமென்பதில் ஆக்ஷேபமில்லை.

158953

களை உபயோகிக்கிறார்கள். இவைகளில் எது நல்ல சொல் என்று ஸந்தே
ஹம்.

பூர்வபக்ஷம்:—இந்த சொல் நல்லது, இது நல்லது அன்று என்று முடி-
வுசெய்ய வழியில்லை. பெரியோர்கள் ஆசாரத்தைக்கொண்டு முடிவு செய்ய
முடியாது. அந்த அந்த இடங்களில் பெரியோர்கள்தான் இவைகளை உப
யோகிக்கிறார்கள். வ்யாகரணமும், உபயோகப்படாது. அதற்கு மூலம்,
என்ன ? அது எப்படி ப்ரமாணமாகும் பெரியோர்கள் ஆசாரத்தைப்
பார்த்து அது எழுதப்பட்டதென்று சொல்ல முடியாது. வ்யாகரணம் ப்ர
மாணமானால் அதின்படி சொற்களை உபயோகப் படுத்துகிறவர்களை பெரி
யோர்கள் என்று சொல்லலாம்.

ஸித்தாந்தம்:—வ்யாகரணத்தைக் கொண்டே இந்த சொல் நல்லது.
இது நல்லது அன்று; என்று முடிவு செய்யவேண்டியது. வ்யாகரணத்துக்கு
மூலம், அதற்கு முன் வ்யாகரணம். அதற்கு மூலம் அதன்முன் வ்யாகரணம்.
இப்படி வரிசையாய் போகிறது. அதற்கு 'இது முதல்' என்பது கிடை
யாது. வ்யாகரணம் ப்ரமாணம் என்று வேதமே சொல்லுகிறது. (அதி-9)

32. வேதத்தின் சொற்களும், அவைகளின் பொருள்களும், உலகத்
தின் சொற்களையும் பொருள்களையும் காட்டிலும் வேறு, அல்லவா ? என்று
ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அவைகள் வேறு. எப்படிஎன்றால்—உலகத்தில் 'சூத்ரு'
'ப்ராஹ்மணா:' என்கிற சொற்கள் வழங்குகின்றன. வேதத்தில் 'த்ரா,
ப்ராஹ்மணாஸ:' என்கிற சொற்கள். அப்படியே ஒரே சொல்லுக்கு அர்
த்தத்திலும் வேறுபாடு எல்லாருக்கும் தெரிந்தது.

ஸித்தாந்தம்:—எது உலகத்தில் உள்ளதோ அதுவே 'வேதத்திலும்.
எழுத்துக்கள் அழிவில்லாதவைகளென்று கீழே சொல்லப்பட்டது. (பாரா
11) பதங்களும் எப்படி உலகத்தில் காணப்படுகின்றனவோ, அப்படியே
வேதத்திலும் காணப்படுகின்றன. இப்படித் தோன்றுவது பிசகு என்று
பிற்பாடு ஏற்படவில்லை. ஆகையால் உலகத்திலும் வேதத்திலும் பதங்கள்
ஒன்றுதான் என்று ஒப்புக்கொள்ளவேணும். பூர்வபக்ஷத்தில் காண்பித்த
வ்யத்யாஸங்கள் சில இடங்களில் தான் இருக்கின்றன. இதைக் கொண்டு
அநேக பதங்கள் ஒன்று என்று ஏற்படுவதை யில்லையென்று சொல்லமுடி
யாது. இப்படி பதங்கள் ஒன்றானால், அவைகளுக்கு அர்த்தமும் ஒன்று
என்று. கட்டாயம் ஒப்புக் கொள்ளவேணும். ஒப்புக்கொள்ளாவிட்டால்
வேதத்தின் சொற்களுக்கு அர்த்தத்தை அறியவழியில்லாமையால் வேதம்,

ப்ரமாணம் இல்லாமல் போய்விடும். உலகத்தில் இல்லாத சொற்கள் யூபம், ஸ்வரு, ஆஹவநீயம் முதலானவைகள், வேதத்தில் இருப்பதால் அவைகளுக்கு அர்த்தம் எப்படித் தெரியும் என்றால்-தெரிந்த பதங்களில் சேர்க்கையால் அவைகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளலாம். (அதி-10)

33. 'வ்ரீஹீந் அவஹந்தி' 'பசுமாலபேத' 'காமாநய' (நெல்லைக் குத்தவேண்டியது. பசுவை தேவதைக்காக உபகரணம் பண்ணு. மாட்டைக் கொண்டுவா.) என்கிற இடங்களில் 'வ்ரீஹீ, பசு, கோ,' என்கிற சொற்களுக்குப் பொருள் என்ன? ஆக்ருதியா, அல்லது வியக்தியா என்று ஸந்தேஹம். ஆக்ருதி என்பது ஒரே ஜாதி. வஸ்துக்களுக்குப் பொதுவான உருவமோ, குணமோ அல்லது வேறு அடையாளமோ. வ்யக்தி என்றால் அந்த வஸ்துக்கள்.

பூர்வபக்ஷம்:—வ்யக்திதான் பொருள், 'வ்ரீஹி' என்றும் சொல்லுக்கு வ்யக்தி பொருளானால் அதைக் குத்தலாம். ஆக்ருதியைக் குத்தலாமா? உபகரணம் பண்ணலாமா? கொண்டு வரலாமா?

ஸித்தாந்தம்:—பூர்வபக்ஷம் சொல்லுகிறவனைக் கேழ்போம் - வ்யக்தி பொருளானால் எல்லா வ்யக்திகளும் பொருளா? அல்லது சிலது மாத்ரமா? என்று. எல்லாவ்யக்திகள் என்று சொன்னால் அவைகளுக்குக் கணக்கில்லை. அவைகள் அநேக தேசங்களில் இருக்கின்றன. சிலது போன காலத்தில் இருந்தன. சிலது வருங்காலத்திலுண்டாகலாம். சில வ்யக்திகளைச் சொல்லுகின்றதென்றால் வெள்ளைமாட்டைச் சொல்லுகிற 'கோ' என்னும் சொல் கருப்புமாட்டைச் சொல்லாது. ஆகையால் சொற்கள் ஆக்ருதியைச் சொல்லுகின்றன. வ்ரீஹி என்னும் சொல் ஆக்ருதியைச் சொன்னால் அதை எப்படி குத்துகிறது என்றால்-லக்ஷணையினாலே அந்த சொல் அந்த ஆக்ருதியை உடைய வ்யக்தியைச் சொல்லுகிறது. (அதி - 10)

(2) 'ச்யேநசிதம் சிந்வீத' என்று ஒரு வாக்யமிருக்கிறது. அதின் பொருள்-கழுகைப் போலிருக்கும்படி சிதியைச்செய்ய வேண்டியது என்று. சிதியென்பது விக்ருதியான ஸோம யாகங்களில் உத்தர வேதியை இஷ்டகைகளாலே (கற்களாலே) ஒரு அடுக்கின்மேல் இன்னொரு அடுக்காகச்செய்யப்பட்டவைகளில் ஒரு அடுக்கு. மஹாசயநத்தில் ஐந்து சிதிகள் (அடுக்குகள்) இருக்கின்றன. இந்த வாக்யத்தில் ச்யேந சிதி என்பதற்கு (கழுகின்) ஆகாரம் போலிருக்கிற சிதி என்று பொருள். 'ச்யேந' என்றசொல் ஆகாரத்தைச் சொல்லுகிறது. வ்யக்தியைச் சொல்லவில்லை. (சாஸ்தி....)

முதல் அத்தியாயம்—நாலாவது பாதம்.

34. 'உத்பிதா யஜேத, வலபிதா யஜேத' என்று வேதத்தில் சில வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளில் உத்பித் முதலிய பதங்கள் தர்ம விஷயத்தில் ப்ரமாணமா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ப்ரமாணமன்று. ப்ரமாணங்களாக விதியும் அர்த்தவாதமும் மந்த்ரமும் சொல்லப்பட்டன. அவைகளில் ஒன்றிலும் இது சேரவில்லை. விதிக்குப் பொருள் 'பாவநா' என்று சொல்லப்படும் உண்டு பண்ணும் வேலை. அதில் மூன்று அம்சங்கள் (விஷயங்கள்) இருக்கின்றன. 'பாவ்யம்' (உண்டு பண்ணப்படுவது). கரணம் (உண்டுபண்ணுவதற்கு ஸாதகம்). 'இதி கர்த்தவ்யதா' (அதை எப்படி உண்டுபண்ணுவது) என்று, இவைகளில் ஒன்றிலும் அது சேரவில்லை. ஸ்தோத்ரம் பண்ணுததினாலே அர்த்தவாதமும் அன்று. அதற்கு சில அடையாளங்கள் உண்டு. அவைகளில் ஒன்றுமில்லை.

ஸித்தாந்தம்:—"உத்பித்" முதலான சொற்கள் ப்ரமாணங்கள் தான் விதியில் கரணம் ஓர் அம்சம். அதில் சேருகிறது. 'யஜேத' என்ற சொல்லில் 'யஜ' என்பது 'தாது'. அதின் பொருள் யாகம். 'ஏத' என்பது ப்ரத்யயம். அது 'பாவனை'யைச் சொல்லுகிறது. ஒரே பதத்தில் சேர்ந்திருப்பதால் யாகம் தான் கரணம். 'உத்பிதா' என்பது வேறுபதம். அது எப்படி கரணமாகும் என்றால் — யாகத்துக்குப் பெயராக இருந்துகொண்டு கரணமாகிறது. (அதி-1)

35. கீழ்பாராவில் "உத்பிதா யஜேத பசுகாம:" என்கிற இடத்தில் 'உத்பித்' என்கிற சொல் யாகத்தின் பெயர் என்று சொல்லப்பட்டது. இந்த அதிகரணத்தில் அது தீர்மானிக்கப் படுகிறது.

பூர்வபக்ஷம்:—(1) 'உத்பிதா' என்பதற்கு 'உத்பித்தாலே' என்று பொருள். அதனால் யாகத்துக்கு ஒரு த்ரவ்யம் விதிக்கப்படுகிறது. 'தத்நா ஜுஹோதி' என்கிற வாக்யத்தில் அக்நி ஹோத்ரத்துக்கு 'ததி' (தயிர்) ஒரு த்ரவ்யமாக விதிக்கப் படுகிறது. அதுபோல். (2) இங்கே ஒரு கேள்வி—ததி என்பது எல்லாருக்கும் தெரிந்தபொருள். 'உத்பித்' என்னும் சொல்லுக்குப் பொருள் அப்படி எல்லாருக்கும் தெரியாதே என்று. பதில் - எல்லாரும் ஒப்புக்கொண்ட பொருள் (ரூடி) இல்லாவிட்டாலும், அந்த சொல்லில் தாதுவையும் ப்ரத்யயத்தையும் கொண்டு அர்த்தத்தை அறியலாம். ஒன்றைப் பிளப்பதற்கு உதவும் பொருளென்று மண்வெட்டியை அந்தச் சொல் சொல்லுகிறது என்றுகொள்ளலாமே. (3) இன்னமொரு கேள்வி—பசு என்கிற பலனுக்கன்றோ, ஒரு யாகம் விதிக்கப்படுகிறது. எப்படி

ஒரு குணம் விதிக்கப்படுகிறதென்று சொல்லலாம் என்று. இங்கே குணம் என்றால் முக்யமல்லாத ஒரு வஸ்து. பதில்—பசுவானது யாகத்தின் பலனன்று. விதிக்கப்படுகிற குணத்தின் பலன். 'தத்நா இந்த்ரியகாமஸ்ய ஜுஹுயாத்' என்கிற இடத்தில் 'ததி' என்கிற குணத்தின் பலன் இந்த்ரிய வ்ருத்தி. அதுபோல.

(4) 'அக்நி ஹோத்ரம் ஜுஹோதி' என்று விதிக்கப்பட்ட யாகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு 'ததி' விதிக்கப்படுகிறது. அப்படியே 'ஜ்யோதிஷ்டோமேந யஜேத' என்று விதிக்கப்பட்ட யாகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு மண்வெட்டி என்று பொருளுள்ள 'உத்பித்' என்கிற த்ரவ்யம் விதிக்கப் படுகிறது. ஆகையால் இது குணவிதி.

ஸித்தாந்தம்:— உத்பிதா யஜேத பசுகாம:' என்கிற வாக்யத்தில் 'பசுகாமோ யஜேத' என்பதற்கு பொருள் பசு என்கிற பலனை யாகத்தாலே உண்டுபண்ணு என்று. எந்த யாகத்தாலே, என்றால் 'உத்பித்' என்கிற யாகத்தாலே என்று விதி வாக்யம் சொல்லுகிறது. அப்போது 'உத்பித்' என்பது யாகத்துக்குப் பெயர் ஆகிறது. அதற்கு பசுவாகிய பலன் இதனாலே உண்டுபண்ணப் படுகிறது என்று பொருள். ஆகையால் அந்தச் சொல் யாகத்தின் பெயராக இருக்கலாம்.

(2) பூர்வபக்ஷி:—சொன்னவன் கேட்கிறான். இரண்டுபேர்களும் 'உத்பித்' என்கிற சொல்லுக்கு ஒருவழியாய் பொருள் சொல்லுகிறோம். நீர் பெயர் என்று கொண்டு யாகவிதி யென்றீர். நான் மண்வெட்டி என்று கொண்டு குணவிதி என்கிறேன். நீர் சொல்வதுதான் சரியென்று எப்படி முடிவு செய்கிறது. பதில்—'உத்பித்' என்ற பெயருள்ள யாகத்தாலே பலனை உண்டுபண்ணு என்றால் 'உத்பிதா' 'யஜேத' என்ற இரண்டுசொற்களும் ஒரே விஷயத்தைச் சொல்லுகின்றன. குணவிதியானால், மண்வெட்டியினால் எந்த யாகத்தைச் செய்யலாமோ அந்த யாகத்தாலே பலனை உண்டு பண்ணு — என்று பொருளாகும். அப்போது இரண்டு சொற்களும் வெவ்வேறு விஷயங்களைச் சொல்லும். எங்கே இரண்டு சொற்களும் ஒரே விஷயத்தைச் சொல்லுவதாகக் கொள்ளலாமோ ; அதுவே திறம்.

(3). அவன் மறுபடியும் சொல்லுகிறான்—மண் வெட்டியை உடைய யாகத்தாலே பலனை உண்டுபண்ணு என்று பொருள் கொண்டால் இரண்டு சொற்களும் ஒரே விஷயத்தைச் சொல்லும் என்று. அப்போது 'உத்பித்' என்கிற சொல்லுக்கு 'உத்பித்வதா' என்று பொருளாகும். அது லக்ஷணை. அது குற்றம்.

(4). குணவிதி சொல்லுவதில் சில குற்றங்கள் இருக்கின்றன. 'யஜேத' என்கிற சொல்லில் 'யஜ' என்பது யாகத்தைச் சொல்லுகிறது 'லிங்' என்பது விதி. 'உத்பித்' என்கிற குணத்தை யாகத்துக்கு விதிப்பதால் விதிக்கப்பட்ட குணம் முக்யமானது. யாகம் அதற்காக ஏற்பட்டது. மேலும் ஒரே பதத்தில் இருக்கும் யாகத்தை விட்டு வேறுபதமாகிய உத்பித்தை எப்படி விதிக்கும்? 'பசுகாம:' என்கிற சொல்லுக்கு ப்ரயோஜநமில்லாமல் போய்விடும். 'தத்ர ஜுஹோதி' என்கிற இடத்தில் 'ததி' என்கிற சொல் எல்லாருக்கும் தெரிந்த வஸ்துவைச் சொல்லுவதால் வேறுவழியில்லாமல் இந்தக் குற்றங்களைப் பொருத்துக்கொள்ளவேணும். இங்கே 'உத்பித்' அப்படிமான ப்ரஸித்தி உள்ளது அன்று. (சாஸ்த்ரம் 57)

(5). 'ததா ஜுஹோதி யசமாநஸ்ய ஜுஹுயாத்' என்கிற இடத்தில் போல் பலனுக்கு குணவிதி யென்றால், அப்போது யாகத்தின் பேச்சே இல்லை. விதியைச் சொல்லும் ப்ரத்யம் தனியாய் வராததால் தாதுவைச் சேர்க்கவேண்டியது. விதியும் விதிக்கப்பட்டதும் விலகியிருக்கிறதென்கிற குற்றம் இருக்கவே இருக்கிறது. (சாஸ்த்ர - 57)

(6). ஆகையால் 'உத்பித்' என்பது யாகத்தின் பெயர். (நாமதேயம்) இதின் ப்ரயோஜநம் வ்யவஹாரந்தான். (அதி-2)

36. 'சித்ரயா யஜேத பசுகாம:' என்று ஒரு வாக்ய மிருக்கிறது. அதில் 'சித்ரா' என்கிற சொல் யாகத்தின் பெயரா? அல்லவா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—'உத்பித்' என்னும் சொல்லுக்குப் பொருள் தாதுவையும் ப்ரத்யத்தையும் கொண்டு சொன்னதுபோல இங்கே சொல்லவேண்டியதில்லை. ரூடியால் அதின் பொருள் 'பெண்' என்றும் அது அநேக வர்ணமுள்ளதென்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் மேலே சொன்னபடி பெயரன்று. குண விதியானால் எதற்கு குணம் விதிக்கப்படுகின்றதென்றால் 'அக்நீஷோமீயம் பசுமாலபேத' (அக்நீஷோம தேவதைக்கு உபாகரணம் பண்ணி யாகம் செய்) என்று விதிக்கப்பட்ட பசு யாகத்தில் பசுவுக்கு பெண்ணாயிருப்பது என்கிற குணத்தையும் அநேகவர்ணமுள்ள என்கிற குணத்தையும் விதிக்கிறது. 'யஜ' என்கிற தாதுவினாலே அந்த யாகத்தை அநுவாதம் (சொன்னதைச் சொல்லுகிறது) பண்ணுகிறது.

ஸித்தாந்தம்:—விதியால் ஒரு கர்மம் ஏற்பட்டபிறகு ஒரு குணத்துக்குமேல் விதிக்கக்கூடாது. கர்மம் ஏற்படாவிட்டால் ஒரே ப்ரயத்நத்தாலே அநேக குணங்களுள்ள ஒரு கர்மத்தை விதிக்கலாம். ஆகையால் இங்கே இரண்டு குணங்களையும் விதிப்பதானால் இரண்டு வாக்யமாகும். ஒரே வாக்யமாய் பொருள் கொள்ளக் கூடுமானால் வாக்யபேதம் சொல்லுவது குற்றம்.

(தொடரும்)

ஸ்ரீ:

தேவாலயங்களும் அவைகளின் தூய்மையும்

[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸார்வஜ்ஞ பட்டை.
ஸ்ரீ உ. ப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(தொடர்ச்சி 28 ஸம் 2 ஸஞ்சிகை 410 பக்கம்)

'ஸ்வார்ஹேண ந ஸம்ஹதி வேதார:' வர்ணாச்ரமாசாரவதா
புருஷேண பர: புமாந் | விஷ்ணுராராத்யதே பந்தா நாந்ய
ஸ்தத்தோஷகாரக: ||'

என்கிற வசநங்களால் பகவத் ப்ரஸாதத்திற்கு நிமித்தம் அவனுடைய ஆராதநம். ஆராதிப்பவன், வர்ண தர்மத்தையும் ஆச்ரம தர்மத்தையும் ஆசாரத்தையும் தழுவியே ஆராதிக்கவேணும். ஆராதநத்திற்கு உபயுக்த மந்த்ரங்கள் ஆசார்யனிடத்திலிருந்து நியமத்தோடு க்ரஹிக்கப் பட்டிருக்க வேண்டும். அந்த மந்த்ர க்ரஹணத்திற்கும் ஆசாரம் முக்யம். ஆசாரத்தை முன்னிட்டு ஆசார்யனிடத்திலிருந்து நியமத்தோடு க்ரஹிக்கப்பட்டிருக்கிற திவ்ய மந்த்ரங்களால் ஸதாசார்யனால் ஸகலபமான விக்ரஹத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட எம்பெருமான் அர்ச்சா விக்ரஹங்களில் ஸாந்நித்யம் செய்கிறான் என்று ஸித்திக்கிறது. அர்ச்சா ஸ்தாநங்களான க்ஷேத்ரங்கள்-ஸ்வயம் வ்யக்தம், ஸைத்தம் ஆர்ஷம், தைவம், மாநுஷம் என்று ஐந்துவகைப் பட்டிருக்கின்றன. ஒருவராலும் ப்ரதிஷ்டை செய்யப்படாமல் பகவதபிவ்யக்தி எங்கே ஸ்வதஸ்ஸித்தமாக இருக்குமோ; அது ஸ்வயம் வ்யக்தம்; ஸ்ரீரங்கம் திருப்பதி முதலியன. ஸித்தர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்ரம் ஸைத்தம் எனப்படும்; திருச்சித்ரகூடம் முதலியவை. தேவதைகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்ரம் தைவம் என்று சொல்லப்படும்; கோஷ்டீபுரம் முதலியவை. ரிஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது ஆர்ஷம். புல்லாரண்ய க்ஷேத்ரம் முதலியவை. மநுஷ்யர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது மாநுஷம்; குணசீலக்ஷேத்ரம் முதலியவை. தேவாலயங்கள் ஆதிகாலத்தில் தார்மிக ராஜாக்களால் தார்மிகர்களின் வேண்டுதலால் தேச க்ஷேமார்த்தம் ஏற்படுத்தப் பட்டவைகள். ராஜா, ராஷ்ட்ரம், ப்ரஜைகள், கோக்கள், ஸஸ்யங்கள், வ்ருஷ்டி, மஹாநதிகள், ப்ராஹ்மணர்கள் இவர் க்ஷேமார்த்தமாகவே தார்மிக ராஜாக்கள் கோவில்களைக் கட்டி அக்ரஹாரங்களையும் உண்டுபண்ணி ச்ரோத்ரிய ப்ராஹ்மணர்களை அவைகளில் குடியிருக்கச் செய்து, மந்த்ர புஷ்பம்

தினந்தோறும் பகவதாராதந காலத்தில் ஸமர்ப்பிப்பதற்காக, அந்த ப்ராஹ்மணர்களுக்கு ச்ரோத்ரியம் மாந்யம் விட்டு நந்தவநங்கள், பசுமடங்கள் கட்டி கோப்ரசார பூமிகளையும் ஏற்படுத்தி தேச ஸம்ரக்ஷணத்தில் கண்வைத்து உலக நன்மைக்கும் உலகம் நிலைத்திருப்பதற்கும் காரணமாக இருக்கும் கோக்களையும் ப்ராஹ்மணர்களையும் வேதங்களையும் பாதுகாத்து வந்தார்கள். தார்மிக ப்ரபுக்களும் தார்மிக ப்ரஜைகளும் ஒன்று சேர்ந்து நகரங்களிலும் சாகா நகரங்களிலும் கிராமங்களிலும் ஆங்காங்கு தேவாலயங்களை ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட கோவில்களின் நிர்மாணமானது அவர்களுடைய பக்தியையும் தர்ம சிந்தையையும் நன்கு துலக்கிக் காட்டுகிறது; அவர்களுடைய உதாரமான சித்த வ்ருத்தியையும் வெளிப்படுத்துகின்றது. தர்மத்தைக் கண்ணாகக் கொண்டவர்களும் ஆஸ்திகர்களும் வேதம் ஸ்ம்ருதி இதிஹாஸம் உபநிஷத்து தர்மசாஸ்த்ரம் ஸதாசாரம் வர்ணாச்ரமதர்மம் இவைகளில் பற்றுதலுள்ள தார்மிக ராஜாக்களால் சில தார்மிகர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி வர்ணாச்ரம தர்மங்களில் கட்டுப்பட்டிருக்கிற தார்மிக ஜநங்களுக்காகவே அவர்கள் வணங்கி வழிபடுவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் கோவில்கள். அவைகளை ஏற்படுத்தின மூலபுருஷர்களின் அபிப்ராயத்தை அநுஸரித்து அந்த தார்மிகர்களின் வம்ச்யர்களுக்கே, அவை உரித்தாக இருக்குமேயன்றி மற்றவர்களுக்கு உரிமை பாராட்டத் தக்கவைகளாக ஆகா. ஆறு குளம் பாதைகளைப்போல் பப்ளிக் என்று சொல்வதற்கு ஸாத்யப்படாதவைகள். பின்னையோ கோவில்களென்பது தார்மிகர்களுக்காக, தார்மிகர்களால் தனித்துக் கட்டப்பட்ட புண்யஸ்தலங்கள். அவர்களுக்கே சொந்தமானவைகள்; 'ப்ரைவேட்' என்றே சொல்வதற்குத் தகுதியுள்ளவைகள்.

இந்த ஆலய நிர்மாண க்ரமங்கள், பாஞ்சராத்ராகமங்களில் விரிவாக உரைக்கப் பட்டிருக்கின்றன. பாஞ்சராத்ரமென்பது பகவத் சாஸ்த்ரம். இதை இயற்றினவர் ஸ்ரீமந்நாராயணன். ஸர்வஜ்ஞனான பரமபுருஷன் இதற்கு வக்தாவாதலால், ப்ரமம் ப்ரமாதம் ஸந்தேஹம் முதலிய தோஷங்களுள்ள புருஷர்களாலுரைக்கப் பட்ட மற்ற மித்யா தந்த்ரங்களோடு தந்த்ரமென்கிற நாமதேய மாத்ரத்தால் ஒப்பிடத்தக்கதன்று. இந்த தந்த்ரமானது த்வாபரயுகத்தின் கடைசியில் கலியின் தொடக்கத்தில் ஸர்வஜ்ஞரூபியான ஸ்ரீமந்நாராயணனால் உரைக்கப்பட்டது. இதில் ஆகம ஸித்தாந்தம், தந்த்ர ஸித்தாந்தம், மந்த்ர ஸித்தாந்தம், தந்த்ராந்த்ர ஸித்தாந்தம் என்று நான்கு பிரிவுகள் உண்டு. இந்தப் பாஞ்சராத்ரமானது ஸர்வஜ்ஞனால் சாண்டில்யர்கள் முதலிய ஐந்து சிஷ்யர்களுக்கு ஐந்து தினங்களில் உபதேசிக்கப் பட்டது. இந்த ஐந்து சிஷ்யர்களும் ஸாத்வதம் முதலிய

ஆயுதங்களின் அம்சங்களாக உதித்தவர்கள். அல்லது 'பஞ்ச ராத்ரீயதே ஹ்யநேந இதி பாஞ்சராத்ரம்' என்னும் வ்யுத்பத்தியைக் கூறுவார்கள் சிலர். பொருள் என்னவென்றால்:—இதைக்கேட்டவர்களுக்கு ரூபம் ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம் இவ்வைந்தும் இரவுபோல் ப்ரகாசமற்றவைகளாக ஆகின்றன. அதாவது இந்த சாஸ்த்ரார்த்தத்தைக் கேட்டவர்களுக்கு விஷயவாஸனை அற்று நிவ்ருத்தி தர்மத்தில் பற்றுதல் உண்டாகிறதென்று.

இந்தப் பாஞ்சராத்ரம் ஆயிரத்தெட்டு ஸம்ஹிதைகளுள்ளது. காலக்ரமத்தில் உபதேசமில்லாமல் எல்லாம் லோபித்துப் போயின. இப்பொழுது நாற்பத்தி இரண்டு ஸம்ஹிதைகள் இருக்கின்றன. நாற்பத்தி இரண்டினுள், ஸாத்வதம், பௌஷ்கரம், கபிஞ்ஜலம், வாஸிஷ்டம், மார்கண்டேயம், வைச்வாமித்ரம், விஷ்ணுதத்வம், விஷ்வக்ஸேநம், நாரதீயம், பாராசரம், அநிருத்தம், லக்ஷ்மீதந்த்ரம், பாத்மம், வாராஹம், பாரமேச்வரம், விஹகேந்த்ரம், அஹிர்புத்ந்யம், அகஸ்த்யம், சௌநகீயம், காச்யபீயம், சேஷஸம்ஹிதை, விஷ்ணுஸம்ஹிதை, என்று இருபத்திரண்டு ஸம்ஹிதைகள் ப்ரசாரத்திலிருந்து வருகின்றன. மற்ற இருபது ஸம்ஹிதைகளும் ஆங்காங்கு சிதறுண்டு சிலம் சிலமாகக் காணப்படுகின்றன. ஸாத்வத ஸம்ஹிதை பௌஷ்கர ஸம்ஹிதை, ஜயாக்யஸம்ஹிதை இம்மூன்றும் ரத்நத்ரயங்களென்று பாஞ்சராத்ராகமத்தில் வ்யவஹரிக்கப்படுகின்றன. இவற்றுள் ஸாத்வத ஸம்ஹிதைக்கு உபப்ருஹ்மணம் ஈச்வர ஸம்ஹிதை. பௌஷ்கர ஸம்ஹிதைக்கு உபப்ருஹ்மணம் பாரமேச்வர ஸம்ஹிதை ஜயாக்ய ஸம்ஹிதைக்கு உபப்ருஹ்மணம் பாத்ம ஸம்ஹிதை. இந்த பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் ஆலயஸ்வரூபம், அதன் நிர்மாணங்கள், கர்பக்ருஹம், அர்த்த மண்டபம், விமாநம், அவைகளின் பரிமாணம், ப்ராகார கோபுரங்களின் அமைப்பு, நியமங்கள், ஆலயங்களில் அர்சாவிக்ரஹ ப்ரதிஷ்டை, அந்த விக்ரஹங்களின் லக்ஷணங்கள், தாரு, சிலை, ஸுதை, வெள்ளி, தங்கம், பஞ்சலோஹம் முதலியவைகளால் நிர்மாணம் செய்யப்படும் விக்ரஹங்களின் ஸ்வபாவங்கள், நிக்ரஹாநுக்ரஹ சக்திகள் எல்லாம் ஸவிஸ்தாரமாக உரைக்கப் பட்டிருக்கின்றன. பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் ராஜ ராஷ்ட்ர ப்ரஜா க்ஷேமார்த்தமாக தேவாலயங்களின் நிர்மாணம் விதிக்கப் பட்டிருக்கிறது. தேவாலயம் இல்லாத இடத்தில் ப்ரஜைகள் வஸிக்கக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ர ஸம்ஹிதா வசநங்களால், தேவாலயங்கள், பட்டணம் க்ராமம் முதலிய இடங்களில் அவச்யம் இருக்கவேண்டுமென்றும், அப்படிப்பட்ட ஆலயங்களில்லாத இடத்தில் ப்ரஜைகள் வஸி

க்கக் கூடாதென்றும், வஸித்தால் ப்ராயச்சித்த முண்டென்றும், ஆலயங்கள் தார்மிகர்களாலும் ஆஸ்திகர்களாலும் செய்யப்பட்டனவென்றும், அவைகளிலுள்ள அர்சா மூர்த்திகள் சாஸ்த்ரோக்தமான மஹாமந்த்ரங்களால் ராஜ ராஷ்ட்ராபிவ்ருத்தியை உத்தேசித்து ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றனவென்றும், அந்த மூர்த்திகள் அதிசுத்தி உள்ளவைகள் என்றும், நன்றாக அமைக்கப்பட்ட அந்தமூர்த்திகளின் வீக்ஷணத்தால் தேசங்களுக்கு க்ஷேமங்களுண்டாகின்றனவென்றும், ஸஸ்ய வ்ருத்தி, ஆயுர்வ்ருத்தி, ஆரோக்யவ்ருத்தி, தநதாந்ய ஸம்ருத்தி, ஸந்ததிவ்ருத்தி, இவைகளனைத்தும் ப்ரஜைகளுக்கு அர்சா விக்ரஹாராதநத்தைப் பொருத்திருக்கின்றனவென்றும், நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகள் றுமல் ச்ரத்தையை முன்னிட்டு தேவாலயங்களில் நடைபெறுமாகில் தேசத்தில் ஈதிபாதைகள் உண்டாகாவென்றும், விஷ்ணுவின் ஆலயங்கள், விஷ்ணுவின் பிம்பங்கள் எங்கே இல்லையோ அந்த இடங்களில் ஒரு திநங்கூட வஸிக்கக் கூடாதென்றும், தேவாலயங்களில்லாத இடம் சண்டாள வாடிகைக்கு ஸமமென்றும், ஆலயங்களில்லாத க்ராமம் ச்மசாந துல்யங்களென்றும், அந்த க்ராமங்களில் வஸிப்பவன் அந்த ஜந்மாவிலேயே சண்டாளனாகி விடுவனென்றும், எல்லாவைதிக கர்மங்களிலிருந்தும் விலக்கப் படுகிறானென்றும், அவனுக்கு மீளா நரகமுண்டென்றும், அஜ்ஞாநத்தால் வஸித்தால் சாந்த்ராயண க்ருச்ரம் அநுஷ்டிக்கத் தக்கதென்றும், ஐய்யாயிரம் காயத்ரீ மந்த்ரத்தையும் பகவன் மூர்த்திமந்த்ரத்தையும் ஜபித்து ப்ராஹ்மண்யத்தை மீண்டும் அடையவேண்டுமென்றும், எல்லா ச்ரேயஸ்ஸுக்கும் காரணமாக இருப்பது பற்றி தேவாலயங்களைப் பக்கம் பக்கமாக எல்லா ஸ்தலங்களிலும் ஏற்படுத்த வேணுமென்றும், தேவாலயங்கள் பழயதாகப்போய்விட்டால் ஜீர்ணோத்தாரம் செய்யவேண்டுமென்றும், ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்கு விஷ்ணு பிம்பார்சநமே ப்ரதாநமென்றும், அவைகள் பரமபாவநமென்றும், மந்த்ர மூர்த்தியான பகவான் அந்த அர்சாபிம்பங்களில் ஸாந்நித்யம் செய்கிறானென்றும், எந்த ஆகமரீதியால் பிம்பங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனவோ அதற்கு விருத்தமாக ஏதாவது ஸம்பவித்தால் உடனே ப்ராயச்சித்த ஸம்ப்ரோக்ஷணங்களால் அந்த அசுத்தியைப் போக்கி முன்போல் சுத்தி ஏற்படுத்தத் தக்கதென்றும், அந்த அர்சா மூர்த்திகளில் ‘இது கல், இது சுண்ணும்புக் கட்டடம், இது மரக்கட்டை, இது வெள்ளி, இது பொன், இது தாம்ரம், இது பஞ்ச உலோஹங்களின் கலப்பு’ என்கிற எண்ணமில்லாமல், ‘பரமாத்மாவே இங்கே ஸாந்நித்யம் செய்கிறான். இவனே நமக்கு ச்ரேயஸ்ஸை விளைவிப்பவன். கரண த்ரயங்களாலும் அபசாரப் படலாகாது’ என்கிற எண்ணத்துடன் பக்தர்கள் வந்தநம், ப்ரதக்ஷிணம், ஸ்தோத்ரம், நாம ஸங்கீர்த்தநம், முதலியவைகளால் பஜிக்க வேண்டுமென்றும், ஏற்படுகிறது.

இப்படி ஆகமங்கள் ஒன்று பட்டு பாஞ்சராத்ராகமங்களோ, வைகாநஸாகமங்களோ, சைவாகமங்களோ, யாவும் ஆலயங்களின் நிர்மாணக்ரமங்களையும் அவைகளின் மஹிமையையும், அவைகளின் சுத்தியையும், அவைகளின் ப்ரதிஷ்டிதங்களான அர்சாமூர்த்திகளின் ஸ்வரூபஸ்வபாவங்களையும், அந்த மூர்த்திகளின் சக்தி விசேஷங்களையும் நன்கு துலக்கிக் காட்டிக்கொண்டிருக்கும் ஸமயத்தில், சிலர் ஆகமங்கள் ப்ரமாணங்களல்லவென்றும், கட்டுப்பாடாக வைதிகர்கள் செய்த சூழ்ச்சி என்றும், விவேகிகள் இவைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்றும், வேதங்களில் இது விஷயமான ப்ரஸக்தியே கிடையாதென்றும், “சண்டாளன் ஈறாக எல்லாஜநங்களும், கோவிலுக்குள் போகலாம். ஸ்வாமியை அணுகலாம். பஜநம் செய்யலாம். எல்லோரும் ஹிந்துக்கள் தான். நமக்குள் வ்யத்யாஸம் ஏது? ப்ரதமஸ்ருஷ்டியில் வேற்றுமை ஏது! ஆதியில் ஜாதி ஏது? வர்ணாச்ரமங்களேது? பறையன், பள்ளன், சக்கிலி, ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், என்கிற பாகுபாடு ஏது? எல்லாம் இப்பொழுதுதான் தன்னலத்தில் நோக்கங்கொண்ட சில புத்திசாலிகளான கபடிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. விவேகிகள் எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டு இக்காலத்துக்குத் தக்க வண்ணம் பழைய ஆசாரங்களை அடியோடு அறுத்து புதியசீர் திருத்தத்தைக் கைகொண்டு சுத்தி, அசுத்தி, ஜாதியினால் மேல் பட்டவன், கீழ் பட்டவன், என்கிற வைதிகப் பேய்களின் பிதற்றல்களை காதில் வாங்காமல் எல்லோரும் ஒன்று பட்டு யாதொரு பாகுபாடும் இல்லாமல் போஜநம், விவாஹம், தேவாலய ப்ரவேசம் எல்லாவற்றையும் தடையின்றி செய்து நவீந நாகரிகத்தைக் கையாண்டு வருவது தான் உத்தமோத்தமம்” என்று இவ்வாறு கோஷிப்பதுடன் தங்களை ப்ருஹஸ்பதிகள் என்றுஎண்ணிக்கொண்டு துணிந்து விவாஹம், சண்டாள ஸஹபோஜநம், சண்டாளவாடிகா ப்ரவேசம் முதலிய அடாதகார்யங்களை செய்து வருவதுடன் பிறர்களையும் செய்யும்படி துருபதேசம் செய்து வருகிறார்கள். அந்தோ என்ன விந்தை இது!

“யேநாவத்ருவதே ஸாயபாரூவஸாயஷேந க்ஷேஷ்தி”

என்கிறபடி விவேகிகள் ஜுகுப்ஸை படும்படியான கார்யத்தை வெட்கமில்லாமல் செய்து வெட்கத்தையும் இழந்து ஆநந்தத்தையும் அடைகிறார்கள். இவைகளெல்லாம் கலியின் ப்ரபாவமே ஒழிய மற்றொன்று மல்ல. தேவாலயங்களின் பரிசுத்தி என்ன? அதன் மஹிமை என்ன? அந்த ஆலயங்களில் நடக்கும் ஆராதந க்ரமமென்ன? அங்கு ஸேவார்த்தம் வரும் மஹான்களின் திறள் என்ன? ஆராதிக்கப்படும் அர்சாமூர்த்திகளின் சக்தி என்ன? இவைகளில் ஒவ்வொன்றும் வாக்காலும் மனத்தினாலும் முறையே சொல்லவும் நினைக்கவும் ஸாத்யப்படாததாக இருக்கிறது. இப்படிப்பட்ட

ஆலயம் எங்கே ? இதை ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற தார்மிகர்கள் எங்கே ! இதில் ஆராதிக்கப்படும் அர்சாமூர்த்திகள் எங்கே ? சார்வாக வாதம் செய்து வரும் நாஸ்திகர்கள் எங்கே ? இவர்களின் உபதேசத்தைக் கேட்டு தகாத கார்யங்களைச் செய்யத்துணிந்து தேவாலயப்ரவேசம் முதலிய கார்யங்களில் ப்ரவ்ருத்திக்க முயற்சி செய்துகொண்டிருக்கிற சண்டாளர்கள் எங்கே ? இது ஏற்காது ! இது ஏற்காது ! ! மரங்களில் புல்லுருவி முளைப்பது போல் ஹிந்து மதத்தில் பிறந்து தாங்கள் ஹிந்துக்கள் என்று பெயரையும் வைத்துக்கொண்டு மதத்தையும் ஆசாரத்தையும் வர்ணாச்ரமங்களையும், புராதநங்களான நம்கொள்கைகளையும், அடியோடு அழிக்க ஆரம்பித்திருக்கிறவர்களுக்கு, எல்லாம் அறிந்தவனும் எல்லா சக்திகளையும் உடையவனும் ஸத்யஸங்கல்பனும் ஆபத்பந்துவாயுமிருக்கிற பரமபுருஷன் நல்ல புத்தியைக்கொடுத்து, அவர்களின் அமார்க ப்ரவ்ருத்தியைத் தடுத்து, உலகத்துக்கு இவர்களால் நேர்ந்திருக்கும் தீங்கை நீக்கி உலகத்தைப் பாதுகாப்பாராக.

கலிவருஷ்ரு விவெகாது
காஷ்ட த தெல்யவொ விமொராகு மவா ।
வாயஶுரூஶாநிவாவொ
வஹ்லிவரிஶ ரெவொஷ்யஷி வேத்து ॥

ஸ்ரீ:

அத்வைத ஸித்தாந்தமும் பகவத் பக்தியும்

[வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரி, ஸ்ரீ. உ. வே. V. R. நரஸிம்ஹாசார்யர்]

ஸ்ரீ வேதாந்த தீபிகையின் நாளது வருஷத்திய ஆடிமாஸத்து ஸஞ்சிகையில் 'அத்வைதமும் பக்தியும்' என்கிற தலைப்பின் கீழ் சில விஷயங்கள் குறிப்பாக வரையப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக ஏற்படக்கூடியவைகளான ஸந்தேஹங்களை நிவர்த்தித்துக் கொள்வதில் வைதிக ஹிந்துக்கள் அனைவருக்கும் அவாவும் நற்பயனுமிருக்குமாதலால் அதன் தத்வத்தை யாமிங்கு சுருக்கமாகக் கூறுகின்றோம்.

" ஸம்ஸார பந்தமென்பது அக்ஞானத்தையே காரணமாக உடையதாகையால் அந்த பந்தம் நீங்கவேண்டுமானால் அந்த அக்ஞானமும் நீங்கவேண்டும். அக்ஞானம் நீங்குவது க்ஞானஸாத்யமே யாதலால் க்ஞானத்தைப் பெறுவதொன்றே மோக்ஷத்தை யடைவதற்கு ஸாக்ஷாத் ஸாதநமாகின்றது " என்கிற வரையில் அத்வைத ஸித்தாந்தத்தின் கொள்கை நாமொன்று ஒப்புக்கொள்வதில் விரோதமொன்று மில்லை. ஆனால் அவ்வித பந்தத்தின் நிவர்த்தன விஷயத்தில் பகவத் பக்திக்கு எவ்வித அவகாசமுமில்லை யென்பது அங்கீகரிக்கத் தக்கதல்ல. ஏனென்றால், பந்த நிவர்த்தகமான ப்ரும்ஹாத்வைத விக்ஞான மென்பது பக்தி மூலமான பகவத் ப்ரஸாதத்தால் லபிக்கக்கூடியதென்றே அத்வைத ஸித்தாந்தத்தின் தெள்ளிய கொள்கை.

பக்தியானது ப்ரும்ஹபாவ ரூபமான மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதநமாகாது என்பதோடு நின்றுவிடுவதானால், அதைப்பற்றி அத்வைதத்திற்கு ஆக்ஷேபமேயிராது. இவ்வளவைக்கொண்டு பந்த நிவ்ருத்தி விஷயத்தில் பக்திக்கு எவ்வித அவகாசமு மில்லையென்று கூடச் சொல்வதென்றால் அது மிக்க அநுசிதமேயாகும். அக்ஞான கார்யமான பந்தத்தை விலக்குவதில் க்ஞானமொன்றைத் தவிர அநுராக ரூபமான பக்தியென்பது ஸாக்ஷாத் காரணமாக இல்லாதிருக்கட்டும். இதனால் முக்தியைப்பெற விரும்புகிறவர்களுக்கு பக்தியினால் பிரயோஜந மொன்றுமில்லை யென்றுவது அவர்கள் பக்தியைக் கை கொள்ள மாட்டார்களென்றுவது, கையாள்வது அஸம்பாவிதமென்றுவது நிர்ணயித்துவிடுவது ஸாத்யமல்ல. பசியைத் தீர்த்துக்கொள்ள விரும்புமொருவர் அரிசியைத்தான் முதன் முதலில் ஸங்க்ரஹிக்கின்றாரேயன்றி அன்னத்தையல்லவே! அரிசியில்லையென்றால் அன்னம் தானெங்கிருந்து வரும் ? ஸாக்ஷாத் ஸாதநமாயிருக்கவில்லை யென்பது ஒரு குறையாகுமா ? அன்னங்கூட போஜனத்தின் வாயிலாகவேதானே க்ஷுந் நிவ்ருத்திக்குக் காரணமாகின்றது. சாப்பிடா விட்டால் சோறிருந்தும் பசி தீருகிறதில்லை யன்றோ ? சோறு வேண்டாம்; பசியைத் தீர்ப்பதற்கு நேரான காரணமான சாப்பாடு ஒன்றே யெனக்குப் போதும்; என்றொரு பசிக்காரன் பேசுவானோ? சோறு வேண்டாமென்று சொல்லி விட்டால் சாப்பாடென்பது எப்படி ஸம்பவிக்கும் ? பக்தியில்லையென்றால் அதனாலுண்டாகக்கூடியதான க்ஞானத்திற்கு இடமேது. இனி முக்திக்குத்தான் வழியென்ன? ஆதலால் அத்வைத ரீதியில் பக்திக்கு எவ்வித அவகாசமுமில்லை யென்பது அஸங்கதமே. நிற்க க்ஞாத்ரு க்ஞேய விபாகமற்றதான அதாவது அறிபவனென்றும் அறிபடு பொருளென்று முள்ள வேற்றுமையற்றதான நிர்குண ப்ரும்ஹமொன்றுதான் தத்வ மென்று அத்வைத ஸித்தாந்த மாதலால் இரண்டு சேதனவஸ்துக்களுக்கு பாஸ்பரம் உண்டாக்கூடியதான பக்திக்கு அத்வைத மதத்தில் கொஞ்சமேனும் அவகாசமில்லை; என்றொரு காரணங் கூறப்படுகிறது. இது அத்வைதத்தின் ஹ்ருதயத்தை யறியாமல் மேலெழுந்த வாரியா

கப் பார்த்தது மாத்ரத்தைக் கொண்டு கூறுங் கூற்றேயன்றி வேறல்ல. பாரமார்த்த தத்வம் ப்ரஹ்மமொன்றாகவே யிருக்கட்டும். அது நிர்குணமாகவே யிருக்கட்டும். அதற்கு க்ஞாதாவும் வேண்டாம். அது க்ஞேயமுமல்லதான். பாரமார்த்திக மிப்படியிருப்பதைக்கொண்டு வ்யவஹார கல்பிதங்களான சேதந வஸ்துக்கள் இரண்டு ஒன்றிற்கொன்று அன்பு பாராட்டிக் கொள்கின்றன வென்பதில் முரண்பாடு என்னவிருக்கிறது? அத்வைத ரீதியிலும் ஆசார்ய சிஷ்யர், பதி பத்நீ, பித்ரு புத்ரர், என்றென்று எத்தனையோ வ்யவஸ்தைகள் வரையறுக்கப்பட்டிருக்க வில்லையா? அவைகளெல்லாம் பொருந்துகையில் ஜீவேச்வரர்கள்,என்கிற இவ்விசேஷத்தை மாத்திரம் முரண்பட்டதென்று நினைப்பதற்கு நியாயமான காரணமென்ன விருக்கிறது? பரமார்த்தத்தில் புகுந்து பார்த்தாலோ இரண்டென்கிற வரையில் தானெதற்காகப் போகவேண்டும்? அத்வைத ஸித்தாந்தத்தின் படி அறிவு தொழில்களைப் பெற்ற சேதநமென்று சொல்லத்தகும் பொருள் ஒன்று கூடப் பரமார்த்தமன்று தான். இவ்வளவு தானெதற்கு? பாரமார்த்திக தசையில் ப்ரபஞ்ச கதையொன்றுமே கிடையாது தான்.

ஆகவே அத்வைதத்தின்படி பந்த நிவ்ருத்தி விஷயத்தில் பக்திக்கு எவ்வித அவகாசமும் கொஞ்சமேனு மில்லையென்று அன்னியர்கள் பேசுவதெல்லாம் அறியாமையினாற்றானென்று நிர்ணயிப்பதற்கு தகுந்த காரணங்களில்லாமலில்லை. ஆதலால் எக்காரணத்தைக் கொண்டும் இந்த நிச்சயத்தை மாற்றிக்கொள்வதற்கோ அல்லது இதற்கு ஒவ்வாத அன்னியர்களுடைய அபிப்ராயத்தை வாஸ்தவமென்று ஏற்றுக்கொள்வதற்கோ சற்று கூட அவச்யமே யில்லை.

மேலும், மற்றைய மதஸ்தர்கள் பக்தியைக் கொண்டாடுவதுபோல அத்வைத மதஸ்தர்கள் அதைக்கொண்டாட வில்லையென்றும் நினைக்கவேண்டாம். மற்றவரைவிட ஆயிரம் பங்கு அதிகமாகவே இவர்கள் பகவத் பக்தியைக் கொண்டாடுகின்றனர்தான். இதற்கு பகவத் பாதாளுடைய ஸ்ரீ ஸூக்திகளே அனேகங்கள் ப்ரமாணமாக விளங்குகின்றன. அவற்றுள் சிலதைப் பின்னால் காணலாம். ஆதலால் பக்தி செய்வது அத்வைதியாக இருப்பதற்கு விருத்தமென்று சங்கிப்பதற்கோ அப்படி அது விருத்தமாக இருக்கும் பக்ஷத்தில் அத்வைத மதத்தின் மஹிமை கொஞ்சம் குறைந்துபோகுமென்று அஞ்சுவதற்கோ சற்றேனு மிடமில்லை. ஆனால் இவ்வருஷத்தில் நடந்த அத்வைத ஸபையில், சிறந்த அத்வைத வித்வானாகிய மன்னார்குடி சாஸ்த்ரரத்நாகரம் ப்ரும்ஹ ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்த்ரிகளவர்கள் ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதிகளைப் பற்றிச் செய்த உபந்யாஸ உக்திகளிலிருந்து அத்வைதத்தைப் பற்றி அது பக்தியைத் தூரவிலக்கிவிடுகிறதென்று அவர்கள்

சொல்வது அந்த மதத்தை சரிவர அறியாமையினால் தானென்று நாம் இதுவரை க்ரஹித்து வந்தது தவறான க்ரஹணமென்றும் அப்படிச் சொல்லும் பாச்சாத்யருடைய அபிப்ராயமே அம்மதத்தின் வஸ்துஸ்திதியை உணர்த்துகிறதென்றும் நினைக்க இடமுண்டாகிறதென்று அக்குறிப்பில் கூறப்படுகிறது. இனி இவ்விடத்தில் சற்று உட்புகுந்தாலன்றி இன்னினைவை மாற்றுவதற் கில்லையாதலால் இதை ப்ரவேசித்து ஆராய்ந்து பார்ப்போம்.

சாஸ்த்ரிகள் அவர்கள் ஸபையில் உபந்யஸித்தபடியே அவ்வுக்திகள் தீபிகைக்குக் கிடைத்து வெளியிடப்பட்டிருக்கின்றன வென்றே வைத்துக் கொள்வோம். அதனாலும் பாச்சாத்யாபிப்ராயம் சாஸ்த்ரிகளால் அனுமோதிக்கப்பட்டதாக ஆய்விடாது. சாஸ்த்ரிகள் நமது ஒன்று இரண்டாவது வாக்யங்களில் ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதிகள் ஒரு சிறந்த அத்வைதாத்ம க்ஞானத்தைப் பெற்றவரா யிருப்பினும் ஸ்ரீ கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டவராகவே யிருந்தார் என்று தான் சொல்லியிருக்கிறார். இங்கு பக்தி என்றதற்கு தீபிகையில் குறிக்கப்படுகிற இரண்டினுள் ஸாதனபக்தி யென்று பொருள் கொண்டால் அத்வைத ஸித்தாந்தத்தின்படி. பிரபஞ்ச ப்ரம நிவ்ருத்தி ரூபமான மோக்ஷமென்பது க்ஞானமொன்றினாலேயே பெறக்கூடியதாகையால் அந்த க்ஞானத்திற்கு ஸாதகமான பக்தியென்றுதான் சொல்லியதாகும். ஆகவே ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்வாமிகள் கர்மோபாஸநாதி ஸாதநங்களினுதவியால் ஸாக்ஷான் மோக்ஷ ஸாதகமான அத்வைதாத்ம விக்ஞாநத்தைப் பெற்றுத்தீர்ந்த பின்பும் ஸ்ரீ க்ருஷ்ண பக்திரஸத்தின் ஆஸ்வாத்யதையில் ஈடுபட்டு அதனையே அநுஷ்டித்து வருகிறார். ஸாதனம் கசந்தாலல்லவோ ஸாத்யம் ஸித்தித்தவுடனே அதனைத் "துலைந்தது சனி"யென்று கை கழுவிவிடுவார்கள். க்ருஷ்ண பக்தியே முக்தி ஸுகத்தைவிட இவருக்கு அதிகமாக இனித்தமையால் இவர் அதனை யெதைப்பற்றிக் கிடந்தாரென்று தான் தாத்பர்ய மேற்படும். பக்தி, என்றதற்கு ஸ்வயம் புருஷார்த்த ரூபமான ஸாத்ய பக்தியென்று பொருள் கொள்ளும்பக்ஷத்திலோ இவ்வர்த்தம் இன்னும் எளிதாகப் பொருந்திவிடும். ஆதலால் சாஸ்திரிகளுடைய ஒன்றிரண்டாவது வாக்யங்களினால் பரமாத்வைத விக்ஞாநவான்களான ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்வாமி போன்றவர்களும் பக்தியையே கடைபிடித்தொழுகுவாராயினரென்று அத்வைதத்தில் பக்திக்கு ஏற்றஞ்சொல்லப்பட்டதாகுமே யன்றி பக்திசெய்வது அத்வைதியா யிருப்பதற்கு விருத்தமென்று சொல்லியதாகாது. எனவே இவ்விரண்டு வாக்யங்களைப்பற்றிய வரையில் அதிகம் சொல்லவேண்டியதில்லை.

(3) "ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தைப்போல ஸ்ரீமத் பகவத் கீதைக்கும் பக்தியிலேயே தாத்பர்யம் என்பதாக இவருடைய அபிப்ராயம் இருக்கிறபடி

யாலேயே இவர் ஸ்ரீ பகவத் பாதாளுடைய அபிப்ராயத்துக்கு விபரீதமாக "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் ச்லோகத்தில் பகவத் கீதைக்கு இந்த பக்தியிலேயே தாத்பர்யமென்று சொல்லியிருக்கிறார்."

(4) " பக்தியிலுள்ள அபிநிவேசத்தால் இவர் பகவத் கீதைக்குப் பக்தியிலேயே தாத்பர்யமென்று விவரித்தபோதிலும் இவர் அத்வைதாநுபவி என்பதில் ஸந்தேஹமில்லை."

இவ்விரண்டும் சாஸ்த்ரிகளுடைய மூன்று நான்காவது வாக்யங்களென்று காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றினாலும் பாச்சாத்ய ப்ரப்ருதிகளுடைய அபிப்பிராயம் புரஸ்கரிக்கப்படவில்லை யென்பதை நிரூபிக்கின்றோம்.

நமது ப்ராசீநக்ரந்தங்களில் சிலது பக்தி ப்ரதானமானவைகள், மற்றுஞ் சிலதுகளோவெனில் க்ஞாந ப்ரதானமானவைகள் என்று பொதுவாக ஒரு விபாகமுண்டு. இவ்விரண்டு வகையான க்ரந்தங்களும் முறையே பக்தியையும் க்ஞாநத்தையும் தந்தம் ப்ரதான ப்ரதிபாத்யமாகக் கொண்டெழுந்து அவற்றையே விசேஷித்து விவரிக்கின்றன வென்று மாத்திரம் சொல்லலாமேயன்றி பக்தி நூல் க்ஞாநத்தையோ க்ஞாநநூல் பக்தியையோ நிராகரிக்கவுஞ் செய்கிறதென்று நினைப்பது தவறாகும். ஸ்ரீ பாகவதம் பக்தி க்ரந்த மென்பது நிர்விவாதம். பகவத் கீதை எப்படி யென்னுமிடத்தில் அது க்ஞாந ப்ரதானமான ப்ரபந்தமென்று பகவத் பாதாசார்யாளுடைய ஆசயம். ஸ்ரீ பாகவதத்தைப்போல பகவத்கீதையும் ஒரு பக்தி க்ரந்தமென்று ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் ஹ்ருதயம். இதனால் ஸர்வதர்மாந், என்கிற ச்லோகத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் பகவத்பாதாளுடைய அபிப்ராயத்தை மாறுபட்ட ரீதியில் வ்யாக்யானத்தை செய்வாராயினர், என்றுதான் இவ்வாக்யங்களுக்குப் பொருளேற்படுகிறது. இதனால் பகவத்கீதை பக்தி பரமான க்ரந்தமா அல்லது க்ஞாநபரமா, என்கிற ப்ரச்நத்தில் ஆசார்யாளுக்குள் இரண்டு விதமாகவும் அபிப்ராயமிருக்கிறதென்று மட்டும் சாஸ்த்ரிகள் காட்டிய தாகுமே தவிர எந்த அபிப்ப்ராயத்தின்படிக்கும் பக்தி செய்வது அத்வைதியாகவிருப்பதற்கு விருத்தமென்றுகூடச் சொல்லியதாகாது. இந்த ச்லோகத்திற்கு க்ஞாநபரமாக பாஷ்யமிட்டருளிய பகவத் பாதாளும் இதற்கு முன்னதான "மந்மநா பவ மத்பக்த:" என்கிற ச்லோகத்தை பக்தி பரமாகவே வ்யாக்யானித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் ஸர்வ கர்மஸந்யாஸ புரஸ்ஸரமான ஸம்யக் தர்சனத்தை மோக்ஷஸாதந மல்லவென்று ஆக்ஷேபித்தாரில்லை. மற்றென்னவெனில் அது ஸந்யாஸத்தை விதிக்கின்றதான சாஸ்த்ராந்தரத்தினாலேயே ப்ராப்தமாய் விடுகின்றமையால் ஸர்வதர்மாந் என்கிறதினால் பகவதேக சரணதாரூபமான பக்திவிசேஷமே விதிக்கப்படுகிறதென்றுதான் அபிப்ராயப்படுகின்றார். இது ஸம்

பந்தமான இவ்விரு ஆசார்யர்களுடைய ஸூக்திகளையும் கீழே வரைகின்றோம்.

ஏவம் பகவத: ஸத்யப்ரதிஜ்ஞத்வம் புத்த்வா பகவத்பக்தே: அவச்யம்பாவி மோக்ஷபலம் அவதார்ய பகவச்சரணைகபராயணோ பவேதிதி வாக்யார்த:,

[மந்மநா பவ என்கிற ச்லோக பாஷ்யத்தின் முடிவில் ஸ்ரீ பகவத் பாதாள்]

கர்மயோகநிஷ்டாயா: பரமரஹஸ்யம் ஈச்வரசரணதாம் உபஸம்ஹ்ருத்ய அதேதாநீம் கர்மயோகநிஷ்டாபலம் ஸம்யக்தர்சநம் ஸர்வவேதாந்தஸாரம் விஹிதம் வக்தவ்யமிதி ஆஹ ஸர்வதர்மாநிதி.

[ஸர்வதர்மாநிதி ச்லோக பாஷ்யத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீபகவத் பாதாள்]

ந ஹ்யத்ர ஸர்வகர்மஸந்ந்யாஸோ விதீயதே, ஸந்ந்யாஸஸ்ய ஜ்ஞாநைவ தஸ்ய ப்ரக்ருதத்வாத், ந சாத்ர ஸந்ந்யாஸபரத்வே மாமேகம் சரணம் வ்ரஜ இதி பகவதேகசரணதாயா விவக்ஷிதத்வாத்.

[ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதீஸ்வாமிகளின் ஸர்வதர்மாந் என்கிற ச்லோக வ்யாக்யை]

இங்கு பகவத் பக்தியினால் மோக்ஷமென்கிற மஹா புருஷார்த்தத்தைக் கட்டாயம் பெற்றே தீரலாகுமென்கிற நிச்சயத்தோடு முமுக்ஷுவா யிருப்பவர் பகவானே பரமகதி யென்று வர்த்திக்கக் கடவர், என்றதினால் ஸ்ரீபகவத் பாதாசார்யர் பக்தியை பயனளிக்கத் தவறாததொரு முக்தி ஸாதநமென்று போற்றி முமுக்ஷுக்களா யிருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று உபதேசிக்கின்றாரே யன்றி அதைத் தாமும் அநாதரிக்க வில்லை, இதரர்களையும் அநாதரிக்கச் சொல்லவுமில்லையே ?

இனி 'அத்வைதம் தம் பக்தியை தூரவிலக்கி விடுகிறது. பந்த நிவர்த்தன விஷயத்தில் அத்வைதத்திற்கு எவ்வித அவகாசமும் கொஞ்சமேனுமில்லை,' என்பன போன்ற பாச்சாத்ய வித்வத் வசநங்களெல்லாம் அத்வைத ஸித்தாந்தத்தின் அந்தர்ஹ்ருதய ஸாரத்தை அறிந்துகொள்ளமாட்டாத குறையினாலே தானென்று த்ருடமாக நிச்சயிப்பதற்குத் தடையொன்றுமில்லையன்றோ ?

உத்தமமான அத்வைத ஸித்தாந்த க்ரந்தங்கள் அநேகத்திற்கு நிர்மாதாவான ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதீ ஸ்வாமிகள் தாமும் அத்வைதாத்ம விக்ஞாநத்தை அலக்ஷ்யஞ் செய்தாரென்றோ அதனைத்தவிர வேறொன்றை ப்ரும்ஹபாவ ரூபமான பரம முக்திக்கு ஸாக்ஷாத் ஸாதனமாகுமென்று அங்கீகரித்தாரென்றோ கனவிலும் நினைக்கலாகாது. ஆனால் அப்படிப்பட்ட க்ஞாநம் லபிப்பதற்கு பக்தி ப்ரேரிதமான பகவத் ப்ரஸாத மொன்றுதான் அவ்யாஹத ஸாதன மென்று தான் முறையிடுகிறார். இது ஸ்ரீ பகவத் பாதாளுக்கும் பரம அபிமதமானது தானென்பது நாம் காட்டிய 'மந்மநாபவ' 'ஸர்வதர்மாந்' என்கிற கீதாச்லோகங்களின் வ்யாக்யானத்தில் அவஸாந ஆரம்ப பாஷ்யவசநங்களினால் விசதமாய் விடுகிறது. ஆதலால் பகவத் கீதை பக்தி ப்ரதானமா? அல்லது க்ஞாந ப்ரதானமா? என்கிற ஒரு க்ரந்தத்தின் ப்ரதான உத்தேச விசயத்தில் மட்டும் இவ்வாசார்யர்களுக்குள் சிறிதளவு அபிப்ராயபேதமேயன்றி ஸித்தாந்த ப்ரக்ரியைகளில் மஹத்தான பேதமொன்று மேயில்லை. 'பர ப்ரும்ஹபாவமேதான் மஹா புருஷார்த்தமான ஸாக்ஷாந் மோக்ஷம். அதற்கு ப்ரும்ஹாத்மைகத்வ விக்ஞான மொன்றுதான் பரம ஸாதனம்' என்கிறவரையில் அத்வைதாசார்யர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான அபிப்ராயம்தான். என்றாலும் இதைத்தவிர வேறு புருஷார்த்த மொன்றுமில்லை யென்றுவது இவர்கள் சொல்லவில்லை. ஸகுண ப்ராப்தி பர்யந்தமான உயர்ந்த புருஷார்த்தங்களும் பகவத் பக்தி ரூபமான உத்தம ஸாதனமும் உண்டென்றே இதார்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். மேலும் இந்த பக்தியென்பது ஸகுண ப்ரும்ஹாநுபவத்தை ப்ராபிக்கிற தென்பது மாத்திரமின்றி க்ஞாநார்த்தமாக அநுஷ்டிக்கப்படுமானால் க்ஞாந லாபத்தையுமளிக்கின்றதென்றும் அப்போது க்ஞாந பலமான ஸாக்ஷாந் முக்திக்கும் அதாவது பர ப்ரும்ஹ பாவத்திற்கும் பரம்பரையாகக் காரணமாகிற தென்றும் உபதேசித்தருளி யிருக்கின்றனர். நிற்க,

க்ஞாந ப்ரதானமான க்ரந்த மென்றதையும் க்ஞாநத்தையே தனது முக்கிய விஷயமாக வைத்துக்கொண்டு அதைச்சொல்லி பூர்த்தியடைகிற க்ரந்தமென்று இவர்கள் கருதுகிறார்களேயன்றி அந்த க்ரந்தத்தில் பக்தியைப் பற்றிய ப்ரஸ்தாவமே கிடையாதென்று கூட அபிப்ராயப் படுகிறார்களில்லை. ஆதலால் தான் ஸ்ரீபகவத் பாதாள் உதாரா: ஸர்வ என்கிற ச்லோகத்திற்கு பக்தி விசேஷ ப்ரதிபாதந பரமாக பாஷ்யத்தைச் செய்து வைத்து அடுத்ததான ஸர்வதர்மாந் என்கிற ச்லோகத்தை க்ஞானபரமாக பாஷித்துப் போந்தார்கள். இப்படியே பக்தி ப்ரதானமான நிபந்தனங்களிலும் அதன் சிறந்த பலமாக க்ஞாநமும் ப்ரதிபாதிக்கப் பட்டிருப்பதை வெகுவாகக்காணலாம்.

எனவே, பகவத் பாதாள் பகவத் கீதையை க்ஞானப்ரதானமென்று கருதியதால் க்ஞானோபாயமான பக்தியை முன்னறச்சொல்லி பிறகு அந்த பக்தியின் மஹத்தர பலமான க்ஞானத்தை ஸர்வதர்மாந் என்கிற ச்லோகத்தின் தாத்பர்யமாக வைத்து க்ரந்தத்தை பூர்த்திசெய்கிறார்கள். ஸரஸ்வதீ ஸ்வாமிகளோ வெனில், பக்தி ப்ரதானமான க்ரந்தமென்று எண்ணியதால் இந்த ச்லோகத்தையே பக்தி ப்ரதிபாதகமாக வ்யாக்யானித்துப் பூர்த்திசெய்கிறார். இதுவின்றி ஐகாலய விருத்தமான வேறு வித்யாஸமொன்றுமில்லை.

இவ்வளவைக்கொண்டு தான் ஸ்வாமிகள் பகவத்பாதபாஷ்யத்தை அநுஸரிக்காமல் ஸர்வதர்மாந் என்கிற ச்லோகத்திற்கு ஸ்வாசயாநுகுணமாக வ்யாக்யானஞ் செய்யலானார். இது ஒரு குற்றமாகாது. ஆனால் ஸ்வாமிகள் ஸர்வதர்மாந், என்கிற இந்த ச்லோகத்தின் வ்யாக்யானத்தில்

«தர்மபதம் தர்மாதர்மோபயலக்ஷணமித்யயுக்தம்»।

[இங்குள்ள 'தர்மம்' என்கிற சொல்லானது தர்மம் அதர்மம் எனப்படுகிற இருவகைக் கர்மங்களையுங் குறிக்கின்றது, என்பது யுக்தமல்ல] என்று சொல்லுகிறார்.

இது «தர்மஶப்தேந அதர்மஸ்யாபி க்ரஹணே, நைஷ்கர்ம்யஸ்ய விவக்ஷிதத்வாத்.»

[தர்மமென்றதினால் அதர்மத்தையுங்கூட்டி கர்மங்கள் யாவற்றையுமே சொல்லியதாகிறது. சொல்ல உத்தேசித்திருப்பது நைஷ்கர்ம்யமாதலால்,] என்கிற பகவத் பாத பாஷ்யத்தைச் சற்று தூஷித்தது போலாகுமானால் பகவத்பாதசரணங்களில் பக்தியுள்ளவர்களுக்கு அவ்வளவுகூடப்பொருக்காது. அதனால் "இவர் ஸ்ரீபகவத் பாதாளுடைய அபிப்ராயத்திற்கு விபரீதமாகப் பொருள் கூறுகின்றார்" என்பது போன்ற சற்று சூடான சொல் ஒன்றிரண்டை சாஸ்த்ரிகள் ப்ரயோகிக்க நேர்ந்திருந்தாலும் அதில் ஆச்சர்ய மில்லை. அது ஸஹஜமே. சாஸ்த்ரிகள் மட்டு மல்ல. ஸ்ரீபகவத் கீதையின் வ்யாக்யான கர்த்தாக்களான வேறு சிலர்கூட இக்காரணத்தைக்கொண்டே ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் மீது குறைகூறி யிருக்கிறார்கள். ஆனால் அத் தவறைக்கூட பகவத் பக்தியிலுள்ள அபிநிவேச ரூபமான குணத்தினாலேற்பட்டதென்று சாஸ்த்ரிகள் ஸஹித்து ப்ரசம்ஸித்து யிருக்கிறார். ஆனதினால்தான் தமது வார்த்தைகளின் முடிவில் 'பக்தியிலுள்ள அபிநிவேசத்தால் இவர் பகவத் கீதைக்கு பக்தியிலேயே தாத்பர்யமென்று விவரித்த போதிலும் அத்வைதாநுபவி யென்பதில் ஸந்தேஹமில்லை' என்ற ப்ரக்ருதாநுகுணமான ப்ரசம்

ஸையோடு பூர்த்திசெய்திருக்கின்றார். ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதியை ப்ரசம்ஸிக்கவேயன்றோ இப்ரகரண மேற்பட்டது.

ஆகவே ப்ரும்ஹ ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்த்ரிகளைப் போன்ற பெரியாரின் உக்திகள், அத்வைத ஸித்தாந்தத்தின் மஹத்துவம் கொஞ்சம் குறைவுபடுமேயென்று சங்கித்து புத்தி சலனமடைவதற்கு இடங்கொடாவென்கிற நம்பிக்கையோடு நாமிங்கு அன்னாருடைய வசனங்களுக்கு கீழ்ச்சொன்னபடி பாவத்தை வர்ணித்தோம்.

நிற்க, தீபிகையில் இவ்விஷயத்தின் முடிவில் "இதன் தத்வத்தை யாவரேனும் தெரிவிப்பார்களோ" என்று கேட்டிருந்தநாலும் இதனை எழுதலானோம். குறைகளைப் பொருத்தருளவும்.

நண்பர்களே, இந்த வ்யாஸத்தின் வாயிலாக உங்களிடையில் நாம் தெரிவித்துக்கொள்ள விரும்பிய அர்த்த பாகத்தின் ஸங்க்ரஹமென்னவென்றால்:—

(1) அத்வைத ஸித்தாந்தம் பகவத் பக்திக்கு ஒவ்வாதென்றும் அது பக்தியை தூரத்தில் தள்ளிவிடுகிறதென்றும் அதில் பக்திக்கு எவ்வித அவகாசமும் கொஞ்சமேனுமில்லையென்றும், இப்படியெல்லாம் சொல்வது பாட்சாத்யராகத் தானிருக்கட்டும் அல்லது நம் தேசத்தாராகவே தானிருக்கட்டும் எப்படியிருந்தாலும் அது யதார்த்தமல்ல என்பதொன்று.

(2) ப்ரக்ருத உபந்யாஸகரான பண்டிதருடையதாகக் காட்டப்பட்டிருக்கிற வாக்யங்களுள் ஒன்றினாலும் பாச்சாத்ய ப்ரப்ருதிகளுடைய அபிப்ராயம் அங்கீகரிக்கப்பட்டதாகாதென்பது இரண்டு.

(3) ஸ்ரீமத் சங்கர பகவத்பாத ஸ்ரீமது ஸூதந ஸரஸ்வதீ ப்ரப்ருதிகளான அத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஆசார்ய புருஷர்கள் யாவருக்குமே "விமுக்தியைப்பெற விரும்புகிற யாவருக்கும் பகவத் பக்தி செய்யவேண்டியது அத்யந்த அவச்யமானது" என்று ஏகாஸமான அபிப்ராயமேயன்றி இவ்விஷயத்தில் அன்னார்களுக்குள் அபிப்ராய பேதம் ஸ்வல்பங்கூட இல்லை என்பது மூன்று.

இம்மூன்று விஷயங்களையும் இவற்றுக்குள்ள ப்ரமாணங்களைக் கொண்டு நாம் ஆராய்ந்து பார்த்த பிறகு பக்திசெய்வது அத்வைதியாக இருப்பதற்கு விருத்தமென்று புத்தி சலிப்பதற்கோ அதன் மூலம் அப்படி அது விருத்தமாயிருக்கும் பக்ஷத்தில் அத்வைத மதத்தின் மஹிமை கொஞ்சங் குறைந்து போகுமேயென்று அஞ்சுவதற்கோ எதற்கும் இனி சற்றேனும் அவகாசமிராதென்றே நினைக்கின்றோம்.

ஸஹ்ருதயர்களே, இந்த ப்ரஸங்க சந்தர்பத்தில் அத்வைதாத்ம விக்ஞானமும் பகவத்பக்தியும் எப்படியொன்றுசேரும்? க்ஞானம்ஸகலபேத நிவ்ருத்தியுள்ளது. பக்தியோவெனில் ஈச்வர ஈசிதவ்யாதி நாநாபேத கர்பிதமானது. பேதம் ஸ்புரிக்கவில்லையென்றால் பக்தி பண்ணுவதற்கு இடமில்லை. ஸ்புரிக்கின்றது தானென்றாலோ ப்ரும்ஹாத்மைகத்வ விக்ஞானமென்கிற பேச்சுக்கே யோக்யதையில்லை. இனி இவ்விரண்டும் ஒருவரிடத்தில் ஒத்துவாழுகின்றதென்பது யுக்தமா? அல்லது க்ஞானத்தையடைவதற்கு முன்னால் தான் பக்தியா? ஞானவான்களுக்கு பக்தியென்பதே கிடையாதா? எவ்வகையாகவேனும் ஞானவான்களுக்கும் பக்தியுண்டென்றே வைத்துக்கொண்டாலும் அவர்கள் செய்கிற பக்திக்கு பலமென்ன? அதுவேதான் அவர்களுக்கு ஸ்வயம் புருஷார்த்தமாகிறதென்னும் பக்ஷத்தில் அந்த பலம் எத்துணைகாலம் அநுவர்த்திக்கும்? அதுவே ஸ்திரமாக நின்றுவிடுமானால் அத்வைத விக்ஞானத்தின் பரம உத்தேச பலமான பரப்ரும்ஹபாவாபத்திக்கு அவகாசமிராதே! அது எப்படி ஸம்பவிக்கும்? என்பவை போன்ற ப்ரும்ஹாத்வைத ஸித்தாந்த ஸம்பந்தங்களான பற்பல ப்ரச்னங்கள் ஒன்றின் மேலொன்றாகக் கிளம்புகின்றன. அவைகளைப் பற்றிய நிர்ணயத்தை மற்றொரு முறையில் விவரித்துக் கூறுகின்றோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் உபந்யாஸ ஸங்க்ரஹம்

சென்னைப் பட்டணம் பகவத்கதா ப்ரஸங்க ஸபையில் ஷை ஸ்வாமி நடத்திவரும் உபந்யாஸங்களின் வைபவம் முன் ஸஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ராமாயண யுத்தகாண்டத்தில் ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்தில் 25-6-31ல் ஷை ஸ்வாமி உபந்யஸித்த விசேஷார்த்தங்களின் சுருக்கம் வருமாறு:—

ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுடைய வார்த்தையைக் கேட்டு ஸமுத்ர ராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணினாரென்பதை வெளியிட்ட வால்மீகி மஹரிஷியும் கம்பரும், ஸ்ரீராமபிரானையும் ஒரு கடலாகப் பேசினார்கள்.

"ஸமுத்ரம் ராகவோ ராஜா சயாந: ப்ரதிசிச்யே மஹோததே:"

என்பது வால்மீகி மாமுனிவரின் வாக்கு. இதில் "ப்ரதிசிச்யே" என்றதனால் அந்தக் கடலை நோக்கி மற்றொரு கடல் எதிரே பள்ளிகொண்டது போலும் என்பதாகக் கருத்து தொனிக்கின்றதென்று மஹான்கள் வியாக்கியானஞ் செய்தார்கள். கம்பரும் தமது இராமாயணத்தில் வருணனை வழிவேண்டு படலத்தில் "கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி" என்று ஸ்பஷ்டமாகவே கூறினர். திருவாய் மொழியில் 6, 9, 3 பாசுரத்தின் நம்பிள்ளையீடு முப்பத்தாறாயிரப்படியிலும் "ஒரு கடல் ஒரு கடலோடே

ஸ்பர்த்தித்துக் கிடந்தாப்போலே யிருக்கை'' என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. நிக மாந்த மஹாதேசிகனும் ரகுவீரகத்யத்தில்,

''ப்ரதிசய நஸம்ஹ்ருதிகால ஸம்பதிதவயோயிவாதிந''

என்றருளிச் செய்ததில் 'ப்ரதிசய' சப்தத்தாலே இக்கருத்தை வெளியிட்டருளினர். ஆக இப்படிப்பட்ட முன்னோர் மொழிகளுக்குச் சேர எம்பெருமானுக்கும் கடலுக்குமுள்ள ஒற்றுமை நயம் பலபடியாக விளக்குதற்குரியது.

1. பெரிய திருமொழியில் (2–8–5) ''நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமுந் தங்குகின்ற, அலைகடல் போன்றிவர்'' என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் தாமே எம்பெருமானுக்குள்ள ஸமுத்ர ஸாதர்மியத்தை ஒருவாறு அருளிச் செய்தார். கடலானது மைநாகம் முதலிய மலைகளையுடையது; எம்பெருமான் ''ஈரிரண்டுமால் வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால்'' என்கிற படியே மலைபோன்ற திருத்தோள்களையுடையவன். ''கருகதிர் வழங்கு தகடுபடு செம்பொன் நவமணி குயின்ற தொடிபணி யணிந்த கனைவிலிடு நீலவெற் பொத்திருந்தன'' என்றார் (திருவரங்கக் கலம்பகத்தில்) பிள்ளைப் பெருமாளையங்காரும். கடல் சிறந்த நவமணிக்குவியலுமுடையது. எம்பெருமான் 'குருமாமணிப்பூண்' என்கிற கௌஸ்துப மணியையும் செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளும் கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும், மங்கலவைம்படையுந் தோள்வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்'' என்னும்படியான திவ்யாபரண மணிகளையுமுடையவன். கடல் லக்ஷ்மீப்ரஸூதி க்ருஹமாகையாலே பெரிய பிராட்டியார்க்கு உறைவிடம். எம்பெருமான் அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பன். கடல் சங்கு தங்குமிடம்; எம்பெருமானும் வெள்ளைச் சுரிசங்கு ஏந்துவன்.

''உயர்ந்த தவ ருசிர திவ்யவிபூஷணாந்
வேதாத்தி க்ஷணியாம் மதித ஸதே!
வக்ஷஸி ஸ்பரித ஸ்தனாக்ஷமாரோ
கனஸ்யாஸ்ய கருணா வ கரிஸம்!''

என்கிற வரதராஜ ஸ்தவ ஸ்ரீஸூக்தியும்,

''ஸாரஸ்யாநித ஸமஸ்தரூஸரீசரவிசேஷகஸ
ஸ்ரேணீ ஸீகரபாதந தத ஜலேத்ர வ்ருக்ஷணாத்தோதரா!
ஆவிஃ கஸ்யாஹுக்ஷீரம்மவஸஸேஃ நிஸ்ஸுஹ்ருதேத்ராவதம்
வக்ஷோ உத்யுஸயோரா ஜ்யுதிஸ்ராவம் விமோசகேஸஹிஃ''

என்கிற ஸ்ரீரங்கராஜ ஸ்தவ ஸ்ரீஸூக்தியும் இங்கு ஸ்மரிக்கத் தகும்.

2. கடல் முன்னீர் என்று பெயர் பெற்றிருக்கும்; எல்லாவற்றிற்கும் முன்னே ஏற்பட்ட நீர் என்பது பொருள். ''அப ஏவ ஸஸர்ஜாதௌ'' என்று மஹரிஷி

களும் ''நன்மைப் புனல்பண்ணி'' என்று ஆழ்வார்களும் கூறினது காண்க. இங்ஙனமாகக் கடல் முதன்மை பெற்றிருப்பது போல எம்பெருமானும் ''முனைவன் மூவுலகாளியப்பன்'' என்னும்படியே ஆதி பகவனாயிருப்பன்.

3. கடல் முன்னீர் என்பதல்லாமல் முந்நீர் எனப்படுவது முண்டு. (நகரத்தில் வாசிகொள்க.) ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் எனப்படுகிற மூவகைப்பட்ட நீரையுடையது கடல் என்றபடி. எம்பெருமானும் நீர்போன்ற கருணாரஸம் மூன்று வகையாக இருக்கப் பெற்றவன்; 1 இயற்கையான இன்னருள், 2 பிறர் படும் துயரத்தைக் கண்டு தோன்றுகின்ற அருள், 3 பிராட்டியின் புருஷகார பலத்தாலே உஜ்ஜ்ரும்பணம் செய்விக்கப்படுகின்ற அருள்—என மூவகைப்படுமிறே பகவானது கருணாரஸம்.

4. கடலானது சிறுமீன் முதலாகத் திமிங்கில மீனளவும் கிளிஞ்சல் முதலாக மணி மாணிக்க மீறாகவும் அதம உத்தம விபாகமின்றியே அனைத்துக்கும் தன்பக்கல் இடங்கொடுத்திருக்கும்; எம்பெருமானும் ''சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர் திருவாகம்'' ''ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளுந்தனியுடம்பன்'' ''வஸ்ரீஜி தேவாவஸ்ஸவ தேவ தேஹே'' இத்யாதிப்படியே ஸர்வாச்ரயமாயிருப்பன்.

5. கடலானது தேவர்களுக்குச் சாவா மருந்தான அமுதத்தைச் சுரந்தளித்தது. எம்பெருமானும் ''உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்'' ''தன்னைப் பெற்றோர்க்குத் தன் வாயமுதந்தந்து என்னைத் தனிப்பிக்கின்றான்'' ''அழகிய வாயில் அமுதவூறல்'' என்னும்படியே பேரன்புடையார்க்குச் சாவா மருந்தான வாயமுதத்தை யளிக்குமவன்.

6. கடல் அளவிட முடியாத ஆழமுடையது. ''ஸமுத்ர இவ காம்பீர்யே'' என்கிறபடியே எம்பெருமானது கம்பீரத் தன்மையும் பாசுரமிட்டுப் பேசவொண்ணாதது. கொள்ள மாளாவின்ப வெள்ளமான விதிலே யிழிவார்க்கு உள்ளாழம் காண்பரிது.

7. கடல் தன் பக்கலுள்ளதை மேகங்களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும்; மேகம் பெய்யும் நீரைத் தான் வாங்கிக் கொள்வதுஞ் செய்யும். எம்பெருமானும் ''ஸகலு ஸுவ்ருதோ ஹி விஷ்ணு:'' ''அயிதாராய வரிதா நதீக்ஷிதம்'' என்கிறபடியே கொடுக்கவும் வல்லன்; ''யத்கரோஷி யதச்நாஸி ... தத்குருஷ்வ மதர்ப்பணம்'' என்ற வாயோலைப்படியே ''கரோமி யத்யத்ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி'' என்று கொடுப்பார் கொடுப்பவற்றைக் கொள்ளவும் வல்லன்.

8. கடலானது மழைநீர் தன்னிடத்து விழப்பெற்றலும் அதனால் ஒரு அதிசயமும் உண்டாகப் பெறாது; ''வ்ருஷ்டிபிர்வாரிவாஹா ஸம்வேத்ராக் ஸ்வாதந்ரோதா ந தா அம்புநத:'' (ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்) என்கிறபடியே பெய்யும் முகிலுக்கு ஆத்மலாபமே யத்தனை. எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு ஸமர்

ப்பித்தாலும் அதனால் நாம் க்ருதார்த்தர்களாவது தவிர அவாப்த ஸமஸ்தகாமனானவனுக்கு அபூர்வமாகச் செல்வ நிறைவு ஒன்றுமில்லை.

9. கடல்நீர் நம்போல்வார் வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனாலும் "ஆஜாநுஹிரண்யா: கும்பஹீநஸ்ய நாத:" (பாதுகாஸஹஸ்ரம்) என்கிறபடியே குறுமுனிவனுக்கு உணவாயிற்று. எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன் கெடத்தோன்றின நஞ்சினை" என்னுமா போலே நம்போல்வாரான ஆஸுர ப்ரக்ருதிகளுக்கு விஷயமாயிருந்தாலும் சுவையறிவார்க்கு "அமுதிலு மாற்ற இனியன்" "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலைக்கோனே யாகி" என்னும்படி பரமபோக்யனானவன். "நாக்கு நின்னையல்லா லறியாது" "தேனூறி யெப்பொழுதும் தித்திக்குமே" இத்யாதி.

10. கடலானது அஞ்சினார்க்குப் புகலிடமாயிருக்கும்; இந்திரனிடத்து அஞ்சின மைநாக கிரி முதலியவற்றிற்குப் புகலிடமா யிருப்பதன்றோ? எம்பெருமானுக்கு இத்தன்மை ஸ்வபாவஸித்தம். "அஞ்சினேற்கு அஞ்சலென்று காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுள்ளே தோன்றினாரே." "ஆர்த்தாநாம் பரித்ராணாய பரேஶ ஹஸ்ததோ நாராயணோ கதி:" இத்யாதி.

11. கடல்நீர் மாமுகிலின் வாய்வழியாக வந்தாலன்றி யார்க்கும் உபஜீவிக்கவொண்ணாது; எம்பெருமானும் ஆழ்வாராசார்யர்களின் திருவாய் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்கலாகான். [இவ்விடத்தில் "முக்தாவாஸஸ்ய த்வஸ்ய ஸம்ஜீவநம் ஜநா: வாதாப்த கார்ண்யாதம்ஸம் நாயார்த்தவஷம் வஸ" இத்யாதி ச்லோகத்தின் பொருளும், "மேகம்பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே" என்கிற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தியின் சீரிய பொருளும் அநுஸந்திக்க வுரியன.)

12. கடல் பெரும்பாலும் குளிர்ச்சி மிக்கிருக்கச் செய்தேயும் ஒரு புறத்தில் பாடபாக்நி பொங்க நிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் "நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறக்க" வெவ்வியனா யிருப்பதுமுண்டிறே.

13. கடல் சந்திரனைக் கண்டால் பொங்கிக் கிளரும்; எம்பெருமானும் ஞானிகளைக் கண்டால் "தோள்களா யிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய்" என்னும்படியே சதசாக மோகப்பணைப்பன்.

14. நாமெல்லாரும் கடலின் கரையிலே நிற்கவேண்டுமேயல்லது உள்ளே புகமுடியாது; சிலவர்களே உட்புகுந்து ரத்நங்களைத் திரட்டிக் கொணர்வார்கள். அதுபோலே, பகவத் விஷயத்திலே நாமெல்லாம் மேலெழ நிற்க, சில மஹான்களே ஆழ அலாவித்து வேதார்த்த ரத்நராசிகளை வாரிக் கொணர்ந்து கொடுப்பார்கள்.

15. கடல் விஷத்தையும் தந்தது அமுதத்தையும் அளித்தது. எம்பெருமானும் "பயக்ருத் பயநாஶந:" என்கிறபடியே பயத்தையும் விளைவிப்பான், பயநாசமும் பண்ணித்தருவான். "நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய் வெல்பகையும் நட்பும் விடமு மமுதமு மாய்" என்றார் நம்மாழ்வாரும்; "ஹவசோக்ஷணபோஷ்யேவ ஜஞ்ஜா: க்ரியதே ஸம்ஸ்ருதிவே" என்றார் பட்டரும்.

16. கடல் எத்தனை தடவை பார்க்கப்பட்டாலும் திருப்தி தர மாட்டாது; காணுந்தோறும் அபூர்வ தர்சநமாகவே யிருக்கும். எம்பெருமான் படியுமப்படியே; "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழிதோறும் அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்றாரே நம்மாழ்வார்.

17. கடலுக்கு ஒரு பக்கத்தில் அபாரமான வரவுகளும் மற்றொரு பக்கத்தில் அபாரமான செலவுகளுமா யிருக்கும்; (பல நதிகள் வந்து புகுவது வரவு; மேகம் நீர் முகந்து கொண்டு போவது செலவு) எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனேயாயிருக்கும். திருவேங்கடமுடையான் ஸந்நிதிபோன்ற ஆலயங்களில் உண்டியில் வரவுமுண்டு, பலவகைச் செலவுமுண்டு.

18. கடல்வழியே போவார்க்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும்; "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்றார்களே. அநுபவத்திலும் இது காணாநின்றோம். இவ்வண்ணமே எம்பெருமான் வழியே போவார்க்கு மஹார்த்தங்கள் கிடைக்கும்; "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் றன்னையேதான் வேண்டுஞ் செல்வம்" என்றார் குலசேகரப் பெருமாள்.

19 "அப்தி ரலங்கித ஏவ வாநரபடை: கிம்த்வஸ்ய கம்பீரதாம் ஆபாதால நிமக்ந பீவரதநுர் ஜாநாதி மந்தராசல:" (முராரி) என்கிறபடியே வாநர வீரர்கள் கடலைக் கடந்துவிட்டாலும் அவர்களுக்கு உள்ளாழம் தெரியாது; அடியளவையில் அழுந்தின மந்தர கிரிக்கே அந்த ஆழம் தெரியும். அதுபோலவே, எம்பெருமான் விஷயத்தில் நாமெல்லாரும் கவிகள் இயற்றித் துதி செய்துவிட்டாலும் அவன்படிகளை நாம் சிறிது மறியோம்; ஆழ்வார்கள் என்று திருநாமம் பெற்று அவ்விஷயத்தில் ஆழமூழ்கி யிருக்கும் மஹான்களே ஆழ மறிவார்கள். "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும், ஆலில் துயின்றதுவு மாரறிவார். ஞாலத்தொரு பொருளை வானவர்தம் மெய்ப்பொருளை, அப்பிலரு பொருளை யானறிந்தவாறு" என்று பேசுவதற்கும் அவர்களே உரியர்.

20. கடல் கலங்காது; கலங்கினாலும் ஒரு நொடிப்பொழுதில் தானே தெளிவு பெறும்; தண்ணளியே வடிவெடுத்த எம்பெருமானும் சீற்றங் கொள்ளமாட்டான்; ஔபாதிகமாகச் சீறினாலும் அடுத்த க்ஷணத்திலே அநுக்ரஹம் பொங்கி நிற்பன்.— "ஹத வாலிவயஸ்ய ஶாஸ்த்ர:" என்னும்படி ஸுக்ரீவ மஹாராஜர் பக்கலிலும், "ஸேதும் ஸமாரோஹயிஷ்யாமி" என்னும்படி ஸமுத்ர ராஜன் பக்கலிலும் அளவு கடந்து சீறிச் சிவந்த இராமபிரான் அடுத்த க்ஷணத்திலே அருள் பொலிய நின்றமை காண்க. காகாஸுரன் போல்வார் திறத்திலும் இது காணத்தகும்.

21. கடல் அபரிச்சேத்யமாயினும் குறுமுனிவன் கையிலே ஆசமநத்திற்காகும்படி அடங்கி நின்றது. "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்னும்படி வேத வேதாந்தங்களுக்கும் அபரிச்சேத்யமான பகவத் விஷயம் "செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று நிகமாந்த மஹாதேசிகன் பேசலாம்படி ஆழ்வார்களுக்குப் பரிச்சேத்யமாயிற்று. "நண்ணுவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணுதனகளெண்ணும் நன்முனிவர் இன்பந் தலைச்சிறப்பப், பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடி" (10-7-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் இரண்டாமடிக்கு நம்பிள்ளையீடு ஸேவிக்க. நன்முனிவர்கள் எண்ணுதனகளெண்ணும்படியாக ஆழ்வார் திருவாய்மொழி பாடினாராம். எண்ணுதனகளெண்ணுதலாவது என்னவென்னில்; 'எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை விரிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்க ஒரு ஸ்ரீ கோசமும் அவதரிக்கவில்லையே, ஆநந்தகுணமொன்றைப் பேசப்புகுந்த உபநிஷத்தும் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும்படி மீண்டதே; அப்படியல்லாமல் பகவத் விபூதிகளை விரிவாகப் பேச ஒரு க்ரந்தம் அவதரிக்கவேணும்' என்று முனிவர்கள் (திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே) எண்ணினார்களாம்; அப்படிப்பட்டவர்கள் தாமே திருவாய்மொழி திருவவதரித்த பின்பு என்ன எண்ணினார்களென்றால், 'ஐயோ! எம்பெருமானுக்கு இன்னஞ் சில குணங்களும் இன்னஞ் சில விபூதிகளும் இன்னஞ் சில அவதாரங்களும் இன்னஞ் சில சேஷ்டிதங்களும் இல்லாமற் போயினவே! இன்னஞ் சில குணவிபூதி விக்ரஹ சேஷ்டிதங்களும் அப்பெருமானுக்கு உண்டாகமாட்டாவா!' என்றெண்ணினார்களாம். இதன் கருத்தென்ன? எம்பெருமானுக்குள்ள ஸ்வரூப ரூப குண விபூதி அவதார சேஷ்டிதங்களடங்கலும் ஆழ்வாருளிச் செயலில் அடங்கிவிட்டனவென்பதாம்.

22. கடலானது புல் துரும்பு முதலானவற்றை அலைமேலேமோதி வெளியிலே தள்ளிவிடும்; மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது, உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்த ஜ்ஞாநமில்லாதாரைத் தள்ளிவிடும்; ஸம்பந்த ஜ்ஞாநமுடையாரை அங்கீகரித்திருக்கும். எம்பெருமான்படியு மிதுவேயாம். "அடங்கெழில் சம்பத்தடங்கக் கண்டு, ஈசனடங்கெழிலஃதென்று அடங்குகவுள்ளே" (1-2-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை நோக்கி இப்பாசுரங் கொண்ட பதிகமாகிய வீடுமின் முற்றத்தின் ப்ரவேசத்திலே நம்பிள்ளையீட்டிலே விளங்கவுள்ள விஷயமிது.

23. கடல் கடக்கவரிதாயினும் நாவாயினால் எளிதாகக் கடக்கலாகும். "[illegible]" (முகுந்தமாலை) என்கிறபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்றால் எம்பெருமானாகிற கடலையும் எளிதாகக் கடந்துவிடலாம். பத்துடையடியவர்க்கு எளியவன்.

24. கடலருகேயிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர்நிலை தேட்டமாகும். சாஸ்திரங்களால் எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் அர்ச்சையில் இழிந்தாலன்றி ஆர்த்தி சாந்தியில்லையிறே.

25. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிதுபோதாவது கடற்கரை சாராதிரார்கள். அதுபோலவே, பல காரியங்களையும் சுருக்கிக்கொண்டு தினப்படி ஒரு நாழிகைப் பொழுதாவது பகவத்கதையில் அந்வயியாதிரார்கள்.

ஆக இந்த இருபத்தைந்து அர்த்தங்கள் விரிவாக உபந்யஸிக்கப்பட்டன. "கடலில் அலை ஓயாது, எம்பெருமானுக்கும் அலம்புரிந்த நெடுந்தடக்கை ஓயாது."— "கடல் கோஷித்துக்கொண்டேயிருக்கும்; எம்பெருமானும் '[illegible]' இத்யாதிகளைச் சொல்லி கோஷித்துக் கொண்டேயிருப்பன்."— "கடல் ஒருநாளும் வற்றாது, எம்பெருமானுக்கும் ஒருநாளும் நாஸ்தித்வமுண்டாகாது."— "கடல் ஏறுவதும் வடிவதுமாயிருக்கும், எம்பெருமானும் ஸேவை ஸாதிப்பதும் மறைவதுமாயிருப்பன்." என்றிப்படிப்பட்ட நுணுக்கையர்த்தங்களும் பலபல உபந்யஸிக்கப்பட்டன. விரிப்பிற் பெருகும்.

ஒரு பக்தன்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

சாரதா சட்டம்

இரண்டொரு வர்ஷ காலமாகச் 'சாரதா சட்டம்' என்று ஒரு சட்டம் நமது அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு அநுஷ்டாநத்திலும் நடைபெறுவிக்கப்பட்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்தச் சட்டம் நமது ஸநாதந தர்மத்திற்கு மிகவும் விருத்தமென்றும், இம்மாதிரி ராஜாங்கத்தார் தர்ம விருத்தங்களான விஷயங்களில் ப்ரவர்த்தித்து அதர்மாநுஷ்டாநத்திலிருந்து பயப்படும் ஸாது ஜநங்களை அந்த அதர்மங்களையே அநுஷ்டிக்கும்படி நிர்பந்திப்பது பெரியதொரு அக்ரமமென்றும், ஆகையால்

இந்தச் சட்டம் போன்ற சட்டங்களை ஏற்படுத்துவதிலிருந்து ராஜாங்கத்தார் ஒழியவேண்டுமென்றும் நாம் ஏற்கெனவே பலதடவை இந்தத் தீபிகை வாயிலாக விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறோம். அவையெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்கு போல் ஆகிவிட்டன. சாஸ்த்ரத்தில் விச்வஸித்து அதில் சொல்லியிருக்கிறபடி அநுஷ்டிப்பவர்களெல்லாரும் சட்டத்திற்கு மீறி நடந்தவர்களாக ராஜதண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ராஜதண்டத்திலிருந்து பயப்படும் சிலர் இந்த ராஜாங்கத்திற்கு வெளிப்பட்டுள்ள ஸ்தலங்களுக்குப் போய், அப்படிப் போவதால் ஏற்படும் பொருள் செலவையும் தேஹ ச்ரமத்தையும் கொஞ்சமேனும் ஆதரியாமல் தமது தர்மங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். அப்படிப் பொருள் செலவு முதலியவைகளைச் செய்வதற்கு அசக்தர்களான பலஎளிய ஜநங்கள், தமது தௌர்பாக்யத்தை நிந்தித்துக் கொண்டு வேறு கதியற்றவர்களாய் நிர்பந்த வசத்தால் அகார்யத்தையே செய்து வருகிறார்கள். இந்தச் சட்டம் தார்மிகர்களெல்லாருக்கும் பெரிய க்ஷோபத்தை ஜநிப்பித்து வருகின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. க்ஷோபங்களிலிருந்து ரக்ஷிப்பதற்குக் கடமைப்பட்டவர்களே க்ஷோபத்தை விளைவிப்பார்களாக நேரும் பொழுது தைவத்தை ஆச்ரயிப்பதே தீனர்களின் கார்யமாதலால், மிக்க தைந்யத்தை அடைந்திருக்கும் நாம் நமது குறைகளைத் தைவத்தினிடம் முறையிட்டுக் கொண்டு அந்தத் தைவத்திற்கு க்ருபை எப்பொழுது ஜநிக்குமென்று எதிர்பார்த்திருக்க வேண்டுமே தவிர வேறு என்ன செய்யக்கூடும்?

இப்பொழுது, சில ஆஸ்திக ப்ரபுக்கள் ஒன்று சேர்ந்து இந்தச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று மறுபடியும் ராஜாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளப்போவதாகவும் அதற்காகச் சில ப்ரயத்நங்களைச் செய்து வருவதாகவும் நாம் அறிகின்றோம். ஆபத்தை நிவாரணம் செய்து கொள்வதற்கு நம்மால் இயலும் வரை ப்ரயத்நங்களைச் செய்ய வேண்டியது அவச்யமே.

“ஜாதஸ்ய ப்ரதீகாரேண [illegible] மேதா யாவத் புத்திபலோதயம்”
[நேரும் போலவிருக்கும் ஆபத்தைத் தனது புத்தி சக்திக்கு எட்டும் வரையில் தடுக்க ப்ரயத்நப்படுவதே புத்திமான்களுக்கு லக்ஷணம்] என்று வஸுதேவர் சொல்லியிருப்பது போல, நமது ப்ராணன் நமது தேஹத்தில் இருக்கும் வரையில் நமக்குத் தீங்கு நேராமல் இருக்கும்படி நம்மை ஸம்ரக்ஷித்துக் கொள்ள முயல வேண்டியதுதான். ஆனால், இப்பொழுது இருக்கும் ஸந்தர்ப்பங்களையும் காலக்கொடுமையையும் பார்க்கும் நமக்கு நமது ப்ரயத்நம் எவ்விதம் ஸபலமாகப் போகின்றது என்று பெரியதொரு பீதி ஜநிக்கின்றது. ராஜ்ய தந்த்ர நிர்வாஹத்தில் அதிகாரத்தைப்பெற்றுள்ள ப்ரபுக்களுள்

பெரும்பாலோர் நமது சாஸ்த்ரங்களில் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறார்கள். ‘இது தர்மம், இது அதர்மம்’ என்று நிர்ணயிப்பதற்குக் கேவலம் யுக்தி ஒன்றே இவர்களால் கைப்பற்றப்பட்டிருக்கின்றது. இந்தத் தேஹம் போனபிறகும் ஆத்மாவுக்கு ஸத்தை இருக்கின்றதென்றும், அதன் ச்ரேயஸ்ஸைத் தேடுவதே நமது முக்யமான கார்யமாக இருத்தல் வேண்டுமென்றும், கேவலம் இந்த லோகத்து ச்ரேயஸ்ஸை மாத்ரம் நோக்கி நாம் நமது நடவடிக்கைகளை நடத்தி வருவது குருட்டுத்தனமான கார்யமே ஆகுமென்றும் நினைப்பவர்களை நாம் நமது அதிகாரிகளுள் காண்கிறோமில்லை. ‘நீங்கள் செய்வது அகார்யம்; அது தைவத்திற்கு ஸம்மதமாகமாட்டாது; அதனால் ஜகத்திற்கே பெரிய தீமை விளையும்; அதில் முறண்பட்டால் நம் எல்லாருடைய ஸ்வரூபமும் அழிந்துவிடும்’ இத்யாதியான பாசுரங்கள் செவிப்படாதபடி தமது அஜ்ஞாநத்தாலே அவர்களெல்லாரும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்களே! அவர்களிடம் முறையிட்டுக் கொள்வது எவ்விதம் ஸபலமாகும்? என்னும் சங்கை நமக்கு ப்ரபலமாக ஜநிக்கின்றது. இருந்த போதிலும் “யத்நே க்ருதே யதி ந ஸித்யதி கோऽத்ர தோஷ:” [யத்நத்தைச் செய்வோம்; அது பலியாவிட்டால் அதில் தோஷமொன்றுமில்லை] என்னும் ந்யாய ப்ரகாரம் நாம் யத்நங்களைச் செய்வோம்; பகவத் ஸங்கல்பம் என்னவோ? யார் சொல்லக்கூடும்? ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்கும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்குமாகவே தனது க்ருபையால் அப்பொழுதைக்கப்பொழுது அவதரிக்கும் நமது நாதன் ஏன் இப்பொழுது அவதரித்து நமது ப்ரயத்நங்களைத் தலைக்கட்டி வைக்கமாட்டான்?

“[illegible]
[illegible] ஸம்ரக்ஷணே [illegible]”

[ஹே லக்ஷ்மீச! தர்ம ஸம்ஸ்தாபநத்திற்கு யோக்யமான அவஸரமென்று எந்தக் காலத்தை நீ திருவுள்ளம் பற்றி இருக்கிறாயோ, அந்தக் காலம் இப்பொழுதே வந்து விட்டது; இப்பொழுதே அவதரித்து நீ எங்களுடைய முன்னிலையிலேயே தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டும்] என்று ஸ்ரீ கூரேசன் கதறினது போல நாமும் ப்ரார்த்திப்போம்.

“தர்மராஜ்யம்” என்னும் பத்ரிகையில், ஒரு நிரூபகர், ஸ்வல்ப காலமாக நமது ஹிந்து மதம் ஆபத்தை அடைந்து கொண்டு வருகின்றதென்றும், ஸ்வல்ப காலத்திலேயே அந்த மதத்திற்குப் பெரிய ஆபத்தை ஹிந்து மதமும் விளைவிக்கக்கூடிய சில புதிய அபாயங்கள் இப்பொழுது பல அதற்கு நேர்ந் மாகக் கிளம்பி வருகின்றனவென்றும், அவ்வபாயங்களிலிரு துள்ள அபாய ந்து அந்த மதத்தை ஸம்ரக்ஷித்துக் கொள்ளவேண்டுமானுல் ங்களும் அதற்கு நாம் என்ன என்ன உபாயங்களைக் கைப்பற்றவேண் டுமென்றும் இம்மாதிரியான விஷயங்களை விஸ்தாரமாக விசா ரித்து இரண்டொரு பத்ரங்கள் எழுதி வருவதை நாம் படித்துப் பார்த்தோம். அந்தப் பத்ரங்களிலிருந்து அவருக்கு ஹிந்து மதத்தில் த்வேஷம் இருக்கின்றது என்ருவது, அவர் கபடமாக துர்போதனைகளைப் பேசுகிருர் என்ருவது நினைப்பதற்கு ஒரு வித காரணமும் ஏற்படவில்லை. ஆனுல், ‘ஹிந்து மதம்’ என்று சொல்லப்படும் மதத்தைப்பற்றி அவருக்கு ஏற்பட்டுள்ள க்ரஹணம் தவறுதலான க்ரஹணமென்றும் அந்தக்காரணத்தாலேயே அவரால் சொல்லப்படும் ப்ரதீகாரமொன்றும் சரியான ப்ரதீகாரமாக மாட்டாதென்றும் சங்கிப்பதற்கு இடம் இருப்பதாக மாத்ரம் நாம் அறிகின்ருேம்.

ஒரு வஸ்துவை நாசம் அடையவொட்டாமல் காப்பாற்ற வேண்டுமென்று நாம் ப்ரயத்நப்பட்டால், ‘அந்த வஸ்துவின் ஸ்வரூபம் என்ன? அதைக் காப்பாற்றுவதற்காக நாம் கைப்பற்றும் உபாயத்தின ஸ்வரூபம் என்ன? அந்த வஸ்துவின் ஸ்வரூபத்திற்கு ஒரு வித ஹாநியையும் அந்த உபாயம் விளைவிக்கமாட்டாதா?’ என்னும் விஷயங்களை நன்ருக ஆலோசித்துப் பார்த்தே நாம் ப்ரயத்நத்தைச் செய்யவேண்டுமன்ருே? நம்மால் அவலம்பிக்கப் படும் உபாயம் அந்த வஸ்துவின் ஸ்வரூபத்தையே கெடுத்து விடக் கூடியதாக இருந்தால் அது சரியான உபாயமாகுமோ? மதம் என்பது ஸாமாந்யமாகத் தத்வ விசாரத்தையே நோக்காக உடைத்தாயிருந்தாலும், அந்தத் தத்வ ஜ்ஞாநத்தைச் சரிவரப் பெறுவது சிற்சில ஆசாரங்களாலேயே ஸாத்யம் என்று நமது ஹிந்து மதம் வற்புறுத்துகிறபடியால், நமது மதம் தத்வ விசாரத்தையும் அந்தத் தத்வ ஜ்ஞாநத்திற்கு ஸாதநமாயுள்ள ஆசார ரூபமான சிற்சில ஹிதங்களையும் இவ்விரண்டையும் தழுவி நிற்கின்றது என்பது வ்யக்தம். இதர மதங்கள் ஜ்ஞாநத்தை மாத்ரம் வற்புறுத்துகின்றனவே தவிர அவை ஜ்ஞாநம் ஆசாரம் இரண்டையும் வற்புறுத்தவில்லை. ஜ்ஞா

நம் என்பது புத்தியைக்கொண்டேபெறக்கூடிய வஸ்துவாக இருக்கையிலும் அந்தப் புத்தியின் சக்தியும் அசக்தியும் தெளிவும் குழப்பமும் நமது ஆசாரங்களையே சார்ந்து நிற்கின்றனவல்லவா! அந்த ஆசாரங்களுக்கு லோபம் நேர்ந்தால் புத்தியானது தெளிவை அடையாமல் சரியான ஜ்ஞாநத்தை ஸாதித்துக் கொடுக்க அசக்தமாகிவிடுகின்றதென்று நமது மதம் போதிக்கிறபடியால், ஆசாரத்தையும், ஜ்ஞாநத்தைப் போல, ஒரு ப்ரதாநமான விஷயமாகவே நாம் அங்கீகரித்தல் வேண்டும். அந்த ஆசாரங்களும் எவ்வகைப்பட்டன? யார் யார் என்ன என்ன ஆசாரங்களை அநுஷ்டித்தல் வேண்டும்? என்னும் விஷயங்களை த்ரிகால ஜ்ஞாநிகளான நமது மஹர்ஷிகள் நன்ருக விசாரித்து, ஸ்ம்ருதிகள் என்று சொல்லப்படும் க்ரந்தங்களில் விவரித்திருக்கிருர்கள். அந்த ஆசாரங்களைச் சரிவர அநுஷ்டித்து அதனுல் புத்திக்குத் தெளிவை ஸம்பாதித்துக்கொண்டு அந்த புத்தியால் வேதாந்த வாக்யங்களில் சொல்லப்பட்டுள்ள தத்வ ஜ்ஞாநத்தை உணர்ந்து, அதனுலேயே நாம் ச்ரேயஸ்ஸை அடைதல் வேண்டும். அப்படி ச்ரேயஸ்ஸைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படுபவர்களே ஹிந்து மதத்தைத் தழுவினவராவார்கள். ஆசாரம் ஜ்ஞாநம் ஆகிய இந்த இரண்டு அம்சங்களில் ஒன்று குறைவு பட்டாலும் ஹிந்து மதத்தின் ஸ்வரூபம் இழக்கப்பட்டதாகிவிடும். இதை அறியாமல், ஆசாரத்தை நமது இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாமென்றும், அப்படி ஆசாரத்தை மாற்றிக்கொண்டாலும் நாம் ஹிந்து மதத்தை விட்டு நழுவினவர்களாகமாட்டோம் என்றும் நினைப்பது தவறுதலான நினைவே. ப்ரக்ருத நிரூபகர், ஹிந்து மதத்திற்கு நேரும் போல இருக்கும் ஆபத்துக்களை பார்த்து சோகித்து அவைகளைத் தடுப்பதற்காக உபாயங்களைச் சொல்லி வருகையில், நாம் கால தேசங்களுக்குத் தகுந்தபடி நமது ஆசாரங்களுள் சிலவற்றை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் மற்றும் சிலவற்றை விட்டொழிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறபடியால், அவர் ஹிந்து மதத்தின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியாமல் பேசுகிருர் என்று நாம் சொல்லுகின்ருேம் வேதாந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ள தத்வ ஜ்ஞாநம் போல ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டுள்ள ஆசாரங்களும் ஹிந்து மதத்திற்கு அவச்யம் அபேக்ஷிதம். ஆகையால் ஆசாரங்களை அழிக்க ப்ரயத்நப்படுகிறவர்கள் ஹிந்து மதத்தைக் காப்பாற்றுகிறவர்களாகமாட்டார்கள் என்பதில் எவ்வித ஸந்தேஹமுமில்லை.

இக்காலத்தில் நம்மைச் சேர்ந்தவர்களுட் பலர் ஆசாரங்களைப் புத்தி பூர்வகமாக அநாதரித்து நடந்து வருகையிலும் அவர்கள் தம்மை ஹிந்துக்களென்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதர தேச வாஸிகளாகவும் இதர மதத்தை தழுவினவர்களாகவும் இருக்குமவர்களுட் சிலர், தாம் ஹிந்து மதத்தை அவலம்பித்து விட்டதாகச் சொல்லிக் கொண்டு ஒருவித ஆசாரமுமின்றிக்கே தத்வஜ்ஞாநத்தை மாத்ரம் பெறுவதற்கு ப்ரயத்நப்படுகிறார்கள் அவர்களை ஹிந்துக்களென்று அங்கீகரிக்க வேண்டியதை உத்தேசித்துச் சில பெரியோர்கள் அவர்களுக்குச் சிற்சில வைதிக க்ரியைகளைச் செய்விப்பதையும் நாம் பார்க்கிறோம். இவையெல்லாம் நமக்கு விஸ்மயத்தை ஜநிப்பிக்கின்றன.

நமது மதத்திற்கு ஹாநி ஸம்பவிக்கின்றது என்பது உண்மையே. அது காலத்தின் கொடுமையாலே உண்டாகின்றது என்பதை நாம் அறிய வேண்டும். மிகவும் சுத்தமான ஸித்தாந்தங்களுக்கும் கால பலத்தால் அசுத்தி ஏற்படுவது ஸஹஜமே.

"𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪"

[காலக்ரமத்தில் ச்ரோதாக்களுடைய புத்தி மாந்த்யம் முதலிய ஹேதுக்களால் கர்ம யோகமென்று சொல்லப்படும் உயர்ந்த மார்க்கமும் நஷ்ட ப்ராயமாகிவிட்டது] என்று ஸ்ரீகீதாசார்யனே சொல்லி இருக்கிறான். இந்த ஆபத்துக்கு ப்ரதீகாரம், ஒவ்வொருவரும் தமது தமது தர்மங்களைச் சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிற ப்ரகாரம் சரிவர பரிபாலநம் செய்து வருவதே. இதனால் ஹிந்து மதஸ்தர்கள் எண்ணிக்கையில் குறைந்தாலும் பீஜ பூதமாக சுத்தமான மதஸாரம் காப்பாற்றப்பட்டே நிற்கும்.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑍋 𑌨𑌿𑌧𑌿𑌰𑌿𑌵 𑌤𑍍𑌵𑌮𑌶𑍇𑌷𑌪𑍁𑌂𑌸𑌾𑌂
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌰𑌿𑌤𑌰𑍈𑌰𑍍𑌦𑍁𑌰𑌾𑌪𑌃 ।

---

12. இவ்விதம் வேதத்தைக்கொண்டு பகவானை அறியக்கூடுமோனால், ஏன் ஸகல ஜநங்களும் வேதத்தை ப்ரமாணமாகக் கைப்பற்ற வில்லை? சிலர் வேதத்தை விட்டுவிட்டு வேத விருத்தங்களான ப்ரமாணங்களை ஏன் அவலம்பித்துப் போகிறார்கள்? என்றால், அது அவர்களுடைய பாப விசேஷங்களின் பலமே என்று ஸமாதாநம் கூறுகிறார். லோகத்தில், நாம் ஸஞ்சரிக்கும் ப்ரதேசங்களில் அதி ஸமீபத்திலேயே புதையல் புதைத்து வைக்கப்பட்டிருந்த போதிலும், அதை நமது பூர்வ கர்ம பலமடியாக அறியாமலே நாம் அதை எவ்விதம் அடையாமல் போகிறோமோ, அவ்விதமே நிதி போன்ற பகவான் நமக்கு அதி ஸமீபத்தில் இருக்கையிலும், நமது பாக்யக் குறைவால் அவனை நாம் தெரிந்துகொள்ளாமலே அவனை இழந்து நிற்கின்றோம். இம்மாதிரி ச்ருதியே கூறுகின்றது.

[பதவுரை] 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌅𑌶𑍇𑌷𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 - ஸகல ஜநங்களுக்கும் 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑍋 𑌨𑌿𑌧𑌿𑌰𑌿𑌵 - உள்ளில் வைக்கப்பட்ட நிதியாக இருக்கிறாய். [ஆனால்] 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌃 - பாக்ய சாலிகளாக இருக்கும் சிலராலேயே, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 - அடையப்படத் தகுந்தவனாக இருக்கிறாய்; 𑌇𑌤𑌰𑍈𑌃 - மற்றவர்களால், 𑌦𑍁𑌰𑌾𑌪𑌃 - கஷ்டப்பட்டும் அடையப்படக் கூடாதவனே. 𑌤𑌤𑍍𑌰 - அப்படி அடைவதில், 𑌕𑍃𑌤𑌿𑌨𑌃 𑌸𑌾𑌕𑍃𑌤𑌿𑌨𑌃 - வைதிகா சாரத்தைத் தழுவினவர்களான சில பாக்ய சாலிகளே, 𑌤𑍍𑌰𑌯𑍀𑌂 - வேதத்தை, 𑌅𑌭𑌿𑌜𑌗𑍍𑌰𑍁𑌃 - ப்ரமாணமாகக் கைப்பற்றினார்கள்; 𑌬𑌾𑌹𑍍𑌯𑌚𑌰𑌿𑌤𑍈𑌃 - வேதத்திற்கு விருத்தமாக அநுஷ்டிப்பவர்களான, 𑌇𑌤𑌰𑍈𑌃 - மற்றவர்களால் [பாக்ய ஹீநர்களால்], 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑍁 - வேதத்தைக் காட்டிலும் வேறுபட்ட ப்ரமாணங்களில், 𑌨𑌿𑌪𑍇𑌤𑍇 - விழப்பட்டது.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌃 — இந்தச் சப்தத்திற்கு 'மறைக்கப்பட்ட' என்னும் பொருளும் உண்டு. இருந்த போதிலும் இவ்விடத்தில், "𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃" (எல்லோருடைய ஹ்ருதயத்திலும் நான் இருக்கிறேன்) என்னும் பகவத் வாக்யத்தில் சொல்லியிருக்கிறபடி 'உள்ளில் இருக்கும்' என்னும் பொருளே ஸ்வரஸமாக இருக்கும் 𑌅𑌶𑍇𑌷𑌪𑍁𑌂𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌃 - எல்லாருடைய உள்ளிலும் இருக்கிறவன். 'எல்லாருக்கும் மறைக்கப்பட்டவனா யிருக்கிற' என்று பொருள் கொள்ளில், '𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍋𑌽𑌸𑌿' (புண்ய புருஷர்களால் அறியப்படுகிறாய்) என்னும் வாக்யத்திற்கு அது விருத்தமாகும்.

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌃 — 'அடையப்படக் கூடியவன்', அதாவது 'அறியப்படக் கூடியவன்' என்று சொன்னதாயிற்று.

தத்ர ச்ருதிம் ஸக்ருதிந: க்ருதிநோऽதிஜக்மு:
பாஹ்யைஸ்து பாஹ்யவ்ருத்திபிரிதரைர் நிஷேவிதைவ ॥ ௧௨

சித்ரம் விதேர் விலஸிதம் ததிதம் ஆவிரஸ்தி
துஷ்டாந்தராத்மஸு அஹோ கிமு ஈத்ருசோ விபாக: ।

க்ருதிந:—'பாஹ்யவ்ருத்திபி:' [வேதத்திற்கு விருத்தமாக நடப்பவர்களால்] என்று அடுத்து வரும் வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், 'க்ருதிந:' என்பதற்கு 'வேதத்திற்கு ஒத்து நடப்பவர்கள்' என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கின்றது. சாஸ்த்ரங்களிலிருந்து அறியப்படும் ஆத்ம ஜ்ஞாநமானது வேதத்திற் சொல்லப்பட்டுள்ள தம்தம் கர்மங்களின் சரியான அநுஷ்டாநத்தாலேயே தெளிவை அடைகின்றது என்று சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ?

ஸக்ருதிந:—ஜந்மாந்தரத்தில் ஸுக்ருதம் செய்தவர்கள்; அதாவது பாக்யசாலிகள். இதரை:—மற்றவர்களால்; அதாவது-பாக்ய ஹீநர்களால்.

நிஷேவிதா—விழப்பட்டது. பாஹ்ய சரிதர்களால் வேறு ப்ரமாணங்களில் விழப்பட்டது; அதாவது வேதவிருத்தமாக அநுஷ்டாநம் செய்பவர்கள் வேறு ப்ரமாணங்களைக் கைப்பற்றிப் போகிறார்கள் என்று சொன்னதாயிற்று.

13. வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்டவர்களும் சில துஷ்கர்மங்களின் பலமடியாக வேதத்தின் உண்மையான அர்த்தத்தை அறிவதில் தவறி விடுகிறார்கள். தம்தம் புத்திக்குத் தோற்றும் அர்த்தங்களை ச்ருதி வாக்யங்களுள் புகுரவிட்டு அவைதாம் ச்ருதியின் கருத்தென்று ஆக்ரஹத்தால் ஸாதிக்கிறவர்களாய் ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்திலிருந்து நழுவி விடுகிறார்கள் என்று சோகிக்கிறார்.

[ப - ரை] கேசித் - சிலர், ச்ருதவதீம் - ப்ரஜார்ஹையான, ச்ருதிம் - வேதத்தை, ப்ரமாணதயா - [ப்ரமாணமாக] அங்கீகரித்திருக்கையிலும், அஸ்யாம் - [அந்தச்ருதி வாக்யங்களின்] அர்த்தத்தில், குத்ருஷ்டி விநிவிஷ்டதிய: - ருஜுவற்ற நோக்கத்தில் செலுத்தப்பட்ட புத்தியை உடையவர்களாய், விநஷ்டா இதி யத் - [ச்ரேயஸ்ஸைப் பெறுமல்] நாசம் அடைகிறார்கள் என்பது யாதொன்று உண்டோ, [தத்] இதம் - அதானது, சித்ரம் - ஆச்சர்யகரமான, விதிவிலஸிதம் - கர்மத்தின் பலமாக, ஆவிரஸ்தி - ப்ரகாசிக்கின்றது. அஹோ - கஷ்டம்; துஷ்டாந்தராத்மநாம் - [ஜந்மாந்தர கர்மங்களின் காலுஷ்யத்தால்] தோஷமடைந்துள்ள மநஸ்ஸை உடையவர்களுக்கு, ஈத்ருசோ விபாக: கிமு - இப்பாதிரியான பலாநுபவமன்றோ?

யத்கேசித் ச்ருதவதீம் ச்ருதிம் ப்ரமாணதயா
அஸ்யாம் குத்ருஷ்டிவிநிவிஷ்டதியோ விநஷ்டா: ॥ ௧௩

பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேऽப்யபாரம்
கோரம் தமஸ்ஸமவயாந்தி ந ஹீக்ஷஸே தாந் ।

துஷ்டாந்தராத்மநாம்—பஹுகாலமாக தொடர்ந்து வந்துள்ள காலுஷ்யத்தால் தோஷமடைந்திருக்கும் மநஸ்ஸை உடையவர்களுடைய. இவ்விடத்தில் 'ஆத்மா' என்பதற்கு 'மநஸ்' என்பது பொருள்.

கேசித்—இது இவ்விடத்தில் அத்வைதிகளைக் குறிக்கின்றது. அவர்கள் வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொள்ளுகையிலும், அந்த வேதத்தின் உண்மையான அர்த்தத்தை அறியாதவர்களாய் ஆத்மோஜ்ஜீவநத்தை இழக்கிறார்கள்.

14. வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொள்ளாமல் கேவல யுக்தி வாதம் செய்பவர்களுக்கும், வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டு அதன் உள்கருத்தைச் சரியானபடி அறியாதவர்களுக்கும் ஆத்மோஜ்ஜீவநம் தவறி விடுகின்றது என்னும் அம்சத்தில் ஒரு வித வாசியுமில்லை என்று ஒரு த்ருஷ்டாந்தத்தை முன்னிட்டு உபபாதிக்கிறார்.

[ப - ரை.] பாஹ்யா: – வெளிப்பட்டவர்களும் [அதாவது வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரியாமல் இருப்பவர்களும்], குத்ருஷ்டய: – குயுக்தி செய்கிறவர்களும் [அதாவது வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்திருக்கையிலும், அதன் அர்த்தத்தை அறிந்துகொள்வதில் ந்யாய விருத்தமாக வாதம் செய்து அதனால் உண்மையான அர்த்தத்தை அறியாமல் ப்ரமம் அடைகிறவர்களும்], இதி த்விதயே அபி - ஆக இவ்விருவர்களும், அபாரம் கோரம் தம: - தாண்டக் கூடாததும் க்ரூரமுமான தமஸ்ஸை, ஸமவயாந்தி – அடைகிறார்கள். ஹி – ஏனென்றால், தாந் - அவர்களை, ந ஸமீக்ஷஸே - நீ கடாக்ஷிக்கவில்லையன்றோ? ம்ருகத்ருஷ்ணிகேஷு – கானலை [ஜலமென்று ப்ரமித்து] பானம் செய்ய விரும்பி, காநநம்ருகைர்ஜக்தஸ்ய – காட்டு ம்ருகங்களால் பக்ஷிக்கப்பட்டுள்ள [ஜந்துவுக்கும்], காஸாரஸத்வநிஹதஸ்ய ச - [உண்மையான ஜலத்தையுடைய ஸரஸ்ஸைப் பெற்று] அந்த ஸரஸ்ஸிலுள்ள துஷ்ட ஜல ஜந்துக்களால் கொல்லப்பட்டுள்ள [ஜந்துவுக்கும்], கோ விசேஷ: - என்ன விசேஷம்? [இவ்விரண்டும் தமது தாஹத்தை சமநம் செய்துகொள்ளாமலே உயிரை இழந்துவிடுகிறபடியால் அந்த அம்சத்தில் இரண்டுக்கும் ஒருவித வாசியுமில்லை என்பது தாதபர்யம்].

ஐஹ்வாஸ்ய காநநஜூமெ ஜூம்ம தஜ்ஜலஷி கௌவர:
ஸம்ஸாரஸாத்விமதஸ்ய வ கொ விமொஷ: ||

கரு

தமஸ்ஸம்ஸாரிண:—தமோ குணம் மேலிட்டவர்களாக ஆகிறார்கள். நம் ஒவ்வொருவரிடமும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று மூன்று குணங்கள் இருக்கின்றன. சிலருக்குச் சில காலங்களில் ஸத்வகுணம் மேலிட்டு நிற்கும், மற்றும் சிலர் ரஜஸ்தமோ குணங்களால் ஆக்ரமிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள். ஸத்வ குணம் உள்ளவர்களுக்கு ஜ்ஞாநமும், மற்றவர்களுக்கு ப்ரமமும் உண்டாகும். இக் குணங்கள் மேல் நோக்கி நிற்பதற்கு அவரவர்கள் செய்துள்ள ஸத்கர்ம துஷ்கர்மங்களே காரணங்கள். ஆகையால், எப்பொழுதும் தமோ குணத்தை உடைய இந்த பாஹ்ய குத்ருஷ்டிகள், எப்பொழுது மறுபடியும் வேத விருத்தங்களான கொள்கைகளை அங்கீகரித்து அவைகளின் ப்ரகாரம் அநுஷ்டிப்பதால், முன் தமஸ்ஸைக் காட்டிலும் அதிக க்ரூரமான தமஸ்ஸை அடைகிறார்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

நஹீக்ஷிதோ தாந—நமது சாஸ்த்ரங்களில் பின்வருமாறு இரண்டு ச்லோகங்கள் காணப்படுகின்றன,

“ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந:|
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ||”

[எவன் தான் ஜநிக்கும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனால் கடாக்ஷிக்கப்படுகிறானோ, அவன் ஸத்வ குணம் மேலிட்டவனாகிறான்; அவன் மோக்ஷ மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பான்].

“பச்யத்யேநம் ஜாயமாநம் ப்ரஹ்மா ருத்ரோऽத வா புந: |
ரஜஸா தமஸா வாஸ்ய மாநஸம் ஸமபிப்லுதம் ||”

[எவர்கள் தான் ஜநிக்கும் காலத்தில் ப்ரஹ்மா ருத்ரன் இவர்களால் பார்க்கப்படுகிறார்களோ அவர்கள் ரஜஸ்ஸாலும் தமஸ்ஸாலும் ஆக்ரமிக்கப்பட்ட மநஸ்ஸை உடையவராகிறார்கள்]. இந்த ச்லோகார்த்தங்களை நோக்கி, இவ்விடத்தில் ‘இந்த பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் லக்ஷ்மீபதியால் கடாக்ஷிக்கப்படவில்லை’ என்று சொல்லப்படுகின்றது.

‘ஜலப்ரமத்ருஷ்ணை:—ஒரு மான், தாஹத்தால் பீடிக்கப்பட்டு ஜலத்தைப் பெறாமல், கானலைப் பார்த்து ஜலம் என்று ப்ரமித்து இங்குமங்கும் ஓடுங் காலத்தில் புலியின் வாயில் விழுந்து இறக்கின்றது; வேறொருமான், ஏதோ சில ஸுக்ருத விசேஷத்தால் ஜலமுள்ள ஸரஸ்ஸையே பெற்றும், அதில் இறங்கி ஜல பாநம் செய்து கொண்டிருக்கையில் முதலையின் வாயில் அகப்பட்டு ப்ராணனை விடுகின்றது. இந்த இரண்டு ம்ருகங்களுக்கும், ப்ராணனை இழக்கும் அம்சம் ஸம்பந்தப்பட்ட வரையில் என்ன வாசி? இப்படியே, வேதத்தைப் பெறாமல் குயுக்திகளால் ப்ரமம் அடைந்து

அவரரும் பொறையு மாரா யறிவு மாற்றலரைத் தேய்க்குந்
தவர்செறி புயமு மாற்ற றதும்பிய வுரமுங் கண்டு
துவரித ழொருபைந் தோகை யனையவர் மணக்கப் பேசி
யிவர்தர வதுவை யாற்றி யெங்கணுங் களிக்க மற்றும் 18

எழுகடல் வரைப்பின் மேவி ராச மண்டலங்க ளெல்லாம்
விழுநிதிக் குவையின் வாயில் வீழ்ந்திருந் திருக்க வோச்சும்
வழுவறு மொருகோ லன்னோர் வலக்கரத் திலகத் தந்து
முழுமணி முடியைத் தந்தை முடியிசை முடித்தா னன்றே. 19

மல்லடு புயத்தி னன்னோர் மண்ணகந் துவக்கத் தாங்கத்
தொல்லருங் கமடஞ் சேடன் குலகிரி துதிக்கை யானை
யெல்லையின் கிரிக ளின்ன வெடுத்த நஞ்சுமையைத் தீர்ந்தேம்
வில்லிய லிவரா லென்று வியனகை யடைய நின்றார். 20

அடையல ரவனி மாதர் மட்கட மகன்று விண்மீன்
மிடைதரு மமர மாதர் பொற்கட மிடைய மின்னுங்
குடைநிழல் குலவு மந்தக் கொற்றவன் கரத்தார் வாளைக்
கொடியதென் றறையு மாந்தர் கூர்மதி யிலர்கண் மாதோ. 21

செவியுறு கையினின் றேகுங் காவியச் சுவையிற் றேங்கு
மிவர்கையுந் துறக்க மீனும் இசையுறு நசையு நீதி
யவிரிரு நாலி ஞைசை யுடன்பகை யழிக்கு மேதிக்
குவையுறும் விழைவுந் தக்க கொடையதுங் கொள்வாரென்றும். 22

நயந்தவ ருவப்ப யாவும் நல்கிருந் தருவு மோரார்
செயந்தனின் றந்தை நாட்டிற் செழிப்பதற் கென்னே யென்னின்
வியந்திவர் கொடையை வெட்கி விண்படர்ந் தொளித்த தென்றால்
யயம்படு மவர்தம் பண்பை முற்றுறப் பகர்வ தென்னே 23

புலவு நாறுடல் வேலையன் புயல்வண னடியி னன்புங்
குலவு பாகவதர் மாடே கொண்டது மிகலித் தம்முன்
பலபட வாத மாடிப் பரம பாகவதர் பாங்கர்
நிலவிடு மதுவே பின்ன ரொருபடி நிமிர்ந்த தம்மா. 24

காசினிக் கிறைவர் காக்குங் கடைத்தலைக் காவல் வீரர்
தேசவ னடியார் தம்மைக் கேண்மையின் விடுக்க மாழைத்
தேசுறுங் கந்த வார மனவுஞ்சென் றிறைவர் செய்யும்
பூசனை விழைவி னோற்று வைகலும் புகழ்வர் மாதோ. 25

பதுமையின் கணவன் பாத பங்கயம் பயின்று வாழும்
மதனனை நிகர்க்கு மாழ்வார் மதமலைக் குழுவின் வைகுஞ்
சிதைவறுஞ் செல்வத் தூடு செறிதருந் திருநா ளெல்லாந்
ததையசி முனையின் வாழ்க்கை தானெனக் கழித்தார் தாமே. 26

அஞ்சன சைலனுதி யரங்க னன்றி லங்கை செற்ற
செஞ்சிலைத் திருவ னின்னோர் சேயடி களையே யுன்னி
நஞ்சர வணையான் பாத நணுகியே யிழைக்கு நாளு
மஞ்செறி பணியி லென்றே யார்துமென் றறைந்து போந்தார். 27

பரம பாகவதர் சூழப் பாரதஞ் செவியின் மாந்து
முருகுற ஸ்ரீராம காதைமோக பாகவத மாதிப்
பொருவரு புராணங் கேட்டு வைகலும் பொழுது நீத்துத்
திருமனன் றிருவாராத னத்திலுந் திகழ்ந்து மன்னோ 28

காகுத்தன் கதையி லன்னான் சானகி வதன நோக்கிப்
பாறுற்ற வினையு மன்றிப் பண்பி லக்குவனைத் தானு
மேகத்தொல் லுயிரை யேனு மிழப்பினு மந்த ணாளர்க்
காகச்செய் யுறுதி யென்று மகல்கிலே னணங்கு போல்வாய். 29

என்றவ னுரைத்த மாற்ற மிருசெவி குளிரக் கேட்டுப்
பின்றய ரதன்சேய் தானு மொருவனே பிறங்கல் போல
நின்றவ ரெதிர்த்தீ ரேழா யிரமுக டிரத மூரும்
வன்றிற லரக்கரிந்த வான்செரு முடியும் வண்ணம். 30

தீதென வறிகிலே மென்றிருந் தவரி சைத்தா ரென்ற
காதையைச் செவியுற் றந்தக் கடுஞ்சம ரெதிரி னன்றே
தீதுற நிகழ்ந்ததென்று திருவுளந் துணிந்து பொன்னென்
றேதிக ளுடனு லாய விரும்படை திரட்டிக் கொண்டே. 31

வம்பினெம் பெருமாற் கின்னே படைத்துணை வலிதிற் செய்து
மிம்மெனும் பொழுதி லந்த நிருதரை யெரித்து மென்றுங்
கும்மென வுறுக்கி வில்லுங் கையுமா யெழுந்த லூக்க
மம்முறை புராண கூடத் தனைவருங் களித்துக் கண்டார். 32

வில்லவர் பெருமான் றெய்வ பத்தியை வியந்தக் காதை
சொல்லுவோர் மறித்து மாற்றார் சொலற்கருந் திரளை வீழ்த்தி
வில்லொன்றால் விளங்கு வீரன் றனையனம் விழையுஞ் சீதை
புல்லினண் மகிழ்ந்தா ளென்றபொருள்படுங் கவியைச் சொற்றார். 33

ஏற்றது செவியி னாழ்வா ரிதயமும் பூரித் தேகுங்
கூற்றுமஞ் சனிகத் தோடு மீண்டிது கதையே யென்று
தேற்றியிவ் வண்ணந் தெய்வ நாயகன் புகழை நாளும்
போற்றியின் றதியா ராத னத்தையும் போந்தா ரன்றே. 34

வேறு

சுரும்பி மிருமண மாலையொடு பிறழுந்
தண்டிரளச் சோதி மாலை
விரும்பி யிளநில வெறித்துத் துயல்வருதோள்
வில்லவர்கோன் விமலை கேள்வ
னரும்பெ ரியவடி யாரோ டிவ்வண்ண
மனுதினமு மொழுகக் கண்ட
விரும்பு வியைப்புரப் பதினன் கெண்ணு
தொழின் மந்திரிய ரீண்டி மன்னோ. 35

அகடார வனுதினமும் வைதிக வேடந்
தரித்த வந்த ணாளர்
செகம்புரக்கு நமதிறைவன் றன்னுழையே
சேர்ந்தரசு செலுத்துமவ் வண்ண
முகவாமன் மனஞ்சு றன்றே யுழன்றலையப்
புரிவ தினவ்வுபர்க்கோர் தம்பா
லகமார வணங்கசப்ப தொன்றி ழைத்துமெனத்
துணிந்தா ரறிவின் றுங்கே. 36

துணிந்து வழிவழி யாளும் புரவலர்கள்
விலையிடுதற் கரிய தோண்மே
லணிந்தி லகுமாப ரணத்திரள் களிலொன்
றறியாம லொளித்தே யாழ்வார்
பணிந்திறைவ னம்பணியி லொன்றெ வரோபய
மின்றிக் கவர்ந்தா ரைய
வெணுந்திறமு மியலா விக்கொடுந் தொழிலை
யிழைக்கிற்ப தென்னோ வென்றார். 37

ஏலா வம்மொழி செவியி னேற்றவரும்
விம்மித முற்றினமாய் நின்ற
னலா யுந்திறத் தினரே நண்ணிய
வச்சாணி மலையெனவே யோடின்

காலா ருந்தேர் நிலத்திற் கவிழாது
காப்பதென வரசுமென்னும்
பாலாரின்ப முதுபடா தோங்குமெனப்
பரம்பரையாய்ப் பகர்வர் மாதோ. 38

ஆகையினீ ரவனி யெலாநந் தலையிற்
றாங்குது மென்றறைந்து நின்றும்
பாகைநிக ரஞ்சொ லரம்பையர் வதியு
முலகளவும் பரிய செம்பொற்
கோபுரமே தாங்கி யெனக்குலவு கிரீர
ணிலமு நங்கோட்பா டின்றி
யேகியிடா தித்தலை யிலெனி னீயிரிசை
யாதிங் கெவர்தாம் போந்தார் 39

என்றியம்பக் குலைகுலைந்தவ் வேனுதித் தலைவ
ரைய்யே யிட்ட வேலி
நன்றுவளர் பயிர்மேய்ந் தானனி புரம்போ
ரிழைப்ப தெவன்றடையொன் றின்றிச்
சென்றிவணே காதலரே யன்றி பெருமையுறி
யாது சேர்வா ராரு
மின்றுமது திருவுளமே நன்றுணே ருமென
வழங்கி யிறைஞ்சி நின்றார். 40

ஆகா நீரறைகு வதியா முணர்ந்தே
மீங்கதனை யவிர்த்துங் காண்மின்
றாகா தவினை நினைந்தீ ரென்றாழ்வார்
தம்மய லருறொருவன் றன்னை
யேகா நீயொரு பணியைக் கொணர்க
விரைந்தெனவ ருளிச்செய்ய வன்னான்
போகா வோர்பொன் கரவைக்கு டமிவழியாற்
கொணர்ந்தான் பொருக்கென் றம்மா. 41

நாவி ரண்டை நீட்டியது கனிசீறிப்
படம்விரித்து நரபா லன்முன்
மேவி ருந்தவவை நடுவண் மிகைத்திருகண்
குருதியெழச் சிவக்கங் காடக்
காவலனுமொரு கடத்தைத் தந்தனுட்
புகவிடுக்கக் கழறிக் காந்தாங்

தாவருபொற் கடககரந் தாங்குவித்துத்
தாமரையாள் கணவன் றன்னை. 42

மனமல ருணியுத்தி யவணிக்ற வர்கள்
செவிகேட்ப மலராள் வாழுங்
கனக மணித்திரு மார்ப னடியவர்க
ளொருபோதுங் கள்ளா ராயின்
சினவரவு நன்கிழைக் கவென மொழிந்தச்
செங்கண் ணராவுறையும் பாண்டந்
தனுள ரவிந்தந் நிகர்க்குந் தங்கரத்தை
யிட்டினிது தடவி னரால். 43

அக்காலப் பேருரக மடங்கி யவரங்
கரத்தின் முத்த மிட்டுத்
தொக்கா நின்றவ ரெதிரிற் புறம்போந்தத்
தூயவரை வலஞ்சூழ் வந்து
நிற்காமுன் னுடுவதை நீள்வா னினெருங்
கிமையோர் வியந்து வண்டு
மொய்க்கா வைந்தரு மருமா மலர்நிகர
மொண்டவர்மேற் பொழிந்தார் மன்னோ. 44

நீர்ததும்பி நிலவெறிக்கு நித்திலங் கணிரை
குயிற்றி நிலவு நேமி
யோர்ததும்புங் கவிகையின் கீழிருந் தரசு
செலுத்து குலசேக ரன்றன்
சீர்ததும்பு குணங்களை யங்கிருந் தவர்கள்
செயசெய வென்றெடுத்துப் பாடக்
கார்ததும்பு மேனியனுங் கமலை யோடு
கண்டகங் களித்தா னன்றே. 45

வேறு.

மாழ்கிய மனத்த மாத்திய ரஞ்சி
மல்லடு புயங்குலை குலையக்
கேழ்கிளர் மணியா ரந்தனைக் கொடுவெர்
இறையெழில் கிடந்த தாளிட்டுத்
தாழ்தலை யுடனே வீழ்ந்தெழுந் தைய
தமர்தனி லழுந்தகத் தினராய்ச்

சூழ்தர லின்றி யிழைத்த வெம்பிழையைச்
　　சூழ்ந்திடா தளித்தருள் புரிவாய் 46

ஏந்தலே யென்றுங் கிரங்குபு பழிச்ச
　　விலங்கர் ரயிற்கரத் திறைவர்
சாந்தமே மணந்து சழக்கென மகனைத்
　　தமனிய மணித்தவி சிருத்திக்
காந்துபொன் மகுடம் புனைந்து பன்னீதி
　　கலந்த நல்லிதம் பலபுகட்டி
யாய்ந்துணை வரைவே றமைத்த வரவர்க்கா
　　மறத்துறை பணித்தனர் மற்றும் 47

நீளொளி யுருவா யவதரித் துள்ள
　　நீணிற முகிற்குழ லலங்கல்
வாளையேய் கண்ணியாம் புதல்வியைப் பொன்வழங்
　　கிருநதிக் கிடைய ரங்கத்
தாளர வணையிற் பள்ளி கொண்டவற்கே
　　யருங்கடி மணமிழைத் தளித்தக்
கோளமர் பரம வைணவர் குழுமங்
　　கூடியங் கொழுகினர் பலகால் 48

வைகலும் புலரி யெழுகையி லமரர்
　　வந்துவந் தரம்பையர் திரளின்
கொய்தல ரருச்சித் தெழுமரங் கேசன்
　　குணக்கடல் குடைந்தன ரவர்தம்
மெய்கலு ழுந்த மேன்மையை முகுந்த
　　மாலைபாய் வடமொழி தனிலுஞ்
செய்தனர் பெருமாள் திருமொழி யென்னச்
　　செந்தமிழ் தன்னிலுஞ் சிறந்தே. 49

ஆங்கவ ரொழுக வடமலை முகடா
　　ரலர்மகட் கிறைவனே ரமைய
மீங்குவந் தெங்கண் மங்களா சாசனம்
　　புரிந்திடுக வென்றி சைக்கத்
தேங்கிய வுவகையொடு பரனடியார்
　　திரள்புடை சூழ்வர வெழுந்து
கோங்கிள முலையார் கண்ணயி னெறிசேர்
　　கொழுநகர்க் கச்சியின் மணந்தார். 50

மணந்தமு தொழுகு மலர்ந்த பாலாற்
　　றிலிழிந்த கங்குளிர்ப் புறத்தோய்ந்து
பணந்திக ழனந்த சரசினும் படிந்து
　　பருங்கரி கிரிமிசைப் பரவிப்
பணிந்தவர் தமக்கு வரமருள் வரதன்
　　பங்கயத் துணைப்பதம் பழிச்சிக்
குணந்தனிற் பயின்றங் கிருந்தனர் சின்னா
　　ளெழுந்தனர் வடமலை குறித்தே 51

தாளகஞ் செறிவோர் தீவினை யெரிக்குந்
　　தன்மையால் வேங்கட மெனவே
நீளுல கறையும் வானவ ருலகந்
　　நெடுங்கடஞ் சூழ்தர நிலவுங்
காளமா முகில்க ணிரந்தரம் படியுங்
　　கனகமா முகட்டடர்ந் திலகும்
வாளர வனந்த னுருவென வயங்கத்
　　திருமலை யிவர்ந்தனர் மாதோ. 52

ஆடுவோர் பங்கம் பாதலம் படிய
　　வடக்குறுஞ் சாமிபுட் கரணி
யேடவிழ் நறுந்தா மரைமண நாறு
　　மிரும்புனல் படிந்தெழுந் திமையோர்
தாடொழு மமைய கோக்கிருந் தடருந்
　　தமனியச் சிகரிசேர் நிலயத்
தூடடைந் துலகை யளந்தவ னொளியா
　　ருருவினைக் கண்டடி பணிந்தே. 35

கண்டகண் பெயர்க்குந் திறனிலா துருகிக்
　　கருத்தெழு முதமெனு மிரதங்
கண்டனில் வழிந்த தெனக்கணீ ருடலங்
　　கலந்திழி தரக்கரங் குவித்துப்
பண்டுபோற் கருதா தடியினைப் பரிபா
　　லித்தருள் பரமனே யென்று
மண்டரு மறையிற் பரவிடப் பெருமாள்
　　கடைக்கணித் தருளொடு மகிழ்ந்தார். 54

அத்திருப் பதியி லவ்வணம் பலவான்
　　டடைதரக் கழித்தலைக் கடல்சூழ்

குத்தலே முழுது மரனிடர் தொலேத்த
குரைகழ லரிபெழுந் தருளுந்
தொத்தறு தலங்கடொறு மவனடியார்
தொகுதியிற் படர்ந்தவன் விறலே
யெத்திறத் தவரு முணர்ந்துயும் வகையே
யிசைத்தனர் தொழுதன ரிருந்தார். 55

ஆக சருக்கம் 6க்கு, செய்யுள் 259

குலசேகர ராழ்வார் வைபவம்

முற்றிற்று.

ஸ்ரீ:

விஷ்ணுசித்தர் வைபவம்.

வேறு.

முன்னே ரந்தணன் முழுமிடி மனைத்தகென்றனைத்தோன்
றன்ன தின்னவ லயின்ற தற்கவன் றனைத்தனை
னென்ன மின்ன வாங்கிரும் பொருளருளிய விறைவனை
பொன்னி னின்னடி மலர்சிர முடித்தனம் புகன்றே.

நாடெ லாமிக நசைகொளும் வழுதி நாடதனிற்
பாட லாம்பல பகடுறுங் கவிஞரோர் நகர
மாட லாந்திரு வில்லி புத்தூரென வதனே
மாட லாம்பொழின் மலர்மணங் கமழ்ந்தெழூர் தினமும்.

வல்லி நுண்ணி டையரம் பையர்வதியு மந்நகரும்
வில்லி புத்தூரின் விழுமிதிக் குடைந்துளம் வெட்கி
வில்லி லின்பிறை வேணிய ஞளித்த துன்றென்றுற்
சொல்லி யெங்கதன் முடிவுறுஞ் சொலற்கரும் பனையே.

ஓங்கு மாமணி மாடமீ தலவறற் குழரைர்
பாங்கி னுனை மதியின முழுவலிற் படரும்
பூங்க திர்த்திர ளிலவினிற் புனிதவின் னடியார்
தேங்கொ ளின்குழு தம்பல தெளிவுற வருளும்.

[illegible]

க்கிற படியால், அர்தப்போதகத்வ சக்தி ஸ்வாபாவிகமென்றும் அது ஒரு ஸங்கேதத்தை இட்டு ஏற்படவில்லை என்றும் நிச்சயிக்கப்படுகின்றது. ஸங்கேதம் செய்தவரின் ஜ்ஞாநம் இருந்தாலன்றோ அது ஸங்கேதத்தை இட்டு ஏற்பட்டதென்று சொல்லக்கூடும்? அநுஸந்தாநம் அநாதிகாலமாகத் தொடர்ந்து வந்திருக்கையிலும் அம்மாதிரி ஒரு ஸங்கேதாவின் ஜ்ஞாநமும் தென்பட வில்லையே.

இவ்விதம் சப்தங்கள் அர்த்தத்தை ஸ்வபாவத்தாலேயே உணர்த்துகிறபடியால் பல சப்தங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு 'வாக்யம்' என்று வ்யவஹரிக்கப்படும் பத ஸமூஹங்களும் தம்மால் குறிக்கப்படும் அர்த்தங்களுக்குப் பரஸ்பரம் இருக்கும் ஸம்பந்தத்தை முன்னிட்டு ஒரு ஜ்ஞாந விசேஷத்தை உணர்த்தும். அந்தச் சப்தங்கள் ஒரு மநுஷ்யனுடைய புத்தி க்ரமப்படியாகச் சேர்க்கப் பெற்று அந்த க்ரமத்தில் உச்சரிக்கப் படும் பொழுது, அவைகளைப் பௌருஷேயங்களென்றும் (மனிதனுல் ஏற்படுத்தப் பட்டவை என்றும்), அப்படி மநுஷ்யனுடைய புத்தியை முன்னிடாமல் அநாதிகாலமாக உச்சரிக்கப்பட்டு வரும் க்ரமத்தால் ஏற்படும் ஸம்ஸ்கார மடியாக அவை உச்சரிக்கப்பட்டு வந்தால் அப்பொழுது அவைகளை அபௌருஷேயங்க ளென்றும் அதை அறிந்தவர்கள் சொல்வார்கள். வேதங்களென்று சொல்லப்படுமவையெல்லாம் இம்மாதிரி அபௌருஷேயங்களே. இந்தக் காரணத்தாலேயே வேதங்கள் நித்யங்களென்று சொல்லப்படுகின்றன. அதாவது, பூர்வம் பூர்வம் உச்சரிக்கப்பட்டு வந்த க்ரமத்தால் உண்டாகும் ஸம்ஸ்காரத்

வாசிவைத—வேத சப்த ராசிகளின் உச்சாரணம் பூர்வ நினைவை முன்னிட்டு ஏற்படுகின்றது என்று இருந்தாலும், இரண்டு சப்த ராசிகளும் புருஷாதீநங்களாக இருக்கிறபடியால், வேதத்திற்கு மாத்ரம் எவ்விதத்தில் அபௌருஷேயத்வம் சொல்லக்கூடுமென்றால், வேத சப்த ராசிகள் புருஷாதீநங்களாக இருக்கையிலும் புருஷபுத்தியை மூலமாக உடைத்தாயிராமல் இருப்பதாலேயே அவைகளுக்கு அபௌருஷேயத்வம் சொல்லப்படுகின்றது என்பது இவ்விடத்தில் விளக்கப் படுகின்றது.

நித்யத்வ—இந்த நித்யத்வம், பதங்கள் நித்யங்களாக இருப்பதையாவது அக்ஷரங்கள் நித்யங்களாக இருப்பதையாவது குறிக்கவில்லை; பத நித்யத்வமாவது வர்ண நித்யத்வமாவது அபௌருஷேயமா யிருப்பதற்கு ப்ரயோஜகமென்று சொல்லும் பக்ஷத்தில், மநுஷ்யர்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களும் அபௌருஷேயங்களாகத் திரியும். ஆகையால், அநாதிகாலமாக ஒரு ஆநுபூர்வியுடன் உச்சரிக்கப்பட்டு வருவதையே அது குறிக்கின்றது.

ஸ்மர்யமாணத்வாத் । தே சாநந்த்யவிசேஷேண ஸம்ஹிதாஶ்ச க்ஷீணாஶ்ச வேதா: ருக்யஜுஸ்ஸாமாதர்வபேதபிந்நா அநந்த ஶாகா வர்தந்தே । தே ச விதி அர்த்தவாத மந்த்ரரூபா வேதா: ஸகல ஜகத்திதாய நாராயணஸ்யைவ ததாராதந ப்ரகாரம் ததாராதிதஸ்ய பலவிசேஷம் ச போதயந்தி । பரமபுருஷவத் தத்ஸ்வரூப ததாராதந தத்பல ஜ்ஞாபக வேதாவ்யுத்பந்நஜாதம் நித்யமேவ । வேதாநாமநந்தத்வாத் துரவகாஹத்வாச்ச பரமபுருஷ நியுக்தா: பரமர்ஷய: கல்பே கல்பே நிகிலஜகதுபகாரார்த்தம் வேதார்த்தம் ஸ்ம்ருத்வா விதி அர்த்தவாத மந்த்ர மூலாநி தர்மஶாஸ்த்ராணி இதிஹாஸ புராணாநி ச சக்ரு: । லௌகிகாஶ்ச ஶப்தா வேதப்ரபவா ஏவ ப்ரதிகல்பம் தத்தத் விசேஷ நாமதேய வாசகதயா ப்ரவ்ருத்தா: ஸர்வே ப்ரவாஹாநாத்யநித்யா: । நந்வேவம் வைதிகா ஏவ ஸர்வே வாசகா: ஶப்தாஶ்சேத், ஸம்ஹிதை ஸம்வ்ருத்தம் ஹாஷாயா ஸ்வதந்த்ரம் வாசகத்வம் ...

தைகொண்டு அந்த க்ரமத்தை நினைத்து நினைத்து அந்த க்ரமப்படி உச்சரிக்கப்படுவதே அபௌருஷேயத்வம், அதுவே நித்யத்வமென்று சொன்னதாயிற்று. இப்படிப்பட்ட க்ரம விசேஷத்துடன் நிற்கும் அக்ஷரக் கூட்டங்களாகிற வேதங்கள் ருக் யஜுஸ் ஸாம அதர்வங்களென்று நாலு வகைப்படும்; ஒவ்வொரு வகையிலும் அநந்தங்களான சாகைகளுண்டு. ஒவ்வொரு வேதத்திலும் விதியென்று சில பாகங்களும் அர்த்த வாதங்களென்று சில பாகங்களும் மந்த்ரங்களென்று சில பாகங்களும் உண்டு. இவையெல்லாம் பர ப்ரஹ்மமாகிற நாராயணனுடைய ஸ்வரூபத்தையும், அவனை ஆராதிக்கும் முறைகளையும், அப்படி ஆராதிக்கப்படும் அவனிடமிருந்து நாம் அடையும் பல விசேஷங்களையும் போதிக்கின்றன. அப்படி நித்யமான பரம புருஷனைப் போதிக்கிறபடியால், அந்தப் பரம புருஷன் போல அவனுடைய ஸ்வரூபம் முதலிய வற்றைப் போதிக்கும் சப்தங்களும் நித்யங்களே. ஆனால், இந்த வேதங்கள் அநந்தங்களாகவும் ஸுலபமாக அறியக்கூடாதவைகளாகவும் இருக்கிறபடியால், பரம புருஷனாகிற நாராயணனால் ஏவப்பட்டவர்களான சில மஹர்ஷிகள், ஒவ்வொரு கல்பத்திலும் வேதங்களின் பாகங்களாகிற விதி அர்த்தவாதம் மந்த்ரம் இம் மூன்றுகளிலும் சொல்லப்பட்டுள்ள அர்த்தங்களை ஸகல ஜநங்களுடைய நன்மையையும் உத்தேசித்து தர்ம சாஸ்த்ரங்களென்றும் இதிஹாஸங்களென்றும் புராணங்களென்றும் பல க்ரந்தங்களால் விவரித்திருக்கிறார்கள். லோகத்தில் ஜநங்களுக்குள் நித்ய வ்யவஹாரங்களில் வழங்கிவரும் சப்தங்களும்

ருக்யஜுஸ்ஸாமாதர்வபேதபிந்நா:—ருக் யஜுஸ் ஸாமம் அதர்வம் என்று வேதங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால் அவைகள் முடிவற்றவை என்று எப்படி சொல்லக்கூடுமென்றால், இவ்விதம் நான்கு பிரிவாக அவை இருந்த போதிலும் ஒவ்வொரு பிரிவிலும் அவை அநந்தங்களான சாகைகளை உடைத்தாயிருக்கிறபடியால் அவை அநந்தங்களாகக் கூடுமன்றோ?

வேதாநாமநந்தத்வாத் துரவகாஹத்வாச்ச—வேதங்களின் அர்த்தங்களை,

கல்பாதிஷு அவிசேஷேண ப்ரயுஜ்யந்தே । உபப்ருஹ்மிதேஷ்வேவ ஶப்தாநாம் தத்ஸம்ஸ்ரயே வாச்யவாசகப்ரதாநாம் தமேவ ப்ரயோகம், அநந்யத்ர ப்ரயுஜ்யமாநாநாமநந்யேதி ந கஶ்சித்தோஷ: ।

ஸேதிஹாஸபுராணதர்மஶாஸ்த்ரோபப்ருஹ்மிதஸாங்கவேதவேத்ய: பரப்ரஹ்மபூதோ நாராயணோ நிகிலஹேய ப்ரத்யநீக: ஸகலேதரவிலக்ஷணோ அபரிமிதஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப: ஸ்வாபாவிகாநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணாகர:

வேத ராசியிலிருந்தே எடுக்கப்பட்டு சிற்சில பொருளைக் குறிக்கின்றனவாக பரம்பரையாய் முன் போலவே ப்ரயோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விதம் எல்லா வாசக சப்தங்களும் வேதங்களிலிருந்தே எடுக்கப் பட்டவையாக இருந்தால், வைதிக சப்தங்களுக்கும் லௌகிக சப்தங்களுக்கும் லக்ஷண பேதம் சொல்வது உபபந்நமாகுமோ? சாஸ்த்ரங்களில் அவைகளுக்கு லக்ஷண பேதம் சொல்லப்பட்டிருக்கின்றதே. அதிலிருந்து அவைகளுக்குச் சப்த பேதமும் உண்டென்று ஏற்படவில்லையா? என்றால், அதற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. வேதங்களில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள சப்தங்களுக்கும் லோகத்தில் வழங்கிவரும் சப்தங்களுக்கும் லக்ஷண பேதமுண்டு; அது அவை தென்படும் க்ரம பேதத்தைச் சார்ந்ததே ஒழிய, சப்த பேதத்தைச் சார்ந்ததன்று

ஸேதிஹாஸ... இவ்வாறு இதிஹாஸம் புராணம் தர்ம சாஸ்த்ரம் இவைகளால் உபப்ருஹ்மிதங்களான ஸாங்க வேதங்களால் ப்ரதி பாதிக்கப்படும் பர ப்ருஹ்மமாகிற நாராயணன் ஸகலஹேய பதார்த்தங்களுக்கும் ப்ரதி படனென்றும், தன்னைத்தவிர்த்த மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணனென்றும், அளவற்ற ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் ஸ்வரூபமாக உடையவனென்றும், ஸ்வபாவத்தாலேயே ஏற்பட்டவைகளாகவும் எல்லையிராத மேன்மையை உடையனவாகவுமான எண்ணிக்கையற்ற கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடமென்றும், தனது ஸங்கல்பத்தைச் சார்ந்திருக்கும் ஸ்வரூப

விளக்குமவைகளாக உபப்ருஹ்மணங்கள் என்னும் பெயருடன் சில க்ரந்தங்கள் தென்படுகின்றனவே. அப்படி வேதங்கள் உபப்ருஹ்மணங்களை அபேக்ஷித்து நின்றால், அவைகளுக்கு நித்யத்வம் எவ்விதம் சொல்லக்கூடும்? என்று ஒரு ஆக்ஷேபமுண்டு. வேதங்கள் அநந்தங்களாகவும் ஸுலபமாக விளங்காதவைகளாகவும் இருக்கிறபடியால் மாத்ரம் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்கள் தேவையாக இருக்கின்றன; ஆகையால் அந்தக் காரணத்தைக் கொண்டு அவைகளுக்கு அநித்யத்வம் சொல்வது ஸாத்யமில்லை என்பதே இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம்.

ஸேதிஹாஸ... இந்த ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட விஷயங்களை இவ்விடத்தில் ஸங்க்ரஹித்துச் சொல்லுகிறார்.

அநந்தமஹாவிபூதி—இந்தப் பதம் நித்ய விபூதியைக்குறிக்கின்றது. அது அநந்தமாக இருப்பதாவது அது எவ்வித அழிவுமிராமல் நித்யமாக இருப்பதே அடுத்துவரும் "நாநாவித" இத்யாதியான பதம் லீலாவிபூதியைக் குறிக்கின்றது.

ஸூ: ஸர்வஸம்க்ஷேபேண [illegible] ப்ரவ்ருத்தி [illegible] ஜாதேஷு [illegible] ஸாமாநாதிகரண்யேந [illegible] இதி ஶ்ருதிவாக்யம் ।

“ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம” “ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா” “ஏதமேகே வதந்த்யக்நிம் மநுமந்யே ப்ரஜாபதிம் । இந்த்ரமேகே பரே ப்ராணமபரே ப்ரஹ்ம ஶாஶ்வதம்” “ஜ்யோதீம்ஷி [illegible] த்வம் யஜ்ஞஸ்த்வம் வஷட்கார: [illegible] ப்ரஜாபதி:” “ஜ்யோதீம்ஷி விஷ்ணுர்புவநாநி விஷ்ணு: வநாநி விஷ்ணுர்கிரயோ திஶஶ்ச । நத்ய: ஸமுத்ராஶ்ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய ।”

ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்களை உடைய ஸமஸ்த சேதநாசேதந வர்க்கங்களை உடைத்தா யிருக்கிறனென்றும், அளவிடக்கூடாத ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையுமுடைய நித்ய மான பெரிய விபூதி ஒன்றை உடைத்தாயிருக்கிறனென்றும், பல வகைப்பட்ட அநந்தங்க ளான சேதநாசேதந வஸ்துக்களால் ஏற்படும் ப்ரபஞ்சத்தைத் தனது லீலைக்குக் கருவி யாக உடைத்தாயிருக்கிறனென்றும் இது வரையில் ப்ரதிபாதிக்கப்பட்டது. “இவை யெல்லாம் ப்ரஹ்மம்; இவையெல்லாம் அந்த ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையவை; ஹே ச்வேதகேதோ! நீயும் அந்த ப்ரஹ்மமே,” “இவனைச் சிலர் அக்நியென்றும், சிலர் ப்ரஜைகளுக்கு அதிபனான ப்ரஹ்மாவென்றும், சிலர் இந்த்ரனென்றும், சிலர் ப்ராண னென்றும் மற்றும் சிலர் சாச்வதமான ப்ரஹ்மமென்றும் சொல்லுகிறார்கள்” “இந்த லோகத்தில் தென்படும் ப்ரகாசங்களான ஜ்யோதிஸ்ஸுக்களும், மூன்று லோகங்களும், அந்த லோகங்களைப் பரிபாலித்து வரும் லோகபாலர்களும், மூன்று வேதங்களும், மூவ கைப்பட்ட அக்நிகளும், ஐந்து வகைப்பட்ட ஆஹுதிகளும், ஸகல தேவர்களும் இவை யெல்லாம் க்ருஷ்ணனே” “நீயே யஜ்ஞம், நீயே வஷட்காரம், நீயே ஓங்காரம்” “ருது தாமா என்னும் வஸு நீயே, நீயே ப்ரஜாபதி,” “ஜ்யோதிஸ்ஸுக்களெல்லாம் விஷ்ணு, லோகங்களெல்லாம் விஷ்ணு, காடுகள் மலைகள் திக்குக்கள் நதிகள் ஸமுத்ரங்கள் இவை களும் விஷ்ணுவே, இந்த்ரியங்களுக்குப் புலப்படும் பொருள்களும் அவைகளுக்குப் புலப்

ஸர்வம்வஸ்திதம்... இம்மாதிரியான வாக்யங்களில் ப்ரஹ்மமும் ப்ரபஞ்சமும் ஒன்றென்னும் விஷயம் சொல்லப்படுகின்றது. ஸ்ருஷ்டிக்கு முன் காரணாவஸ்தையில் ‘ஒன்றே இருந்து’ என்று ச்ருதி சொல்லுகிறபடியால், இந்த வாக்யங்களால் சொல்லப் படும் ஐக்யம் ‘அவை இரண்டும் ஸ்வரூபத்தாலே ஒன்று’ என்பதையே குறிக்கவேண் டும் என்று அத்வைதிகள் சொல்லுகிறார்கள். ஜீவனும் ப்ரஹ்மமும் ஸ்வரூபத்தாலேயே ஒன்று என்று சொல்லும் பக்ஷத்தில் ப்ரஹ்மமே ஸ்வர்க்கம் நரகம் முதலியவற்றை அநு பவிப்பதாக ப்ரஸங்கிக்குமாகையால், அவர்களுக்கு ஸ்வரூபைக்யம் சொல்வது அஸங்க

உத்பத்திஸ்திதிஸம்ஹாரகாரணத்வமேவ [illegible] ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் [illegible] ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி [illegible] ஸமஷ்டிம் ச [illegible] ஸ்வயமேவ விபஜ்ய, [illegible]

படாமல் மனஸ்ஸால் மாத்ரம் நினைக்கக்கூடியவைகளும் அந்த விஷ்ணு தான்” இவ்வாறு எல்லாம் பகவானே என்று ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லுமிடங்களெல்லா வற்றிலும், சரீர சரீரி பாவத்தை அவலம்பித்தே அம்மாதிரியான ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படு கின்றது. ஸகல சப்தங்களாலும் அந்த ப்ரஹ்மமே குறிக்கப்படுகின்றதென்று விவரிக் கப்பட்டது. ஸத்ய ஸங்கல்பனான அந்தப் பர ப்ரஹ்மமாகிற பகவான், தானே பஹுப்ர காரமாக ஆகவேண்டுமென்று ஸங்கல்பித்து, தன்னிடத்தில் லயத்தை அடைந்து கிடந்த மஹா பூத ஸூக்ஷ்மமென்னும் வஸ்துவையும் அதை அநுபவிக்கும்படியான கர்மத்தைச் செய்துள்ள சேதந வர்க்கத்தையும் தானே பிரித்து, அந்த மஹா பூத ஸூக்ஷ்மத்திலிருந் து ஸ்தூலமான பூமி முதலிய பூதங்களை ஸ்ருஷ்டித்து, அந்த பூதங்களுக்குள் அவைக ளின் போக்தாக்களாயுள்ள ஜீவன்களை [அவை அவைகளின் கர்மங்களுக்குத் தக்கபடி] ஆத்மாவாக ப்ரவேசிக்கச் செய்து, ஜீவன்களுடன் கலந்து நிற்கும் அந்த மஹா பூதங்களை ஒன்றோடொன்று கலந்து, அந்த மஹா பூதங்களைக்கொண்டு ஜகத் முழுவதையும் ஸ்ருஷ்டித்து, தானும் எல்லா வற்றின் உள்ளிலும் அந்தராத்மாவாகப் புகுந்து, இவ்விதம்

தமென்றும், சரீர சரீரி பாவத்தைக்கொண்டு ப்ரஹ்மத்தை ஜீவவாசியான சப்தத்தால் சாஸ்த்ரங்கள் பேசுகின்றனவென்று சொல்வதே ஸங்கதமாகுமென்றும் விசிஷ்டாத் வைத வாதிகள் நிர்வஹிக்கிறார்கள். இதுதான் இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்றது.

ஸமஷ்டிம்... மஹத் அஹங்காரம் முதலியவைகளை அபேக்ஷித்து ப்ரக் ருதி காரணமாகிறபடியால், ப்ரக்ருதியானது இவ்விடத்தில் ஸமஷ்டி என்று சொல்லப் படுகின்றது.

விபஜ்ய... ப்ரளய காலத்தில் சேதநம் அசேதநம் எல்லாம் ஒன்றாக ஒரு அவ் யக்தாவஸ்தையை அடைந்து நிற்கின்றன. அவைகளை வ்யக்தமான அவஸ்தையை அடையச் செய்வதே இவ்விடத்தில் ‘பிரித்து’ என்பதால் குறிக்கப்படுகின்றது.

ஆத்மதயா ப்ரவேஶ்ய... ஜீவன்களுக்கும் அசேதந வஸ்துவுக்குமுள்ள ஸம் ஸர்க்கம் அநாதி ஆகையால், ‘ஜீவன்களை பூதங்களுள் ப்ரவேசிப்பித்து’ என்று சொல்லா மல் ‘ஜீவன்களை பூதங்களுள் ஆத்மாவாக ப்ரவேசிப்பித்து’ என்று சொல்லுகிறார். அப் படி தேஹங்களுள் ஆத்மாவாக ப்ரவேசிப்பது இப்பொழுதே.

[illegible]

பிறகு அவைகளை ஒன்றோடொன்று [illegible]

புஞ்சீகரணமென்று [illegible]

ததஸமஷ்டிஸ்ருஷ்ட்வா மஹதஹங்காராதி ஸ்ருஷ்ட்வா, தேஷு ச போக்த்ருவர்க்கதயா ப்ரவேஶ்ய, தேஷ்வபி ஸ்வயமேவ மஹாஹங்காரேதராந்யபி ஸ்ருஷ்ட்வா ஜகத்விசித்ரம், ஸ்வயமேவ ஸர்வஸ்யாத்மதயா ப்ரவிஶ்ய, பரமாத்மத்வேநாவஸ்தித: ஸர்வஶரீரம் பஹுப்ரகாரோவதிஷ்டதே | யதிதம் மஹாபூதஸூக்ஷ்மவஸ்து தத் ப்ரக்ருதிஶப்தேநாபிதீயதே | போக்த்ருவர்க்கஸமூஹ ஜீவ புருஷஶப்தேநோச்யதே | தௌ ச ப்ரக்ருதிபுருஷௌ பரமாத்மஶரீரதயா பரமாத்மப்ரகாரபூதௌ; தத்ப்ரகார: பரமாத்மைவ ப்ரக்ருதிபுருஷஶப்தாபிதேய: |

“ஸோऽகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி | தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் | ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத் |

தான் பரமாத்மாவாகவும் மற்றை எல்லாம் தன்னுடைய சரீரமாகவும் இருக்கும்படி செய் துகொண்டு தனது பரமாத்மத்தன்மை ஒரு விதத்திலும் அழியாமலே எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக பஹு ப்ரகாரமாய் நின்றுகொண்டிருக்கிறான். கீழ்ச் சொல்லப்பட்டுள்ள மஹா பூத ஸூக்ஷ்மமென்னும் வஸ்து ‘ப்ரக்ருதி’ என்னும் சப்தத்தாலும், போக்தாக்களாகிற ஜீவ வர்க்கம் ‘புருஷன்’ என்னும் சப்தத்தாலும் வ்யவஹரிக்கப்படுகின்றன. இந்த ப்ரக் ருதியும் புருஷனும் பரமாத்மாவுக்குச் சரீரமாயிருந்துகொண்டு அவனுக்கு ப்ரகாரங்களாக ஆகின்றன; அவைகளை அவ்விதம் ப்ரகாரமாயுடைத்தாயிருக்கிறபடியால் அந்தப் பரமாத் மாவே அந்த ப்ரக்ருதி புருஷ சப்தங்களால் சொல்லப்படுகிறான். இதெல்லாம் “ஸோऽகாமயத” இத்யாதியான ச்ருதி வாக்யங்களால் வ்யக்தமாக ஏற்படுகின்றது.

விஶ்யாவஸ்திதே:...‘சேதநராகிற ஜீவன்களுடன் கலந்து நிற்கும்’ என்பதே இதன் பொருள். சேதநர்கள் ஆத்மாவாக தேஹங்களுள் ப்ரவேசிப்பது பூதங்கள் அந் யோந்யம் கலக்கப்பட்ட பிறகே ஆகைபால், பூதங்களின் பஞ்சீகரணத்திற்கு முன்ன தாக சேதநர்கள் தேஹங்களில் ஆத்மாவாக அதிஷ்டாநம் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது ஸங்கதமாக மாட்டாது,

ப்ரவிஶ்ய... கீழில் ஜீவன்களைப்பற்றிச் சொல்லுமிடத்தில் ‘ப்ரவேஶ்ய’ [ப்ரவேசிப்பித்து] என்றும் இவ்விடத்தில் ‘ப்ரவிஶ்ய’ [ப்ரவேசித்து] என்றும் சொல் லியிருப்பதிலிருந்து கீழ்ச்சொல்லப்பட்டுள்ள ஜீவன்களுடைய ப்ரவேசம் பாரதீநமென் பதும், இங்கு சொல்லப்படும் பரமாத்ம ப்ரவேசம் பரமாத்மாவின் இச்சையால் மாத் ரம் செய்யப்படுகின்றது என்பதும் விளங்குகின்றன.

பரமாத்மத்வேநாவஸ்தித:—பரமாத்மா அவ்விதம் எல்லாவற்றுக்கும் ஆத் மாவாக உள் ப்ரவேசித்திருக்கையிலும் தனது பரமாத்மத் தன்மை கொஞ்சமேனும் அழியாமலே இருக்கின்றது என்பதை இது குறிக்கின்றது.

ஸோऽகாமயத... இது தைத்திரீய உபநிஷத் வாக்யம். ப்ரஹ்மமானது, அசேதன ப்ரக்ருதி ஜீவன்கள் இவர்களைக் காட்டிலும் வேறானதென்பதையும் அப்படி

நிருக்தம் சாநிருக்தம் ச நிலயநம் சாநிலயநம் ச விஜ்ஞாநம் சாவிஜ்ஞாநம் ச ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத்”

இதி சேதநாசேதநாப்யாம் ஸர்வேஷாமேவ ப்ருதக்த்வ வ்யக்தே: |

ப்ரஹ்மப்ராப்த்யுபாயஶ்ச ஶாஸ்த்ராதிகததத்த்வஜ்ஞாநபூர்வக

ப்ரஹ்மப்ராப்த்யுபாய: ...ப்ரஹ்மத்தை அடைவதானது பர பக்தியாலே ஸாத்யமென்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தப் பர பக்தியை ஸாதித் துக்கொள்ளும் மார்க்கம் பின்வருமாறு இருக்கும். முதலில் சாஸ்த்ரங்களிலிருந்து தத்வ ஜ்ஞாநத்தைப் பெற்று, பிறகு அந்த ஜ்ஞாநத்துடன் தம்தம் வர்ணாச்ரம தர்மங்களை அநு ஷ்டித்து, பிறகு சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள பக்தி யோகத்தை அந்த வர்ணாச்ரம

அது பிர்மா யிருக்கையிலும் அது அவைகளுள் அநுப்ரவேசித்து நிற்கிறபடியால் அவைகளைச் சொல்லும் பெயர் அவைகளின் அந்தராத்மாவாக இருக்கும் அந்த ப்ரஹ் மத்தையும் சொல்லும் என்பதையும் காட்டுவதற்காக இந்த ச்ருதி வாக்யம் இவ்விடத் தில் கூறப்படுகின்றது. ஸ:-ஆகத்தமபனுண அந்தப் பரமாத்மா, ‘பஹு ஸ்யாம்- தேவ மநுஷ்யாதி ரூபமாக பஹுவாகக் கடவேன், ப்ரஜாயேய-அதற்காக ஆகாசம் முதலியவைகளாக ஆவேன்’ என்ற அகாமயத-ஸங்கல்பத்தைச் செய்தது. ஸ தபோऽதப்யத-அப்படி ஸ்ருஷ்டிக்கப்படவேண்டிய விஷயங்களைப் பற்றி ஆலோசந ரூபமான தபஸ்ஸைச் செய்தது. ஸச்ச-[எப்பொழுதும் ஏகரூபமாக இருக்கும்]சேதந வஸ்துவாகவும், த்யச்ச- [விகாரத்திற்கு ஆஸ்பதமான] அசேதந வஸ்துவாகவும். ‘நிருக்தம்’ என்பதற்கு [‘ஜாதி குணம் முதலிய வற்றைச் சொல்லும் சப்தங்களால்] வாச்யமான [அசேதநம்]’ என்பதில் நோக்கு. ‘அநிருக்தம்’ ஜாதி குணங்களிராத [சேதந வஸ்து.] நிலயநம்-[சேதன வஸ்துக்களால்] தரிக்கப்பட்டு நிற்கும் [அசே தநவஸ்து], அநிலயநம்-[அசேதந வஸ்துக்களுக்கு] ஆதாரமாயுள்ள சேதந வர்க்கம் விஜ்ஞாநம்-ஜட ஸ்வரூப மிராத [சேதந வஸ்து;] அவிஜ்ஞாநம்-ஜட ஸ்வரூப மான [அசேதந வஸ்து]; ஸத்யம் ச-நிர்விகாரமாக இருக்கிறபடியால் ஸத்யமென்று சொல்லப்படும் சேதந வஸ்து; அந்ருதம் ச-விகாரத்திற்கு ஆஸ்பதமாக இருப்பதால் அஸத்ய மென்று சொல்லப்படும் அசேதந வஸ்து. ஸத்யமபவத்-[இவ்விதம் பல வகைப்பட்ட ரூபத்தை எடுத்துக் கொண்டிருக்கையிலும் அந்தப் பரமாத்மா எப்பொழு [illegible] மாக இருக்கிறபடியால்] ஸத்யமாகவே இருந்தது. இந்த ச்ருதியால் விளங்கும் விஷய [illegible] நிர்விகாரமான ப்ரஹ்மத்திற்கும் சேதந அசேதந வஸ்துக்களுக்கும் [illegible] [illegible] இருக்கையிலும் ப்ரஹ்மம் அவைகளை அநுப்ரவேசித்து [illegible] [illegible] களையும் அடைகின்றது’ என்பது தான்.

ப்ரஹ்மப்ராப்த்யுபாய:—இவ்வாறு வித்ய வஸ்துவைப் பற்றிய [illegible] [illegible] ஸங்க்ரஹித்து விட்டு, இப்பொழுது அதை அடைவதற்கு [illegible] [illegible] பத்தைப்பற்றி ஸங்க்ரஹிக்கிறார்.

ஸ்வகர்மாநுக்³ருஹீதப⁴க்திநிஷ்டா²ஸாத்⁴யாநவதி⁴காதிஶயப்ரியவிஶத³தமப்ரத்யக்ஷதாபந்நாநுத்⁴யாநரூபபரப⁴க்திரேவேத்யுக்தம் । ப⁴க்திஶப்³த³ஶ்ச ப்ரீதிவிஶேஷே வர்ததே । ப்ரீதிஶ்ச ஜ்ஞாநவிஶேஷ ஏவ ।

நநு ச ஸுக²ம் ப்ரீதிரித்யநர்தா²ந்தரம் । ஸுக²ஞ்ச ஜ்ஞாநவிஶேஷஸாத்⁴யம் பதா³ர்தா²ந்தரமிதி ஹி லௌகிகா: । நைவம் । யேந ஜ்ஞாநவிஶேஷேண தத்ஸாத்⁴யமித்யுச்யதே ஸ ஏஷ ஜ்ஞாநவிஶேஷ: ஸுக²ம் । ஏதது³க்தம் ப⁴வதி—'விஷயஜ்ஞாநாநி ஸுக²

தர்மாநுஷ்டாநத்துடன் சரிவர அப்யஸித்து, அந்த அப்யாஸத்தால் தனக்கு பகவானிடம் இருக்கும் ப்ரீதி முதிர்ச்சி அடைந்து, அந்தப்ரீதி எல்லையற்ற பெருமையுடன் கூடியதாக ஆகவே தர்சந ஸமாநாகாரமான தெளிந்த பகவத் த்யாநமொன்று ஏற்படும். அந்த த்யாநம் நிலைபெற்று நின்றால் அதைப் பர பக்தி என்று சொல்வார்கள், ஆகையால் இந்தப் பக்தி என்பது ஒரு ப்ரீதி விசேஷம் ; அந்த ப்ரீதியும் ஒரு ஜ்ஞாந விசேஷம்.

நநு ச...ஆனால், 'ஸுகம் ப்ரீதி இந்த இரண்டும் ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் பதங்களல்லவோ ? ஸுகம் என்பது ஒரு ஜ்ஞாந விசேஷத்தால் அடையக்கூடிய வேறொரு பொருளென்று லோகத்தில் சொல்லவில்லையா ? அப்படி ஜ்ஞாநத்தின் கார்யமாயுள்ள ஸுகத்தை ஜ்ஞாநமே' என்று எவ்விதம் சொல்லக்கூடும் ? 'என்று ஒரு ஆக்ஷேபம் இவ்விடத்தில் உதிக்கலாம். 'ஸுகம் ஜ்ஞாநத்தால் ஸாதிக்கப்படக் கூடியதாக இருந்தாலும் அது ஜ்ஞாநமே' என்று சொன்னால் அது அஸங்கதமே ஆகும். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. நாங்கள் சொல்வது என்னவென்றால்:- 'ஸுகம்' 'துக்கம்' 'ஸுகமும் துக்கமுமல்லாதது' இந்தச் சப்தங்களெல்லாம், தாம்தாம் ஸம்பந்தப்பட்டுள்ள விஷயங்களின்

ப⁴க்திநிஷ்டா²—பக்தி யோகத்தின் அப்யாஸம். '**ப⁴க்தி**' என்பது பகவானை அடைவதற்கு முன்னிருக்கும் அவஸ்தை.

ப்ரீதிஶ்ச ஜ்ஞாநவிஶேஷ ஏவ—'ஜ்ஞாநமன்றோ மோக்ஷத்திற்கு உபாயமாகவேண்டும்? அப்படி இருக்கையில், பக்தியை மோக்ஷோபாயமென்று சொல்வது எவ்விதம் உபபந்நமாகும்.' என்று ஒரு சங்கையைச் செய்துகொண்டு, அதற்கு ஸமாதாநமாக 'பக்தியும் ஒரு ஜ்ஞாந விசேஷமே' என்று சொல்லுகிறார்.

நநு ச—இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபமாவது—'பக்தி என்பது ஒருவித ப்ரீதியானால், ப்ரீதியும் ஸுகமும் ஒன்றாகையால், பக்தி என்பது ஒரு வித ஸுகமென்று ஏற்படுகின்றது. ப்ரீதியும் ஒரு ஜ்ஞாந விசேஷ மாகையால், ஜ்ஞாந விசேஷமே ஸுகம் என்றன்றோ ஸித்திக்கும்! அது அநுபபந்நமாயிற்றே ! ஏனென்றால், லோகத்தில் (வைசேஷிக மதஸ்தர்கள்) ஸுகத்தை ஜ்ஞாநத்தால் ஸித்திக்கும் வேறொரு பதார்த்தமென்றன்றோ சொல்லுகிறார்கள்?' என்பது தான். இதற்கு ப்ரத்யுத்தரம் 'ஜ்ஞாநத்தைக் காட்டிலும் வேறுபட்ட பதார்த்தமன்று ஸுகமென்பது; 'ஸுகமென்பது ஒருவித ஜ்ஞாநவிசேஷமே' என்பதுதான். இது தான் இவ்விடத்தில் உபபாதிக்கப்படுகின்றது.

து:³க²மத்⁴யஸ்த²ஸாதா⁴ரணாநி தாநி ச விஷயாதீ⁴நவிஶேஷாணி ததா² ப⁴வந்தி । யேந ச விஷயவிஶேஷேண விஶேஷிதம் ஜ்ஞாநம் ஸுக²ஸ்ய ஜநகமித்யபி⁴மதம் தத்³விஷயம் ஜ்ஞாநமேவ ஸுக²ம் । அதிரேகி பதா³ர்தா²நுபலப்³தே⁴: ; தேநைவ ஸுகி²த்வவ்யவஹாரோபபத்தேஶ்ச ।

ஏவம்விதஸுக²ஸ்வரூபஜ்ஞாநஸ்ய விஶேஷகத்வம் ப்³ரஹ்மவ்யதிரிக்தஸ்ய வஸ்துந: ஸாதிஶயத்வமஸ்தி²ரத்வஞ்ச, ப்³ரஹ்மணஸ்த்வநவதி⁴காதிஶயஸ்தி²ரத்வஞ்சேதி "ஆநந்தோ³ ப்³ரஹ்ம" இத்யுச்யதே । விஷயாயத்தத்வாத் ஜ்ஞாநஸ்ய ஸுக²ரூபதயா ப்³ரஹ்மைவ ஸுக²ம் । ததி³த³மாஹ "ரஸோ வை ஸ: । ரஸம் ஹ்யேவாயம் லப்³த்⁴வா(அ)நந்தீ³ ப⁴வதி" இதி । ப்³ரஹ்மைவ ஸுக²மிதி ப்³ரஹ்ம லப்³த்⁴வா ஸுகீ² ப⁴வதீத்யர்த²: । பரமபுருஷ: ஸ்வேநைவ ஸ்வயமநவதி⁴காதிஶயஸுக²ஸ்ஸந் பர

ஜ்ஞாநங்களையே குறிக்கின்றன. அந்த ஸுகம் முதலியவைகளுக்குப் பரஸ்பரமுள்ள விசேஷங்களெல்லாம் அந்தந்த விஷயங்களையே சார்ந்திருக்கிறபடியால், அவைகள் அந்தந்த விஷயங்களுக்குத் தக்கபடி ஸுகமாயும் துக்கமாயும் ஸுகமும் துக்கமுமல்லாதவைகளாயும் ஆகின்றன. ஒரு விஷயத்தில் ஒருவன் ஸுகத்தை அநுபவிக்கும்பொழுது, அந்த விஷயத்தின் ஜ்ஞாநமே அவனுக்கு ஸுகமாகின்றதே தவிர, அந்த ஜ்ஞாநத்தைக்காட்டிலும் ஸுகமென்று வேறொரு வஸ்துஉண்டாகின்றது என்பது இல்லை. ஒருவன் ஸுகியாக இருப்பதை அந்த விஷயத்தின் ஜ்ஞாநத்தைக் கொண்டே நிர்வஹிப்பதும் ஸாத்யமே.

ஏவம்வித—இந்த ஸுகரூபமான ஜ்ஞாநமானது, ப்ராஹ்மத்தைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களின் விஷயத்தில், ஒரு அளவுக்கு உட்பட்டதாகவும் சீக்ரத்தில் நசித்து விடுவதாகவும் இருக்கின்றது ; ப்ராஹ்மத்தின் விஷயத்திலோ வென்றால் அது அளவற்றதாகவும் சாச்வதமாகவும் இருக்கின்றது. ச்ருதியும் 'ஆநந்தோ ப்³ரஹ்ம' [ப்ராஹ்மம் என்பது ஆநந்தமே] என்று சொல்லுகின்றது. ஜ்ஞாநம் என்பது விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது ; ஆகையால் ஸுக ரூபமாக இருக்கும் ப்ராஹ்மத்தை ஸுகமென்று சொல்வது அயுக்தமாக மாட்டாது. ச்ருதியும் 'ரஸோ வை ஸ:' [அவன் ரஸமே] 'ரஸம் ஹ்யேவாயம் லப்³த்⁴வாநந்தீ³ ப⁴வதி' [அப்படிப் பட்ட ரஸத்தை அடைந்த ஜீவன் ஆநந்தத்தைப் பெற்றவனாகிறான்] என்று சொல்லுகின்றது. ப்ராஹ்மம் ஸுகமாகிறபடியால் அந்த ப்ராஹ்மத்தை அடைந்து அவன் ஸுகியாகிறான் என்பது பொருள். பரம புரு

பரமபுருஷ:—லோகத்தில் எது ஒருவனுக்கு ஸுகமாக இருக்கிறதோ, அது தனக்கும் ஸுகமாக இருப்பதை ஒருவரும் கண்டதில்லையே ! ப்ராஹ்மமும் அம்மாதிரி பிறருக்கு மாத்ரம் ஸுகமாக இருக்கின்றதோ ?' என்று சங்கித்துக் கொண்டு, 'அவ்விதம் இல்லை ; ப்ராஹ்மம் பக்தர்களுக்கு ஸுகமாக இருக்கையில் தனக்கும் ஸுகமாக இருக்கின்றது' என்று சொல்லுகிறார். ப்ராஹ்மம் என்பது எவனுக்கு ஜ்ஞாந விஷயமாகின்றதோ அவனுக்கு அது ஸுகமாகவே இருக்கின்றது ; தனக்கும் ஜ்ஞாந விஷயமாவதால் தனக்கும் ஸுகமென்பதில் ஆக்ஷேபமில்லை.

सुखी स एव भवति । स एवोपदेशविशेषात् ब्रह्म यस्य ज्ञानविषयो भवति स सुखी भवतीत्यर्थः । तदेवं परस्य ब्रह्मणोऽनवधिकातिशयासंख्येयकल्याणगुणगणाकरस्य निरवद्यस्य अनन्तमहाविभूतेः अनवधिकातिशयसौशील्यसौन्दर्यवात्सल्यजलधेः सर्वशेषिण आत्मनः शेषत्वात् प्रतिसम्बन्धितयाऽनुसन्धीयमानम् अनवधिकातिशयप्रीतिविषयं सत् परं ब्रह्मैवैनं सुखयतीति ।

ननु च 'अत्यन्तशेषतैवात्मनोऽनवधिकातिशयं सुखमित्युक्तं भवति । तदेतत् सर्वलोकविरुद्धम् । तथा हि सर्वेषामेव चेतनानां स्वातन्त्र्यमेवेष्टतमं दृश्यते पारतन्त्र्यं दुःखतरम् । स्मृतिश्च

ஷணுகிற பகவான் இம்மாதிரி ஜீவனுக்கு ஸுகமாக இருந்துகொண்டு தனக்கும் அளவற்ற ஸுகமாக இருக்கிறான். அவன் ஸுகரூபமாக இருப்பது தன் விஷயத்தில் ஒரு விதமாயும் ஜீவன் விஷயத்தில் மற்றொரு விதமாயும் இல்லையன்றோ? அவன், தனக்கோ தன்னைத்தவிர்த்த மற்றொரு வஸ்துவுக்கோ [ஜீவனுக்கோ] எவனுக்கு ஜ்ஞாந விஷயமானாலும், அவனுக்கு அவன் ஸுகமாகிறான் என்பதே இந்த ச்ருதி வாக்யத்தின் அர்த்தம். பர ப்ரஹ்மமானது, அளவற்ற பெருமையை உடையவையும் எண்ணிக்கையற்றவையுமான கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடம்; ஒருவித தோஷமும் அதனிடத்தில் இல்லை; அதனுடைய விபூதியும் மிகப் பெரியது; [இவ்விதம் அது மிக உயர்ந்த வஸ்துவாக இருக்கையிலும்] அது மிகவும் ஸுலபம்; எல்லையற்ற ஸௌசீல்யம் ஸௌந்தர்யம் வாத்ஸல்யம் இவைகளை நிரம்பப் பெற்றது; ஸகல ஜீவாத்மாக்களுக்கும் அது சேஷி; ஸகல ஜீவன்களும் அதற்கு சேஷம்; ஆகையால் ஜீவன்களால், தாம் அதற்குச் சேஷமென்றும் அது தமக்குச் சேஷியென்றும் அநுஸந்தாநம் செய்யப்படும் பொழுது அது அளவற்ற ப்ரீதிக்கு விஷயமாகின்றது; அவ்விதம் ப்ரீதி விசேஷத்திற்கு விஷயமாகிக் கொண்டு அது ஜீவன்களைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளுகின்றது.

நநு ச—'இவ்விதம் சொல்வதிலிருந்து, பகவானுக்கு ஜீவன்களெல்லாம் அத்யந்தம் சேஷமாயிருப்பதே அந்த ஜீவன்களுடைய ஸுகத்தின் பொருட்டு ஆகின்றது என்று சொன்னதாக ஏற்படுகின்றதே. இது லோக விருத்தமன்றோ? லோகத்தில் சே

शेषत्वात् प्रतिसम्बन्धितया अनुसन्धीयमानम्— பக்தர்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் செய்யும் ப்ரீதியானது 'தாம் அந்த ப்ரஹ்மத்தின் தாஸர்கள்' என்னும் அநுஸந்தாநத்துடன் கூடியே இருக்குமன்றோ?

நநு ச— 'தாஸ்யம் என்பது எப்பொழுதும் துக்கமன்றோ? அதை எப்படி ஸுகமென்று சொல்லக்கூடும்?' என்பது ஆக்ஷேபம். அதற்கு ஸமாதாநம் 'ஸுகமென்பதும் துக்கமென்பதும் ஸ்வாதந்த்ர்யத்தையும் பாரதந்த்ர்யத்தையும் சார்ந்தவை

"सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं सुखम्"

"सेवा श्ववृत्तिराख्याता तस्मात्तां परिवर्जयेत्"

इति । तदेतदनधिगतदेहातिरिक्तात्मस्वरूपाणां शरीरात्माभिमानविजृम्भितम् । तथा हि शरीरं हि मनुष्यत्वादिजातिगुणाश्रयपिण्डभूतं स्वतन्त्रं प्रतीयते । तस्मिन्नेवाहमिति संसारिणां प्रतीतिः । आत्माभिमानो यादृशस्तदनुगुणैव पुरुषार्थप्रतीतिः । सिंहव्याघ्रवराहमनुष्ययक्षरक्षःपिशाचदेवदानवस्त्रीपुंसव्यवस्थितात्माभिमानानां सुखानि व्यवस्थितानि । तानि च परस्परविरुद्धानि । तस्मादात्माभिमानानुगुणपुरुषार्थव्यवस्थया सर्वं

தந வஸ்துக்களெல்லாம் ஸ்வாதந்த்ர்யத்தையே மிகவும் இஷ்டமாகவும் பாரதந்த்ர்யத்தைப் பெரிய துக்கமாகவும் கொண்டாடுகின்றனவே. ஸ்ம்ருதியிலும், 'பரவசமாக இருப்பது முழுவதும் துக்கம்; ஸ்வ வசமாக இருப்பதே ஸுகம்' என்றும், 'மற்றொருவனுக்கு ஊழியம் செய்வது என்பதை நாயின் வ்ருத்தி என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அதை ஸர்வ ப்ரயத்நத்தாலும் விலக்கவேண்டும்' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றதே. [வஸ்து ஸ்திதி இவ்விதம் இருக்கையில், சேஷமாயிருப்பதை எவ்விதம் ஸுகமென்று சொல்லக்கூடும்?]' என்று ஒரு ஆக்ஷேபம் இவ்விடத்தில் செய்யக்கூடும். இந்த ஆக்ஷேபம், தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதான ஆத்ம ஸ்வரூபத்தை அறியாதவர்களால் செய்யப்படும் ஆக்ஷேபமே. சரீரமே ஆத்மாவென்னும் அபிமாநத்துடன் கூடினவர்களே இம்மாதிரி ஆக்ஷேபிப்பார்கள். இதன் தத்வமென்னவென்றால்—லோகத்தில் 'சரீரம் சரீரம்' என்று ஒரு மாம்ஸ பிண்டத்தை நாம் குறிக்கிறோம். அந்த மாம்ஸ பிண்டத்தைக் கொண்டே 'இவன் மனுஷ்யன், இவன் மநுஷ்யனன்று; இவன் இன்ன குணத்துடன் கூடியவன், இவன் இன்னகுணத்துடன் கூடியவனன்று' என்பது முதலான நமது வ்யவஹாரமெல்லாம் ஏற்படுகின்றது. அந்தச் சரீரம் நமக்கு ஸ்வதந்த்ரமாகத் தோற்றுகிறது. அந்தச் சரீரத்தையே ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டுள்ள நாமெல்லாரும் 'நான்' [அதாவது—ஆத்மா] என்று நினைக்கிறோம். நான் ஒன்றைப் புருஷார்த்தமாக அர்த்திப்பது [அதாவது—நாம் அடைய வேண்டுமென்று விரும்புவதும்] அப்படி அர்த்தியாமலிருப்பதும் அந்த ஆத்மாபிமாநத்தைச் சார்ந்த

யல்ல; ஆனால் ஜந்மாந்தர கர்மமடியாக நமக்கு ஸம்பவிக்கும் தேஹாத்ம ப்ரமத்தையும் ஸ்வதந்த்ராத்ம ப்ரமத்தையும் சார்ந்தவை' என்பது தான். எது எது ஆத்மாவுக்கு அநுகூலமோ அதெல்லாம் ஸுகம்; எது எது ப்ரதிகூலமோ அதெல்லாம் துக்கம். ஆகையால் நாம் ஆத்மாவை ஸ்வதந்த்ரமென்று ப்ரமித்தால் அப்படி ப்ரமிக்கப்பட்ட

ஸுகமிதம்। ஶுத்தஸ்யாத்மந: தேவாதி தேஹவிலக்ஷணம் ஜ்ஞா நைககாரம், தச்ச பரஶேஷதைகஸ்வரூபம் । "ஶுத்த ஜ்ஞாநமயோऽமல:" இதி ஸ்வரூபேண ஜ்ஞாநைகாகாரதா பரஶே ஷதைகாகாரதா ப்ரதிபந்நா, "பதிம் விஶ்வஸ்ய" இத்யாதிஶ்ருதிகணை: பரஶேஷதைகாகாரதா ச ப்ரதீதா । அத: ஸிம்ஹவ்யா க்ராதிஶரீராத்மாபிமாநவத் ஸ்வாதந்த்ர்யாபிமாநோऽபி கர்மக்ருத விபரீதஜ்ஞாநமேவேதி ஸ்பஷ்டம்। அத: கர்மக்ருதமேவ பர மபுருஷவ்யதிரிக்தவிஷயாணாம் ஸுகத்வம்॥ அத ஏவ தேஷாம் அல்பத்வம் அஸ்திரத்வம் ச, பரமபுருஷஸ்யைவ ஸ்வத ஏவ ஸுகத்வம் । அத ஏவ ஸ்வயமேவ ஸ்வரூபமதிகாதிஶயம் ச

"கம் ப்ரஹ்ம,"

இதி ஶ்ருதே: । ப்ரஹ்மவ்யதிரிக்தஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வஸ்துந: ஸ்வரூபேண

தன்றோ? லோகத்தில், ஸிம்ஹம் புலி பன்றி மநுஷ்யன் யக்ஷன் ராக்ஷஸன் பிசாசம் தேவன் அஸுரன் ஸ்த்ரீ புமான் இம்மாதிரியான தேஹ வ்யவஸ்தையை உடைய எல்லாவற்றுக்கும் அவை அவைகளுடைய ஆத்மாபிமாநத்துக்குத் தக்கபடி அவை அவைகளின் ஸுகங்கள் வ்யவஸ்திதங்களாகக் காணப்படவில்லையா? அந்த ஸுகங்கள் ஒன்றுக்கு இருப்பதுபோல மற்றொன்றுக்கு இல்லையன்றோ? ஆகையால் புருஷார்த்தங் களின் வ்யவஸ்தை ஆத்மாபிமாநத்திற்குத் தகுந்ததுபோல ஏற்படுகிறபடியால் மாத்ரம் ஸ்வாதந்த்ர்யம் ஸுகமாகவும் பாரதந்த்ர்யம் துக்கமாகவும் நமக்குத் தோன்றுகின்றது. ஆத்மாவென்னும் வஸ்து தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான ஸ்வரூபத்தை உடை யது. அதன் ஆகாரம் கேவலம் ஜ்ஞாநமே; அது எக்காலத்திலும் ஈச்வரன் என்னும் வஸ்துவுக்கு சேஷ பூதமே. "ஶுத்த ஜ்ஞாநமய:" [ஆத்மா ஜ்ஞாநமயமே] "பதிம் விஶ்வஸ்ய" [ஈச்வரன் ஜகத் முழுவதற்கும் சேஷி] என்பவை முதலான வாக்யக் கூட்டங்கள் 'ஆத்மாவென்னும் வஸ்துவானது ஜ்ஞாநத்தையே ஆகாரமாக உடையது என்பதற்கும் ஈச்வரனுக்கே எக்காலத்திலும் அது சேஷமானது என்பதற்கும் ப்ரமா ணங்களாகின்றன. ஆகையால், ஸிம்ஹம் புலி முதலியவைகளின் விஷயத்தில் சரீ ராத்மாபிமாநம் வருவதுபோல, ஈச்வர பரதந்த்ரமான ஆத்மாவினிடத்தில் ஸ்வா தந்த்ர்ய மாகிற விபரீத ஜ்ஞாநம் நமக்கு உண்டாகின்றது. இப்படி உண்டாவதெல் லாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் கர்மத்தின் கார்யமே. ஆகையால், பரம புருஷனைத் தவிர்த்த மற்றைப் பொருள்களில் நமக்கு உண்டாகும் ஸுகரூபமான ஜ்ஞாநம் அந்தக் கர்மத்தையே காரணமாக உடையது. அப்படி அது கர்மத்தின் கார்ய மானதால், கர்மம் போகும்பொழுது அதுவும் நசித்து விடவேண்டுமாகையால், அது அல்பமாகவும் அஸ்திரமாகவும் ஆகின்றது. பரம புருஷனிடத்தில் ஏற்படும் ஸுகரூ... ரூபமான ஜ்ஞாநம் ஸ்வயமே ஸுக ரூபமானதால் [கர்மத்தைக் காரணமாக உடையதன் றுதலால்] அது அளவற்றதாகவும் சாச்வதமாகவும் இருக்கின்றது. ச்ருதியும், "கம் ப்ரஹ்ம" [ப்ரஹ்மம் ஸ்வயமாகவே ஸுகம்] என்று சொல்லுகின்றது. ப்ரஹ்

ஸ்வாதந்த்ர்யத்திற்குப் பாரதந்த்ர்யம் ப்ரதிகூலமாகையால் அது துக்கமாகின்றதே தவிர அது அப்படி துக்கமாவது அந்தப் பாரதந்த்ர்யமன்று.

கம் ப்ரஹ்ம—ப்ரஹ்மம் அளவற்ற ஸுகம் என்பதற்கு இந்த ச்ருதி ப்ரமாணம்.

ஸுகத்வாபாவ: கர்மக்ருதம் ச ஸுகித்வம் பகவதா பராஶ ரேணோக்தம் ।

"நரகஸ்வர்கஸம்ஜ்ஞே வை பாபபுண்யே த்விஜோத்தம ।
வஸ்த்வேகமேவ து:காய ஸுகாயேர்ஷ்யோத்பவாய ச॥
கோபாய ச யதஸ்தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குத:॥"

ஸம்வேத்யா: ஸ்வரூபாஶ்ரயிணோ வஸ்துநோ வஸ்துத்வம் குத:, தஸ்யைகாந்தஸ்வரூபத்வாபாவாத் கர்மக்ருதத்வாச்ச। ஏகஸ்யைவ புருஷ ஸ்யாபேக்ஷயா ஸுகித்வமேவ து:கித்வம் ச ப்ரதீதி வ்யவ ஸ்தாம் ப்ரதிபாத்ய ஏகஸ்மிந்நபி புருஷே ந வ்யவஸ்திதிரித்யாஹ

"ததேவ ப்ரீதயே பூத்வா புநர்து:காய ஜாயதே।
ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே॥
தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்॥"

மத்தைத் தவிர்த்த மற்றை வஸ்துக்கள் ஸ்வரூபத்தால் ஸுகங்களல்ல வென்பதும் அவைகளில் ஏற்படும் ஸுக ஜ்ஞாநம் கர்மமடியாக ஏற்படுகிற படியால் அது அஸ் திரமென்பதும் பகவான் பாராசரரால் சொல்லப்பட்டிருக்கின்றன. 'நரகம் ஸ்வர்க்கம் என்று சொல்லப்படுமவையெல்லாம், ஒருவன் செய்யும் புண்யத்தினுடையவும் பாபத் தினுடையவும் பலங்களே. ஒரே வஸ்து சிலருக்கு ஸுகத்தின் பொருட்டும் மற்றும் சிலருக்கு துக்கத்தின் பொருட்டும் கோபத்தின் பொருட்டும் ஈர்ஷ்யையின் பொருட் டும் ஆகிறபடியால், [பரப்ரஹ்மத்தைத் தவிர்த்த] வஸ்துக்களுக்கு வஸ்து ஆத்மகமான வஸ்துத்வம் உண்டோ?' அதாவது-இந்த வஸ்துக்களுக்கு ஏகாந்த ஸுகமாகவாவது ஏகாந்த துக்கமாகவாவது வஸ்துத்வம் இல்லை. ஸுகமும் துக்கமும் இவைகளின் விஷ யத்தில் ஏகாந்தங்களாகத் தோன்றுவதெல்லாம் அவரவர்களின் புண்ய பாபரூபமான கர்மத்தின் கார்யமே' என்பது தாத்பர்யம். இவ்விதம் ஒரே வஸ்து ஒருவனுக்கு ஸுக மாயும் மற்றொருவனுக்கு துக்கமாயும் ஆகின்றது என்பது என்ன காரணத்தால் என் பதை ப்ரதிபாதித்து விட்டு, அதற்கு மேல், ஒரே மநுஷ்யனுக்கு ஒரு வஸ்து ஒரு காலத்தில் ஸுகமாயும் மற்றொரு காலத்தில் துக்கமாயும் ஆகிறபடியால் அதிலும் ஒரு வித வ்யவஸ்தை இல்லை என்பதைச் சொல்லுகிறார். 'ஒரு வஸ்துவே ஒரு ஸமயத்தில் ப்ரீதியின் பொருட்டு ஆகி மற்றொரு ஸமயத்தில் துக்கத்தின் பொருட்டு ஆகின்றது

'ஸுகம்' என்பதற்கு 'ஸுகம்' என்பது பொருள். ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவை எல்லாம் அல்பமாயும் அஸ்திரமயுமுள்ள ஸுகத்தையே கொடுக்கும் என்பதற்கு 'நரக ஸ்வர்க ஸம்ஜ்ஞே' இத்யாதியான புராண வாக்யம் ப்ரமாணமாகக் கூறப்படு கின்றது.

வஸ்து வஸ்த்வாத்மகம் குத:—ஏகாந்த ஸுகமாகவாவது ஏகாந்த துக்கமாக வாவது ஒரு வஸ்துவும் இந்த உலகத்தில் இல்லை என்னும் அர்த்தத்தை இந்த [illegible] வஸ்த்வாத்மகமான வஸ்து ஏது?' என்னும் கேள்வி சொல்லுகின்றது.

இதி । ஸாவதி⁴ர்வா க³தாகதம் ஸம்ஸாரஸ்ய ஸ்வரூபம் தஸ்ய து³:க²ரூபத்வம், ந
ஸ்வரூபாநுப³ந்தி⁴; அத: து³:க²ரூபமேவ ஸர்வம் கர்மவஶ்யம் இதி ஸ்தி²தம் ।
யத்து "ஸர்வம் பரவஶம் து³:க²ம்" இத்யுக்தம் தத் பரமபுருஷவ்யதிரிக்த ஸர்வபதார்த்த² விஷயம் । பரமபுருஷஸ்ய ஶேஷித்வாத் தத்ஸேவைவ ஸுக²ம் இத்யுக்தம் ।
"ஸேவா ஶ்வவ்ருத்திராக்²யாதா" இதி ஸேவ்யஸேவா ஶ்வவ்ருத்திரித்யுக்தம் ।

"ஸ ஹி ஸர்வேஷு காலேஷு ஸர்வதா ஸேவ்ய ஏவ"

இதி ஸர்வேஷாம் ஸேவ்யத்வம் ஶ்ரூயதே । யதோக்தம் ப⁴க³வதா

"மாம் ச யோऽவ்யபி⁴சாரேண ப⁴க்தியோகே³ந ஸேவதே ।

ஸ கு³ணாந் ஸமதீத்யைதாந் ப்³ரஹ்மபூ⁴யாய கல்பதே ॥"

இதி । இயமேவ ப⁴க்திரூபா ஸேவா

அம்மாதிரியே கோபத்தின் பொருட்டும் தெளிவின்பொருட்டும் ஆகின்றது. ஆகையால் துக்கத்தையே கொடுக்குமதாகவாவது ஸுகாத்மகமாக வாவது ஒரு வஸ்துவும் இல்லை'. அதாவது வஸ்துக்கள் ஸுகாத்மகமாவும் துக்காத்மகமாகவும் இருப்பதெல்லாம் கர்மத்தின் கார்யமே தவிர, வஸ்து ஸ்வரூபத்தைச் சார்ந்ததன்று. ஆகையால் கர்மம் முடிந்தவுடன் அந்த ஸுகதுக்கங்களும் முடிவு அடைகின்றன.

யத்து ஸர்வம் — பரதந்த்ரமாக இருப்பதெல்லாம் துக்கமென்று சொன்னதும் பரம புருஷனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களின் விஷயத்தைப் பற்றியதே. ஏனென்றால் மற்றை வஸ்துக்களுக்கு நாம் சேஷமல்ல; நமக்கு அவை சேஷியுமல்ல. பரம புருஷன் ஒருவனுக்கே நாம் சேஷமாகையால், அவனைத் தவிர்த்த மற்ற வஸ்துக்களைக் குறித்து நாம் சேஷவ்ருத்தியைச் செய்வது துக்கமே ஆகும். 'அடிமைத்தனம் நாயின் வ்ருத்தி என்று சொல்லப்பட்டிருக்கின்றது' என்பதும் அடிமையாக ஊழியம் செய்வதற்கு அநர்ஹர்களாக இருப்பவர்களைப் பற்றியே பேசப்பட்ட பேச்சு. பகவானே ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தவர்களெல்லாராலும் ஊழியம் செய்யத் தகுந்தவன். 'எந்த ஆச்ரமத்தில் இருந்தாலும் எல்லாராலும் அவன் ஒருவனே உபாஸிக்கத் தகுந்தவன்' என்று அவன் அம்மாதிரியான ஸேவைக்குத் தகுந்தவனென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ க்ருஷ்ணனும், 'எவன் நிச்சலமான பக்தியுடன் என்னை உபாஸிக்கிறானோ, அவன் இந்த ப்ரக்ருதியைக் கடந்து மோக்ஷத்தை அடைகிறான்' என்று

ஸேவா ஶ்வவ்ருத்தி: — இந்த வாக்யத்தால் நிந்திக்கப்பட்டுள்ள ஸேவை 'ஸேவிக்கத்தகாதவர்களுக்கு ஸேவை செய்வது' என்பதைக் குறிக்கின்றது என்பது எப்படி ஏற்படுகின்றது என்று கேட்டால், 'ஸ ஹி ஸர்வேஷு காலேஷு' இத்யாதியான வாக்யம் அதை விளக்குகின்றது.

இயமேவ ப⁴க்திரூபா — இந்த ஸேவையும் பக்தி ரூபமே. 'பக்தி என்பது ஒரு ஜ்ஞாந விசேஷமாகிறபடியால் அது மோக்ஷத்திற்கு உபாயமாகக்கூடும்; ஸேவையையும் எப்படி மோக்ஷத்திற்கு உபாயமாகச் சொல்லலாம்?' என்றால், 'ஸேவையும் பக்

"ப்³ரஹ்மவிதா³ப்நோதி பரம்" "தமேவம் வித்³வாநம்ருத

இஹ ப⁴வதி" "ப்³ரஹ்ம வேத³ ப்³ரஹ்மைவ ப⁴வதி"

இத்யாதி³ஷு வேத³நஶப்³தா³பி⁴தே⁴யேதி உக்தம் । "யமேவைஷ வ்ருணுதே தேந லப்⁴ய:" இதி விஶேஷணாத் "யமேவைஷ வ்ருணுதே" இதி ப⁴க³வதா வரணீயத்வம் ப்ரதீயதே । வரணீயஸ்து ப்ரியதம: । யஸ்ய ப⁴க³வத்யநவதி⁴காதிஶய ப்ரீதிர்ஜாயதே ஸ ஏவ ப⁴க³வத: ப்ரியதம: । தது³க்தம் ப⁴க³வதா

"ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த²மஹம் ஸ ச மம ப்ரிய:"

இதி । தஸ்மாத் பரப⁴க்திரூபாபந்நமேவ வேத³நம் தத்த்வதோ ப⁴க³வத்ப்ராப்தி ஸாத⁴நம் । யதோக்தம் ப⁴க³வதா த்³வைபாயநேந மோக்ஷத⁴ர்மே ஸகலோபநிஷத்³வ்யாக்²யாந ரூபம்

"ந ஸந்த்³ருஶே திஷ்ட²தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்ச

அநுக்ரஹித்திருக்கிறான். "ப்³ரஹ்மவிதா³ப்நோதி பரம்" [ப்ராஹ்மத்தை அறிகிறவன் பரத்தை அடைகிறான்] "தமேவம் வித்³வாநம்ருத இஹ ப⁴வதி" [அவனை இவ்விதம் அறிகிறவன் அம்ருதனாகிறான்] "ப்³ரஹ்ம வேத³ ப்³ரஹ்மைவ ப⁴வதி" [ப்ராஹ்மத்தை அறிகிறவன் ப்ராஹ்மமாகவே ஆகிறான்] இவை முதலிய வாக்யங்களில் சொல்லப்பட்டுள்ள 'அறிதல்' என்னும் சப்தம் கீழ்க் கூறப்பட்டுள்ள பக்தி ரூபமான ஸேவையையே குறிக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்⁴ய:' [எவனை அந்தப் பரம புருஷன் வரிக்கிறானோ அவனாலேயே அவன் அடையத் தகுந்தவன்] என்னும் வாக்யத்திலும் "யமேவைஷ வ்ருணுதே" [எவனை அவன் வரிக்கிறானோ] என்பதால் பகவான் வரிக்கிறான் என்பது ஏற்படுகின்றது. அப்படி பகவானால் வரிக்கப்படுமவன் பகவானுக்கு அதிமாத்ரம் ப்ரியனாக இருத்தல் வேண்டும்; அப்படி அவன் அவ்வளவு ப்ரீதி பாத்ரனாவதற்கு, அவன் பகவானிடத்தில் அளவற்ற ப்ரீதியைச் செய்திருத்தல் வேண்டுமன்றோ? பகவானே 'பக்தனுக்கு நான் அதிமாத்ரம் ப்ரியன்; அவனும் எனக்கு அம்மாதிரியான ப்ரியனே' என்று இந்த அர்த்தத்தை வெளியிட்டிருக்கிறார். ஆகையால், பகவானை உள்ளபடி அறிவது என்று சொல்லப்படும் பர பக்தியே அவனை அடைவதற்கு உபாயம். மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில் ஸகல உபநிஷத்தின் வ்யாக்யாந ரூபமாக ஒரு வாக்யம் பகவான் த்வைபாயநரால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது:- 'அவனுடைய

திரூபமே' என்று ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. 'ஸேவ' என்னும் தாதுவுக்கு 'ஸேவை செய்கிறது' என்னும் பொருள் உண்டு.

ந ஸந்த்³ருஶே திஷ்ட²தி — இந்த ச்லோகம் மஹாபாரதத்தில் இருக்கின்றது. இதன் முதல் பாதி கடோபநிஷத்திலும் காணப்படுகிறபடியால் இதை உபநிஷத்தின் வ்யாக்யாநமென்று இவ்விடத்தில் சொல்லுகிறார். உபநிஷத்தில் 'ஹ்ருதா மநீஷா மநஸாபி⁴க்ல்ருப்தோ ய ஏதத்³ விது³ரம்ருதாஸ்தே ப⁴வந்தி' என்னும் [illegible]

தேந || ப⁴க்த்யா ச த்⁴ருத்யா ச ஸமாஹிதாத்மா ஜ்ஞாநஸ்வரூபம் பரிபஶ்யதீஹ"

த்⁴ருத்யா ஸமாஹிதாத்மா ப⁴க்த்யா புருஷோத்தமம் பஶ்யதி ஸாக்ஷாத்கரோதி ப்ராப்நோதீத்யர்த²: | "ப⁴க்த்யா த்வநந்யயா ஶக்ய:" இத்யநேந ஐகார்த்²யாத் | ப⁴க்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ ஏவேதி ஸர்வமுபபந்நம் ||

ரூபம் பார்வைக்கு எட்டாதது; ஒருவனும் அவனைக் கண்ணால் கண்டான் என்பது இல்லை. இந்த்ரியங்களை அடக்குவதான த்ருதியால் சாந்தியை அடைந்துள்ள மநஸ்ஸைக் கொண்டு பக்தியினாலேயே ஜ்ஞாந ஸ்வரூபனான அவனைப் பார்க்கிறான்' த்ருதியினால் சாந்தமான மநஸ்ஸை உடையவன் பக்தியினால் பார்க்கிறான்'. என்பது அந்வயம். 'பார்க்கிறான்' என்பதற்கு 'ஸாக்ஷாத் கரிக்கிறான்' அதாவது 'அடைகிறான்' என்பது பொருள். இப்படி அந்வயம் செய்து கொள்வானேன் என்றால், இந்த வாக்யமும் "ப⁴க்த்யா த்வநந்யயா ஶக்ய:" [பக்தி ஒன்றாலேயே நான் அடையத் தகுந்தவன்] என்னும் வாக்யமும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றனவன்றோ? பக்தி என்பது ஜ்ஞாந விசேஷமே. ஆகையால் இவ்விடத்திற் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் உபபந்நமே.

பாதி ஸ்தாநத்தில், 'ப⁴க்த்யா ச த்⁴ருத்யா ச' இத்யாதியான வாக்யம் பாரதச்லோகத்தில் தென்படுகின்றது. உபநிஷத்தில் தென்படும் 'ஹ்ருதா' என்னும் பதத்திற்கு 'ப⁴க்த்யா' என்பது வ்யாக்யாநம். 'மநீஷா மநஸா' என்பதற்கு 'சாந்தி தாந்தி முதலியவைகளுடன் கூடிய மநஸ்ஸால்' என்பது பொருள். அந்த அர்த்தம் இவ்விடத்தில் 'த்⁴ருத்யா' என்பதால் விளக்கப்படுகின்றது. இந்த்ரியங்களை விஷயங்களிலிருந்து திருப்புவதற்கு அபேக்ஷிதமான த்ருதியே இவ்விடத்தில் விவக்ஷிதம். 'ப⁴க்த்யா ச த்⁴ருத்யா ச ஸமாஹிதாத்மா' என்று ச்லோகத்தில் இருக்கையில், அதை மாற்றி 'த்⁴ருத்யா ஸமாஹிதாத்மா ஸந் ப⁴க்த்யா பஶ்யதி' என்று அந்வயம் எப்படி செய்யப்படுகின்றது என்றால், வேதாந்த சாஸ்த்ரங்களில் பக்தி ஒன்றே மோக்ஷத்திற்கு உபாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அதற்கு விருத்தமாக த்ருதியையும் அதற்கு உபாயமாகச் சொல்வது சரியன்று என்னும் காரணத்தால் மாத்ரம் என்று 'ப⁴க்த்யா த்வநந்யயா' இத்யாதியான பகவத் கீதா வாக்யம் அதற்கு ப்ரமாணமாகக் கூறப்படுகின்றது.

ஸாராஸாரவிவேகஜ்ஞா க³ரீயாம்ஸோ விமத்ஸரா: |
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி க்ருதோ வேதா³ர்த²ஸங்க்³ரஹ: ||
இதி ஸ்ரீமத்³ப⁴க³வத்³ராமாநுஜாசார்யவிரசித:
வேதா³ர்த²ஸங்க்³ரஹ: |

ஸாராஸார... 'இது ஸாரம் இது அஸாரம்' என்று பிரித்தறியும் யோக்யதை யுடையவும் பஹுச்ருதர்களாகவும் மாத்ஸர்ய மற்றவர்களாகவும் சில ப்ரமாண வச்யர்கள் இருக்கிறார்களென்று அவர்களின் அபிமதி விஷயமாக இந்த வேதார்த்த ஸங்க்ரஹம் செய்யப்பட்டது.

ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்
முற்றிற்று

ஸாராஸாரவிவேகஜ்ஞா:— இது இந்த க்ரந்தம் செய்தவரின் நோக்கை விளக்குகின்றது. எவ்வித அபிநிவேசமுமின்றி ப்ரமாண தர்க்கங்களால் உண்மையை அறிந்து கொள்ளும் சக்தியை உடைய ப்ராமாணிகர்களைக் குறித்தே இந்த க்ரந்தம் செய்யப்பட்டது என்பதே இதன் கருத்து. அவர்களுடைய அபிமதி இருந்தால் போதும் என்பது தாத்பர்யம். க³ரீயாம்ஸ:— பெரியோர்கள், அதாவது நன்றாகப் படித்தவர்கள். அவர்களுக்கு மாத்ரமே ப்ரமாண தர்க்கங்களைச் சரிவர ப்ரயோகம் செய்யவும் அதனால் இது துர்பலம் இது ப்ரபலம் என்று நிர்ணயிக்கவும் சக்தி இருக்கக்கூடுமாதலால், அவர்களே இந்தச் சப்தத்தால் சொல்லப்படுகிறார்கள்.

ஸ்ரீஸுத³ர்ஶநஸூரீணாம் ஹ்ருஷ்யோஹாவாநாயயிநா |
வாஸுதே³வேந விவ்ருத: ஸ்ரீவேதா³ர்த²ஸங்க்³ரஹ: ||

ஸ்ரீ வேதாந்த ஸங்க்ரஹ வ்யாக்யாநம்
முற்றிற்று.

R 65 211, N12 / 1329.22.8 15893

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ 4
தனிப் பிரதி: அணு 6

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமி தெருவு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30உ இங்கே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாயிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

2—9—34
மதராஸ்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனும்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

Registered No. M. 916.

Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Indian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. **50** each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

Sriman	V. V. Sreenivasa Iyengar, B.A., B.L.	*President*
,,	K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate.	*Genl. Secy.*
,,	R. Kesava Iyengar., M.A., B.L.	*Exec: Secy.*
,,	T.D. Sreenivasachari, M.A., B.L.	,,
,,	S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate.	*Treasurer.*
,,	N T. Shamanna, Solicitor.	*Director*
,,	M. Sudarsana Iyengar, Merchant.	,,
,,	C.V. Venkataramana Iyengar, B.A., B.L. Coimbatore.	,,
,,	T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore.	,,

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.